சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# சர்வமதசித்தாந்தவிளக்க
# வினாவிடை

இஃது,

இந்திரபீடம,

கரபாத்திரசுவாமிகளாதீனம்

பிறைசை,

அருணாசலசுவாமிகள

பிரதமமாணாக்கராகிய

ஈசூர்-கணக்கு

**சச்சிதானந்தபிள்ளையவர்களால்**

நூதனமாகவியற்றப்பட்டுத்

தஞ்சமாநகரம்

கோவிந்தாச்சாரியாரவர்களது

சிவாநந்தநிலைய அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

---

க௲அ௲க.

*Registered Copy-Right.*

# விளம்பரம்.

இதனாலறிவிப்பது யாதெனில், இதனடியிற்கண்டுள்ள புத்தகங்களை வேண்டுபவர்கள் சென்னைநகரத்தைச்சார்ந்த சூளை குசப்பேட்டை, கந்தசாமிகோவில் வீதியில் - ௭0-நெம்பர் வீட்டிலிருக்கும் ஸ்ரீமத் - ஈசூர்-கணக்கு-சச்சிதானந்தபிள்ளையிடத்தில் விலைகொடுத்துப்பெற்றுக்கொள்ளலாம்

அச்சிட்டிருக்குநூல்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| வேதாந்தசூளாமணி மூலமுமுரையும் காபி ௧-க்கு | | ௨ | 0 | 0 |
| தசகாரிய மகாவாக்கிய வுரை | ,, | 0 | ௮ | 0 |
| சிவஞானபோதவுரை | ,, | 0 | ௮ | 0 |
| திருக்குத்திருசியவிவேகவுரை | ,, | ௧ | 0 | 0 |
| உத்தமவாதநூல் மூலம் | ,, | 0 | ௮ | 0 |
| கைவல்லியநவநீதவிருத்தியுரை | ,, | ௧ | ௪ | 0 |
| சர்வமதசித்தாந்தவிளக்கவினாவிடை | ,, | ௧ | 0 | 0 |
| தத்துவவிஜாநுபோகசாரம் [முதலவாலம] | ,, | ௨ | 0 | 0 |

இனியச்சிட்டுவருநூல்கள்.

| | |
|---|---|
| பிரபுலிங்கலீலை உரை | சீவகாருண்யவிளக்கம் |
| பகவற்கீதை விருத்தியுரை | சுவாநுபூதிவிளக்கவெண்பா |
| பிரத்தியக்ஷாநுபூதிவிளக்கம் | வேதாந்த இலக்கணம் |

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சாத்துகவிகள்.

இஃது,

வியாசர்பாடியில்

ஞானசூரியனாகவிளங்கும்

இராமானுஜயதீஸ்வரரால்

இயற்றப்பட்டது

ஸகலநிகமஜாநாம் பீஜபீஜாத்மகம் | ஸ்வயம்
ப்ரதிஷ்டஜ்ஞாநரூபம் ஸம்ஸாரம் | விரூபய ஹ்ருதய
ஸம்ஸ்த்திதாநந்த ஸுகிந: | ஷிஷ்யவர்கஜாதம் ஸதா
ஸுப்ரதிஷ்டகாரா || *

வந்தேஸர்வம்ஸதா யதிநாம் ப்ரகாசிநா |
க்ருதம் விஜ்ஞாநதீபம் நாநாசாஸ்த்ரஸாரிகா || *

---

இஃது,

திருமூலமரபு

சதாசிவப்பிரமயோகியின் மாணாக்கர்

ஸ்ரீ - சுப்பராயமுதலியாரியற்றிய

## அகவல்.

அறமபொருளின்ப மழியாவீடெனத்
திறம்படநிற்குஞ் செயிர்தீர் நெறியைக்
கனவினுங்காணாக் கடைப்படு முயிர்கள்
மனமொழிமெய்களா யாரிலின்றழிதலின்
பொய்மெய்மெய்பொய புராணத்தியக்கும்
மையலெங்ஙனை மாற்றலுந்தக்கோர்
சொற்றிறங்கேட்டலுந் துணிபுகோடலும்
இற்றதென்றோர்தலு மெவனோவுயிர்க்கு (ஆதலின்)

வேதமாதி யுரைத்தமுக்காண்டம்
ஓதியும்விடய முறுதியதாகக்
கண்டதேகாட்சி கொண்டதேகோலமென்
றுண்டழிமயலை யுணர்த்தவேண்டிப்
பன்னெறியாகப் பற்பலசமயரும்
தன்னிலைசற்றுந் தாமுணராமல்
வாளாகூறி மலைந்தனர்தம்முள்
மாளாவழக்கை மாற்றித்தெளிபவர்
சென்றுசென்றுந் திரும்பினர்மருண்டு
நன்றுணர்ந்தோமென நண்ணுஞ்செருக்கால்
நானெனுஞ்சொற்பொரு ளுடாததனால்
பல்லூழிகாலம் படித்துமென்பயன்
தொல்லைமயலைத் தொலைத்திடுமளவும்
என்பதுகண்டிங் கிசைத்தனனிந்நூல்
மன்பதைக்கிரங்கி மாசறுநன்னூல்
எல்லாம்விளாவி லியையவுணர்ந்து
நல்லாதார நாட்டமுமுணர்ந்திங்
குச்சிகண்டவுணர்வோன்
சச்சிதானந்தத் தனிப்பெயரோனே. (௪)

---

இ ஃ து,
சேலம்ஜில்லா-வக்கீல்
அத்துவிதானுபவியாகிய
## அப்பாசாமிபிள்ளையவர்க ளியற்றிய.
ஆசிரியவிருத்தம்.

சருவபரிபாகிகளு மத்துவிதந்தனையுணர்ந்து தரணிதன்னிற்
சருவவிளக்கமதாகிக் கரதலாமலகம்போற் றனைத்தேர்தற்கே [ன்
சருவமதசித்தாந்தந் தனைவிளக்கவினாவிடையாய்த் தமிழிற்செய்தா
சருவபரிபூரணனுஞ் சச்சிதானந்தகுரு ஸ்வாமிதானே. (௧)

திரிவிதகாண்டப்பொருளு மதைவிளக்குநூல்களையுந் தெளியத்தேர்
பிரிவுபடச்சருவமத சித்தாந்தமினையவெனப் பிரித்துயாரு [ந்து
மருமையுடனெளிதிலுணர்ந் தத்துவிதந்தனைப்பெறவே யருள்புரிந்
குருபரனுமருளிறைவன் சச்சிதானந்தகுரு கோமான்றானே. [தான்

---

புலவர்-திருவல்லிக்கேணி

## வேங்கடாசலபிள்ளை யியற்றிய

கட்டளைக்கலித்துறை.

நன்றென்றுந்தீதென்று நானென்றுந்தானென்று நாடறியார்க்
கன்றென்றுமாமென்று மாகாப்பலவென்று மாகுமென்றும்
என்றவழக்கறுத் தாளவிந்நூலை யிசைத்தனன்காண்
நன்றுருவாஞ்சச்சி தானந்தனென்றுயர் நாமத்தனே.

வெண்பா.

பல்லுடல் வேடப் பகுதி சுபவடிவ
மல்லவெனக் காட்டவிந்நூ லாக்கினான் - தொல்லைமயல்
போக்குசச்சி தானந்தப் புண்ணியனல் லோர்க்குறுதி
யாக்குதலை நோன்பென் றவன். (௨)

(*)

இஃது

வீரசைவரில்-திருமழிசை

## குமாரகுருஐயரவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

ஆயநெறி யுணராவெம் மதத்தவரு மேற்றுத்தம் மானவாதி
வீயநெறி யாக்கருதச் சர்வமத சித்தாந்த விளக்கமென்னத் [ருன்
தூயநெறி விளைவிடையாற் சோதனையா திகட்கியையத் தொகுத்துச்சொற்
காயநெறி யறிபீரூர் சச்சிதா நந்தனெனுங் கலைவல்லோனே. (௩)

## சாத்துகவிகள்

முற்றிற்று.

௨

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சர்வமதசித்தாந்தவிளக்கவினாவிடை

## அதிகார அட்டவணை.


| அதிகாரம் | பக்கம். |
| --- | --- |
| முகவுரை ... | ௧ |
| தத்துவமசிவாக்கியார்த்தம் ... | ௨ |
| நாஸ்திகவாதம் ... | ௩ |
| ஆஸ்திகவாதம் ... | ௪0 |
| ஆஸ்திகநாஸ்திகமின்றியமையாமை ... | ௫௪ |
| அவாந்தரவாதம் ... | ௬௩ |
| துவிதவாதம் ... | ௬௬ |
| விசிட்டாத்துவிதம் ... | ௯௭ |
| போலிவேதாந்திவாதம் ... | ௧௧௬ |
| காலவாதிமதம் ... | ௧௨௩ |
| சூனியவாதிமதம் ... | ௧௨௮ |
| மூடவாதிமதம் ... | ௧௩௨ |
| சாத்தேயமதம் ... | ௧௩௮ |
| பிரபலசுருதி யப்பசுருதியி னிலைமை ... | ௧௪௩ |
| அத்துவிதம் ... | ௧௪௭ |
| அவசரநிலை ... | ௧௫௯ |
| ஞாயவாதியபிப்பிராயவிளக்கம் ... | ௧௬௪ |
| சுவாநுபூதிவினோதவிளக்க நான்மணிமாலை ... | ௧௬௯ |


அட்டவணை முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

# சர்வமதசித்தாந்தவிளக்கவினாவிடை.

## முகவுரை.

நேரிசைவெண்பா.

அறிவொன்றே கெட்டி யயலனைத்தும் போமே
அறிவை நியதிசெய்த லாமோ - பிறிதொன்றோ
உண்டேல் வெளியாக்க லொக்குமே யாமுய்ய
பண்டிதர்காள் கேண்மின் பரிந்து.

இந்நூற்குறை காணப்புகுவா ரெவ்வெவ்வகைப்பாடை யிலக்கியங்களு மவ்வவற்றிற்கு வழுவுறாது சான்றோரா லமைத்த வெழுத்துச் சொற்பொருண்முதலிய விலக்கணங்களும் பஞ்சபூதமுதலிய பௌதிகங்களு மிவைபோல்பவைகளுமாகிய சடபதார்த்தங்களு மிவற்றையே போகமென நுகர்தற்பாலவாகிய சித்துபதார்த்தங்களு மினையவெனத்தெரிவிப்பான் வேண்டி யிவற்றைத்திருக்கு திரிசியமென விரண்டு பாகுபாடாக்கி யதிற் சடதுக்க விலக்கணமு மவற்றிற்கியைந்தவிலக்கியமுந் திரிசியமெனவும், சத்துசித்தானந்த விலக்கணமு மவற்றிற்கியைந்த விலக்கியமுந் திருக்கெனவு மமைத்தலின், பாடையின் பூரணவாதரவும், வஸ்துசோதனை ஞாயம் பொருந்த முரணுறுதலைமைந்த தர்க்கவாதரவு மிலரோ லவர்க்கிந்நூற் பயன்படாதென்க.

# தத்துவமசிவாக்கியார்த்தம்..

(துவிதம்.)

தத்வா - துவம், தத்துவம்.

தத் - பரம், இவா - போல,

துவம் - நீ, அசி - ஆனாய்.

(கருத்து.)

பரத்தைப்போல் - நீயானாய்.

(உதாரணம்.)

மதிமுகம், பவளவாய், என்பவற்றில்; போலவென்னும் உவமையுருபு தொக்குநின்றாற்போலும்.

(விசிட்டாத்துவிதம்)

தத்துவமசி

விசிட்டம் - கூடியிருக்கிற, துவிதம்.

தஸ்யபாவா - தத்வம். தஸ்ய - பரத்தின்,

பாவா - தர்மமாக, அசி - ஆனாய்.

(கருத்து.)

பரவஸ்துவின் - தர்மமாக - ஆனாய்.

(உதாரணம்.)

பிராமணத்துவம் - சூத்திரத்துவம்-

சந்நியாசத்துவம் - என்பவற்றில்; துவமென்பது;

தர்மத்தை - விளக்கிநின்றாற்போலும்.

(அத்துவிதம்.)

தத்துவமசி.

தத்-துவம - அசி யெனப்பிரித்து; நேரேயேனும், துவம்-தத்-அசி-யெனமாற்றியேனுங்கொள்ளினும் பதப்பொருள் அது நீயானா யெனவும், நீயதுவானாயெனவு மமையும்; அமையவே, யதுவேநீ நீயே யதுவெனத் தேற்றப்பொருள் கோடற்குத் தொக்கு நின்றது ஏகாரமெனப்பெற்றாம்.

(உதாரணம்.)

வேடதாரியொருவன் தான்கொண்ட வேடமாகிய பிராமணத்துவமும், வெட்டியாரத்துவமும், அவனையன்றி வேறில்லாமையால், அவ்வேடங்காரணமாகப் பிராமணன் வெட்டியானென்புழிப் பிராமணனே வெட்டியான், வெட்டியானே பிராமணனெனப்பொருள் படுதற்குத் தேற்றேகாரந் தொக்கு நின்றாற்போலும்.

இதுபற்றி இனி யிம்மூன்று பட்சமாகிய துவிதம-விசிட்டாத்துவிதம்-அத்துவிதங்களைக்குறித்து வந்த அவசரார்த்த வினாவிடை நூல் ஒன்று சொல்லப்புகுதும்.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

# சர்வமதசித்தாந்தவிளக்கவினாவிடை.

கடவுள்வணக்கம்

சிதம்பர மன்றிப் பதிபசு பாசஞ் சிறிதுமிலை
சிதம்பர மாக முடிவதென் றாய்நவிற் றோர்ந்தவர்க்குச்
சிதம்பர மன்றி யிடமே தெமக்குள சிந்தனைக்குச்
சிதம்பர மேபர செயபவந் தனையெனத் தேர்ந்தனமே.

குருவணக்கம்.

நேரிசைவெண்பா

ஆபாசற்றோர்ந் தறிவன்றே நீயதுகாணா
ஓயவிடம் வேறன் றுணர்த்தினான் - மாய்விப
பிறைசையரு ணைசலப்போப் பெம்மான் குரவன்
நறைமலர்த்தா ளென்மனத்து நாடு.

## க-வது—நாஸ்திகவாதம்.

உரிய நிலையம்

சோதனை

ஞாயவாதிவினா—ஞாயவாதி; நாஸ்திகனைநோக்கி ஐயா! இவ்வுலகவாழ்வு எவ்வுயிர்க்கும் நிலையானதெனனை?

நாஸ்திகன்விடை—அதற்கு நாஸ்திகன், சுபாவமென்றனன்.

ஞா-வினா—அச்சுபாவம்; உயிர்களுக்கோ, உலகத்திற்கோவெனின்?

நா-விடை—என்றும் நிலையாதலாலுலகிற்கென்றுணர்க.

ஞா-வினா—ஆனாலுயிர்களுக்கில்லாமா?

நா-விடை—தாமே நிலையற்றதாகலின் தமக்குள்ளவாழ்வும் நிலையாகுமா ஆகாதென்க.

ஞா-வினா—தாமே நிலையற்றதென்றதென்னை?

நா-விடை—நான்குபூதத்தின்சையோகத்தெழுச்சியே தேகமாதலானும், அச்சையோகத்தின் பிரிசனமு சண்ணுமைப்படக்

புற்ற வவசரத்தில் சிவப்பென்னு மோதர்மம் அவாந்தரமாயெழுந் தாற்போற் சைதன்யமென்னு மோரறிவு எழுந்தது அது வுயிராதலானும், அவ்வுயிருண்மையானு லன்றோ நிலையெனப்படும் எனவறிக.

ஞா-வி௫—உயிரொனப்படுவ துணர்வென்றனோ - யொக்கும். மூன்றவஸ்தையிற் சாக்கிராவஸ்தைமாத்திரங் கொஞ்சம் விசாரிப்பம், எங்ஙன முன்கருத்தெனின் ?

நா-விடை—அங்ஙனமாகுகவெனக் கூற

ஞா-வி௫—தேகாதிப்பிரபஞ்சமெதற்குக்காணப்படுகின்றது. தனக்குத்தானேயெனில், அதறியுமா? அறிவுக்கெனில், உடலுக்கன்னியமாகவேண்டும். அங்ஙனமில்லாமையா லிவ்வையுந்தவிர்க்க வேண்டுமெனின் ?

நா-விடை—அன்னியமாகாவிடினு முடலளவாநின் றுடலையுமதற்குப்புறம்பாகிய பிரபஞ்சத்தையு மறியுமென வறிக.

ஞா-வி௫—அவ்வறிவு பிரபஞ்சப்பொருளோ, அன்னியப்பொருளோ? பிரபஞ்சப்பொருளெனின், அறியாதிருக்கவேண்டும். அன்னியப்பொருளெனி னவாந்தரப்பொருளொன்று திருக்கவேண்டும். எங்ஙனமெனின்; நான்குபூதத்தி லொவ்வொரு பூதமும் பலவல்ல. இங்ஙனமிருக்க; இந்நான்குபூதத்தம்ச சையோக பதார்த்தமாகிய தேகம் பற்பல பேதமாத்தோன்றி நின்றழிந்து மீண்டும் அந்தந்தப் பூதமாய்விடுமென்பீர் - அப்போது நான்குபூதமுந் தனித்தனியுபாதானமாகவும அதிஷ்டானமாகவும் நிர்விகாரமாகவும் அகண்டமாகவும் நித்தியமாகவும் ஏகமாகவும் இருக்கின்றதெனத் தானே பொருள் படுகின்றதன்றோ-அதுபோலத், தனித்தனியாய்த்தேகங்கள்தோறு நானென்னு மறிவு பற்பலவாயிருக்கக்காண்கின்றனமே ; நானென்னு மொவ்வோரறிவுங் கற்பிதமென்னி லொவ்வொரு தேகமும் நான்குபூதத்தையன்றிகற்பிதமென்று திருக்கவேண்டும். அங்ஙனமில்லையென்னி லிங்ஙனமில்லையெனலாகாதோ? ஆதலாற்றனித் தனித் தேகங்களுக் காதார மிருக்குமாறுபோன்று, தனித்தனியறிவுக்குமாதாரமிருக்கவேண்டுமெனச்சொல்லவேண்டுமோ? இங்ஙனமிருக்க; அறிவை யவாந்தரப்பொருளென்னலாமோவெனின் ?

நா-விடை—ஆதாரமிருந்தால் தெரியாதா? இதெல்லாஞ்சொற்சாதுரியமேயல்லாமல் பயனின்றெனவறிக.

ஞா-வி௫—நீர்கெம்பத்திலாவது, வெளிப்பட்ட விடத்திலாவது, சைதன்னிய மென்னும் தர்மம் அவாந்தரப்பொருளானதைக் கண்டதில்லையே நீர் சொல்லுவதுமாத்திரஞ் சொற்சாத்துரிய மன்றோவெனின் ?

நா-விடை—ஒன்றுந்தோன்றவொட்டா தடக்கிவிட்டனையே, நீ யாரெனக்கேட்க.

ஞா-வி௫—நீதானென்றான் ?

நா-விடை—அஃதெங்ஙனமெனக்கேட்க.

ஞா-வி௫—நானெனப்பட்டதும், நீயெனப்பட்டதுங் கண்ட பேதத்தால் வேறெனப்படுவதன்றிச், சிற்சடத்தாலொன்றன்றோவெனின்?

நா-விடை—அதுதாவெப்படியென.

ஞா-வி௫—இவ்விருதேகமும் பூதகாரியமாதலானும், இவ்விருசைதன்யமும் அவாந்தரப்பொருளின்மையானு மொன்றெனக் கூறலாகாதாவெனின் ?

நா-விடை—நம்மிருவர்க்கும் பிறப்பிறப்புக்காலமும், சுகபேதமும், கரணபேதமும், யோசனைபேதமும் வேறுபடுவதா லெங்ஙனமேகமாவமென்க.

ஞா-வி௫—அதுபற்றிப்பேசப்புகில்விரியும். ஆயினும், சிற்றலைபேரலைகளாற் சலம் பெரிதுசிறிதாயிற்றோ? அதுநிற்க; சடமாகிய செகத்தைப்போல் சித்தாகிய சைதன்யமு மிப்போது ஓர் முதலன்றோவெனின் ?

நா - விடை—எல்லாதேகங்களுக்கும் நால்குபூதமுதலானும் போல, நானென்னுமெல்லா சைதன்யங்கட்கும் ஏகத்துவமான சைதன்யமொன்றுண்டாய் முதலாகவேண்டியது ஞாயமே-அங்ஙனமிருந்தாற்காணப்படாதாவென்றனன்.

ஞா-வி௫—அதற்கு முன்னமே யுத்தரவு சொல்லிவிட்டனன் அதுநிற்க; அகம்புறத்திற்காணப்படுவன வனைத்திற்குந் திரிசியமெனவும், அவற்றையாங்காங்கு நின்றறிவது யாதோ அதற்குத்திருக்கெனவுஞ்சொல்லப்படும் - இவ்விரண்டு மேற்கப்படுவதன்றோ ?

நா-விடை—அவசியமையமின்றி யேற்கப்படுவதேயெனவறிக.

ஞா-வி௫—தனித்தனி யறிவுந் தம்மாலறியப் படுவனவற்றிற்குத்தாந்திருக்கெனப்படுமன்றோ? இங்ஙனமிருக்கத்; தத்தமக்கியை

ந்த தேகந் தானெனப்படுமோ, படுதலி னிதுபிராந்தியன்றோ, இது திருக்குவுக்கு வருவானேன்?

நா-விடை—சுபாவமென்றனன்.

ஞா-வினா—இதுதிருக்குவுக்கோ,திரிசியமானதேகத்திற்கோ, என்னு மையம் வேண்டுவதின்று. அறிவது திருக்காதலி னதற்கே சுபாவமெனி னிப்படியேவருந்தேகத்தையெல்லா நானென்னல் சுபாவமாகவேண்டும், அப்போது முன்னும்பின்னும் பிறவி யுண்டென வருமன்றோவெனின்?

நா-விடை—அஃதெங்ஙனமேற்கப்படுமென்றனன்.

ஞா-வினா—சுபாவமென்னுமொழிக. ஒழியாதாயின், அக்கினியானது, அடுத்ததையெல்லாந் தகனமாக்குவதுபோல; அறிவும் அடுத்தவுடலையெல்லா நானென்னல் சுபாவமாகவேண்டும. சுபாவச் சொல்லைவிடில் யாவும் முன்பின் செனனமுண்டெனலை விட்டுவிடும். இதற்குத்தரம் யாதெனின்?

நா-விடை—தேகத்தை நானென்னும் பிராந்தி புத்திவிகற்பத்தாலெனி னெதுமுதற்கொண்டெனவரும், இதுமுதற்கொண்டெனி னிப்போதாவது வருதற்கேதென்னை யெனவரும், அறியாமையாலெனி னிதையே யடிக்கடி சொல்வானேனெனவரும், பழக்கத்தாலெனின், எந்தச்சென்மத்துப் பழக்கமெனவரும். இதனால் முன் பின்சென்ம முண்டெனத்தானே யமைதலி னிதற்கென்செய்வேனென்றனன்.

* ஞா-வினா—அறிதலினாலறிவு தேகாதிப்ரபஞ்சமாகாது, அப்போது அறிவுவேறு தேகம்வேறென்றாயிற்று. தேகமுருப்படுதற்கியைந்தவினைமுதல் தேகமெனின், அகர்த்தத்துவமு மசேதனத்துவமுமாமே; அறிவெனி னங்ஙன மனுபவமிருக்கவேண்டுமே; சுபாவமெனி னலையாதிகள்போற்சென்மமளவின்றெனவருமே; இங்ஙனம் வாராமலியற்றுதற் கர்த்தா இதுவெனவுணர்த்தவேண்டுமெனின்?

நா-விடை—வேறே கர்த்தாவேணடற்பாலதெனின், அஃதியாது-எத்தகையது-எங்குளது-நிற்கவிடமேது என்றிதுபோன்ற அரிய கேள்விகளெல்லாம் வருமே; ஆதலாற் கர்த்தா இல்லை, அனைத்துஞ் சுபாவமென்றனம், இதுவே யெமது துணிபெனவுணர்க.

ஞா.வினா—உயிருமில்லையென்றது; வஸ்து சோதனையிலின்னதெனக் கணிக்கப்படாமைபற்றித்தானோ, அல்லது அ[illegible]த்தினாலோ,

கல்வித்திறத்தினலோ, சபதத்தினலோ, யாதோ நுமது கருத்தெனின்?

ந-விடை—அதுகேட்பானேன். கண்டனரார், உண்டெனக் களித்துழல்பவரு மெம்போலுங்கபோதிகளன்றே? வாய்ச்சொல்லா லென்னபயனெனவறிக.

ஞா-வி—அடிக்கடி யெங்கே யுத்திக்கு ஒன்றுந் தோன்று மற்போகின்றதோ, அங்கங்கேயெல்லாஞ்சுபாவமென்றுவது, இருந் தால் காணப்படாதாவெ ன்றுவது சொல்லுவது; கல்வித்திறத்தின் முறையோ, நாஸ்திகசாம்பிரதாயக்கட்டுப்பாடோ, நன்று நன்று, நுமது விவேகமிருந்தவாறென்னே, ஞாயமாாக்கங் கேட்டறியீர்போ லும், இது நிற்க; உயிர்களுக்குக் கர்த்தத்துவசாதனக்கருவியாயும், போக்தத்துவசாதனக்கருவியாயு நின்றுள்ள இச்செகமானது; சத் தோ, அசத்தோ, சதசத்தோ முன் பிதனைத் தெரிவிக்கவேண்டுமெனின்.

நா-விடை—தொன்றுதொட் டனுபவத்துக் கியைந்திருத்தலிற் சத்தேயெனவறிக.

ஞா-வி—சத்தானுற பிறிதோர்கருவியினுலேனும், சோதனை யினுலேனும், நாசமின்றி யிருக்கவேண்டும். அங்ஙனமொன்றைக் காட்டுகெனின்?

நா-விடை—புறம்பினும் அகத்தினும் புலப்படுவன யாவுமென வறிக.

ஞா-வி—புறம்பிற் புலப்படுபவைகளிலொன்று கேட்குதும். கடபடமென்னுமிடத்து; மண்ணையன்றிக்கடமும், நூலையன்றிப் படமுமிருக்கவேண்டும். அங்ஙனமில்லையேயெனின்?

நா-விடை—இவைபோல்வனவனைத்து மிடையிலொருவராலா க்கப்படுபவையன்றே?, பஞ்சையும் மண்ணையும் பற்றி விசாரிக்கு தும், இவ்விரண்டுஞ் சுயம்பெனவறிக.

ஞா-வி—கடபடமென்னும் விகாரத்தைப் பற்றியன்றே, இவை சுயம்பெனப்பட்டன. சுயம்பாயின், மண்ணென்பது; சிறிது பெரிது உருட்சி தட்டை வட்டம் சதுரம் கனம் நாற்கோணம் முக் கோணம் இருகோணம் ஐவண்ணம் மட்டம் நீட்சி இது முதலிய வற்றி லொன்றை யிதுவெனச்சொல்லின், வடிவு அளவு நிறம் என் னுங்குணமாம் குணியைக்கேட்டாற் குணத்தைச்சொல்லலாமா?

நா-விடை—அருவமன்று, உருவமாககாணுமனைறமதயது தா னெனக் கூற.

ஞா-வினா—உருவம அருவம ரூபாரூபம சிதது சடம முதலி யவுங் குணமன்றோ குணியாதெனின்?

நா-விடை—உருவமாகத் தோற்றுகின்றதே யதுதானென்க.

ஞா-வினா—அணுக்குழுசையோகத்தை யன்றி யங்ஙனந்தோற் று முருவத்திற்குப் பொருள் வேறுண்டோ?

நா-விடை—இல்லை யெனவறிக.

ஞா-வினா—காரணமுங் குணமுங் காரிய மெனப்படுமோ, இம்மூன்றிற்கும் பெயர் வெவ்வேறன்றோ, காரியப்பொருளைக்கேட் டாற்குணத்தையாவது காரணத்தையாவது குறிக்கலாமா, இதுவினா விடைக்குரிய இலக்கணமா, அல்லவே, நீர்பாஷை வல்லவரன்றோ, இனியாவது மிசிரிம்பிக்காமல் இதுபோல எந்தக்காரியப்பொருளை யாவது காட்டவேண்டு மெனின்?

நா-விடை—இன்ன இலக்கணத்தோடு பரிசோதிக்கப்புகின், எதுவும் பொருளல்லாமற்போகுமே, சர்வமுஞ்சூனிய மாக்கத்தக்க வித்தையாகக் காணுகின்றதே, இது தோலிருக்கச சுளை விழுங்கி போலாகும்; இதுபோதும், இனியாவது விடைபெறுகவென்றனன்.

ஞா-வினா—நல்லது சரணஞ் சரணம். உம்மைவிட நாஸ்திக வல்லவர் யாரிருக்கின்றனர். இன்னொருசந்தேகமுண்டு, அஃதியா தெனின்; செகத்தையு மொருஙகே கூட்டித் திரிபதார்த்தமும் நாஸ் திகமென்னலாகாதா?

நா-விடை—பிரத்தியக்ஷத்திற்கும், அனுபவத்திற்கும், இயை ந்திருப்பது யாவருஞ்சாட்சியாதலி னெங்ஙனங் கூறப்படு மென வறிக.

ஞா-வினா—கருங்குதிரை வெள்ளைப்பசு வென்றது; வெளிமுக நாட்டத்தினரல்லாதா ரருமை. அவருக்குடன்பாடாகுமா, அவரல் லாதார் பலராயினு மூடரன்றோ, அவர் சாட்சியா லென்ன மகிமை யெனின்?

நா-விடை—ஆஸ்திகருஞ் சகத்தை யுண்மையெனக் கொண்ட ன்றோ கடவுளிருப்புக் கூறவந்தது; அவர் புராணம், ஆகமம், இதி காசம், வேதம், அடியார் சரித்திரம் முதலிய வனைத்தும் பொய்யெ னப்படுமே இது முறையோவென்றனன்.

ஞா-வினா—"பொய்யை மெய்யென்ற மூடர் புண்ணியமொன்று புராணங்கூட்பிடுமானால், மெய்யை மெய்யென்ற ஞானிக்குக்குற்றங் கள் விதித்த சாஸ்திரமுண்டோ? எனவும்" "பங்கையாசனன் முதற் பலமுனிவரும்பாருளபெரியோருங், கங்கையாதியாந்தீர்த்தமுந்தே சமுங்காலமு மறைநூலும், அங்கமாறுமந்திரங்களுந் தவங்களு மச த்தியமெனச்சொன்னால்" எனவுஞ்சான்றோர் இங்ஙன மனுபவமிரு த்தலிற்கூறினர். இது முறையே யென்றதற் கையமென்னை?

நா-விடை—பிரத்தியக்ஷ விரோதிகளொன்று முலகவழக்கமொ ழிக்கு நீரேயுதாரணமாகக்கண்டனம், உங்களைப்போல முழுப்புரட் டைக்கண்டதில்லை, நீர் விடைபெற்றுக்கொள்ளுமென்றனன்.

ஞா-வினா—கல்வி ஞானப்பாண்டித்துவமிருந்தும் பாமரரைப் போல் மொழியலாமா?

நா-விடை—உமது சோதனை காரணமாகக்காணில், உலகமித் தையாகுதலுண்மையே, எமக்குண்மையாகக் காணப்படுவானேன்.

ஞா-வினா—பழுதையுந்தறியு மிரவிற் பாம்பாகவுங் கள்ளனாக வுந் தோற்றுகின்றதனாற் பாம்புங் கள்ளனு முணமைப்பொருளாகு மா?

நா-விடை—ஆராய்ச்சிக்களவின்றே வுலக மெய்யெனல் தவிர் தற்கு என்றனன்.

ஞா-வினா—மெய்யெனத் தோற்றுமளவும் விடாசோதனைத் த விரப்படுமோவெனின்?

நா-விடை—கணமேனும் விடாமல் சோதனையி னின்றால், அருந்தல்-பொருந்தல்-சுவையிழக்கவேண்டிவருகின்றதே, உனதுற வுபோதும், சரணஞ்சரணம் நடவென்றனன்.

ஞா-வினா—ஐயா! யோனிக்குந் தீனிக்குங் காத் திருவரையுங் கண்ட பல னென்னை?

நா-விடை—பசி காமங்களா லுண்டாம், வதை தவிர்ந்து நிற்ற லே பலனென வறிக.

ஞா-வினா—கற்றுணர்தலிலும், மனிதனாகப்பிறந்தபிறப்பிலும், என்னசிறப்பு?

நா-விடை—பாகங்களோ டுண்ணுதலும், லீலாமுறைப்படி யா லிங்கனஞ்செய்தலுமே சிறப்பெனவுணர்க.

ஞா-வினா—இங்ஙனஞ் சுகித்தற்குப்பொருள் காரணமாதலா னும், அப்பொருள் தேடுமிடத்துங் காக்குமிடத்துஞ் செலவுசெய்யு

மிடத்தும் இடையூறே விளையுமாதலானும், மனைவிபுத்திரர் தன்க ருத்திற்கியைந்தொழுகுவ தரிதாதல்பற்றி யுண்டா மாறுக்கவலையே சுகமாதலானும், இவ்வளவுகவலையில்லாவிடத்தும் தன்தேகம்யாதொருகாரணத்தினாலோ அருந்தல்-பொருந்தலுக் கபாத்திரமானதைக் கண்டுகண்டு படுமனக்கொதிப்பினாலும், சத்துரு-கள்ளர் - பங்காளிகள் - முதலியோரால் வருந் துன்பத்தைப்பற்றி வருமலைச்சலினாலும், அவயவக்குறைவுபற்றியும், இந்திரிய அந்தக்கரணப்பழுதுபற்றியும், தேக நீங்குவதைப்பற்றியு முண்டாந் திகிலினாலும், மாறாது சுகிக்கவேண்டுமென்னுந் தாற்பரியத்திற் கானியே வருதலானும், துன்பமயமன்றி யின்ப மனுவளவேனுங் கண்டிலம். இங்ஙன மில்லாமலிவ்வுலக சுகநுகர்வா ரில்லவேயில்லை இதுதானா சுகமெனப்பட்டது, இதென்ன விவேகமெனின்?

நா-விடை—இது வுலகசுபாவமிதைப்பற்றிப் பேசுவதிலென்ன லாபமென வறிக.

ஞா-வினா—எவ்வெப்பொருளெவ்வெவ்வண்ணமோ அவ்வவ்வண்ணமாக அறிபவர்க்கன்றோ, வுலகஞ்சுகவடிவாக் காணடல், மற்றையர்க்குகாணுமா?

நா-விடை—அஃதெங்ஙனமெனக்கேட்க.

ஞா-வினா—"விருப்புவெறுப்புருவாம் விடயத்தோடிருக்கு மயற்சகமென்ப தனுபவமன்றோ" இதனையுணர்ந்த நுண்ணியவுணர்வுளோர் விருப்பு வெறுப்புருவாதற் கேதென்னையென வஸ்து பரிசோதனைபண்ணுவாரன்றோ, பண்ணுங்கா லொவ்வொன்றுஞ் சுயம்பெனப்படாமற்போவதைக்கண்டு "இறப்பிலாவிந்த மோகமிதையுமீட்டெண்ணமின்றி மறப்பதே நல்லதென்று" கூறியசான்றோர் வசனத்தையு முன்னி யந்நிலையி னிற்பா ரன்றோ, அவர்களுக் குலகந் தோற்றமாத்திரமன்றி யுண்மையாகுமா? இங்ஙனமிருக்க, இது வுலக சுபாவ மென்னலாமா வெனின்?

நா-விடை—சுபாவமெனக்கூறும் வசனங்கள் உமக்குச் சத்துருபோலிருப்பானேன், அதை மறப்பானேன், இஃதடமோவெனக் கேட்க.

ஞா-வினா—மெய்யே அல்லாததைச் சொல்லலாமா? எங்ஙனமெனில்; விகாரவடிவை யெதார்த்தமாகக்கோடலும், விகாரத்தை விகாரமாகக்கோடலு நமது முயற்சியாதல் பற்றி முன்னர் விருப்பு

வெறுப்பும், பின்னரவை நாசமுமுண்டாகின்றது. இங்ஙனமிருக்கச் சுபாவமென்னலாமாவெனின்?

நா-விடை—நாஸ்தி-நபாதி யென்னுமிரண்டுத்தியால் ஆன்மா-பரம - கதி - முதலியவை இல்லவேயில்லை யென்றெவ்விடத்தும் வென்றுவரு மெமது வெற்றிக்கொடியைத்தறித்தெறிதற்கெவராலு முடியாமற்போயிற்று, அற்பப்பிராணியாகிய நீயா தறித்தெறியப் புகுந்தனை பளா நன்று நன்று, இந்த விபரீதயுத்தியெல்லாந் தள்ளு போவென்றுறுத்தினன்.

ஞா-வி—ஆஸதிக நாட்டுமுறைதெரியாதவர்போல் நாஸ்திக நாட்டுமுறை தெரியாது, கோபித்தலிற் பயனென்னை?

நா-விடை—எம்மிலு நீ வல்லையோ, இதென்ன மடமையென்றனன்.

ஞா-வி—உமதிடத்தில் மடமையெனச்சோதனையால் யாங் குறிப்பித்தாற்போற் குறிப்பிக்க வகையறியாது, எமதிடத்தி லுள்ளது மடமையெனச்சொல்லலாமா?

நா-விடை—போவென்றாலும் போகவில்லை, யிதுபற்றியாவது போவையென்று கூறினனென வறிக.

ஞா-வி—இனியாவதுஆஸ்திகத்தைக்கொள்ளுதற்குத்தடை யென்னை?

நா-விடை—என்னிட்டமென்றனன்.

ஞா வி—கல்விஞானத்தோச்சிக்கிதுதானே அடையாளம், விவேகிகளுக்கிஃதடுக்குமோவெனின்?

நா-விடை—பரவஸ்துவாளதிருந்தாற் காணப்படாதா, காணப படாததா லெங்ஙனமுண்டெனலும், அவ்வாத வந்தித்தலுமென்றனன்.

ஞா-வி—இல்லாதவுலகை யுண்டென்றாற்போல் உள்ளபரத்தை யிலலையென்றது, உமது பரம்பரை மகிமையெனக்கொள்ளலாகாதோ வெனின்?

நா-விடை—இல்லாத வுலகை யில்லையெனக்காட்டியவாறுபோன்று, உள்ள பரத்தையுள்ளதென யாமேற்கச்சொல்லின் ஏற்குது மென்றனன்.

ஞா-வி—ஒவ்வொருதேகமும் ஏகபூதத்தையன்றி யின்றாதல்போல, ஒவ்வோரறிவு மேகசைதன்யத்தையன்றி யின்றாகவேண்டுமென்றே, தனித்தனியென்றது வியட்டியும், ஏகமென்றது சமட்டியு

மாம். தெங்கு-கமுகு-என்றது வியட்டியும்; தோப்பு, என்றது சமட்டியுமென வுதாரணமாகக்கொண்டு அறிவையெல்லா நோக்குமிடத் தேகமெனற்பாலதன்றோ, இந்த ஏகசைதன்ய மில்லையெனப்படில், தனித்தனி வியஷ்டி சைதன்ய மில்லையெனக்கூறவேண்டும். இல்லையெனக் கூறில் சுகதுக்க நுகர்த லிப்போதறிவன்றி யெதுவென வரும், விடைவேறின்றாதலால் ஒத்துக்கொள்ளவேண்டிவரும், வியட்டியொத்துக்கொள்ளில் சமஷ்டி சைதன்யமுண்டெனற்குத் தடையுண்டோ, இல்லையாதலி னதுவே பரமெனவறிக. இதற்குத்தடை வேறுண்டோ வெனின் ?

நா-விடை—ஞாயத்தால் யுத்திக்கியைந்துநிற்றலின் ஒத்துக் கொள்ளவேண்டியதற் கையமின்று, ஆயினும் பிரத்தியக்ஷமில்லாததா லொருவாறு தடையுண்டென வறிக.

ஞா-வினு—பொறி கரணஞ் சீவன் அப்பிரத்தியக்ஷ மன்றோ, அவற்றை யுண்டெனக் கொளனுவானேன் ?

நா-விடை—அவற்றின் சேட்டையாகிய வுணர்தலைப்பற்றி யென்க.

ஞா-வினு—சிருட்டிமுதலிய பஞ்சகிருத்திய முண்டாயிருப்பதைப்பற்றி வினைமுதலாகிய கடவுளுண்டெனக்கொள்ளலாகாதோ?

நா-விடை—கொளளலாம் சத்தமுதலிய ஐந்துவிடயங்களையுங் கண் முதலியவைகளிருந்தறிகின்றதைப் பிரத்தியட்சமாக அறிகின்றனம், அதுபோல் கடவுளிருந்து படைப்பாதிகள் செய்யினும், அவரப்பிரத்தியட்சமாதலைப்பற்றி யெங்ஙன மேற்ப மென வறிக.

ஞா-வினு—நல்லது பொறிகரணங்களிலொன்றாகிய கண்ணைப்பற்றிக் கொஞ்சம் விசாரிப்பம். கணணென்ப துருவப்பொருளோ, அருவப்பொருளோ, உருவப்பொருளெனின்-முட்டைபோல் காண்பது மாம்சாரம்பாதிவஸ்துக்களன்றோ,அதறியுமா?கறுப்பு வெள்ளையெனின், குணமாயிற்றே, யஃதறியுமா, பாவைபோல் காணப்படுகின்றதே யதுதானெனின், அது போலிவடிவாதலிலறியுமா, அதிலொருதெரிவிருந்தறிகின்றதெனின், உருவமா, அருவமா, அருவமெனின், சித்தோ, செடமோ, சித்தெனின் காட்டுக. காட்டப்படாதெனி னெங்ஙனமுண்டெனக் கொண்டனையோ, அதுபோலக் கடவுளு மாகையாலுண்டென்று கொள்ளற்குத் தடையாதெனின் ?

நா-விடை—பொறிகரணமென்னுந்தெரிவு இன்ன நிலையினதெனத்தெரியாது, அவயவத்தையும் நெஞ்சினையும் பொருளெனக்கொ

ன்டுகின்ற வென்னை யல்லவல்லவென நியதிகளாந் தவாங்மனோகோச ரமாக்கினே; யிதுபோல, உருவெனக்காட்டி யல்ல அல்லவென் றவாங்மனோகோசரமாக்குதற்கோ பரவஸ்து வுண்டென்றனையென்றனன்.

ஞா-வினு—இது நிற்க; கொலை-களவு-பொய்-வஞ்சித்தல்-பிறர் மனையைத்தன்வயப்படுத்தல் முதலிய கொடிய துற்செயல்கள் ஏற் கத்தக்கனவோ, தள்ளத்தக்கனவோ? ஏற்கத்தக்கன வெனின், பிற னொருவ னிக்கொடிய தீச்செயல்களை உன்பாலுஞ்சாது செய்யி னே ற்பையோ, அதுபோலப் பிறர்பானீயஞ்சாது செய்யினேற்பரோ? தள்ளத்தக்கன வெனில், இவற்றைச் செய்யி னரச னுக்கினையால் தண்டனை நேரிடுமன்றோ, அரசனுக்குத்தெரியாவிடி லெங்ஙன நேரி டுமெனின் - அக்குற்ற நிவர்த்திக் கிடமின்றே; இடமாவதென்றோ வேண்டுவதின்றெனின், இதுமுறையோ, முறையாயின் விதிவிலக் கேன். வேண்டாதாயின், இம்மையில் தானே யரசனுல் தண்டனை யடைந் தவதிப்படுகின்றதைப் பிரத்தியக்ஷமாய்க் காண்கின்றனமே; இம்மையில் கரந்து தீச்செயல் செய்பவர்க்கு மறுமையி லுண்மை யாகத் தண்டனை கிடைக்குமென் றெண்ணலாகாதாவெனின்?

நா-விடை—மறுமை யுண்டானு லன்றோ, அங்ஙன மெண்ண லாமென வறிக.

ஞா-வினு—ஆயின், இம்மை வருவதற் கேதென்னே?

நா-விடை—இதுவுங் கேள்வியாமா வென்றனன்.

ஞா-வினு—இதுவு முத்தரவாமா வெனின்?

நா-விடை—இம்மையைப்பற்றி மும்மையு மறுமையு மேற்க வேண்டி வருகின்றதே, யென்செய்வே னென்றனன்.

ஞா-வினு—ஏற்காம லிருப்பதற் கேதுண்டானுற் சொல்லெ னின்?

நா-விடை—முன்செனன மின்னதென் றொருவர்க்குந்தெரியா ததென்னே.

ஞா-வினு—நானெனப்படு மறிவெல்லா மெங்கெங்கவுடல் தத் தமக்கு வாய்த்ததோ அந்தந்த வுடலளவாச் சராசரமெனப்பட்டுழ ல்வது மன்றி யதனதன் மயமானதை யந்தந்த வுயிருநினைவிலுங் களவிலுங் காண்கின்றதற்கு நாமே சாட்சியா யனுதினமு மிருக்கி ன்றனமன்றோ, இஃதன்றியும்; எங்கெந்த வுயிராகிய அறிவும் தத்த மக்கு வாய்த்தவுடலுக்குப் பின் னதன்மயமானதோ, முன்னோ? மு ன்னெனின், நாம் கண்டறியாத பொருள்களு மிடங்களு மயமானு

லன்றோ, அவை நமது நினைவிலுங் கனவிலுங் காணப்படும். அது போலத் தத்தமக்குரிய வுடல் வாய்ப்பதற்குமுன் னந்தந்த மயமா குமா, அவை நினைவிலுங் கனவிலுங்காணப்படுமா? வாய்த்ததற்குப் பின்னெனில், வந்தவுடல் மயமாய் நானெனப் பிரத்தியட்சத்திற்குத் திடமுறுந்தோறு நினைவிலுங் கனவிலு மவ்வுடலே நானெனக்காண ப்படுகின்றது. இந்தவுடல் வந்தபோது, இந்த ஆகாரமாகவே யந்த வுட னீங்கியபோது அந்த ஆகாரமு நீங்கிற்று; இது ஒன்றிலொன் றன்னியோன்யா பாவமானதன்றோ? இதனையாவது - கற்றிலேயோ, கேட்டிலேயோ, கண்டிலேயோ, இங்ஙனமிருக்க, வொன்றிலொன் றெ ங்ஙனங் காணப்படும்?

நா-விடை—இந்த அறிவே முன் தேகாகாரமாநின்றதனுற் கண நேரமாவது, மின்மினிபோலக் காணவேண்டுமே யெனக்கேட்க.

ஞா-வினு—சாக்கிரந்தோறுங் கணநேரமாவது, இவ்வுடலாகா ரந் தவிரக்கண்டாலன்றோ, அவ்வுடலாகாரஞ் செனித்தவ்வுடல் கா ணும். இவ்வுடலாகாரந்தவிர்ந்த அசதியிலிவ்வுடலோ டிவ்வுலகமே தோற்றவில்லை, யவ்வுடலு மவ்வுலகமு மெங்ஙனந் தோற்றும், அது கேள்வியன்று; அதுநிற்க, பிரத்தியக்ஷமில்லாத வியஷ்டி சைதன் யத்தை யவாந்தரப்பொருளொன்றுகவாவ துண்டெனக்கைக்கொண் டு, உலகமானுத லீறுன செயல்களும்,காமக்குரோதாதி தீச்செயல் களும், கொலைகளவாதிகளுக்குடன்படாத நற்செய்கைகளுஞ் சீவச் செயலெனத் தேர்ந்து துட்டநிக்கிரகஞ் சிட்ட பரிபாலனஞ்செய்ய விதிநிஷேத சட்டங்களை யுண்டாக்கிய நீர் தனுகரண புவனபோகங் கள் சீவச்செயலன்றுதலி னிச்செய்கைக்கு வினை முதல் வேறொரு வன் வேண்டுமே யவனைப் பரவஸ்து வெனக் கைக்கொள்ளுது மெ னின், காணப்படாமையா லுண்டெனக் கொள்ளே மெனலாமா? இதென்ன மதி யெனின்?

நா-விடை—என்செய்வ னென் மனஞ் சம்மதிக்க வில்லையே என்றனன்.

ஞா-வினு—சம்மதியாததற் கேது மூடமென்னலாகாதா?

நா - விடை—பிரத்தியக்ஷமானுல் மூட மென்னப்படாதென வறிக.

ஞா-வினு—சீவனைக் கண்டையா, பரத்தைக்காண; உன்னை நீ கண்டபின் கேளெனின்?

நா-விடை—என்னை நான் காணுத அவ்வளவு மூடனு வென்ற னன்.

ஞா-வினா—எது நீயெனக் காண்கின்றனையெனின்?

நா-விடை—இத்தூலவுளவென்றனன்.

ஞா-வினா—இத்தூலமுதித்தது இவ்வளவாக வல்லவே யெவ்வளவோ வெனில்?

நா-விடை—அவ்வள வவ்வளவாக வென்றனன்.

ஞா-வினா—கருவிலுட லுருப்படுதற்குமுன் னீயெவ்வளவோ?

நா-விடை—நா னிருந்தா லன்றோ அளவு சொல்லுவ னென்றனன்.

ஞா-வினா—தேக முன்னு லறியப்பட்டதன்றோ, நீயாகுமா?

நா-விடை—தேகமல்லாமல் வேறே கண்டிலனென்றனன்.

ஞா-வினா—நினைவிலுங் கனவிலுந் தேக மங்கே வரவில்லையே, தேகவடிவமாக அங்கே நீ காணப்பட்டுப் பலகிருத்தியமுஞ் செய்கின்றனையே யங்கே நீயாரெனின்?

நா-விடை—ஆம் இத்தேகமல்ல,வேறொன்றுளதாகத்தோற்றுகின்றது-அஃதின்னபொருளெனக்கணிக்கறியேன்-அதுவே நினைவிலுங் கனவிலும் பொருளிடங்காலமாகவும், நா னீ யவ னவ ளதுவாகவும், நின்றிச்சா ஞானக்கிரியைக ளியற்றுகின்றது, ஆதலி னில்லையென்றுஞ் சொல்லறியேன் என்றனன்.

ஞா-வினா—யான் நித்தியவுபவாசி யெனப்படுவோ னொருவன் தேகம பருத்திருப்பதா லிரவிற் கரந்துணகின்றானெனத் திடமாகக் கொள்ளுமாறுபோன்று; விடய நுகர்ச்சியும்,அதில் விருப்புவெறுப்பும், அதினாலினபதுன்பமும்,யுத்தாயுத்தவுணர்ச்சியும், கல்வி யாராய்ச்சியும், அவாவை யகற்றமற்கியைந்த நெறியும், கர்த்தத்வபோகத்துவ விளைவகலாமையும், உன்னுமிடத் தொரு புருடனிருக்கின்றானெனத் திடங்கொள்ளலாகாதா வெனின்?

நா-விடை—இதுபோ லருத்தாபத்தியாற் பரமு முண்டெனக் கொள்ளுதுமென்றனன.

ஞா-வினா—இதன்றியும்; நானென்றளவும் பிரவிர்த்தியேனும், நிவிர்த்தியேனு மொன்று நிகழும், நிகழ்தலைப்பற்றி யந்தந்த நிலைக்குத் தக்க தனுகரண புவன போகங்களைத் தந் தகற்றுதற்குக் கர்த்தா வேண்டுமாதலி னவரோ பரமுமெனக் கோடற்கின்னு மைய முளதோ வெனின்?

நா-விடை—சீவச்செய லன்றாதலின் பரத்தின தாகத் தனுகரணாதிகளைப்பற்றியும்,நான்குபூதங்களும் அண்டாண்ட சராசரங்களு

மாகிய இவற்றைப்பற்றியு மேற்கவேண்டும். கூடாதெனின்; இங் ஙனமுண்டாவதியற்கையாகவேணடும். இயற்கையெனின், கடபடா திக ளியற்கையாக வேண்டுமெனக் கேள்விவரும். வருவதைப்பற்றி யான் மறுக்கற்பாலதன்றெனக் கூறினன்.

ஞா-வினா—ஆனால் சீவச்செயல், ஈசுரச்செயலென் றிரண்டுண் டே, இனியாவ திதனைத் தடுப்பதற் கேதுண்டோ வெனின்?

நா-விடை—உண்டெனின் கண்ணுக்குப் புலப்படாதபொருளி டங் கால மாதிகளைப் பிறரா லுண்டென் றேலா திருக்கவேண்டும். ஏலாதாரில்லாததாற் பரமுமிருண்டென்றேற்கவேண்டும். காணப் படாதாவெனின், அதைப்போலக் கண்ட ஆப்தர் வாக்கியங்களா லேற்கவேண்டும். காணாத பொருளாதிகளைப் பின்னராவது சென் று காண்டற்கிடமுண்டே யெனின், இதுவுஞ் சிரவணமனனதிகளா லகமுகத்திற்சென்று பின்னராவது ஐயந்திரிபின்றிக் காண்டற் கிட முண்டே யெனவரி னென்செய்வே னென்றனன்.

ஞா-வினா—ஏற்பதற் கினியேனு மையமுளதோ வெனின்?

நா-விடை—இல்லை, எமது கட்சிக்குச் சோர்வுறுதே யென்ற னன்.

ஞா-வினா—ஒருவன் றன்னை யுயர்திணை யென்றும், ஆணென் றும், இன்னபெயரினன் - இன்னருக்கு மகன்-தந்தை-பாட்டன்-பே ரன்-தம்பி-மூதாதை-சிற்றப்பன்-கணவன்-தாயாதி-மூத்தார்-மாமன்- மச்சினன் என்றும், கொண்ட கொள்கை யனைத்து மெதார்த்த மா குமா? அங்ஙனங் கருதியது மூடமெனத் தோற்றுதளவும், ஞானிக ளது கட்சிக்கு மாறாக நிற்பன். இங்ஙன நிற்புழி விமோசனகால நே ரிடுங்கா லிவை யனைத்துங் கற்பிதமெனத் தெளிவுவரும். தெளிவு ற்றுழி முன்னைய கட்சிக்குச் சோர்வுற்றதே யெனத் துயருற்று மீண்டும் அம்மூடமார்க்கத்திழிவனோ எனின்?

நா-விடை—ஆன்மா வென்பதும், பரமென்பதும், இருந்தா லின்ன பொருளெனக் கணிக்கப்படாததற் கேதென்னையென.

ஞா-வினா—நான்கு பூதங்களையு மொன்றி லொன்றொடுக்கிக் கொண்டு போகும்போ தொன்றி லொன்றில்லாமற் சூனியமாதலைப் பற்றி மித்தை யெனின், நமக்கிப்போது மேலே தோன்றவில்லை, இனி வருபவர்க்கு மேலே தோன்றுமானா லிதுவே சித்தாந்த மாகு மா? மகா பண்டிதர்களுக்கு மிதுவரையுந்தோன்றாத ரெயில்-டெல் லெகிராப் - பயர்பாக்ஸ்-அதிசூக்கும, அனந்தவித யந்திரங்களுமிப்

போது தோன்றிற்றன்றோ, இனிமேலுந் தோன்றாதவைகளுந் தோன்றி நிகழுமன்றோ, எனக் கூறுகின்றீரன்றோ, அதுபோலு மான்மாவும்-பரமுந் தோன்று மன்றோ, கல்வி யப்பியாசி யொருவனைக் கல்வியி னெல்லை தனக்கு எட்டாமையா லில்லையென்னலாமா, முடிபுணர்ந்தோ ரிருப்பார்கள் எனக்குத் தெரியவில்லை என்று சொல்லவேண்டும். அதுபோல ; யாமஃதுணர்ந்தோர்பாற் சென்று ஐயந்திரிபறத் தேருது மென்னாத தென்னை ?

நா-விடை—இருந்தால் தெரிவிக்கார்களா என்றனன்.

ஞா-வினா—முடிபு தெரிந்தே னுனக்குத் தெரிவிக்கிறே னென்றுவருவார்களோ? இதென்ன விவேகம். அக்கினியுந் தடாகமுந் தம்பால் விழைந் ததிக வாவலா யடைந்தோர்க் கன்றோ, குளிருந்-தாகமும்-விடாவுந்-தணிக்கும். இஃதறியாத தென்னை ?

நா-விடை—அங்ஙன முணரு மார்க்கமுண்டா வென்றனன்.

ஞா-வினா—அதத்துவாவிருத்தி-தடத்தம்-சொரூபம்-என லட்சணை மூன்றாகும். இம்மூன்றி னெறிப்புகினும் பதார்த்த சோதனையும், விடயதோட திருஷ்டியு மில்லாதார்க் கணுவேனும் பயனின்றாம். இதுநிற்க ; பந்தப்படல் சுகமா, விடுதல் சுகமா வெனின் ?

நா-விடை—பந்தப்படுதலே சுக மென்றனன்.

ஞா-வினா—பெண்டுபிள்ளை-பண்ட-பதார்த்தங்கள்-கிரகம்-கிராமம் - தனம் - தானியாதிகளுடையோனுக்குச்சுகமெனின், இவற்றுளொன்றிழப்புழிச் சுகமாகுமா ? துக்கமெனின் ; ஆதியாத்மீகம்-ஆதிதெய்வீகம் - ஆதிபவுதீகம் - என்னு மிம் மூன்றனு ளொன்றாலேனும் பெண்டுபிள்ளை யாதிய பற்றுக்க ளனைத்திற்கும் ஆனிவருமாயின், அந்தத்துக்கத்துக் களவுண்டோ ? உயிரோ டிருப்பளவுமானியடை யாதாரு முண்டே, அவர்களுக் கேனுஞ் சுக மின்றோவெனின், தனது தேக நிலையாமையைக் கருதுந் தியான மிழவாவுழி யிருந்துங் கணமேனு மவனுக்குளதோ? அவனுக் கின்றேனும் உலக சுகமில்லாமற் போயிற்றோ ? அறிவான் மாறாய விடத்தெதங்கோ ? இல்லாமையின் அறிவான் அந்தந்த - ஆகாரமாகா விடத்து அயலானது பந்த விருத்தி யானி யாலுண்டாஞ் சுகதுக்க மென்செய்யும். ஆதலி னிப்போ தென்ன நின் கருத்தெனின் ?

நா-விடை—பந்தப் படுதல் துன்பமே யென்றனன்.

ஞா-வின—இதற்குதாரணம், "பந்தத் துருவங்கேட் டுணரிற் பரவீட் டுருவமேல் வெளியாம், இந்தச் சகநீ நான் முதலா மிவை மெய்யென்றல் பந்தமதாம், அந்தக்கருத்து நிற்பளவு மரிதா முத்தி வித்தி னிடைத், தொந்தத் தருப்போற் காண்பவன்பாற் றோன்று துறையுங் காண்ப வெலாம்" என்பதனுனும்; "இறப்பிலா விந்த மோக மிறையு மீட்டெண்ண மின்றி, மறப்பதே நல்லதென் றும்" என்பதினுனும்; "தெரிந்து மறிதுமெனத் தேளின் கொடுக்கிற், கரந்தொடுதல் போலுமே கற்றீர் - பரந்துலகந், தீதென்றுகண்டுஞ் சிறிதுளம்வைத் தேயழுங்கல், பாதகமென் சொல்வேன் பரிந்து" என்பதினுனும், துன்பமேயொழிய வின்ப மொன்றில்லை. என்பதினுனும், காண்க. இங்ஙனமிருக்கத் தேகமே யான்மா-போகமே முத்தி-கண்டதே காட்சி-கொண்டதே கோலமென் றுறுதி கொண்டு, மன அலைவுக்கும் தேக கிருத்தியத்திற்கு மொழிவின்றி யுழல்வானேன்?

நா-விடை—சுகமாதலைப்பற்றி யென்றனன்.

ஞா-வின—சுகமாயின் பின் துன்பமா முடிவானேன்?

நா-விடை—இப்போ திதை விட சுக மில்லாதலைப் பற்றி யென்க.

ஞா-வின—சர்வமுஞ் சங்கற்ப வடிவமெனக் கண்டு தெளிந்த விடத்தி லொன்று முண்மையாகக் காணுததால் மனம் பற்றிப்பாய் தற்கிட மின்றும். இடமின்றுகவே, யமைதலுக் கிடமாம். இடமாகவே, யுபசாந்திக் கிடமாம். இடமாகவே, கிருத கிர்த்தியம் - தூக்கா பாவம் - சர்வகாமாப்திகம் - பிராப்தி பிராப்பியம் - என்னு முடிவா னவனுபூதிவாய்த்து நிரதிசயானந்த மயமாக்கிடும். இஃதிப்போதே செய்யின் கரதலாமலகம்போ லிவ்வனுபூதியு மிக்கணமே காணலாம், தாமதமென்னை?

நா-விடை—சர்வமுஞ் சங்கற்ப வடிவ மென்ற தெங்ஙனமெனக் கேட்க.

ஞா-வின—ஒரு பொருளானு முபாதான வுபாதேய மாகவும், விகாரமாகவு மில்லாதிருக்கவேண்டும். அங்ஙன மில்லாமையால், அதுவே சங்கற்ப வடிவ மாமெனின்?

நா-விடை—யாதானு மோர் பொருளை யிதுதான் சங்கற்பவடிவமென விளக்கிக் காட்டவேண்டு மென்றனன்.

ஞா-வி௫—கடபடத்துள்; படமென்ற துருப்படுதற்கு முன்னு, முருப்பட்டழிந்ததற்குப் பின்னும், உருவாக நின்ற விடத்தும், நூலேயன்றி யவ்வுபாதி யில்லவே யில்லை. யிப்போதாவ துண்டாய் விவகரிக்கப் படுதலின், இப்போதாவ துண்டென்பமே யெனின்? நூலே யன்றி யவ்வுபாதி சுயம்பென்றேனும், நூல்மயமென்றேனும், விளக்க வேண்டும். சுயம்பெனப் படாதெனின்; தோற்றன் மாத்திரமும், சொல் மாத்திரமு மெனப் படாதோ? அவ்வள வெளிதில் விளங்காதேயெனின், விவேகிகளுக்குமோ; கல்விஞானத்தாற் சாத்தியப் படாதே யெனின், சாதனத்தினுலுமோ; கைகூடுமெனின், முயலாத தென்னே. இங்ஙனநிற்க; கடபட மல்லாததைக் கடபட மென மெய்ப் பொருளாகக் கொண்டு உண்டாயிற்றெனவும், இருக்கின்றதென்றும், நசித்ததென்றும், கண்டு சொல்வது அத்தியாச மன்றோ; இவ்வத்தியாச மனேகற்பிதமேயன்றி வேறின்மையாற் சஙகற்ப வடிவ மெனப்பட்டது. இவ்வண்ண மொவ்வொரு பொருளுந் தவறுதிருப்பதை யுற்றுணர்ந்து பார்த்துய்யும் வகை தேடலாகாதாவெனின்?

நா-விடை—கடபடந்தோன்றி விளங்கி யழிவதைப் பிரத்தியட்சமா யனைவருங் காண்கின்றனமே, இங்ஙனமிருக்க; இதை யத்தியாசமென்னலாமா; இதென்ன மடமை யென்றனன்.

ஞா-வி௫—உருட்சி-தட்டை-நீட்சி-சதுரம்-கனம்-குறுக்கமுதலியவற்றைச்சொல்லில், குணமாமெனவும்; மண ணூலைச்சொல்லில், காரணமாமெனவும்; காரியமென்பதற்குப்பொருள் சொல்லப்புகில், இவ்வாறு முடிவதால், தோற்றன் மாத்திர மெனவும்; சொல் மாத்திரமெனவு; முன்னமே சொல்லிவிட்டனம். அதுபற்றிக் காரியமெனப்படுவன வனைத்து முண்மையாகத் தோற்றுவதுங், காண்பதுவுஞ், சங்கற்ப வடிவமென்றனம். அது மடமை யென்னலாமாவெனின்?

நா-விடை—இது வுமது குய்யுக்தியா? தருணயுக்தியா? சான்றோர் வசன மிங்ஙன மிருக்கின்றதா? தெரிவிக்க வேண்டு மென்றனன்.

ஞா-வி௫—"சஙகற்பசாலச் சகத்தோற் றமவெல்லா, மிங்கற்ப மென்னு திழிவரோ - பங்கமற, இம்மை மறுமை யிரண்டிடத்து மப்பாலுங், தம்மையன்றிக் காணு தவர்" என்பது சான்றோ ரனுபவமாதலாற் குய்யுக்தி யென்னலாமா வெனின்?

நா-விடை—உபாதேய மல்லாதது காரியப்பொருளென்னுர் சர்வமத பண்டிதரு மிங்ஙனமிருக்க; அகம்புறத்திற் காணப்படுவன வனைத்து மோருண்மைப் பொருளேனு மில்லாமற் போகின்றதே; மெய்ப்பொருள் தேடப் புகின், மணற் சோற்றிற் கல்லாராயப் புகுந்தாற் போலும். இதென்னவிசாரணை? உண்மைப் பொருளல்ல வைவற்றை யுண்மைப் பொருளாகக் கொள்ளுதல் விகற்பசிந்தையாத லின், சங்கற்ப மென்றதோ நுமது மொழி யென்றனன்.

ஞா-வினு—சுருதி - யுத்தி - யனுபவத்துக் கொத்ததாதலின், அங்ஙனந் துணியப் புகுந்தனம். பிறவிக்குருட னொருவன், ஐம்ப துவருட காலமாகக் காலால் தடவியும், சீய்த்தும், மிகுந்த அச்சத் தோடு நடந்த பழக்கத்திடம்; தெய்வீகமாக வொருவ ரவுடதத் தா லோ? அனுக்கிரகத்தாலோ விழி தரப்பட்டது. அக்கணமே தடி யைப் பிடுங்கிக்கொண்டு சீய்க்காமலோ டென்றால் ஓடச்செய்யுமா? சிலகாலஞ் சென்ற பிறகு அத்திறமை யுண்டாகும. அதுபோலு, மிதுவுமாகு மன்றோ ; நீ யையப்பட்ட லினி யாதுக்கெனின் ?

நா - விடை—இதனை லிவ்வுலகந் தோற்றன் மாத்திரமெனின், பசி தாக காமத் தவிப்பைத் தணிக்கா திருக்கவேண்டும். அங்ஙன மில்லையே யையந் தவிர்தற் கிடமில்லையென்றனன்.

ஞா-வினு—உடல்வதை யொன்று, மனோவதை யொன்று. இவற்றுள்; உடல்வதை ; பசி-தாகம் - நோய்-என மூன்றும். மனோ வதை ; அறியாமை-சந்தேகம்-விபரீதம்-என மூன்றும். இங்ஙனமா யினும்; உடல்வதையும் மனமில்லா விடத்தில்லாமையால் யாவு மனோ வதை யெனினு மமையும். ஆதலி னிது சிற்சட சோதனையா லன்றி விளங்காதே யெனின் ?

நா-விடை—அங்ஙன மாகுக வெனச் சம்மதித்தனன்.

## உரியநிலைமைசோதனை

முற்றிற்று.

# இனிச்சிற்சடசோதனை

ஞா-வினா—நாஸ்தி-நபாதி யென்னு மிரண்டுத்தியா லிதுகாறும் வாதித்த வுமது கட்சியி னுழுக்தெரிந்தனம். அது நிற்க; இனிச் சிற் சடசோதனை செய்யப்புகுதும். யாதினாலெனில்; அறிவை யணுவெ ன்றும், அறியப்படுவனவனைத்தும் மகத்தென்றும் பிரதிவாதிப்பது உமது வாதமாதலின், அதுவே யுண்மையோ - அல்லவோ - எனத் தெளிதற்பொருட்டு. அங்ஙனந் தெளிதலால் யாது பயனெனின், நித்திய திருத்தியும் - துக்காபாவமு மாதலின் சிற்சடசோதனை வே ண்டுவதின்றோ வெனின்?

நா-விடை—வேண்டுவதே யென்றனன்.

ஞா-வினா—சீவன்-பகவான் - நரகம்-மோட்சம் - இன்றென்பது உமது கட்சியாதலின் இருந்தாம் காணப்படாதா, இல்லவேயில்லை யென்பீர், இதனும் பிரத்தியட்சப்பிரமாணமன்றி யேனையபிரமாண ங்க ளுமக்குடன்பாடன்றென்பது பெற்றும். ஆயினுஞ் சிற்சோத னை கொஞ்சஞ் செய்யப்புகுதும். சித்தென்பது, அறிவு. சடமென் பது, பூதபௌதிகமுதலியவை. சித்து; முதலன்றெனின், சடமா கிய வனைத்து மெதற்குக் காணப்படுகின்றது. தமக்குத்தாமெனின், சடமாதலின் காணப்படாது. சித்தையோர் முதலாக்காது கூறும் விடையாதோ வெனின்?

நா-விடை—இலதேனு மிருட்டிலுள்ள பொருள்களை விளக்கு வது தீபமேனு மதனது வுபாதி வடிவை யுன்னுமிடத்துச் சுயம்பன் ருய்ப் போகுமாறு போன்று, எவ்வகைப்பொருள்களுங் காணப்படு வதற்கு மவற்றை விளக்குவதற்கு மாதாரமறிவாயினும், அதனது எதார்த்த வடிவம் யாதென வுன்னுமிடத்துச் சுயம்பன்ருய்ப்போத லா லவ்வறிவோர் முதலாமென் றெஙஙன மேற்கப்படு மென்றனன்.

ஞா-வினா—இருட்டுப்பொருள்களை விளக்குவதாகிய வினைக்கு முதல் தீபமன்றோ? அன்றெனின், இலக்கணந் தெரியாதது போ லும். தெரியுமெனின், காணப்படுவதற்கு வினைமுதல், இருட்டுப் பொருள்களும், விளக்குவதற்கு வினைமுதல் தீபமுமென்றேற்கவே ண்டும். இது எவ்வகை பாஷை பண்டிதர்களுக்கு முடன்பாடன்றோ, இதுபோ லதனையு மேற்கப்படாதோ வெனின்?

நா-விடை—ஏற்றற்பாலதேனும், விளக்கும்-அறிவும் சுயம்பன்றுதலின், எங்ஙன முதலாமென்றனன்.

ஞா-வினு—சத்த-பரிச-ரூப-ரச-கந்தமென்னுமைந்தும் புலப்படுவதற்கும், அவற்றை யுணர்தற்கும் இயைந்த வினைமுதல்; சுரோத்திரம்-தொக்கு-சட்சு-சிங்குவை - ஆக்கிராண மன்றோ?. இஃதன்றியும்; அறிதல் வினையாயின், அறிவு வினைமுதலாகவேண்டுமே, என்னுங்கேள்விக்கு, அறிவு சுயம்பாகாது என்பது விடையாகுமா? வினுவிடை யிலக்கணங் கேட்டறியாய்போலும்; இப்போதாவது யாது கூறுதியெனின் ?

நா-விடை—இந்த அவசரத்தி லறிவு வினை முதலென்ற தேற்குதும் என்றனன்.

ஞா-வினு—அறிவு முதலாயின் அறியப்படுவதாகிய வுலகமுமோர்முதலென ஏற்குதும். இதனுல் இவ்விரண்டிருப்பு முண்மையென்பது பெற்றும். பெறவே, யோனையமுண்டாகின்றது. அஃது, சகலத்திற் சகந்தோற்றுவதும் - கேவலத்திற் றேற்றுததும் யாது பற்றி யெனின் ?

நா-விடை—சுபாவமென்றனன்.

ஞா-வினு—உலகமிருந்த வண்ணமிருக்க; அதுமாறக்கண்டிலமே; மாறுவதாகக்காண்பானேன் ?

நா-விடை—உறக்கத்தாலென்றனன்.

ஞா-வினு—உறக்கம்-உலகந் தோன்றுமற்செய்வதற்கும், விழிப்பு-தோன்றச்செய்வதற்கும், உள்ள சக்தியாது ?

நா-விடை—யாதோ வோர் ஸ்மரணையுள்ள பரியந்தஞ் சகந்தோற்றியும், அஃது நழுவியவிடத்துத் தோற்றுமலுமாயிருக்கிறதாகத் தினவனுபவத்திற் காணப்படுகின்ற தென்றனன்.

ஞா-வினு—இதில் யாதானு மையமுளதோவெனின் ?

நா-விடை—இதுவே திடமென்றனன்.

ஞா-வினு—ஆனுல் ஸ்மரணையுண்டானும் சகத்துளதாயும், இன்றுயினிலதாயு மேற்கவேண்டுமன்றோவெனின் ?

நா-விடை—கூடாது-எங்கெங்கே ஸ்மரணை யுண்டோ அங்கங்கே யுளதாயும், எங்கெங்கேயில்லையோ அங்கங்கே யிலதாயு மேற்கவேண்டியதே யன்றிச் செகத்தில்லாமற் போயிற்றே வென்றனன்.

ஞா-வினா—ஸ்மரணையின்றிய வவசரத்திலெங்கெந்த வான்மாவுக்கும் செகத்தோற்ற மில்லாமையால் நா னீ யவ னவ ளது வென்பதும், இச்சாஞானக்கிரியைகளு மில்லாதிருப்பது சர்வாத்மானுபவ சம்மதமாதலால், இதனை மறுப்பதுண்டோவெனின்?

நா-விடை—கூடாதென்றனன்.

ஞா-வினா—இதனுற் செகத்தோற்றமும்-அகம்பாவமும - சகல விவகாரங்களும் - ஸ்மரணையுள்ளவிடத்துண்டென்பது நின் சம்மதியாற்பெற்றனம். இங்ஙனமிருக்க; ஸ்மரணையன்றிச்செகத்துளதாகத் தெரிவிக்கவேண்டுமெனின்?

நா-விடை—ஸ்மரணையணுவும், செகத்துமகத்துமாதலி னெங்ஙனம் ஸ்மரணையே செகத்தெனக் கொள்வதென்றனன்.

ஞா-வினா—அணுவாயினும் அந்தந்த ஆன்மாவுக்கும் எங்கணும் அந்த ஸ்மரணையில்லா வவசரத்தி லெல்லாஞ் செகத்தெந்தப் பக்கமாவது தான் மகத்தாதலிற் றோற்றவேண்டுமேயெனின்?

நா-விடை—தோற்றுததனுற் செகத்துக்கு ஸ்மரணை காரணமாகவேண்டுமோ? ஆகவேண்டுமெனின், மூன்றனு ளெந்தக் காரணமோ? முதற் காரணமெனின், ஸ்மரணையன்றிச் செகத்ரூபமாகியபொருளிடங் காலமின்றோ? இன்றெனின், தெரிவிக்க வேண்டுமென்றனன்.

ஞா-வினா—இது சாக்கிரா வஸ்தை யன்றோ? ஆமெனின், ஸ்மரணையன்றி யிந்தச் சாக்கிராவஸ்தை யுண்டானு லிந்தச் சாக்கிராவஸ்தையிற் காணப்படுஞ் செகத்து முண்டாம் - செகத்துண்டாகக் காணப்படின், பொருளிடங் காலமுணடாம். உண்டானுலன்றோ? யானெனது முதலிய சகல பந்தமு முளவாம். உண்டானு லன்றோ, ஆனிவிருத்தியுஞ் சுகதுக்கமு முண்டாம். இங்ஙனமிருக்க; ஸ்மரணையை முதற்காரண மென்பதற்குத் தடையென்னை யெனின்?

நா-விடை—முந்திச் சாக்ரா வஸ்தையையே ஸ்மரணை யென்றனே. அந்தச் சாக்ரா வஸ்தை ஸ்மரணையைப்போல் மற்றொன்றை யறியுமா? அறியாதெனின், ஸ்மரணை யென்னலாமா? ஸ்மரணையின் விகாரமெனின், செகத்தும் சாக்கிராவஸ்தையின் விகாரமாகவும், பொருளிடங்காலஞ் செகத்தினது விகாரமாகவும், யான் எனது முதலிய பந்தங்கள் பொருளிடங் காலங்களின் விகாரமாகவும், ஆனி விருத்திகள் பந்தங்களின் விகாரமாகவும் - சுகதுக்கங்

கள் ஆணிவிருத்திகளின் விகாரமாகவும், முடியுமே யிதென்னமாயா வித்தை யென்றனன்.

ஞா-வி௲—செகத் தோற்றத்திற்கு முன்னும் பின்னும் இப் போதும் ஸ்மரணையன்றிக் கண்டிலம். இங்ஙனமாய வுலகத்தை யோர் முதலாகக் கோட லெங்ஙனமெனின்?

நா-விடை—பிரத்தியக்ஷமாயும், அனுபவப்பொருளாயு மிருத் தலின், எங்ஙனம் விகாரப் பொருளென் றேற்ப னென்றனன்.

ஞா-வி௲—தத்தமக்குரிய அணுக்கள் சையோகத்தன்றியொ வ்வொரு பூதமுமிருக்க வேண்டும். அங்ஙன மில்லாத போது, பௌதிகஞ் சொல்லவேண்டுமோ? அவ்வாறு பார்க்கினும் விகாரப் பொருளே. இஃதன்றியும்; சித்துசடமென்பவற்றுள்; ஒவ்வொன் றையு முதலாகக் கொள்ளலா மெனின்? சித்தாகிய ஸ்மரணை சகல த்திலுள்ளதாயும், கேவலத்தி லில்லாததாயுமிருப்பதால், ஓர் முத லன்று. இதுமுதலன்றென்பது பிரத்தியட்சத்தாலோ? அனுமான த்தாலோ? ஒருவருக்கும் புலப்பட்டதன்று. ஒருவருங்கண்டதன்று. ஆதலின், அனுமானத்தாலெனின், புகையா லங்கே நெருப் புண் டென்றும், இல்லாததா லில்லை யென்றுங் கொள்ளலா மெனின், பாகசாலையி லெல்லாஞ் சமைத்தாயின வுடன் விறகணைக்கப் படு மன்றி யடுப்பிலுள்ள நெருப்பை யணைப்பார்களா? அப்போது நெ ருப்பு அடுப்பி னிறைய விருக்கப் புகைகாணுததா லில்லையென்ன லாமா? புகையுள்ளபோது மில்லாதபோதும் நெருப்பிருக்குமாறு போன்று, செகத்தோற்றத்தால் ஸ்மரணை யுண்டென்றும், இல்லா ததாலில்லை யென்றுங் கொள்ளலா மெனின்; சகலத்திற் செகத்து ண்டென்றும், கேவலத்திற் காணப்படவில்லை யென்றும், அறிந்து ணர்த்துவது ஸ்மரணை யன்றிச் செகத்து சடமாதலி னறிந் துணர் த்துமா? வுணர்த்தாதாதலின் செகத்தோற்ற முள்ளபோது மில்லா தபோதும் ஸ்மரணை யுண்டென்பது பெற்றும். பெறவே, யதுமுத லென்றதற் கையமின் றென்ப தாயிற்று. ஆகவே, செகத்து முத லன்றெனக் கொள்ளவேண்டுமே யெனின்?

நா-விடை—இங்ஙனங்கூறினர் யாவருமிறந்தனர் - உலகமிறக் காததால் முதலாகுமென்றனன்.

ஞா-வி௲—கடபடத்தை யுண்டெனக் கொண்டதும், விசா ரணைக்குப் பின்னின்றெனக் கொண்டதும், தெரிவாதலால் - அத்

# நாஸ்திகவாதம்.

தெரிவை யன்றி யுண்மையு மின்மையும் இல்லையே, சமஸ்தமும் தெரிவின் விகார மெனக் கொள்ளக் கிடப்பதா லிதனை விட்டு மூட வுத்தரவுதரின் அஞ்ஞானஞ் சந்தேகம் விபரீதங்களை யகற்று மோ. வெனின்?

நா - விடை—இங்ஙனங் கூறினர் யாவரு மகன்றாகமோ? அகன்றார்க ளெனின் - யாதடைபாமெனக் கேட்டனன்

ஞா - வினா—அறிவையன்றி யன்னிய மில்லையென்றும், அறிவேநாமென்றும், "நமையறி வேவடிவாய் நாங்கண்டோ மா நம்மை யன்றிச், செம்மையுற கந்தரங் காணும் - நமைநாம், உற்றுப் பாரா திருந்தோ மல்லா லொருக்காலும், இற்றுப் போனோமோ வியாம்" என்றுங் கூறியது அநுபவசாரந் தெரிந்துவே யனை யாமாம் அதுநிற்க; தேக நீயன்றாகலி னுன்னை நீ தேகமாகப் பார்க்கலாமாவெனின்?

நா-விடை—வேறு காணப்படாமையா லென் றெண்ணி னென்றனன்.

ஞா-வினா—சொற்பனத்தி லுன் தேகம்போலக் காண்கின்ற நீ யார்? அங்கே தோன்றுந் தேகமாகிய வுபாதேயத்துக் குபாதானம் யாது? உனது கற்பிதப்பொருளோ, எதார்த்தமோ; கற்பிதப் பொருளெனின், எங்ஙனமாயது. எதார்த்தப் பொருளெனின், கற்பித மன்றித் தெரிவிக்க வேண்டுமே யெனின்?

நா-விடை—எங்கணுந் திரிசியமாக யானெனக்குக் காணப்படுகின்றனேயன்றித் திருக்காகக் காணப்படுகின்றிலனே, ஆனால் திருக்காகிய அறிவு வுண்டெனற்கும்-அதுவே நானெனற்கும் - அறிவையன்றி யுலகின்றெனற்கும் - உடல்தோறு நானொன்றிருந்து சுகிப்ப துணர்வாதலா லவ்வவ்வுடலை விட்டுணர்வு நாட்டமுற்று நிலைத்தல்; துக்காபாவம் - கிருதகிருத்தியம்-சர்வகாமாப்திகம் - பிராப்திபிராப்பியம் தருமெனற்கும், ஞாயமே முழுதுங் காரணமாக வுடன்பட்டனன். வேதாந்தம்போ லிவ்வாறு சுருதி யுத்தி யனுபவத்துக் கொத்துணர்த்தத்தகுவ தற்பமு மெங்கணு மில்லவே யில்லை. இங்ஙனமாயினும் ஒரு சந்தேகமுண்டு. அது, சடபேதங்களாகிய எந்தெந்த அணுமகத்துக்களுஞ் சைதன்யக்கற்பிதங்களெனவு, முபாதேயமெனவுங் கூறியதொக்கும். இதுபோலச், சித்துபேதங்களாகிய சராசரங்களும், உயர்திணையில் மிகச்சிறந்த சித்துபேதங்களாகிய சாம

பூமனும்-மனுடகந்தர்வனும்-தேவனும்-தேவகந்தர்வனும்-விராட்டு-இரணிய கருப்பனுதியரும் - இதன்றியும்; சுரோத்திராதி யிந்திரிய பேதங்களும-கரணபேதங்களும்-சுயம்பா? கற்பிதமா, இவ்வையந் தீர்க்கவேண்டுமென்றனன்.

ஞா-வினு—சுயம்பெனின், ஏகசைதன்யத்தை யன்றி யிருக்க வேண்டும் கறபிதமெனின், தனிததனி யறியா திருக்க வேண்டும். இங்ஙனமன்று. இவையாவுந் தம்மைத்தாமுள்ளவா றறியாததினுற் சுயம்பன்று. அன்னியத்தை யறிவதனுற் கற்பிதமேயாம். ஆயினு மிக்கற்பித மேகசைதன்யத்தை யன்றி யில்லாமையா லன்னிய மன்று. எங்ஙனமெனில், "பொருகடலிற்றிரைமுதலாட்பிறந்தவெல்லாம் புனலாகி விளங்காமற புழுதியாமோ, ஒருபொருளாம் பிரமமாத்திரமேயல்லா லுபயமெனுங் கற்பிதபபே ரொன்ருதாகும்" எனச் சான்றோர் வசனமிருப்பதனுல, இனியாது கூறுதி யெனின்?

நா வினை—அறிவை முதற்கருவி யென்றால், அறிபடு பொருளாகிய வுலக மன்னியமாகக் காணப்படா திருக்கவேண்டும். காணப்படுதலின், வேறென்றே சொலலவேண்டும். உலகை யறிதற்கறிவு அறிகருவியாதலின், துணைக்கருவி யென்பதற் கையமின்றே; எங்ஙன மேற்ப தென்றனன்.

ஞா-வினு—ஸ்மரணையன்றி யணுவேனுமிருக்கத் தெரிவித்தாலதனை வேறென்பம். இதனு லுலகமும் வேறெனப்படும. ஒன்றனிட்டமாகவேனும், பலவி னிட்டமாகவேனு மொரு பொருளிலலாதிருந்தால, அணுவுமோர் பொருளென றேற்கப்படும், அங்ஙனமில்லையே. இல்லாமல் ஒவவொருபூதமு மகத்தாகக்காணப்படுமா, மகததென்பது சையோக பதார்த்தமன்றிச் சுயம்பெனப் படுமாயின், பரமாணுவுஞ் சுயம்பெனப்படும். இதற்குவிடை யாது கூறுதி யெனின் ?

நா-வினை—விசாரணைக்கு முன்னர் சுயம்பாக எட்டுவதாகத் தோற்றுவதும், பின்னர் கற்பிதமாக எட்டப்படாததாகத் தோற்றுவதுந் திரிசியத்தின் தாமமமன்றே, உலக மெங்ஙன மில்லையென் றேற்பனென்றனன்.

ஞா-வினு—"எட்டுவதாத தோற்றுவது மெட்டாதாத் தோற்றுவதும், தட்டு திரிசியத்தின் தர்ம்மமெனில் - தட்டா-இருப்பு மறவா திருக்கி லெங்கே யணுவும், பெருத்த மகத்துவமும் பேசு" எ-து.

எட்டுவதாத்தோற்றுவது, மெட்டப்படாததாத் தோற்றுவதும், அறிவுக்குப் பிரத்தியட்சமாத் தட்டப்பட்ட பிரபஞ்சமாகிய திரிசியத்தின் தர்ம்மமெனின், விசாரணைமுடிவி லறிவுக்குத்தட்டப்படா நிலையதாகியும், வெறுமையாகியு மிருக்கு மிருப்பை மறவா திருந்தால், அணுவுக்கணுவென்பதும், மகத்துக்கு மகத்தென்பது முண்டாயிருக்கச்சொல்லுதி. எ-று. இன்னும் "அகண்டத்தகண்ட மணுவுக்கணுவு - புகலில் வடிவெல்லைபோதும் - பகரொன்ன - எட்டப்படாததினுவில்லாமற் காணுமோ-எட்டாதென்சோதனையி லியகு" எ-து. இனி மேலென்பதில்லாத மகத்துக்கு மகத்தும், இனி கீழென்பதில்லாத அணுவுக்கணுவும், இன்னதென அதி னுண்மை வடிவி னளவை விளங்கச்சொல்லினதுபோது முலகமுண்டெனற்கு இதற்கு யாது கூறுதியென. நடது சோதனையா லெட்டப்படாததினால் ஆதாரமில்லாம லுலகங் காணப்படுமோ, இங்கே ஆதார மிருந்தாற் சோதனையி லெட்டாமற் போவதென்னை ? எ-று இதனாற் பற்பல வாத்தோற்று நாமரூபமும், மங்ஙனமன்றித் தோற்றும பாழுந்திரிசியத்தின் றர்ம்மமன்றோ, இதில் யாதுண்மை யெனின் ?

நா-விடை—இதிற் பற்பலவாத் தோற்று நாமரூபமென்றனன்.

ஞா-வி—அலங்காரமாகச் செய்யப்பட்ட பற்பல பிரதமை வடிவங்களுண்மையெனப்படின் நாம ரூபவுலகமு முண்மையெனப்படும். மண்-கல்-பொன்-முதலியவற்றாலாயவையெனின், நாமரூபப் பிரபஞ்சமும் ஒன்றன் கூட்டத்தாலேனும், பலவின் கூட்டத்தாலேனு மாயவையன்றோ, எங்ஙன் முண்மையெனப் படுமெனின் ?

நா-விடை—அங்ஙனமாயினுந் தேகபோகங்களுக் கியைந்து நிற்றலின் உலகத்தைப் பிரதமைகளுக் குவமை கூறுதல் கூடாதென்க.

ஞா-வி—பலவித யந்திரங்களா லரிய பற்பல அடையினும், அந்தயந்திரங்க ளுபாதான வுபாதேய மன்றியும, விகாரமன்றியுஞ், சுயம்பெனப்படுவதுண்டா? அங்ஙனமொன்றுமில்லையே; இதுபோலப், பூதங்களும், பௌதிகங்களும், அதனாலாய பலவித யந்திரங்களும், விசித்திர வடிவங்களும், விகற்பவடிவா லாயதன்றிச் சுயம்பெனப்படுவதற்கோ ரடையாள மேனுமுண்டா? இல்லையே. சுயம்பெனக்கோடல் மூடமன்றோ வெனின் ?

நா-விடை—இங்ஙனம் பார்க்கிற் சாவமுந் தனக்கெனப் பொருளின்றியுங், கரணேந்திரியங்கட்கு லட்சியார்த்த மின்றியும் போகு

மே. இஃதன்றியும், நானெனற் குடலைப் பொருளாகக்கொண் டபிமானித்துக் கர்த்தத்துவமாகக் காணுங் குறியின்றியும் போகுமே. இதுதானு சற்சனசகவாசமென்பதும், உத்தம விசாரமென்பதும், முதலுக்கே மோசந்தேடினையே போதும்போதும் உனதுறவென்றனன்

௫௭-வினா—எனை துறவில்லாமற் போனால் போகட்டும். அறிதற்கருவியைத் துணைக்கருவி யென்றனையே, யிப்போது யாது கூறுதி யெனின்?

௫௭-விடை—எல்லா மூடமயமாய் முடியச் சுருதி யுத்தி யனுபவத்தாற் காட்டினோ. இதனால் மூடமுந் தெளிவு மறிவினது தர்ம்மமன்றி வேறின்றுமையால், அறிவையன்றி மூடமும், மூடத்தை யன்றித் தேகாதிட பிரபஞ்சமுமில்லையெனத் தானே யமையப் பெற்றும். பெறவே, மூடமு சங்கற்பமாதலின், செகத்துஞ்சங்கற்ப வடிவமென்றுயிற்று. ஆகவே, அறிதற்கருவி முதற்கருவி யெனக் குறிப்பிக்கின்றது. இதுநிற்க; அறிவையன்றிச் சடபேதங்கள் சற்று முள்ளதாக மயங்காதிருக்கச் செய்தனை. இனிச் சத்து - சித்து- ஆனந்த - நித்திய - பரிபூரணமும், இவற்றிற்கு வெதிருத்த மாயுள்ள அனிர்த - சட - துக்க - அநித்திய - கண்டமும் - ஒன் றெனப் பட வேண்டுமே; ஒன்றெனப்படுமா? படுமெனின், குணங்கள்வேறு படுவாவோ னென்றனன்

௫௮-வினா—அறிவினது தர்ம்மம் மூடமன்றி யறிவாகுமா? ஆகுமெனின், சலத்தினது தாமமம், நெகிழ்ச்சி. அக்கினியின் றாமம் உட்டணம். இங்ஙனமிருக்க; இவ்விருவித தர்மங்களையும் சலமெனவும், அக்கினி யெனவும் கூறலாமா? கூறலாமெனின், குணகுணி பேததோடம வருவதன்றியும, வாயுஸ்தம்பனம் - சலஸ் தம்பனம்- அக்கினிஸ்தம்பனங்களில்; சலனம் - நெகிழ்ச்சி - உட்டணம்- இல்லாமற போகின்றதே; போகின்றதனாற் குணியாகிய காற்று- அக்கினி - சலம் - இவையு மில்லாமற் போகின்றதோ; போகின்ற தெனில், சலத்தின்மேனடத்தலும் - அக்கினியை யேந்தலு மாகிய வனுபவமில்லாமற போகவேண்டும். ஆதலின் குணம் வேறுபடா தபேத மாக்காணினும், அனுபவத்தாற் பேதங்காண்டலின் ஒன்றெனப் படாவாம். அதுபோ லறிவு மறியாமையு மொன்றெனக் காணினும் பேதமே. எங்ஙனமெனின்; செகத்தை யறியாமை யெனின், அறியாமையை யறிவென்னலாம். இங்ஙனங் கூறப்படுவன வெல்

லா முபசாரவழக்கே யன்றி யுண்மை யன்று. நாயனாரும் "பிறப் பென்னும் பேதைமை யெனவும், சிறப்பென்னுஞ் செம்பொருளெ னவு" முபசரித்தார். இதுமரபு வழுவமைதி. அறியாமையாலனர்த் தமும் - அறிவா லர்த்தமுமாம். அனாத்மத்தால், அசத்து - சட- துக்கம் - அநித்தியம் - கண்டமும்; ஆத்மத்தால், சத்து-சித்து ஆனந்தம் - நித்தியம் - பூரணமு மாதலின் அறிவு மறியாமையு மொன்றெனப் படாவாம சத்தையன்றி யசத்தும், சித்தையன்றிச் சடமும், ஆனந்தமன்றித் துக்கமும, நித்தியமன்றி யநித்தியமும், பரிபூரணமன்றி யேகதேசமு மிருக்கவேண்டும். இல்லாமையால்- வேறெனப்படாவாம் இதற்கு யாது கூறுதி யெனின்?

நா-விடை —சத்து சித்து முதலியவை, யசத்தாதி குணங்க ளான முறைமை கூறவேண்டு மென்றனன்.

ஞா-வினா—கூறிற் கண்டு கொள்ளையா; கொள்வனெனின், கடபடஞ் சத்தா - அசத்தா? சத்தெனின், மண்ணூலை யன்றி யிங் ஙனமாய வடிவ மிருக்கவேண்டும். இல்லையெனின், அசத்தெனப் பட வேண்டு மன்றே? ஆமெனின் வசத்திற்குச் சத்திருக்க வேண்டுமே; மண்ணூலையன்றி வெறிதில்லை யெனின், இதுபோல அறியாமை யறிவன்றி யில்லை யெனற்கு அறிவுசத்தாகவேண்டும். அந்தச் சத்தமே யசத்தெனக்கொள்ளவேண்டும். அஃதெங்ஙன மெனின், தேகஞ் சத்தோ-அசத்தோ? சத்தெனின், பூதத்தையன்றி யிருக்கவேண்டும். இல்லையெனின், இல்லாததைச் சத்தெனக் கொள்ளலாமா? கொள்ளலாகாதெனின், அங்ஙனங் கொண்டது அறிவன்றே? அறிவெனின், சத்தல்லாததைச் சத்தெனக் கொள்ளுமா? அங்ஙனங்கொண்டது; அறிவையன்றி வேறில்லை யெனின், அறிவெனப்படுமோ? படாதெனின், அவ்வறிவே யறியாமை யெனப்பெயர் பெறுமன்றே? ஆமெனின், அறிவையன்றி யறியாமையில்லை. யாதலாற் சத்தே யசத்தெனப் படலாகாதா வெனின்?

நா-விடை—தேகமுண்மை யெனக்கொண்ட தெந்தவறிவோ; அந்தவறிவே யல்லவெனக் கொண்ட தாதலால், அந்தவவசரத்தி லறியாமை யெனவும், அல்ல வென்னும் மவசரத்தி லறி வெனவும் கொள்ளக்கிடந்த தோரறிவே யிதுவாஸ்தவமே. இந்த அறியாமையே சடபேதங்களனைத்து மென்ற தொக்கும். இதுபோலச் சித்து பேதங்களையுந் தெரிவிக்கவேண்டு மென்றனன்.

ஞா-வினு—"முன்பி னுள தாடியொன்று முன்பினிலா வாடியொன்று - என்பதுபோற் சித்தொன்றே யீங்கிரண்டாம் - என்கொணடு - தன்னைவிகா ரித்தறிவாற் றன்னைத்தா னேக்குவதால்- அன்னியமு மேகமுமேயாம்." எ - து. முன்பின்னென்னும் பேதமுள்ள கண்ணாடி யொன்று - அப்பேத மில்லாத கண்ணாடியொன்று. என்றால், அடுத்தபொருளைத் தன்பால் பிரதி பலித்துக் காட்டு முன்பக்கத்தையும், அங்ஙனங்காட்டாத பின்பக்கத்தையு முடையவாடி யென்றது ரசமுள்ள கண்ணாடி யாயிற்று. மற்றொன்று ரசமில்லாத தென் றாயிற்று. ஆகவே, பேதசகிதத்தாலும், பேத ரகிதத்தாலும் வேறு போற்காட்டினும் ; ஈரிடத்து முளாபதார்த்தங் கண்ணாடி யாதலால், ஒன்றென்பது பெற்றாம் அதுபோல, அறிவும் ? உபாதி சகிதத்தாலும், அன்னியத்தைமாத்திர மறிதலாலும், முன்பினெனலும், உபாதி ரகிதத்தாலும், தன்னையு மறிதலாலும், முன்பின்னிலா தெனலும், எற்குமென்றாயிற்று. எ - று இதனை லேகசைதன்யத்தை யன்றி ஞாதுரு ஞானங்களின்றென்பது பெற்றாம். இதுநிற்க ; அறிவனு வென்ற நினதுவாத மிப்போது மகத்தெனக் கொள்ள வேணடிய தாயிற்றே, யாதுகூறுதி யெனின் ?

நா-விடை—அதுமெய் யென்றனன்.

ஞா-வினு—அறிவது நீயாதலால் அறிவு நீயன்றோவெனின் ?

நா-விடை—ஆமென்றனன்.

ஞா-வினு—அறிவு நீயாயிருக்க, உடலை நானெனக்கண்டு பல கிருத்தியமுஞ்செய் துடலை வளர்ப்பானேன் ?

நா-விடை—உடலை யன்றி வேறு கண்டில னென்றனன்.

ஞா-வினு—இவ்வுட லுன தெதார்த்த வடிவமன்றே, இதனை யாதுபற்றி யுபசரிப்ப தெனின் ?

நா-விடை—போக நிமித்தமாக வென்றனன்.

ஞா-வினு—ஒவ்வோ ரான்மாவுகரும், தேகமும் போகமும்-வேறுபடுவானேன் ?

நா-விடை—தனக்கு அன்னியமாதல் பற்றி யென்றனன்.

ஞா-வினு—ஒவவோ ரான்மாவுக்குந் தேகபோகம் வேறுனல் வருவானேன் ?

நா-விடை—வருவதற்குக் காரணந் தெரியவில்லை யென்றனன்.

ஞா-வினு—தனுகரண முதலியவை யுன்னு லியற்றப்பட்டதன்றோ யெனின் ?

நா-விடை—அல்லவென்றனன்.

ஞா-வி—கடபடமுதலியவையியற்றப்படாதனவாயின், தனுகரண முதலியனவு மியற்றப்படாதன வென்னப்படும். அங்ஙன மன்றெனி, னிங்ஙனமன்றாம். தனுகரணாதிகளை யியற்றுதற் கர்த்தா ஆன்மாவன்றெனின், வேறியற்றுதற் கர்த்தா இருக்கவேண்டுமெனததாமே பொருள்படுமன்றோ? ஆதலின், அவ்விருப்பை மறுத்தற் கிடமுண்டோவெனின்?

நா-விடை—இல்லை. அவ்விருப்பை யின்னதெனத் தெரிவிக்க வேண்டுமென்றனன்.

ஞா-வி—ஆன்மபேதங்களும், சடபேதங்களு மேகதேசத்தன்னியத்தை யன்றி யில்லை யெனச் சோதனையால் ஐயந் திரிபற முன்னர் தெரிவித்தனமே; யந்தச் சச்சிதானந்தப் பொருளே பரவஸ்து வென வேதாகம புராணாதிகள் கூறு மெனின், யாம சிற்றறி வாற்றடுக்கப்படுமோ வெனின்?

நா-விடை—அங்ஙனங் கூறியவேதம், அது விளங்கவுங் கூறுதோ? கூறுமெனின், அந்தமார்க்கம் யாதென்றனன்.

ஞா-வி—சரியை - கிரியை - யோக - ஞான மெனநான்காம். அவ்வவற்றிற் குரிய விதி நிஷேத முறைப்படி யொழுகி னதுவிளங்கும். இங்ஙன மன்றிப் பட்டி மாடுபோ லுழலி னெங்ஙனம் விளங்குமெனின்?

நா-விடை—சரியை முதலிய நான்கின் விபரந் தெரியேனென்றனன்.

ஞா-வி—டம்ப நிமித்தமாகவன்றியன்னதான முதலிய சோடசதானமியற்றலும், கொலை-களவு-பொய்-பிறர்மனை நயத்தல் முதலிய துற்கருமங்களுக்ககறலும், நந்தவனம்-ஆலயமுதலிய சிவபுண்ணியகருமங்களியற்றலும், சரியையெனவும்; விதிமார்க்கத்தேனும், பத்திமார்க்கத்தேனு, மணுவளவும் விரோதமின்றி மனோபூர்வமாக மிக்கபயபத்தியோடு விக்கிரகத்தைப்பரவஸ்து வாகப்பாவித்தபிடேகம்-அலங்காரம் - நைவேத்தியம் - ஆராதனை - அருச்சனை - முதலிய வைவழுவின்றியியற்றல் கிரியை யெனவும்; உசுவாசநிசுவாசமடக்கி, யிந்திரியங்களொடுக்கி, மனதைக்குண்டலிசத்தியினிடத்தில் சித்திர தீபம்போ னிலைபெறச்செய்து, பலகால முலகந் தெரியாது நிற்றல் யோகமெனவும்; ஒன்றெனவும், பலவெனவு முள்ள தொலையாவழுக்

கைக் கேட்டல் - சிந்தித்தல் - தெளிதலாலறுத்து-ஐயந்திரிபறக்கல ங்காது நிற்றல்ஞானமெனவுங் கூறுப. இதனுள்யாதாலுங் கேட்டிற் குப்பாத்திரமாய துளதோவெனின் ?

நா-விடை—இல்லை. ஆயினும்; விக்கிரக பூசைசெய்வது எமக் குச்சம்மதியின்று. எங்ஙனமெனில், நம்மாலாய விக்கிரக மாதலா லும், அதுவுணர்தலும் இயக்கமுமற்றதாதலினாலும், எங்ஙன நம துகுறையறிந்து அகற்றுமென்றனன்

ஞா-வி—தானலாவுடம்பு நன்னேததானெனக்கருதிக் கொள் வதாற்றுறையவாறுபோல; அப்பரமலாச்சமட்டிதூல சூக்குமகாரண வடிவங்களில் முன்னா தூலவடிவதுவாகப்பாவித்ததுவாகில் சமட்டி தூலவடிவன்றித், தனக்கெனவியட்டி தூலவடிவ மின்றாய்ப் பைய அது வளர வளர விதுவும் பையப் பையக் கரையும். மற்றத் தனது சூக்கும காரணவடிவங்களு மிம்முறையே செய்யக்கரையுமென்பது வேத தந்திரமாதலி னிது துக்க நிவிர்த்திக் கிடமாகத் தக்கதன்றோ வெனின் ?

நா-விடை—ஆம் லிப்போ ததினுளவறிந்தேன். விக்கிரகத்தை யெங்ஙனமாகப்பூசிக்கவேண்டுமோ, அதனைக் கூறுதியென்றனன்.

ஞா-வி—ஆலயங்களிலுள்ள மூர்த்தங்களி லொன்றைப் பர மாகப் பாவித்துப் பூசியெனின் ?

நா-விடை—அங்ஙனமே யான்பாவித்துப் பூசித்தற்கு, எந்த மதமூர்த்தித் தியானஞ் செய்யவேண்டு மென்றனன்.

ஞா-வி—ஆன்மாக்களுக் கின்ன வுடம்பென்றது வேண்டுவ தின்று. அடுத்த தெந்த வுடம்போ அந்தந்த மயமாத லுண்மையாத லின், "அடுத்ததின்றன்மை யான்மாவாகுமென் றறிந்து நல்லோரொ ன்றூர்" ஆதலி னெந்த மூர்த்தத்தையாவ தொன்றைத் திடம்பெற வழுத்திப் பூசிக்கவேண்டுமெனின் ?

நா-விடை—அங்ஙனமே யோர் மூர்த்தத்தை யுள்ளத் தழுத் திப் பூசிக்கு முறைமையைக்கேட்டனன்.

ஞா-வி—முன்பு புறத்திற் பூசிக்கு முறைமை யிஃதாமென க்கூற, அங்ஙனமே யவன் சிலகாலம் பூசிக்க-இன்னுஞ் செய்யெ ன-யாதென வினவ - அந்தப் பாவனமூர்த்தமாக யாவு மன்னியமா காது விளங்கப பூசியெனில்.

நா-விடை—அப்பா! என்ன லிது செய்ய முடியாதென்றனன்.

ஞா-வி—புறத்தி லிங்ஙனஞ் செய்யக் கூடாத நீ யகத்தி லெங்ஙனஞ் செய்வை. யதுநிற்க; கணநேரமாயினுங் காலை - நடு அந்தியில் பூசிப்பதற்குங் கூடாதோ வெனின்?

நா-விடை—இவ்வா றனேவரும் பூசித்து வருவதைக் காணு மிடத்தில் இது வொரு விநோத விளையாட்டி லொன்ருகக் காணு தே யொழியப், பயபத்தி குறிகளி லோரமிசமுங் கண்டிலனே யவ் வாறு தானு யானும் பூசிப்பது, இதனுல் யாது பயனென்றனன்.

ஞா-வி—கூலிக்கழுவார்போ லாகாது சொந்தத்துக் கழுவார் போற்பூசிக்கி னென்னதடை. இஃதன்றியும்; ஓ ருத்தம எசமா னிடத்தில் உண்மையாச் சேவிப்போரும், அங்ஙனமன்றிச் சேவி ப்போருந், தக்க பயனே யடையு மாறுபோன்று, யாவருடைய வுள் ளத்திலும் சர்வேந்திரியாமியாயிருந்து, அவ ரவ ருள்ளத் தெண் ணங்களை யறியும் பரவஸ்து வாதமி னதற்குத் தெரியாதா, அந்த எண்ணங்களை யெல்லாம் விட்டுப் பூசிக்கத் தடையாதெனின்?

நா-விடை—அந்தப்பரவஸ்து வுருவ மல்லாததா லருவத்தி யானமாகப் பூசிக்கினறே னென்றனன்.

ஞா-வி—அருவத்தியானத்தா லிலக்குக் கிடமின்ருய்ப்போ கும்; போகவே, புலகசிந்தனைத் தடிப்புக் கனைதற் கிடமின்ரும். இன்ருகவே, போகசாதன பூசையாக முடியும். முடியவே, மனது பற்றிப்பாய்த லெங்ஙன மகலும். அகலாதாகவே, பகவத்தியானத்தா லென்னபயன். இதைவிட முன்போலவே சகத்துத் தியானஞ் செய்து சுகிப்பது, விவேகிகளுக் கழகன்ருேவெனின்?

நா-விடை—உலகசிந்தனே விடுவதற் காகவா பகவத்தியானஞ் செய்வது இதென்ன மோசம். ஆஸ்திக குருக்களெல்லா மிங்ஙனம் போதிக்க வில்லையே, நீரொன்ன வதிசயமாகப் போதிக்கப் புறப் பட்டீர், பளா நன்ரு யிருக்கின்றதே என்று கைகொட்டி நகைத்துக் கேலிசெய்தனன்.

ஞா-வி—அப்பா! காமியபூசையென்றும், நிட்காமிய பூசை யென்று மிருதிறத்ததாக வேதஞ் சொல்லும் - இதிலெவர்க் கெந்த விச்சையோ அதைப் புரியினதற்குத் தக்கபலன் கிடைக்கும். அத னையோசியாது கேலிசெய்வது சனமார்க்கர் நெறியோ வெனின்?

நா-விடை—இந்தத் தேகபோகத்தைவிட்டு எதைச்சுகிக்கவோ நீர் பூசியென்ற துமதுகருத் தென்னே. யென்றனன்.

ஞா-வினா—இக்கணத்திருக்கு மினிவரும் கணத்தி லிருக்குமோ மரிக்குமோ என்னு மையவுருவாதலி, னிவ்வாழ் வகலுதற்கு முன்னரோ நாமறக்கவேண்டும். மறவாதிருக்கில் மரணவேதனை யாவரா லறியலாம் கடவுளே யறிகிற் பாரென்னு மனுபவ மாணாவிட்டது. இதுபற்றியாவது மறக்கவேண்டுமன்றோ? சம்மதியின்றேல், இவ்வாழ்விபற்றியது நாமன்றே, இதனைக்கொடுப்பித்துப் புசிப்பித்துத் தொலைப்பிப்பதாகிய முயற்சி வேறொருவர்பால தாதலி, னவனையே நோக்கி மீண்டு மிதனையே தரவாவது - இதனினு மேலாயதுளதேல் தரவாவது பிரார்த்திக்கவேண்டுமன்றோ? எவ்வுயிரினது தாற்பரியந் தாழ்ந்த வாழ்விற் பிரியமின்றே; இதனில் நின்கருத்திருந்தவா றென்னையெனின்?

நா-விடை—ஆனு லிவ்வாழ்வுபோல்தானே எவ்வாழ்வி னிலையும் - இதைப்பற்றி யவனைக் கொண்டாடுவதி லென்னலாபமென்றனன்.

ஞா-வினா—நித்தியமொன்றின்றே லனித்தியமென்றிருக்குமா? இராததாற் பூசியெனின்?

நா-விடை—அந்தவாழ்விஃதென்றும், அதனை யடையு மார்க்கமிதுவென்றும், முயற்சி யினையதென்று முணாத்த வேண்டு மென்றனன்.

ஞா-வினா—இனி யாமவற்றை யுணர்த்தின் அங்ஙனம் வழுவின்றிப் புரிதம் கியையுமோ வெனின்?

நா-விடை—அங்ஙன மாகுக வென்றனன.

## சிற்சடசோதனை

முற்றிற்று.

# இனிவழிபடுமார்க்கம்.

ஞா-வினு—அந்த நித்திய வாழ்வாவது; வியட்டி - சமட்டியென்னு மூபாதித்திரியங்கமூன்று, தனித்தனி சைதன்ய தெரிசனம்பெற்று அனுட்டிக்கில், அவ்வனுட்டான முதிர்ச்சியில் தனித்தனி பாவங்கமூன்று ஏகபாவந்தானே யமையும். அந்த ஏகசைன்ய பாவ தெரிசனத்தில் சகல சிற்சட பேதங்க ளிறந்து சத்தா மாத்திரமாயிருக்கும். இவ்வாறு சிரவணுதிகளால் விசாரித்துத் தெளிந்த அறிவொன்றுண்டே, யதுவுஞ் சச்சிதானந்தமாக விளங்குமாதலின் கற்பித சைதன்யமெனவும், எதார்த்த சைதன்யமெனவு முண்டாயிருந்த அத்தியா சாபாவ மிறந்து நிற்பதே நித்திய வாழ்வெனப்படும். இதில் யாதானு மையமுளதோ வெனின்?

நா-விடை—ஒன்று மில்லை. அதனை யடையுமார்க்கமும்-முயற்சியு மினையவெனக் கூறவேண்டு மென்றனன்.

ஞா-வினு—நித்தியா நித்திய வஸ்து விவேக முதலிய நான்கு சாதனமும், சித்தார்த்த போதத்தெளிவுமே மார்க்க மெனவும், மனோவாக்குக்காயங்களால் - லவுகீக வைதீகங்களி னிலைபெறுமாதொழுகப்பயின்று, அதின்பின்னர்-இதுவரையிலும் பிறந்திறந்த வுடல்களனைத்தும் புழுதியானதைத்தினமும் யாவரும் பிரத்தியட்சமாய்ப் பார்க்கின்றனமே, இப்போது பிறந்திருக்கின்ற வுடல்களுமிறந்தால் வேறாகுமா, பிரதிவினது விகார முடல்களெனுமை யமின்றே, யப்போது புழுதியாகக்காண்பதை யிப்போதே புழுதியாப்பார்ப்பது பிரதம முயற்சி யெனவுங் கூறுப - இதனுட் டடுத்தபால தியாதானு முளதோவெனின்?

நா-விடை—இல்லை. பிரதம முயற்சி யென்றீரோ, அதனைச் சிறுவரு மறியாரோ, சிரேஷ்ட மென்னை யென்றனன்.

ஞா-வினு—உடல் பாவம் வராது கணநேரமாவது சிந்தித்தது ஞனுதிக்கு மனுபவ மங்ஙனே நின்று கூறுதி யெனின்?

நா-விடை—மண்ணாகத் தோன்றுகின்ற தென்றனன்.

ஞா-வினு—அக்கணத்தில் உடல்க ளனைத்து மெங்கே? இல்லையெனின், மண்ணுயிற்றே; மீண்டுமுடல்களாகத்தோற்றுவானேன்? இதனைச் சிந்தித்துக் கண்டு சொல்லுதியெனின்?

நா-விடை—ஆனது மில்லை யழிந்தது மில்லையென்றனன்

ஞா-வின—ஆன விவ்விருவிதமாகத் தோற்றுவானேன்?

நா-விடை—நமது பாவனுபேதமே யென்றனன்.

ஞா-வின—ஆன வுடல்களும் பாவனுபேதந்தானோ?

நா-விடை—அல்லவென்றனன்

ஞா-வின—உடல்கள் விகாரமோ, சுயம்போ? சுயம்பெனின், பிரிதிவை யன்றி யிருக்கவேண்டுமே - இல்லையெனின், சுயம்பெனப் படுமோ? படாதெனின், சுயம்பாகப் பார்ப்பானேன். சுயம்பாகத் தோற்றுவதாலெனின், அங்ஙனந்தோற்றவேண்டுமென்றதற்குணர் வுண்டோ? இல்லையெனின், அத்தோற்றமும் அறிவினது பாவனை யாதலால் அத்தோற்றம் பிரிதிவுபாவத்தி லில்லாததாக்காண்டலும், தேகபாவத்திற் பிரிதிவுபாவ மில்லாததாக் காண்டலும் அன்னியோ ன்னியா பாவமெனப்படும். இதனால் அறிவை யன்றி யெப்பொரு ளொத்தன்மைத்தாத் தோற்றலும், அன்றாகத்தோற்றலு மில்லை யெ ன்பது வெற்றும். நின் கருத்திருந்தவா றென்னையெனின்?

நா-விடை—இஙஙனம் வழக்கு மயமாயுள்ள சிந்தனையிற் செ லுத்தாத நெறியினிற்க வுளதேற்கூறுகவென்றனன்.

ஞா-வின—கடவுளைத் திரிகரணங்க ளொத்துப்பூசித்துத் தியா னிப்பதே வழக்கிலா நெறியெனின்?

நா-விடை—கடவுளை யந்தந்த மதஸ்தர் பற்பலவாப்பெயரிட்டு; அப்பெயர் காரணமாகக்குணபேதங்களும்-நடத்தை பேதங்களுங்- கற்பித்து; நானுவித ஐதிகயக ளெழுதி யாராதிப்பதில் யான் யாதின் பாலதாவதென்றனன்

ஞா-வின—யாதின்பாலதாச்செல்லினும் ஒழுக்கவழி தவறாது நின்றுண்மையிற் பயபத்தி வளரத் தொண்டுபூண்டடங்குவதே மே லா நெறியென்மதி லிழுக்குளதோ வெனின்?

நா-விடை—இல்லை; இதுவே சம்மதமென்றனன்.

ஞா-வின—இதன்றியும்; அகங்காரமென்பது; தானலாததொ ன்றைத் தானெனக்கோட லது பிரதமதுக்கம். அதின்மேல் யான் மனிதப்பிறவியென லொன்று, ஆண் பெண் பேடிகளி லினையது யானெனக் கோடலொன்று, வருணசிரமங்களி லினையது யானென க்கோடலொன்று-கல்வி-தனமென்பவற்றி லினையதிற்சிறந்தேன் யா னென்பது வொன்று-இதுபோன்ற கற்பனை துக்கங்களுக் கேதுவாகிய

அகஙகாரங்களளவில்லே. ஆதலி னிக்கேட்டிற்கே பாத்திரமாயுள்ள அகஙகார பேதங்களைக் கெடுக்கவேண்டிய தவசிய மன்றோ ; அந்த வேகசைதன்யமாகிய பரத்தையன்றி நானென்னுங் கற்பித சைதன்ய மோர் முதலாகா தாகையா லதனைத் தத்தம்பண்ணப் பூசிக்கவேண் டுமெனின் ?

நா-விடை—நாங்கள் கற்பித சைதன்ய மென்று னீங்கள் மறுத்து, இஙகே நீங்களோ கற்பிதசைதன்ய மென்னலாமா ? இதென்ன புரட்டென்றனன்.

ஞா-வி௫—ஆதார சைதன்யங் காரண மாகச் சொல்லி லேற்பம். அங்ஙனங் கூறுமையா லெங்ஙன மேற்பமெனின் ?

நா-விடை—இனி யாது பணித்தி யென்றனன்.

ஞா-வி௫—சென்மங்க டோறு மான்மாக்களுக்கு வேண்டியவற்றைத் தந்தளிப்பவர் பகவானாதலா லவனை யன்றி யுயிர்க்குயிரான துணையெனப் படுவன வெல்லா மாங்காங்கே நழுவுவ தியல்பாதலா லப்பற்றுக்களா யுள்ள னவற்றை விட்டுப், பற்றற்றான் பற்றினைப் பற்றுகவென, நாயனார் முதலிய சான்றோர் கூறிய வுறுதி மொழிகளை யன்றி யெமக் குணர் வுறுத்தல் வேறின்மையா லதனையே கடைப்பிடி யெனின் ?

நாவிடை—அங்ஙனமே யாகுக வென்று புகழ்ந்து துதித்து வணங்கிப் பல வேதுக்களாலு மென்சித்த சஞ்சலமும் - சந்தேக விபரீதமு மகலச் செய்தனை நீயு முனது சந்ததியும் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க வெனத் துதித்து வணங்கினன்.

## வழிபடுமார்க்கம்

முற்றிற்று

## எதார்த்தவிளக்கம்.

ஞா-வி௲—இன்னும் யாதுவேண்டுவது நின்கருத்தென்னின்?

நா-விடை—எங்ஙன மாயவிவகாரத்திலும் யெனது மனம் கற்பிதாகார மற்று, உண்மையிற் கலங்காது நிற்க தெரிவிக்க வேண்டுமென்றனன்.

ஞா-வி௲—உன்னுடைய தேகம்; நான்கு பூதத்தை யன்றி யின்றெனத் தீர்மானிக்கப்பட்டதே, அங்ஙனம் நீ ஏற்றவாறு நிற்றற்குத் தடை யென்னே ?

நா-விடை—அங்ஙன நின்றால் மீண்டும் உடல் தோற்றுகின்றதே; யாதுதான் செய்வே னென்றனன்.

ஞா-வி௲—நின் விழி மூடி யுத்திக்கு ஒத்தவாறு, கலங்காது நின்று, உடலாகத்தோற்றுவது அங்கேயாது கண்டு சொல்லுதியென?

நா-விடை—அங்ஙன நெடுநேர நின்றும், தோற்று முடற்கு பாதான மினைய தெனக் கண்டிலனே யாது செய்வே னென்றனன்.

ஞா-வி௲—உபாதானத்தை நோக்குங் கால்; உபாதேய மின்றெனின், முன்னுள்ள உபாதேயஞ் சென்ற திசையை விடாது கண்டு கூறுகவென ?

நா-விடை—பாழாகக் காண்கின்றதே; அதை யன்றி யாதுந் தோற்றவில்லையே; யாது செய்வேனென்றனன்.

ஞா-வி௲—அந்தப் பாழ் விளங்குவது; தனக்குத்தானோ, வேறொன்றற்கோ ?

நா-விடை—தனக்குத்தானன்று; வேறொன்றற கென்றனன்.

ஞா-வி௲—வேறொன்றற்கெனின், அஃதெத்தகையது கண்டு கூறுகென ?

நா-விடை—நெடுநேர நின்று, சலியாவிடத் தோர்சுடர்போற்றொன்று கின்றதெனக் கூற.

ஞா-வி௲—அயலோ, நீயோ, யாது; கண்டு கூறுகென?

நா-விடை—அங்ஙன நெடுநேர நின்று, விழித்தவுடன் மாறாக் கண்ணீர்ப்பெருக்கும், ஆனந்தவெள்ளமும், மொழி தடுமாற்றமுமாக

அழுகை மேலிட்டெழுந்து அடியற்றபனைபோல் திருவடியில் விழுந்து வலம்புரி யிடம்புரியாக வந்து நமஸ்கரித்துத் தனதனுபூதி நிலை யனைத்தையும் விடாது சொல்லி யஞ்சலி கூப்பிய கரத்தனாய்

ஞா-வினு—முன்ன ரகமுகமாக நின்றாற்போல, இப்போது பகிர் முகமாகநின் றுனக்குலகங் காணு நிலையைத், தெரிவியென க்கேட்க ?

நா-விடை—தனக்கு முன்னர் தெரியாத நான்கு திட்டாந்த வனுபூதி நிலையைத் தெரிவித்தனன்.

ஞா-வினு—அகம்புற மொத்த நிலையைக் கண்டு சொல்லு கென ?

நா-விடை—ஆகாய நாட்டத் தேகமானாற்போல சிதாகாய நாட்டத் தேக மாய நிலையைத் தெரிவித்தனன்.

ஞா-வினு—இன்னுமைய முளதோ வெனக் கேட்க ?

நா-விடை—நின்றநிலை யெவ்வண்ணமோ ; அவ்வண்ண மாகக் கலங்காது மவுனமா நின்றனன்.

## எதார்த்தவிளக்கம்

முற்றிற்று.

---

## நாஸ்திகவாதம்-முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

உ-வது—ஆஸ்திகவாதம்.

# ஞாயவாதிக்கும், ஆஸ்திகனுக்கும்

## நடக்குஞ்சம்பாஷணை.

(வழக்கமுறைமை.)

ஞா-வினு—ஞாயவாதி யாஸ்திகனை நோக்கி யையா! உம்மானிலை நிறுத்தப்படும் ஆஸ்திகமாவ தென்னை?

ஆ-விடை—பரமும் - ஆன்மாவும் - நரக - சொர்க்க - மோட்சமும், நன்மை தீமையு முண்டெனக் கோடல்.

ஞா-வினு—இங்ஙனமாயின் நாஸ்திக னிதனை மறுப்பானேன்?

ஆ-விடை—அறியாமையா லென்றனன்.

ஞா-வினு—அஃதெங்ஙனமெனின்?

ஆ-விடை—தேகபோகமே சதமெனக் கொண்ட அறியாமையாலென்றனன்.

ஞா-வினு—இதையன்றிக் கண்டதொன் றுண்டோ வீண் சங்கற்பங் கொண்டு பிரளி செய்வதினுல் யாது பயனென்றனனே; யதற்கு யாது கூறுதியெனில்?

ஆ-விடை—பூசிப்பவ ரெல்லாந் தேகபோகத்துக் கன்றி வேறு கருத்தின ரன்றே; யாது பூசிக்கினு, மவாவின தளவே தேக போகமெனக் கூறுவது நுமது சுருதித் துணிபாதலின், பூசித்தலால் யாது பயனெனக் கேட்பையாயி, னிப்போது தேக போகம் வாய்த்தது நமதியற்றலா லன்றே; யாது கூறுதியென.

ஞா-வினு—இயற்றுதம் கர்த்தா கடபடாதி காரியங்களிற் சிலவற்றும் பிரத்தியட்சப்படுவது கொண்டு பலவற்றிற்கு மிருப்பதாக் கணித்தற் கிடங்கொடுக்கின்றது. அதுபோல மண்பஞ்சாதிய காரிய மெண்ணிறந்தவைகளி லோரணுவை யேனும் வேறு வினைமுதலிருந் தியற்றக் கண்டதுண்டாலுல் மற்றவைக்கு மேற்கவேண்டுவது ஞாயமே; அங்ஙனமின்றே யாதலி னெங்ஙன மேற்கப்படுமென்றனனே யெனில்?

ஆ-விடை—சத்த பரிசாதிகளை யறிகிறதும, ராகத்திவேஷாதிகளை யறிகிறதும், அவற்றின் விளைவுக் கிடமாக இச்சா ஞானச் சேட்டை புரிவதும், பொருளல்லவற்றைப் பொருளென் றுணர்வதுமாகிய புடை பெயர்ச்சிக்கெழுவாய் தேகாதி பிரபஞ்சங்கள் சடமாதலி னிவையாகா. உடல்வேறு நின்றியக்கி யுடலிருக்கை யுணர்த்தற்பால தெதுவோ, அதுவா மென்றற் கையஞ் சிறிதேனு மின்றே. பிரத்தியட்சத் துக்கினை யாதுபற்றி யிதுவு மின்றெனப் படுமோ? இன்றெனப்படின், அப்புடை பெயர்ச்சிகள் ஓர் முதலையன்றி யெங்கேயாவ தியங்க அனுபவ மிருக்கவேண்டும். இல்லையெனி னிதனை யொத்துக்கொள். வேறு கோடற் கிடமின்றாதலி னொத்துக்கொண்டனனெனில், அப்பிரத்தியட்ச வியட்டி சைதன்ய முண்டெனக் கொண்டது நீ யாதலால், அப்பிரத்தியட்ச சமட்டி சைதன்ய முண்டெனற் கையமெற்றிற் கிதனைக் கூறுகவென்றனன்.

ஞா-வினா—வியட்டி சைதன்யங்க ளனைத்து மவாந்தரப்பொருளன்றோ, அதனை யுண்டெனக்கொண்ட தருந்தல் பொருந்தல் சுகதுக்க நுகர்தலாதிய சேட்டைகளைப்பற்றியன்றோ, இங்ஙன மிருக்க; இவ்விருப்புகொண்டு சமஷ்டி யிருப்பு நாட்டுவ தெங்ஙன மேற்கப்படும், இதென்ன புதுமையென்பன், அதற்கு யாதுகூறுதியெனின்?

ஆ-விடை—"மலடிமைந்தனுந் தாணுவிற்புருடனும வான்மலர் முடிசூடி, யிலகு கந்தர்ப்ப நகரிலே சுத்திகாரசிதத்தை விலைபேசிக், கலகமாயினு ரிடையினிற்கயிற்றராக்கடித்திருவருமாண்டா, ரலகையாயினுமெனும் விவகாரத்தை யறிந்தவன் மயங்கானே." என்னுங் கவியில், சீவேஸ்வரர்கற்பிதபுருஷரெனவும், அவரது சேட்டையு மாரோபிதமெனவும், தெரிவிக்க விக்கதை கூறியது. இக்கருத்து வேதாந்திகளுக்குடன்பாடு; நாஸ்திகனுக்கும் வேதாந்திக்கும் யாதென்றனன்.

ஞா-வினா—சத்தி - சத்தன் - என்பது வேதாந்திகருடன்பாடு, இது நாஸ்திகனுக் குடன்பாடன்றே, யெங்ஙன மவனை வேதாந்தியென்றது, அது நிற்க; சீவேஸ்வரா னுண்டெனின், மாப்பிள்ளைத் தோழன்போல் விசாரணையி லில்லாமற்போவானேன், என்று கேட்கின்றனனே யதற்கு யாது கூறுதியெனின்?

ஆ-விடை—இதுவும் வேதாந்தி கட்சியென்றனன்.

ஞா-வினா—எவன் கட்சியாயினும் ஞாயத்துக்கு விரோதமில்லாமை யாவருக்கு முடன்பாடாதலின், அதனை நோக்காது, இங்

னை மடிக்கடிசொல்வதி லுன்கட்சி சாயுமோ, வெல்லுமோ, தோன்றுதவிடத்திற் கூறுங் கூற்றன்றோ, இப்போதாவ தவன் வினவுக்கு விடை யாது கூறுதியெனின்?

ஆ-விடை—தாயதந்தை குரு சிறுவர்க்குக் கூறுமுறுதிமொழி நம்பிப்புரிவதோ, ஞாயங்கேட்பதோ, ஞாய முணர்ந்து கொள்ளத் தக்க பருவமோ, அதுபோலச் சொன்னது நம்பிப்புரியாமல் சொத்தைக்கேள்வியெல்லா மாக்கலாமா, அடியார்களெல்லாஞ்சான்றோர்களான தெந்நனம், படித்துறையாகவன்றோ, இதற்கு யாது கூறுதியென்றனன்.

ஞா-வி—நம்பிப் புரிந்தனரெல்லாம் யாது பயனடைந்தனர். என்போல வுயர்ந்த பதவியிலுந் தேகபோகக் கருத்தினரோ யன்றி, விடுதியின்றுதலி னதுவீடாகுமோ; அதனால் யாதுபயனென்றனன்; அதற்கு யாது கூறுதியெனின்?

ஆ-விடை—அத்தேகமும்,போகமும், தூலசூக்குமவுடலன்று. அதனாலாய சையோக போகமுமன்று. சுத்த தேக போக மாதலினிது போன்றதன்று. அலட்சியமாகக் கூறுவ தென்னை யென்றனன்.

ஞா-வி—நானென்னு மறிவு கற்பிதமாயிற்றே, பூசிப்பதால் யாது பயனுறுவ தென்றனனே, யதற்கு யாது கூறுதியெனின்?

ஆ விடை—"அறிவெனலுங் கற்பிதமே லாள லெதை நானப், பிறிதெனலுங் கற்பிதமேற்பேணித் - தறியுடலைப், போற்றுவதென் றன்மைவினை போயிற்றே போகத்துக், கேற்ற தொழில் செய்வ தெவனிங்கு." எ - து. அறிவென்பதுங் கற்பிதப் பொருளெனின், அதற் கன்னியமெனப்படுவன வனைத்துங் கற்பிதப்பொருளன்றோ, அவையுங் கற்பிதப்பொருளாமெனின், நானென் றெதையாள்வது. இனறுயிருக்கத்; தூணையொத்த வுடலை நானெனக் கருதிப் பிரியம் வைத் துபசரித்துக் காப்பாற்றுவானேன். இதனோ லுடனானவனவெனில், பிறந்தேன்-இருக்கின்றேன் - இறப்பேன் - நிற்கிறேன் - போனேன்-வந்தேன - செய்வேன்-விழுந்தேன்-படுத்தேன் - கண்டேன்-கொண்டேன்-என்னு மிதுபோன்ற தன்மைவினைக்கிடமின்றி வழங்காமற் போயிற்றே; போயிற்றெனின், அருந்தல் பொருந்தலாதிய போகத்துக்கேற்றதொழில் பலவிங்கியற்றுவது யாதுக்கு. இஃதன்றியும்; "கவலைக் கிடமின்றிக் காப்பதெவன் பின்னும், புவனத்தனுவாசை போக்கெங்-கவலத், தகன்றனனோ பேச்சே னனுபவங்காட்டிற்றே, யாகமுடலென் றென்னோ வறை." எ - து. இப்போது கவ

லைக்கிடமின்றிக் காத்தல்போலப் பின்னுக்குங் கவலைக்கிடமின்றிப் பாதுகாத்தல் யாதுக்கு? உலகத்தாசை யனுவேனு மெங்கே யகன்றது, இறந்தபின் னவலமாய்ப் போகத்தக்க யானென தென்னு மகந்தையி னின்றகன்றனனோ? இவற்றாலாய வனுபவ முடனுனெனலைக் காட்டினதே யிவனுக்கென்ன பேச்சிருக்கின்றது, இதைப்பற்றி நீ கூறுவதென்னையோ, அதனைக்கூறுதி. இஃதன்றியும், "அகமுடலாக கான்போர்க் ககன்றனர்போற்பேச்சேன், பகவானையன்றியுண்டோ பார்க்கில்-இகபரங்கள், எல்லா மவனுடைமை யென்பதற்கென்னாட் சேபம், இல்லாத தாற்றனையே திங்கு." எ-து. தேகமே யானென லன்றி வேறனுபவங் காணார்க்கு, எப்பற்று மகன்றனர்போற்பேசும் பேச்சால் பயனென்னை? இகபரமுதலியயாவும் பரவஸ்துவையன்றி யுண்டோ? எல்லா மவனுடைமை யென்பதற் காட்சேபம் யாதானு முளதோ? இல்லாமையால், அப்பரவஸ்துவையன்றி யிங்கே யெமக் குயிருக்குயிரான துணையாது? மேலும்; "துணையவன்றா னென்று தொழுது பெரியோர், துணையலதை நீத்தார் துயரோ - டிணையின் றிக், கேட்டிற் குரியதோ கிட்டாதென்னின்னிலையில், நாட்டுவதென் னந்நிலையை நன்கு." எ-து. எமக்குத்துணையாவது யாதெனப் பல வேதுக்களா லாய்ந்து மில்லாமையா லவ்விறைவனது திருவடிகளை துணையெனப்பற்றி, யதனைவிளக்காக வுள்ளத் தமைத்து, முன்னர் மெய்போலக் காணப்பட்டிருந்த வுயிர்ச்சார்பு பொருட் சார்பாகிய துணையைத்துணையலவென்று, சகலதுன்பங்களுமொருங்கே தொலையச், சமானமின்றிச், சான்றோர்தொலைத்தனர். இந்நிலை கேட்டிற்கே யுரியதோ? இதனிலவனை பற்றுதலென்னையோ? இதனையோராது நீயே பந்த நாஸ்திக நிலையை நன்கு நாட்டப்புகுந்தது என்ன கருதியோ, யானறிகிலனென்றனன். இந்நான்கு கவியாலும் பிரிதிவு தத்துவமுத னாத தத்துவ மீறாக்கிடந்த முப்பத்தாறு தத்துவங்களில்; முதலாயுள்ள பிரிதிவு தத்துவ மகந்திற்பரமாணுபோலவு மனுபவங் கடக்காத நீயா; எல்லா தத்துவங்கட்கு மப்பாலுக் கப்பாலா யிருக்கிற துரியமுங் கடந்தவன்போ லதனையுங் கற்பனையென்றனை இப்பேச்சாற் பயனின்மையி னிதனைவிட்டு, எல்லாச்சுதந்தரமு நிலை யல்லாததா லவற்றினையும் விட்டுப், பிரியாச்சுதந்தரப் பொருளாகிய பரத்திற் கன்னிய மாகாதிருக்கத் தேடுதி யென்பதாயிற்று.

௩-வினா—உடல்தோறு முள்ள சைதன்யங்களு மனைமெனற்கும், நித்தியமெனற்கு மிங்ஙனங் குறிப்பித்தனை. இது கிட்டா

வருத்தாபத்தியன்றிக் காட்சிப்பிரமாண மன்றே; என்று கூறுகின்றனனே யாது கூறுதியெனின்?

ஆ-விடை—இங்ஙனங் கூறுகின்ற அவனச்சைதன்யமன்றோ, உடலன்றே, அச்சைதன்ய மிருந்துதானே யிங்ஙன மெல்லா முணர்ந்து கூறுகின்றது, இப்போதாவ ததனை யவாந்தரப்பொருளென்று, முண்மைப்பொருளென்று, மனுமானத்தை விட்டு, அதைச்சோதிக்கலாகாதா? அறிபடு பொருளை யெட்டுமட்டு மவற்றின் காரியங்களை யவ்வவற்றிற்குரிய காரணங்களி லொடுக்கிக் கொண்டுபோகத் தெரியுமே யன்றி, முற்றுமெட்டத் தெரியாது. இத் திறமை யுள்ளவனு, அறிவுக்கே யுரியகாரிய பேதங்களைக்கண்டு பிடித்து, அவ்வவற்றிற்குரிய காரணங்களி லெட்டு மட்டு மொடுக்கிக்கொண்டுபோகத் தக்கவன் அப்பாலென்செய்வன், பாரா நன்றாயிருக்கின்றது. இருந் தனுபவிக்கிறவனுதலால், தன்னை யெட்டாமை தனது குற்றமே; தானில்லாதிருந்தா லுணர்ந் தனுபவிக்கிற தில்லாமற்போகவேண்டும். அங்ஙனமில்லையே, ஆதலிற்றான் சத்தே, யதனுனிததியமே, அளவிறந்த பிரமாணங்களா லுண்மையென நாடத்தகும். இந்த ஆன்மா; காட்சிப் பிரமாணமொன் றில்லாமையினு லில்லையெனக் கூறத்தகுமோ? இதென்ன மடமை. "ஊனமிலா ஞானநூல் விசாரத்தாலே" என்னும் வாசிட்டக்கவியி, லான்மாவை விசாரிக்கத் தகு முறைப்படி விசாரிக்கி, லது விளங்குமென்பது பொய்யோ? அம்முயற்சியைத் தளராதேற்றுத் திரிகரணமு மொக்க வியற்றி லது விளங்குமோ விளங்காதோ? பின்னர் கூறி லேறபம். இம்முயற்சியைவிட்டு வீண் சாத்துரிய மொழிப்பகட்டாற் பயனென்னை யென்றனன்.

ஞா-வினா—அயலையேனு மறிவையேனு மெட்டப்படா விடத்துச் சூனியமா முடியுமன்றோ, அது பொருளாகுமா, அதனைச் சைதன்யமெனக் கூறத்தகுமோ, இதென்ன விவேக மென்றானே யாது கூறுதியெனின்?

ஆ-விடை—சூனியமெனக் கண் டங்குணர்ந்து தெரிவிப்பது தெரிவன்றிச் சூனியமாகுமா; அத்தெரிவுதானே, நீ. நீ யங்கில்லையோ, நீயுஞ் சூனியமா; நீதானே யங்கவிச்சின்னமா நின்று பாழென்றதும்; இங்குலகா நின்று திணைபாலிட முண்டென்றதும், வேறுண்டோ; நீ சின்னமுமல்ல, அவிச்சின்னமுமல்ல, சகலத்தி லவிச்சின்னமுங், கேவலத்திற் சின்னமுமில்லை. இங்ஙன மொன்றி லொன்றில்லாததனு, லிவ்விரண்டு மன்னியோன்னியா பாவமாயிற்று.

ஆகவே, தெரிவாகிய நீ யிவ்விரண்டுமாக நின் றிவற்றை யுணர்தலாற் பாவமாயிற்று. இங்ஙனம் பாவமா நின்றுள்ள தெரிவாகிய நீ யசத்தெனப்படுமா; படாதெனின், சத்தே. இங்ஙனஞ் சத்தாநின்றுள்ள வுன்னை, யசத்தெனவுங் கற்பிதமெனவுங் கூறத்தகுமா; ஆராய்ச்சி யற்ற பாமரர்கள் வசனமன்றோ, இங்ஙனங் கூறுவது, இதென்ன விவேக மென்றனன்.

ஞா-வினா—சத்தாயின், முன் சென்னங் தெரிந்து கொள்ளக் கூடுமே கூடாததென்னை?

ஆ-விடை—ஈஸ்வரானுக்கிரகத்தால் திரிகால ஞானம் பெறிலது விளங்குமேயன்றி, வேறுகாரணங்களி லொன்றானும் விளங்காது. எதுபோல வெனில்; கல்வியி லொவ்வொரு புத்தக மெவ்வளவு பெரிதாயிருக்கினு மொருகாற் கேட்கினுஞ் சிந்திக்கினு மொருவனுக்குப் போதுமானதாகும், பலகாற்கேட்கினுஞ் சிந்திக்கினும் மற்றொருவனுக்குப் போதாததாகும், இஃதன்றியும் யாது வல்லனயினும் வறுமை வந்துற்றவிடத்துத் தாழ்ந்தும், யாதினுந் திறமையற்றவனாயினு மாகூழ்வந்துற்றவிடத் துயர்ந்துமாவதற்கு முயிர்களுக்கே தென்னையோ; இங்ஙனமா முயற்சிகள் யாவும், உயிர்களதன்றோ; உயிர்களதாமெனின், பலதரத்தி லாருமனை மொருதரத்திலாகலாமே; பலவித முயற்சிசெய்தும் வாய்க்காதபலன், இம்முயற்சி சிறிது மில்லாதானுக்கு வாய்க்கா திருககலாமே; இந்தக்கடனைட சாமர்த்திய முயிர்களி னியற்றலா லன்றே. இச்சாமர்த்தியம் மேலோ னிருப்பைக் காட்டுமன்றோ; அன்னோ னெவ்வுயி ரொதைக் கருதிப் பூசித்ததோ, அதைத் தக்கவாறு பருவங்கண்டளிக்கத் தக்கவனாதலா லிதுவே போதுமான திருட்டாந்தர மெனக் கொண்டு, இன்னவிதக் கேள்வியினாலும், வேறுவிதக் கேள்வியினாலு மான்மா சத்தென்பதைத் தவிர்க்கப்படாதென வறிக.

ஞா-வினா—இதினாலெல்லா மாஸ்திக நிலையுறுமோ, எங்ஙனமெனில், ஆன்மாவுஞ் சத்து, பரமுஞ் சத்தெனி லிதில் தாரதம்மியம் யாது. சக்ரவர்த்தி - சிங்கம் - கருடன் - முதலியவைகளெல்லாமந்தந்தத் தோற்றத்துக் கெல்லாஞ் சிறந்திருக்கு மாறுபோன்று, சத்துபேதங்களிற் பரமாகிற சத்து சிறந்திருக்கின்றதெனின், சென்மபேதங்கள் பிறப்பிறப்பு தவிராது போன்று, அவ்வவற்றின் தலைமைகளும் பிறப்பிறப்பைத் தவிரவில்லையே; அதுபோலப், பரவஸ்துவு மான்மாக்களைப்போலச் சத்தெனின் பிறப்பிறப் பாதியவை

யொத்திருக்க வேண்டுமே ; இல்லையெனில், உபாதி குணச் சேட்டை மகத்தாலோ ; ஆமெனின், ஆன்மா வுபாதி குணச் சேட்டையாயின், அதுவு முபாதி குணச்சேட்டை யெனப்படும். அல்லவெனி, னிதுவு மல்ல வெனப்படுமே. அது சத்தாகிய பேரறிவெனி, னிதுவுஞ் சத்தாகிய சிற்றறிவெனப்படுமே. பெரிது சிறிதென்னுந் தாரதம்மிய முளதே யெனில், சமஷ்டி வியஷ்டி யுபாதி தாரதம்மியம் பற்றி யன்றிச் சைதன்னிய மங்ஙனமாதற் கேதுவில்லையே. உண்டெனின், சிறிது பெரிதென்னும் பேத முபாதியாலன்றிச் சலத்திற்குச் சுபாவமாயிருக்கவேண்டுமே? இல்லையெனின், சத்தெனற்குச் சுயம்பாய்ச் சிறிதுபெரிதென்னும் பேதஞ்சிறிதுமில்லையென் றுமது சுருதி யுத்தி காரணமாக, ஐயமின்றி நிரூபிக்கின்றதே. இங்ஙனமிருக்க; ஆருக்கார் பூசிக்கின்றதென்கின்றனனே, யாது கூறுதியெனின் ?

ஆ-விடை—அந்தந்த வவசரத்திற் குரிய ஆத்தம் - அந்தந்த அவசரத்திற்குரியது. இங்ஙன மிருக்க ; கர்மம் - பத்தி - ஞானம்- என மூன்று மொன்றாகாது, ஒன்றாக்கலாமா? ஒன்றாக விசிரிம்பிக்கின், தீர்ப்புக் கிடமின்றிப் போகும் - போகவே யனுஷ்டான மின்றிப்போகும், போவதான் மனமொருங்குபடற்கின்றாம், இன்றாகவே, மனித சத்தார்த்தத்துக் கிடமின்றி யமையும். அமையவே, மிருகமெனப்படுவன். படவே, யிருப்பதினுமாய்வதே சிறப்பெனப்படும். ஆதலின், பத்தி ஞானத்துக் குரிய ரல்லாதார் கன்மத்துக்கே யுரியராதலின், கன்மானுட்டானத்துக்குரிய விதி விலக்குக்ககலாது நிற்றலிற், பயபத்தி யுடைய ராகவேண்டும். இக்கட்டுப்பாட்டுக்கியையக் கருத்தின்றிய நீர், பேசுவதாற் பயனென்னை விடுகவென்றனன்.

ஞா-வி—செகசீவ பரமூன்றென நீர் வாதிப்பது, தோற்றத்தாலன்றி வஸ்து சோதனையா லன்றே ; அதுபோல, யாமு முண்டெனக் கொள்ளி னுமக்குப் பிரியமாம். இதுநிற்க ; ஆஸ்திகத்தெல்லையும் நாஸ்திகத்தெல்லையு மிதுவென வரம்பு பெறுவிடத்துப் பேசுவதால் யாது பயன். முன்னா ஆஸ்திகவரம்பு கூறுதியெனின் ?

ஆ-விடை—அங்ஙனமாகுகவென் றிந்நிலை விசாரிக்கப் புகுதுமென்றனன்.

சகரமாப்பேசும் வழக்கமுறைமை

முற்றிற்று.

## இனி எதார்த்த எல்லைமுறைமை.

ஞா-வின—செகமாதி மூன்றனுள், பிரத்தியட்சத்துக் கெவர்க்கு மியைந்தது செகமாதலி னிச் செக சொருப வெல்லையி னளவு இதுவென் றையமற வுணர்த்த வேண்டு மெனின்?

ஆ-விடை—சகல அண்டங்களும் பூதபௌதிகங்களு மிருக்தற்காதாரமாகிய வெளியுஞ் சகபதார்த்தமாதலா லிவ்வெளியிலாத விடமு, மிதற்குப் புறம்பு மிதுவெனக் கணிக்கவிடமில்லையே யென்ஙனஞ் சொல்லப் புகுவன், ஆயினும்; அவ ராசை யளவே யுலகள வெனவும்; விபரீத ஞானவளவே யுலகளவெனவும், உண்டு-இல்லை-ஆம்-அல்ல என்னுந் தர்மங்களே வடிவாயுள்ள துலகெனக் காணு வளவினதே யுலகள வெனவும்; மனதையும் - அதனெல்லையும் - அதன் சங்கோச விகாசதர்மங்களையும்-அது விரிந்தொடுங்கு மியைந்த ஸ்தானத்தையும் அறியா வளவினதே யுலகள வெனவும்; இன்னு மிதுபோன்ற அதிசூக்கும நுட்ப வளவினதே யுலகளவெனவும்; பிரிதிவுதத்துவமுதல் நாததத்துவமீறுயுள்ள இருபத்தைந்து தத்துவக் கூட்டவளவினதே யுலகள வெனவும்; பிரகிருதி தத்துவ முதல் விகுர்தி தத்துவ மீறுயுள்ள வளவினதே யுலகள வெனவும்; ஞாய முன்னிட்டு ஸ்மரணை யளவினதே யுலகளவெனவுங், கூறுப. இதில்; ஸ்மரணை யளவினதே யுலகளவின தென்பதை யாவாக்கு மனுபவமாயிருக்கக் காட்டி யினிக்கூறுதும என்றனன்.

ஞா-வின—இதுகாறு மிங்ஙனமாய நெறியாலாஸ்திகநாட்டினு ரெங்கணுங் கல்லிடலம்-இஃதற்புத மிஃதற்புதமாம் ஞாயமுறைவழு வாதிதனைக் கூறுக வெனின்?

ஆ-விடை—"ஒருமெய்யுங்காணு ருலகுமெய்யென்பர், திரிபென்று காணுத் திறத்தால் - பெருவுலகத், தெல்லை யறிவதெவ னெம்மதமு மிங்ஙனமேல், சொல்வதெவன் வேறெல்லை சொல். எ - து. ஓர் மெய்யுங் காணுதாரே யுலகினை மெய்யெனக் கூச்சமின்றிக்கூறுவர். அங்ஙனங்கூறுவது யாதாலெனில், ஒன்றன்கூட்டம் பலவினிட்டங் திரிபென் றறியாத் திறத்தினுலே யாம். இத் திறமில்லா ரெங்ஙன முலகத் தெல்லையறிவது; எந்த மதத்தலைமைக் குருபீடத்தரு மிங்ஙனமே; இங்ஙனமாயின், மற்றச் சீவரதெல்லையும், பரத்தினதெல்லையுங் கணிக்கப்புகுவ தெங்ஙனம்? நீயே சொல்லுதி. எ-று.

ஞா-வினா—ஆனால்; ஓர்வா றுலகுக்கெல்லை தெரியக் கூறுது மென்றீரே, யஃதிங்ஙனமெனக் கூறுகவெனின்?

ஆ-விடை—"ஸ்மரணை யெங்குண்டோ சகமுமாங் குண்டாம, ஸ்மரணா யோசித்தின் ஸ்புரிப்பாம் - ஸ்மரணையினும், இல்லையணு நுட்ப மிதிலிலா தொன்றுமிலே, எல்லையெது வென்ப மினி." எ-து. அவனுக்கு ஸ்மரணையேயில்லையவனை வருத்துவானேனென்னு மனுபவ மெங்கணு மிருக்கக் காண்கின்றன மாதலானும், எம்முயற்சியேனுஞ் செய்யாநிற்கு மவசரததி லுறக்கந் தன்னையறியா தொரு கணமேனு முண்டாவதெவர்க்கு மனுபவ மாதலானும், இதுபற்றி யிக்கவியில் - ஸ்மரணையான தெங்கெங்குளதோ, அங்கங்குல குள தாம் இது மெய்ம்மையே ஸ்மரணையென்பது யாதோ? சைதன்ய த்தின் ஸ்புரிப்பாம். எதுபோன்றதெனின், சமுத்திரத்தினோர் திவலை போல்வது. இந்தஸ்புரிப்பின் வடிவளவு யாதெனின். ஸ்மரணையை க்காட்டினு மெந்தப் பரமாணுநுட்பமு மில்லவேயில்லை யென ஆன்ம ஞானக்கண்ணுடையரா லேயந்திரிபறக் கணிக்கற் கியைந்தது. ஆனா லிந்த ஸ்மரணைக் கெப்புறத்ததோ, சகலலோகங்களு மெனின், சகல சேனைகட்கும் நிழல்தரற் கிடமாநின்ற ஆலவிருட்ச மடங்கி நிற்றற் கியைந்த அதன் வித்துபோலு, மிந்தஸ்மரணையி லடங்காத சித்துபேதங்கள் - சடபேதங்கள் - அண்டநிரை பலகோடிபேதங்கள் - பதவிபேதங்கள் - கதிபேதங்க ளோரணுவேனு மில்லவே யில்லை. இங்ஙனமிருக்க; இனி யுலகினுக் கியாதெல்லையெனக் கூறவல்லம என்றனன்.

ஞா-வினா—ஆனால்; அகனறபண்டிதரும், உலகினுக்கு ஸ்மரணை; யறிதல் துணைக்கருவி யென்பானேன்?

ஆ-விடை—"ஸ்மரணையலா ருண்டேற் சகமு மயலென்பம், ஸ்மரணைத் தடிப்பே சகமாம் - ஸ்மரணைதனைத், தள்ளியுட லேனுஞ் சாறறவலா ரெங்குமிலே, யுள்ளுவது மெங்ஙனுளம்." எ-து. ஸ்மரணை ரூபமல்லாதா ருண்டாயின், ஆன்மாக்கட்கு ஸ்மரணை வேறென்பம். அதுவேறாயின், ஸ்மரணைக்குச் சகத்து வேறென்பம். வேறென்பமே யெனின், அந்தஸ்மரணையைப் புறம்போக்கித் தன துடலேனுங் காட்டவும், பிரித்துச் சொல்லவும் வல்லமையுள்ளார்; தேவருளேனும், மற்றோருளேனு மெங்ஙனு மில்லவேயில்லை. மன மேனு மயலெனப்படாதோ? ஸ்மரணைரூப மல்லாதாயின், உன்னு தலாகிய வுணர்தலு மெங்ஙனம் வாய்க்கும். வாய்த்தலின், ஸ்மரணை ரூபமே வேறல்ல வென்றனன்.

ஞா-வி—ஸ்மரணையின் புடை பெயர்ச்சி யன்றோ சிந்தனை யென்பது; அந்தச் சிந்தனையாற் சிந்திக்கப்படுவதன்றோ செகமெனப்படுவதும், இங்ஙனமிருக்க; ஒன்றெனப் படுமாவெனின்?

ஆ-விடை—வேறெனப்படுமாயின் சிந்தனை பிராந்தியற்ற விடத்திலிருந்து மூலக மதற்கில்லாமற் போவானேன். போவதால், அதைப்பற்றி யிக்கவியிற் சிறிதுணர்த்துதும். யாதெனில்; "மாழ்கலுஞ் சிந்தனையே மாற்றலுஞ் சிந்தனையே, ஆழ்தலுந் துன்பக் கடலன்னதே - ஆழ்ந்தி, அகறலுஞ் சிந்தனையே பல்லுடலே, யகமென லுஞ் சிந்தனையே யாம்." எ-து. தேகமுதலிய சகல பதார்த்தங்களும், பூதபௌதிகங்களு மணுக்குழு சையோக விகார பதார்த்த மெனவறியாது, எதார்த்தமென மயங்கலுஞ் சிந்தனையே, சோதனையா லெதார்த்த மல்லவென வையந்திரிபறத்தெளிந்து அம்மயக்கத்தை மாற்றலுஞ் சிந்தனையே, அம்மயக்கத்தால் வருமின்ப மெனக் காட்டி மாறுந் துன்பக்கடலில் மூழ்கித் தவிப்பதுஞ் சிந்தனையே, அங்ஙன மூழ்கித் தவிப்பதி னின்றும் விசாரணைத்தெளிவால கன்று விஸ்ராந்தி யடைதலுஞ் சிந்தனையே, தானல்லாதவுடலே தானென மயங்கிக் கோடலுஞ் சிந்தனையே யென்றனன்.

ஞா-வி—அறிபடு பொருளாகிய வுலக மிருப்பதுபற்றி யன்றோ; இச்சாஞானக்கிரியையாகிய புடை பெயர்ச்சி யுளதாயிருக்கின்றது, இங்ஙனமிருக்க; ஸ்மரணையே செகத்தென்னலாமா?

ஆ-விடை—(கவி) "இச்சா ஞானக்கிரியை யெங்கே ஸ்மரணையன்றி, இச்சாஞானத்தையன்றி யெங்குலகம் - உச்சிதமாம், எல்லாம் ஸ்மரணைமய மென்பதற்கென் னாட்சேபம், நல்லாய்கே ளின்னுமொன்று நன்கு." எ-து. அகமுக நாட்டத்திலுந்த ஸ்மரணை செகத்துருவமாக வன்றி யெழத் தெரியாததால், அங்ஙனே யிச்சாஞானக் கிரியையாம். இம்மூன்றும் ஸ்புரிப்பையன்றியெங்கே, இச்சாஞானமெழாவிடத் துலகென லெங்கே, இது; எல்லா விஷேதங்களினும் மேலானதாம். சுழுத்தியி லவிச்சின்னமாகிய சூனியரூபமாக நின்ற ஸ்மரணையே நித்திரை தெளிவுற்ற விடத்தேனும், இடையிற் பங்க முற்றவிடத்தேனும், சின்னமாகிய பிரபஞ்சரூபமாவதிக்குமன்றோ? அங்ஙனஞ் செகத்ரூபமா நின்று விவகரிக்குமிடத்தும் ஸ்மரணை ரூபமாக வன்றி நாமரூபங்க ளொன்றுந் தோன்றக்கண்டிலமே; இங்ஙன நாமரூப மயமாநின்ற ஸ்மரணையே கேவலத்தில் மீண்டுஞ்சூனி

யமாகத் தோற்றுமன்றோ, அவஸ்தாத்திரயக் காட்சியனைத்தும் ஸ்மரணை ரூபமாதலால், எல்லாம் ஸ்மரணை மயமென்பதற் காட்சேபம் யாது? நற்குணசீலனே! யிஃதன்றியு மின்னொன்று சொல்லப் புகுதும் நன்கு கேளுதி.

ஞா-வின—பிரபஞ்ச முண்டாயிருந்து ஸ்மரணைக்குக் காணப்படுவதாயிருக்க, ஸ்மரணை யென்ன லாமா வெனில்?

ஆ-விடை—"ஸ்மரணை யன்றி யுண்டாமேற் சாக்கிரந்தானந்த, ஸ்மரணையன்றி யுண்டாரு சகத்து - ஸ்மரணையன்றி, யில்லையெனி லீதுமிலை யெங்கேநின் னாஸ்திகந்தான், எல்லையெது நீயே யிசை." எ-து. ஸ்மரணையன்றிச் சாக்ராவஸ்தையுண்டாயிருக்குமாயின், அந்த ஸ்மரணை யன்றிச் சகத்து முண்டா யிருக்கலாம். ஸ்மரணை யன்றிச் சகலாவஸ்தை யில்லையெனின், பிரபஞ்சமு மில்லையெனப்படாதோ? இதனால், பிரபஞ்சமகத்தென்றும், அறிவணுத்துவ மென்றுங் கொண்ட நின் கொள்கை மகத்துவ மணுத்துவமாகவும், அணுத்துவ மகத்துவமாகவு மாறிவிட்டதே யிப்போ துனது நாஸ்திகக் கட்சியெங்கே? இப்போதாவ துலகினுக் கெல்லையாது நீயே சொல்லுதியென.

ஞா-வின—ஸ்மரணை யன்றி யாவு மில்லை யெனில், யாவுமாய்த் தோற்றற் கேதென்னையோ அதனைச் சொல்லுதி யெனின்?

ஆ-விடை—"பகிர்முகத்ததாயிற் பலகற் பிதமாம், அகமுகத்த தாயி லறிவா - யிகலின்றி, யேகபரி பூரணமா மெங்கே ஸ்புரிப்பெனலும், ஆகலறி வேதெங் கறை." எ-து. ஸ்மரணைரூபமாயெழுந்த வெழுப்தி யதோமுகத்த நிலையதாயின், பலவிதமான கற்பனைரூபமாக விளங்கும் ஊர்த்தமுகத்ததாயின், பரிச்சின்ன தோடமின்றி யேகமை தன்மயமாகவும் பரிபூரணமாகவும் விளங்கும். அப்போது ஸ்புரிப்பென்னுங் கற்பிதத் தோற்றமு மெங்கே, அதினெழுச்சியு நசிப்புமேது, அங்ஙனமாய தெங்கே கண்டிலமே யிதுபற்றி யாது கூறுதி யென.

ஞா-வின—இங்ஙனம் ஸ்மரணை நிலையாய துன்மையே வழிபடற்கு யாது தந்திர மெனின்?

ஆ-விடை—"அகமுகத்த தாதற் கறிவிக்கு நிட்டை, மிகவருத்தமாகில் விடுத்து - அகவிரத்தி, யாகத் துறவென்னு மன்னதூஉங் கட்டமதேல், யோகமே னுஞ்செய் யுகம்." எ-து. அசரீரி வாக்கிய

மாகிய வேதமாதா இரக்கமுற்று, அந்த ஸ்மரணை யந்தர்முகநாட்டமாதற்கவாவில் சொரூப சமாதி சகசசமாதி யென்னும் நிட்டையினை விடா தியற்றுதி யெனக் கூறுநிற்கும். அது மிகவும் வருத்தமென்னில, அம்முயற்சியை விடுத்து அகப்பற்றின்கண் விரக்திதோன்றப் புறப்பற்றை யொருங்கே விட்டுவிடுக வெனக் கூறும். அஃதுங்கட்டமெனின், கிரியாயோகமேனும் யுகமளவும் விடா தியற்றுதியெனக் கூறுமெனக்கூற.

ஞா-வி—இதெல்லாம் பொறிகரண மடக்கிச் செய்ய வேண்டுவதால், இங்ஙனமன்றிப் புரியு மார்க்கங் கூறுதியெனின்?

ஆ-விடை—"அதுவும் வருத்தமதே லாண்டானைப் பூசி, அதுவும் வருத்தமதே லன்பர்க் - கிதஞ்செய்க, மாவருத்த மென்னில் மகாவிரதம் பூண்டிடுக, சாவளவு மென்னுமறை தான்." எ-று. யோகம்புரிவதுங் கட்டமெனின், இம்மையோ டெம்மையினுந் தனுவாதி தந் தடிமைகொள்ளாக் கருது மெமக்குயிர்க் குயிராகின்றுள்ள சுயம்ப்ரகாச சொரூபமாகிய எமது கர்த்தனைத் திரிகரணமு மொக்கப் பூசித்திடுக. அதுவும்வருத்தமெனின், அவனது மெய்யன்பர்க்கேனு மிதந்தோன்றப் பணிபுரிக அதுவு மகாவருத்தமாயின், ஒன்றினும் விருப்பும் வெறுப்பு மெழா திருக்கத்தக்க மகா விரதத்தை யாவது பயங் துயிருள்ளளவு மியற்றுகவென வேதமாதா கூறுமென

ஞா-வி—பக்குவமறிந்து இங்ஙனங்கூறநதகுதியரும், கேட்கத்தகுதியரு முளரோ வெனின்?

ஆ-விடை—"ஈதெல்லாந் தந்திரமே யெவ்வுயிருந் தன்னிலையி லாதற் கயல்விட்டிங் காரறிவார் - மீதுநிலே, யின்னதுபோற் சொல்வாரு மேற்கத் தகுதியரும், உன்னிலரி தெங்குமென வோர்." எ-று. உயிர்கள காமவெகுளி மயக்கத்தினின் றகல்தற் கிங்ஙனங் கூறியதெல்லாந் தந்திரமேயன்றி வேறன்று. இங்ஙனங் கூறவது எதுகாறுமெனின, தானனனிய மாகாது தானே தானாதல் வரையுங் கூறும். இங்ஙனமாய நெறிபோற் போதிப்போரும், இதனைப் பெறுவோரு முளரோ; இருக்கினுஞ் சிந்திக்குமிடத் திவர்க ளெங்கணு மரியரென் றுணர்ந்திடுதியென.

ஞா-வி—ஆயின், ஆஸ்திகரனைவருஞ் சகசீவபரமென மூன்றெல்லைவகுத்தது யாதினாலெனின்?

ஆ-விடை—"எல்லே சுயஞ்சோதி யேகசை தன்னியமே, யல்லாது மூன்றில்லே யாயுங்கால் - சொல்லாலிங், காய்பவர்க்கு மூன்று மதுவிளங்காத் தன்மையினுல், ஓய்விலா வாதத்தென் ஞேது." எ-து. எல்லே யெனப்படுவது ஒன்றேயொழிய மூன்றில்லே. அதாவது; சுயம்ப்ரகாச சொரூபமாகிய ஏகசைதன்ய மென்பது. ஐயந்திரிபறவாராயுமிடத் திந்நிலேயன்றி வேறில்லே. இங்ஙனமிருக்க; மூன்றெல்லேயென்பது ஆருக்கு. அந்த அனுபவம் விளங்காததிஞற்சொல்லா லாராய்பவர்க்கு, இவ்வற்ப நிலேயுள்ளார் ஓயாது வாதிப்பதினுலயாதுபயன்-சொல்லுதியென.

ஞா-வினு—இஃதுண்மையே யாது கூறுதியெனின?

ஆ-விடை—என்ன சுதந்தரமுண் டெங்கேனு மெவ்வுயிர்க்கும், அன்னேனே யன்றி யறியோமே - யின்னநாம், ஆதார மற்ற வவதிப்பிணம்போல்வம், ஏதாகு நும்வாத மிங்கு." எ-து. பகவானில்லே யெனில், எவ்வுயிர்க்கு மெவ்விடத்தேனுஞ் சுதந்தரப் பொருளாயுள்ள பரவஸ்துவையன்றி யெமக் குயிர்க்குயிரான சுதந்தர மென்ன வுண்டு. பலவாற்ரு லாராயினும் வேறுளதாகக் ; கண்டிலமே இன்னிலேயுடைய நாம் யாதோ ராதாரமுமற்ற வவதிப்பிணம்போலக் கிடக்கின்றனம். பரவஸ்து இல்லேயென வாதிக்கு முமதுவாத மிங்கே யாது பயன்பெறுமென.

ஞா - வினு—"என்ன வவரு மிதுவே முறையாகும், நன்னீதி மாறின்றி நாட்டினுய் - சொன்னவற்றுள், எந்த முடிவுநிலே யேற்க விடங்கொடுத்த, தந்தநிலே யீதென் றறை." எ-து. நாஸ்திகவாதத் தாற் றடிக்கு ஞாயவாதியும், ஆஸ்திகனை நோக்கி நீரிங்கே கூறிக் கொண்டுவந்த இந்த நிலேகளே யொழுங்காகும். இந்நிலேகளே நல்ல ஞாய மார்க்கத் துக்கு வழுவின்றி நிலேநாட்டினுய். போதும்; இப்போது சொல்லிக்கொண்டு வந்த நிலேகளுள் ; எந்த முடிவான நிலே யாஸ்திகத்தை யேற்க இடங்கொடுத்தது. அந்த நிலே யிஃதென் றுணர்த்துதி.

ஆ-விடை—"பகிர்முக மந்தர்முகப் பார்வையா லன்றி, இக லொன்று மில்லே யெவர்க்கும் - பகிர்முகநோக், குண்மை விளக்கா தொழியுமே மற்றைய, துண்மையே காட்ட வுறும்." எ-து. ஸ்மரணேயின் பகிர்முக திருஷ்டிகாரணமாக நாஸ்திகன் பரசிவ ரில்லே யெனலும் ; ஆஸ்திக னந்தர்முக திருஷ்டிகாரணமாக வுண்டென

லும்; ஞாயமே யிரண்டும் விரோத மில்லை. பகிர்முக நாட்டமுண் மையை விளக்காதகலும். ஏனைய அந்தர்முக திருஷ்டியோ வுண் மையினையே விளக்கமுந்துறும்—எ-று. எனவே, நாஸ்திகன் சர்வ த்தையும் விசாரித்துத் தெளியும் அறிவைவிசாரித் தறியத்தெரி யாது அறியப்படு மவைகளி லுண்மையாது உண்மையாதென நோ க்கிச் சோதிப்பதனுற் பாழன்றி வேறுதெரிசன மெய்ஞ்ஞனம் வாய்க் கும். அதனுற பரசிவரில்லை யெனவும், இருந்தாற் காணப்படாரா வெனவுங் கூறுவன். ஆஸ்திகனறிவு நாட்டத்தோ ஞதலின், முடிவு பெற்று, விஸ்ராந்தி யடைந்து, நிர்மலசித்தனுய்ச் சிவேசருண்டெனா ற்கு மவர்க் கைக்கியஞ் சாதித்தறகும், கூடுமானதாற் சிவேசருண் டெனக் கூறுவ னென்பதாயிற்று.

உ - வது. ஆஸ்திகவாதம்

முற்றிற்று.

---

உ

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

௩-வது,

# ஆஸ்திகநாஸ்திகமின்றி

## யமையாமை.

ஞாயவாதிவினா—ஆஸ்திக நாஸ்திகமின்றி யமையாமை யாவ தென்னை?

ஆ-விடை—இவ்விரண்டு மொத்து விசாரியாவிடத் தோர்தலைத் தீர்ப்பாதலி னெங்ஙன முண்மை விளங்கும். விளங்காமை பற்றி யின்றி யமையாமையெனப் பட்டதென்க.

ஞா-வினா—அஃதெங்ஙன மெனின்?

ஆ-விடை—"நாஸ்தி நபாதியெனல் ஞாயமே சொல்லளவா, ஆஸ்திகங் கொள்ளளவு மாமோலார்-ஆஸ்திகந்தான், உத்தேச லட்சணத்தோ டொத்து பரிட்சை செயல, எத்தடைக்கு மென்னோ விடம்." எ-து. சொல்மாத்திரமாக ஆஸ்திகங் கொள்ளு மளவுஞ் சொல்மாத்திர மாக நாஸ்திநபாதி யென்னு மிவ்விரண் டுத்தியாம் நடுத்தல் ஞாயமன்றோ, இதனை யேற்காதவராருளர். ஆயின் ஆஸ்திகமாவது; உத்தேசம்-லட்சணம்-பரிட்சையென்னு மிம்மூன்றினையு மொத்து விசாரித்துத் தெளிதல். இங்ஙனந் தெளியின் என்ன தடை நேரிடினு மவற்றையெல்லா மொருங்கே தடுப்பதற் கென்ன தடை—எ-று. எனவே, யெந்தத்தடைக்கு மிடமென்ன வென்றவாறாயிற்று.

ஞா-வினா—நாஸ்திகத்தோ டொக்க ஆஸ்திகத்தையு மெண்ண லாமா வெனின்?

ஆ-விடை—ஆமுன்ன டெனுமளவு மில்லவிலை யென்றுவரும், ஆமுண் டெனவொழியி லன்னதேன்-நாமகற்றிம், போமோ விருப்பதுதான் போகாது சோதனையி, லாமாறு காட்டவலா ரார்—எ-து. இன்னது செகசீவ பரமாமென்னு மளவும், பொருளல்ல வற்றை நாட்டலா லல்லவெனவும்; தோற்றங்களை யம்மூன்றெனக் கொண்டு

அவை யுண்டெனு மளவும், அத்தோற்றங்கள் விசாரணையில் தமக் கெனப் பொருளின்றித் தத்தங்காரணங்களி லொடுக்கிக் கொண்டு போகிய மின்மையாக முற்றுமுடிதலா லில்லையெனவும்; வழக்கு வருமன்றோ; வருதலால், ஆமென்று முண்டென்றும் நாட்டுதலா லென்னபயன். தீராவழக்காதலால் விட்டுவிடுதலே நன்மை. விட்டு விட்டால் அல்லவில்லை யென்னு மாட்சேபனையேன் வரும். வரமாட் டாதென்று ஆமென்றும் உண்டென்றுங் கூறும் வசனங்களை நாம் விட்டுவிட்டால், இருக்கிற சக்சிவபர மில்லாமற் போய்விடுமோ? இருப்பதாயின், வஸ்து சோதனையி லில்லையெனப் போகாதிருப்ப தாகக் காட்டவல்லா ராருளா, எங்கணு மில்லவேயில்லை—எ-று.

ஞா-வினா—ஆயி னிவ்விருவா வழக்காற் பயனின்றோ வெ னின்?

ஆ-விடை—தன்னை லறிவதெலாந் தன்னிழலென் றெண்ணமி ல்லார், தன்னிழலை யாரளப்பார் தாமளப்பார - இன்னவிதங், காணு ரிவரிருவர் கற்றமொழி முற்றுறுமோ, வீணர வீணரிலை வேறு. எ-து. தன்னை லறியப்படுவனவாகிய தத்துவக்கூட்டங்களைத்துந் தனதெதார்த்த சொரூபமாகிய சுத்த சைதன்யத்தி னிழலென் றெ ண்ணமே யில்லாதா ரெங்ஙன மவற்றை யறிந்தளப்பார். ஆயினில ரோ வெனின், தனது தேகநிழலை யளக்கவல்லார் யாரோ, அவர்களே யவற்றை யளக்கவல்லார். இன்னவித நிலையுண்டெனச் சத்தத்தா லுங் காணாத விவ்விருவர் மிகுதியுங் கற்றுணர்ந்து வழக்கிடு மொழி கள் முடிவு பெறுமோ? பெறாதாயி னிவர்கள் வழக்கிடுவானேன். வீணர வீணர்க ளிவர்களெனக் காட்டுதற்கு வேறுள ரிவர்களாகா ரெனின், வீண்வழக்கி லிவர்களிலும் வேறிலரென்க.

ஞா-வினா—இனி யிவ்விருவர் வழக்கும் வீணாயி னுண்மை விளங்குமாறுதா னெங்ஙனே வெனின்?

ஆ-விடை—விசாரம்-மனனம்-ஆதாரநோக்கு-பாவம்-அபா வம்-தேடல்-பிராந்தி-எழுச்சி-புடைபெயர்ச்சி-வினைமுதல்-என்னு மிப்பத்தும் வூர்த்தமுக சோதனையால் மூடமகன் றன்மை யினைய தென விளங்குமென வறிக.

ஞா-வினா—இவற்றுள் விசாரமாவ தியாதெனின்?

ஆ-விடை—விசாரமாவது; அறிவு தனக்குப் புலப்படுவனவ னைத்து முபாதான வுபாதேய தர்ம்மத்த தெனவும், விகார நிலைய

தெனவும், இஞ்சித்து முணராத் தனமையால மமயபமபாரு மான
க்கருத, அதனு லிச்சாஞானக்கிரியை விளைவுங், அதனு லதோமு
கத்தாழ்தலுங்,தற்பிரியமெனக் காணு தவம்ருல் விளைவதெனக கரு
திச் சுகித்தலும் ; அங்ஙனஞ் சுகித்தலால் மாருத்திருத்தி யின்மை
க்குளஞ்சுழறலும், அச்சுழறலா லின்பமெலாந் துன்பமாத் தோற்ற
லும், அத்தோற்றத்தாற் சுயசுகமாவ தியாதெனக்கருதலும் வரும
ன்றே ? அங்ஙனம் வரும்போது திரிசியமனைத்தும் பிரியவடிவா
யின் வெறுப்புக்கிடமென்ன. வெறுப்புக்கு மிடமாதலின் பிரியசா
தனக் கருவியாகவேண்டும். ஆனுற் பிரியவடிவமாவ தியாதெனவ
ரும். வரின், சோதனை செய்யவேண்டிவரும். வரின், சடமனைத்து
மல்ல வல்லவென வகலும். அகலவே, சித்தெனவரும். வரவே, சித்
திற் கற்பிதமோ- எதார்த்தமோ எனவரும். இங்ஙனம் வருவதெல்
லாம் விசாரமெனப்படும்

ஞா-வின—இத்தனையு மொன்றில் விளக்கிக் காட்டவேண்டு
மெனின் ?

ஆ-விடை—கடபடமென்பவற்றுள்; கடமென்புழிப்பருத்துஞ்,
சிறுத்துங், குவிந்தும், வளைந்தும், நீண்டு, மிது முதலான விகாரம்
பெற்றிருக்குந் தோற்றமென்றது மெய்யெனக் கருதுமாறுபோன்
று,தேகமென்புழி மண்ணின் சட்பாவவிவகாரந்தோற்றமெனக் கரு
தாது, மெய்ப்பொருளெனக்கருதித், திணைபாலிடங்களி லொவ்வொ
ன்றின்பாலதாக்கித், தேகியாகப்பாவித்து, யானெனதெனப் பந்தித்
தல் துக்கமேயாதலின், துக்கமெனவுணர்ந்தான் ; யாதினுலிவ்வுடல்
துக்கமாகக் காண்பதென விசாரிப்பது, விசாரமெனவும்; அங்ஙனம்
விசாரிப்புழி யிங்ஙனங் காணப்பட்டு நின்றுள்ள வடிவங்களனைத்தும்
நாசகாலத்தில் மண்ணு யழிந்ததைக் கண்டுகொண் டிருக்கிறோம்,
இப்போ திருக்கிற வுடல்களு மவ்வண்ணந் தானே யென விசாரத்
தாற் றீர்ந்ததைத் தோற்ற லாகார மாகாது சிந்திப்பது மனனமென
வும் ; அங்ஙனஞ் சிந்திப்புழிச் சராசர வடிவங்க ளனைத்து மண்
ணின் விகாரமெனத் திடந்தரலா, லுட லெங்கெங்கு காணினு மயங்
காதிருத்தற் காதார நோக்காகிய மண்ணுட்ட சாதனம் வேண்டுவ
தாதலால், ஆதாரநோக்கெனவும் ; அங்ஙன மாதார நாட்டமிக்குழி,
எவ்வுட லெங்கெங்கு தோற்றினு மண்பாவ மேலிடலால், முன்னர்
உடலினது விகார மண்ணெனல்போய், இப்போது மண்ணினது
விகார முடலென்னு மனுபவந் தரலானும், இந்தப் பாவத்தி லுடல்

தோற்றாமையானும், ஆதாரபாவமே பாவமெனவும்; இந்தவாதார பாவமேலீட்டி லிந்த வாதேயமாகிய தேகபாவம் காலுக்குநாளணு வணுவாக மெல்ல மெல்லத் தெரியாதப்பி லுப்புபோற் கரைதலால் அபாவமெனவும்; இங்ஙனம் பாவம் நேரிட்டுழி, முன்ன ருண்மை யாகத் தோற்றிய வுடல்க ளெங்கே யெங்கே யெனத் தேடவேண்டி வருதலால் தேடலெனவும்; அங்ஙனந் தேடலுற்றுழி யிருந்தால் காணுதா? காணுததா லில்லவேயில்லையெனவரும். வரின், முன்னர் நாமே யுடலைக் கர்த்தத்துவ சாதனக் கருவியாக் கொண் டிவ்வுலக சுகத்தை யனுபவித்தோ மிப்போது அதுபோனவழியெங்கேயென வரும். வரின், உடல்கள் தோற்றுவதற்கு முன்னு முடல்கள் மண் ணே. தோற்றி நின்ற விடத்தும், மண்ணினது விகாரமன்றி யவ யவங்கட்குச் சொருப மின்மையா லுடல்க ளிப்போதும் மண்ணே. அழிந்த விடத்து மனுபவமாக் காண்டலால் பின்னுமண்ணே. இம் மூன்றுகாலத்தும் மண்ணையன்றிப் பிரத்தியட்சத்தானும் - அனுமா னத்தானும்-அருத்தாபத்தியானும் வேறுகாணுத வுடல்க ளெப்போ தும் மண்ணே. ஆதலின், மண்ணினது விகாரவடிவமுடல்களெனக் காணுதது; உடல்களோ, வேறோ? வேறாயின், மண்ணை யன்றிக் காட்டலாம். உடல்களெனி னங்ஙன மோர் முதலன்றாதலின், ஒன் றை யொன்றாக் கொள்ளு மயக்க மென்னலாம். அம்மயக்கம் புத்தி விகற்ப மாதலினானும், அன்னிய மன்றாதலானும், உடல்க ளெனல் வந்ததுமில்லை, யிருந்ததுமில்லை, போனதுமில்லை. உடல்களாக வந் தது மிருந்ததும் போனதும் புத்தி விகற்பே, ஆதலிற் பிராந்தி யெ னவும்; ஸ்மரணை தன்னையுந் தனக்காதார சுத்த சைதன்னியத்தையு மறந்த வவசர நிலையே பிராந்தி ரூப வெழுச்சி யாதலால், அதனை யெழுச்சி யெனவும்; அகண்ட வெளியி லேகதேசமாக அவ்வெளி யே பரமாணுவிலு மதிநுட்பமாகச் சலிக்கவெழுந்த எழுச்சிபோல அகண்ட பரிபூரண சச்சிதானந்த சுயம்ப்ரகாச சைதன்ய வெளியில் தானே யேகதேச வத்தியாச பரமாணுரூபமாக வெழுந்த வெழுச்சி யாதலால் அதனை யெழுச்சி யெனவும்; காற்றாகத் தடிக்க வெழுத லாகிய புடை பெயர்ச்சி யின்றி யவ்வெழுச்சி யில்லாமை போல, அகண்ட சைதன்யவெளியி லயலாக ஸ்புரிக்க வெழுதலாகிய புடை பெயர்ச்சி யின்றி, ஸ்புரிப்பாகிய வெழுச்சி யில்லாமையால் அவ்வ சைவைப் புடைபெயர்ச்சியெனவும்; வெளியாகிய வினைமுதலையன் றிப் புடைபெயர்ச்சியாகிய அசைவில்லாமைபோலச், சிதாகாசமாகிய

வினைமுதலையன்றி ஸ்புரிக்கவெழுதலாகிய புடைபெயர்ச்சியென்னு ம்அசைவில்லாமையா,லிங்கேசைதன்யத்தை வினைமுதலென்றும்; சத்துக்கள் சொல்லுவார்கள். இதனாற் சர்வத்திற்கு மாதாரஞ் சை தன்யமெனவும்; அதனை மறவாதிருக்கி னிந்த விபரீதங்க ளெல்லா மில்லை யெனவும்; ஆதாரந் தெரியாவிடத் திவ்விருவர் வழக்காற் பயனின்றெனவுங் குறிப்பித்த வாறாயிற்று.

ஞா-வினா—இங்ஙனமிருக்க; முன்ன ரிவ்விரு வழக்கு மின்றி யமையாமையெனக் கூறுவானே னெனில்?

ஆ-விடை—ஒருவ ரனுமானத்தா னுண்டெனவும்; ஒருவ பிரத்தியட்ச மில்லாமையா லில்லையெனவுங் கூறுதொழியி லொரு தலைத்தீர்ப்பாகவும், வாச்சியார்த்த லட்சியார்த்தங்கட் கிடமின்றாகவு முடியுமாதலைப்பற்றியென்க.

ஞா-வினா—பரசீவ ருணடெனக் கூறலாற் றடையென்னை யெ னின்?

ஆ-விடை—உபாதி குணச்சேட்டையைப் பரசீவரெனின், பர சீவராகுமா? தன்னை யறிதற்பா லதன்றாமையி னென்க.

ஞா-வினா—உபாதி காரணமாக வுபாதிசகித பரசீவர் வெளிப் படுவா ரென்றற கன்றோ விட்ட விலக்கணை யேற்படுத்தப்பட்ட தெ னின்?

ஆ-விடை—மெய்யே; ஒன்று கூறுது மதனைக்கேளுதி. "அறி வோ வழக்கிடுவ தன்றி யுடலோ, அறிவே லுடல்மயம தாகா-தறிவா கின், றிட்டால் வழக்கெங்கே யில்லையுண் டென்பதெங்கே, விட்டிடி னுந் தோர்வதெங்ஙன் வீடு." எ-து. இருவராக நின்று வழக்கிடுவ தறிவோ, உடலோ? உடலெனிற் சடமறிந்துணர்த்துமா? அறிவெ னி, லுட லன்னியமாதலா லதன் மயமாகா தறிவாகாரமா நின்று வழக்கிட்டா, லன்னிய மென்ப தில்லாமற் போகு மாதலால் வழக் கென்பதும், இல்லை யுண்டென்பது மெங்கே. தேகாரனென் றதன் மயமாமளவுந் தேவையின்றி யிங்ஙன மாராயும் வழக்கைவிட்டுவிடி னும் உபசாந்தி நிலையாகிய மோட்ச மெனப்படுவ தெங்ஙனம் விசா ரித்துத் தெளியப்படும். எ-று. தெளியாவிடத்து விஸ்ராந்தி யில்லை யென்பதாம்.

ஞா-வினு—ஆயின், யாது சைதன்னியத்துக்கயலாகத்தோற்று கின்றதெனின்?

ஆ-விடை—"மறந்திடின் மண்ணை மறப்பே யுடலாம், மறக்கி லறிவை மறப்பே-பிறிதாகத், தோற்று மனர்த்தமதாஞ் சொல்வழக் கா லென்னபயன், தோற்றளவும் வேண்டுந் துணிவு." எ-து. உட லாகத் தோறறுவன வனைத்து மண்ணின் பிரிதிபலனமேயன்றி வே றில்லாமையால், அவைகளை மண்ணகப் பார்ப்பதை மறக்கி னந்த மறப்பே யுடல்களாகத் தோற்றுமன்றி வேறுகாரணமின்றாம். அது போல, எவ்வுயிரும் நானென்னு மறிவை மறக்கி னந்தமறப்பே தே காதிப் பிரபஞ்சமென்னு மனர்த்தரூபமாகத் தோற்றுமன்றி வேறி ன்றாம். இதனை யஙஙனமின்றி யர்த்த ரூபமாகப் பார்ப்போர் சொல் லாலுண்டெனவு மில்லையெனவும் வழக்கிடுவதாலாய பயனென்னை? வழக்கிடல் வேண்டுவதின்றே வெனின், திரிசியமனைத்து முண்மை யாகத் தோற்றளவும், விபரீதத்திலாழ்த்து மாதலி னுணடில்லை யெ ன்னும் வழக்கு வேண்டும். யாதுக்காகவெனின், உபசாந்தி நிலை வா ய்த்தற் குண்மைத் துணிவு பற்றி. எ-று.

ஞா-வினு—வழக்கினுக்கு முடிவின்றாமையா லென்செய்வதெ னின்?

ஆ-விடை—"உள்ளச் சகத்தடிப்பை யோட்டத் தெரியாதார், உள்ளதில தென்பதெவ னென்றாறுமோ - தள்ளிவிடில், பந்தத்தறு தியெவன் பற்றறுமோதேகோகம், எந்தவிதத் தும்வேண்டு மிங்கு." எ-து. உளத்தின்கண் ணதனைவிடாது பாலு நீரும்போ லபேதமா கத் தோற்றுஞ் சகத்தடிப்பை யினையதென் றுணர்ந் தோட்டத் தெ ரியாதார் பரசிவ ருளதொன்று மிலதொன்றும் வாதிப்பதா லாய பயன் யாது, இது சுருதி யுத்தி யனுபவத்துக் கியையுமா, இயையாதது பற்றித் தள்ளிவிடலாமா, தள்ளிவிட்டா லுடலுயிராகிய சித்து சட பந்த மயக்கத்துக்கு விமோசன மெய்யனங் கூடும். அன்றியும்; தேக நானென்னு மகம் பாவமய லெங்ஙனம பற்றறும். கூடாதாத லா லெந்த விதத்தால் யோசிக்குமிடத்து மிங்கிந்த விசாரணைவேண் டும். எ-று. "பூதச் சுயம்பிதெனப் பொன்றளவுங் கேட்டறியார், ஏதுக் கிலையுண்டென் றிவ்வழக்குச் - சாதிப்பேன், விட்டிடுமோ து ன்பமயல் விட்டிடினு மிவ்வழக்கைக், கட்டமெனி னும்வேண்டுங் கா ண்." எ-து. ஐம்பூதங்களின் சுயம்புவடிவ மிஃதெனச் சாவளவுங்

கேட்டற் கிடம்பெறத் தகாத இவ்விருவரும் பரசிவருண்டெனவும், இல்லையெனவு மிடும் வழக்கால் யாதுபயன். முடிவுபெறற் கிடமின் றாதலா லொருவரை யொருவர் வழக்காற் சாதிக்கப் புகுவானேன்? இவ்வழக்காற் பயனின்றே விட்டுவிடலாமே? விட்டுவிடினும் பொருளல்லவற்றைப் பொருளெனக் கொள்ளும் பிராந்தி ரூபமாகிய துன்பப்பெருக் கெம்மைவிட் டகலுமோ? ஒருக்காலு மகலாதுபற்றி யிவ்வழக்குக் கட்டமாயினு மவசியஞ் செய்யவேண்டு மென்பதை நீயே கண்டுணர்க. எ-று.

ஞா-வினா—திருக்குத் திரிசிய மென்பவற்றுள்; யாதால் விளைந்ததோ இவ்விருவழக்குமெனின்?

ஆ-விடை—அறிவை யன்றி யறியாமையும், அறியாமை யன்றி யறிபடு பொருளு மின்மையால் அவாந்தரப்பொருளதாகிய அறியாமைபற்றி விளைந்த தென வறிக.

ஞா-வினா—அறியாமைக்கோ ரடையாளங் கூறவேண்டு மெனின்?

ஆ-விடை—ஒன்றை யொன்றா யறிவது. அது; பழுதையைப் பாம்பென் றறிவது போல்வன.

ஞா-வினா—இங்ஙன மறிவது மறிவன்றோ வெனின்?

ஆ-விடை—அறிவாயினு முண்மையை யறிவ தன்றாமையி னறியாமை யெனப்பட்டது.

ஞா-வினா—ஆயி னிவ்விருவரதறிவுங் கல்விஞானத்திற் சிறப்புற்றதன்றோ, இதனையு மறியாமை யென்னலாமா?

ஆ-விடை—கற்பனை கடவாததாற் சிறந்ததன்று.

ஞா-வினா—கற்பனை யாவ தியாது?

ஆ-விடை—பழுதை பாம்புபோற் றோற்றல் முதலியன.

ஞா-வினா—ஆயின், கல்வி யுணர்த்து ஞான முண்மை ஞானமன்றோ?

ஆ-விடை—உணர்த்துமாயின் கற்பிதங் கழலாரா? கழலா ரதலி னுண்மை ஞானமன்று.

ஞா-வினா—உண்மை ஞானமாவ தியாதோ?

ஆ-விடை—காரண காரியவாத முதலிய ஐந்தபேத வாதத்தா லும்; விருத்தி-பரிணாமம்-ஆரம்பம்-உம்பத்தி-விவர்த்தம் - என்னு மைந்து திருஷ்டாந்தத்தாலும் ஐயந் திரிபின்றிச் சுருதி யுத்தி யநு பவத்துக் கொத்துத் தெளிவதே யுண்மை ஞான மெனப்படும்.

ஞா-வினா—இவ்விருவரு மூன்மை ஞானமுடைய ரல்லரென வெங்ஙனம் விளங்கும்?

ஆ-விடை—உயிர்களாகிய வறிவு சத்தெனக் கணித்தற்கும்; உதாரணந் தக்க திதுவெனத்தரற்கும்; தன்னை விலட்சணமாகவுஞ் சலட்சணமாகவு மனுபவித்தற்குங் கிஞ்சித்துந் திறமையில்லா ததி னாலென வுணர்க.

ஞா-வினா—இவ்விருவர் வழக்கிஙனமிருக்க; வேதமாதாவும் இவ் விரு வாதத்திற்குஞ் சம்மதித்த தென்னை?

ஆ-விடை—"தானலாதொன்றுதன்னைத் தானெனக்கருதிக்கொ ண்டே, யானெலாஞ்செய்தேனென்னும்" அகங்காரநிலையல்லாததா லதனைத் தவிர்க்கவேணடித் தனுகரண புவனபோகவாய்ப்பு நமதிய ற்றலாலன்றே; வேறொருவன் பாலதாதலின், அவனையன்றி யெமக் கோர் சுதந்தரமின் றுதலால், யாமடிமை பூண்டவனைப் பூசிக்கவே ண்டுமென்றும், எமதெண்ணங்களை முடிப்பித்துக் கொள்ள வேண் டுமென்றும் பிரதிவாதிப்பது முறையாதலா லதனை யாஸ்திகமென வும்; தன்னைத்தா னுணர்ந்து தானே தானாத லைக்கியமுத்தியாதலா லந்நிலை வருதற்குத் தந்திரமாக ஏற்படுத்திய படித்துறைகளி லிது முதலென வறியா திதுவே முத்திநிலைக் கடுத்த படித்துறையெனம யங்கிய மயக்கந்தவிர்ந்து மேலேமேலே. பற்றற்கு இந்நிலையெல்லா மெய்யெனவும்; அல்ல அல்ல வெனவுஞ் சொல்லி யழைத்துக்கொ ண்டுபோ யந்தத்திற் றன்னைவிளக்கி யுன்னையன்றி யற்பமுமில்லை யென முடிக்குமாதலின் அதுபற்றிச் சிவேசரில்லையெனப் பிரதிவா திப்பது முறையாதலா லதனை நாஸ்திகமெனவுங் கூறுப. இதன்றி யும், பொருளல்லதைச் சிவேசரெனக் கொண்டவருண்டெனக் கோ டல் விபரீதமாதலானும், அம்மயக்கந் தெளியாவளவும் துக்கமே சுகமாகத் தோற்றிப் பிறவிப் பெருங்கடலி லாழ்த்து மாதலானும், அதனையகற்றித் தெளிவிக்கவேண்டிச் சிவேசரில்லையெனவும்; இரு ந்தாற் காணப்படாரா வெனவுங் கருணைபற்றிக் கூறவந்ததேயன்றி வேறன்றென வுணர்க.

ஞா-வினு—சீவேசருணடெனக் கூறி யழைத்துக்கொண்டுபோவது முத்திநெறிக் கியைந்த முறையோ, அவரில்லையெனக் கூவி யழைத்துக் கொண்டு போகாதது முத்திநெறிக் கியைந்த முறையோ கருணைபற்றிக் கூறவந்ததெனின்?

ஆ-விடை—உண்டெனி னஃதோர் மேலான விநோதமென்றி யற்றிக் களிப்பரன்றிச் சோதனையாற் றெளிந்தேமாகார். இதனை யில்லை யென்பமே யெனின், பயபத்திக் கிடமின்றாயும்-வைதீகநடையேற்றற்கும், அனுட்டித்தற்கு மிடமின்றாயும்; அகங்கார மடங்கற் கிடமின்றாயும் பட்டிமாடுபோற் கட்டுக்கடங்கா துயிர்க ளழிவ ரென்னு நோக்காலிருமையுங் கூறற்கியைந்தது கருணைபற்றியன்றே, அல்லவென வெங்ஙனமறுக்கப் படுமெனவறிக.

## ௩-வது.

## ஆஸ்திகநாஸ்திகமின்றியமையாமை

முற்றிற்று

---

உ

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

ச - வ து.

இனி

# அவாந்தரவாதம்.

ஞா-வி௵—அவாந்தரவாத மாவதென்னை ?

அவா-விடை—ஆஸ்திகம் - நாஸ்திகம் - துவிதம்-விசிட்டாத்து விதம் - அத்துவிதமென்னும் வாதங்களிலொன்றன்பாலு மாகாமல், கோழி கோழி - என்னவிலை - யென்னவிலை யென்றாற்போல வாதிக் கும் வாதமெனவறிக.

ஞா-வி௵—இதுபோல வாதிக்கும் விபரம் யாதெனின் ?

அவா-விடை—யாமெந்தக்கட்சியுமாகாமல் அவரவர் கட்சியை மறுப்பதே யெமது மதமென்பர். ஆயினு மும்மக்குடன்பாடுதான் யாதோ வெனின்? அதுகேட்பானேன் பேசுமென்பர். நம்மைப் போல் மற்றவரையும் பார்க்கவேண்டு மெனின், எதிலேயென்பர். துயரத்துக் கிடமில்லாததி லெனின், துயரமாவ தென்னென்பர். சுக விழப்பெனின், சுகமாவதும் இழப்பாவதும் என்னென்பர். சுகமா வது மனமலைவின்றி நிற்றலெனின், மனமாவதென்னென்பர். ஸ்மர ணைரூபமெனின், ஸ்மரணைரூபம் யாதென்பர். உன்னுடைய நினை வெனின், என்னுடைய நினைவாவ தெதுவென்பர். இப்போது பேசு கிற துன்னுடைய நினைவல்லவா வெனின், என்னுடைய [illegible] ன்னென்பர். நீயாகிற வஸ்துவெனின், நானாகிறவஸ்து யாதென்பர். அறிவெனின், அறிவென்ற தென்னென்பர். அறியும் தர்மத்தையு டையதெனின், அறியுந்தர்மம் யாதென்பர். எம்மைக்கேட்கப் புகுந் தீரோ யறிந்துதானே யதுதானெனின், அதுதானென்ற தென்னென் பர். இப்படியே தொலையாவழக்கா முடிந்து எடுத்தநிலை நிலையுபெ றாது கலைப்பதெனவறிக.

ஞா-வி௵—இப்படியாறு விப்படியென் றனந்தமதக் கட்சிகளா கிய விஷய நிச்சயங்களை யெட்டுகிறதும், பூர்வபட்சம்- சித்தாந்த மென்னு மிரண்டனு ளொன்றன்பால தாக்கலு மெண்ணம் வாய்க் கும். வாய்க்காவிடத்தென்ன சிறப்பெனின் ?

அவா-விடை—“இன்னவிதக் கேள்வியினா லென்னபய னென்றோதே, என்னவிதக்கேள்வியு மெம்மதே-அன்னவற்றிற், கானவிடை நும்மதே யார்வெல்வா ரெங்கட்சி, ஈனமுறு மோவென்ப ரிங்கு.” எ-து. இன்னவிதமாயுள்ள கேள்வியாலாயபயன் யாதென் றச்சட்டை செய்து மறுக்காதே, எந்தவிதமாகக் கேட்கப்படுங் கேள்விகளனைத்து மெமது பட்சத்ததே, அவ்வினாவுகளுக் கெல்லாம் விடைதரத் தக்ககட்சி யுமது சுதந்தரத்ததே, எமது கட்சியை வெல்லத்தக்கவரார், வினாவததக்கார் விடைதரவும், விடைதரத்தக்கார் வினாவுந்தக்க வவசரம் வரும், இங்ஙனமிருக்க; வினாவுவதே யெமது கட்சியென்பதென்ன சிறந்த விவேகமென் றிழிவுவருமேயெனின், இதினாலெமக்கென்ன, இழிவுவந்தால் இங்கே யெம்மை யென்ன செய்யும் என்று சொல்லுவார்கள்.

ஞா-வினா—யாது பயன்கருதி யிங்ஙனம் வினாவத்துணிவதோ வெனின்?

அவா-விடை—கைகொட்டி பழிக்க வேண்டியென வறிக.

ஞா-வினா—இதனால்வரும் பய னிவர்களுக்கு யாதெனின்?

அவா-விடை—கொஞ்சநேரமாவது சிரித்துச் சுகமுறுவதற் கெனவுணர்க.

ஞா-வினா—வேறுகாரணத்தா லிச்சுகமடைதற கினரோ வெனின்?

அவா-விடை—ஈனரல்லராயி னிங்ஙனம புரிவார்களா, இவர்கள் யோக்கியப் போக்கிரிகளெனப் பிறர் நமமை யெண்ணுவார்களேயென்ற யோசனையும் நாணமுஞ் சிறிது மில்லாதவர்களென வறிக.

ஞா-வினா—இவர்கள் பாஷைகளி லேனுஞ் சிறந்தவர்க ளன்றோ? இவர்கள் வாசிக்குங்காலத்தில் பொருள்கொடுத்தும், உபாத்தியாயருக்குக் கீழ்ப்படிந்துந் தானே யர்த்தங் கேட்கவேண்டியது. கொடுக்கக் கெதியற்றகாலத்திற் றொண்டுசெய்தாவது கேட்கவேண்டியது. அதுவுமின்றிக் கேட்கிறதென்றா லதிகாரத்தினாலாகவேண்டும். அதுவுமில்லாவிடத்திற் கேட்கிறது சொல்லுமே பார்ப்போமமது வல்லமையையென் றாகவேண்டும். இவைகளிற் கடைசியிற் சொன்னவாறு கேட்கத்துணிவது, உத்தமர்-மத்திமர் - அதமர்களி லதமரன்றோ வெனின்?

அவா-விடை—அங்ஙன நீங்க ளெண்ணிக்கொள்வதா லெமக்கு நாட்ட மென்ன வென்பர், அவர்களுக் கீதோர் விநோதமெனவறிக.

ஞா-வினு—நல்லது ; வினாவுக்குரிய வுண்மை யர்த்தத்தைச் சொன்னவிடத்திலாவது அறிந்து அடங்குவ துண்டாவெனின்?

அவா-விடை—நீ கெட்டா-நீ கெட்டா என்ற வனுபூதியார்த்தம் விளைவள்வும், அவர்களுக்குத் திருத்தியுமில்லை - வாயுமடங்காவென வறிக.

ஞா-வினு—இவ்வாறான மானங்கெட்ட வாதிகளு முளரோ வெனின்?

அவா-விடை—மிகுதியுமென வறிக.

ஞா-வினு—இவர்க ளொதிற் சிறந்தவர்களெனின்?

அவா-விடை—தெளிவைக் கலக்கிக் குடிக்கு மெருமைபோலும், சலமின்றிச் சந்தனமுரைப்பவா போலும், பயனின்றியசொல் வழக்கிற் சிறந்தவரென வறிக.

ஞா-வினு—இது ஒரு பரம்பரையோ வெனின்?

அவா-விடை—தான்தோன்றித் தறுதலைப் பரம்பரை யென வறிக.

ஞா-வினு—அறிவை மழுக்கத்தக்க சாலவித்தையிற் சிறந்தவராமே யெனின்?

அவா-விடை—இருந்தாலிருக்கட்டும்; வஸ்து நிர்ணயவுண்மை யென்ன தெரியும், தெரிந்தவர்போல் வாதிப்பதி லென்ன வுண்டு. ஆனால், வரம்புகடந்து வாதிக்கு முறைமையி லிவர்போற் சிறந்த அவிவேகிக ளில்லையெனவறிக.

ஞா-வினு—பயனின்றிய இவ்வாதிகளைப் பற்றி யிங்கே கூறுவானேன்?

அவா-விடை—இனையரெனத் தெரிந்தவிடத் தகற்றவேண்டுதலைப் பற்றியென வறிக.

## ௪ - வது, அவாந்தரவாதம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

௫ - வது,

# துவிதவாதம்

## சாமானியசம்பாஷணை.

துவிதம்-விசிட்டாத்துவிதம்-அத்துவிதம் - என்னும், இம்மூன்றும் தத்துவமசியென்னும் மகாவாக்கியங் காரணமாகப் பிரதிவாதிக்கப் பட்டது

இம்மூன்றனுள் ; துவிதமாவது.

ஞாயவாதி-வினா—தத்துவ மசியென்னும் வாக்கியம், ததிவா-துவம்-தத்துவம்-எனப் பிரித்தற்கும் பரத்தைப்போனீயானு யெனப்பொருள் கோடற்கு மிடங் கொடுத்தற் கேதென்னை ?

துவிதி-விடை—இங்ஙன மனுபவ மிருத்தல் பற்றி யென்க.

ஞா-வினா—அஃதியாதெனின் ?

து-விடை—உயிர்கள் தம்மா லிம்மையி லியற்றி யடைதற்கரிய தனுகரண புவன போகங்களைத் தமக்குக் கொடுப்பித்துப் புசிப்பித்துத் தொலைப்பித்து வரு முயற்சிக்குக் கர்த்தா வேறொன்றாக வேண்டும். ஆதலி, னிவற்றைத்தக்கவாறிடுவோன் பகவானும; ஏற்றனுடவிப்போன் சிவனுமெனத் தானே யருத்தாபத்தியா லமைதலி னிவ னவ னுகா னவ னிவ னுகா னெனக் குறிக்கவியையாநின்றதெனவறிக.

ஞா-வினா—தனுகரண புவன போகங்க ளுயிர்க ளாமோ வெனின் ?

து-விடை—அன்னிய மாதலி னுகாவெனக் கொள்க.

ஞா-வினா—நிலை யல்லாத தன்றோ அன்னியம் பெறுதற் கேதென்னை ?

து-விடை—சுகப்பேறுக்கென்க.

ஞா-வினா—இந்நான்குஞ் சுகவடிவாமா ?

து-விடை—தனுகரண மிரண்டுங் கர்த்தத்துவ சாதனக் கருவியாயும், ஏனைய விரண்டுஞ் சுகசாதனக்கருவியாயு மிருக்கு மன்றிச் சுகவடி வாகா வென்க.

ஞா-வினா—இங்ஙன மிருக்கச் சுகவடிவாகக் கொள்ளற் கேதெ ன்னை?

து-விடை—அறியாமையாலென்க.

ஞா-வினா—மேலாய பதவிப்பயனு மன்னிய மன்றோ வெ னின்?

து-விடை—பரமன்னியமாதலிற் பயனும் அன்னியமாமென்க.

ஞா-வினா—விடையமும் பரமு மன்னியமா யிருத்தலி னிவை யுயிர்களினது சற்கரும துற்கருமங்களுக்கேற்றவாறியையுமன்றோ, இவற்று ளொவ்வையு நிலையல்லவே யெனின்?

து-விடை—நிலை யாகா வென வறிக.

ஞா-வினா—ஆயின் எம்மதத்தர் வேதங்களும் பரமானந்த வா ழ்வை யழியாதெனக் கூறுவ தென்னை?

து-விடை—விடையானந்தவாழ்வும், பரமானந்தவாழ்வுமென் று மிருந்தவண்ண மிருக்கும். இவற்றை யடையு முயிர்க்கு நிலையா மை சொல்லவந்ததே யன்றி யவற்றிற் கன்றெனக் குறித்தென்க.

வினா—எங்ஙன மெனின்?

து-விடை—சிற்றின்ப நுகர்தற்கண் பேரின்பமின்மையும், பே ரின்ப நுகர்தற்கண் சிற்றின்ப மின்மையு மனுபவமாதலி னென்க.

ஞா-வினா—பேரின்ப வாழ்வெனச் சிறப்புற்ற தென்னை யெ னின்?

து-விடை—பிறகுதலையன் வாழ்வினுஞ் சக்ரவர்த்தி வாழ்வு சிறப்புற்றாற்போலு மெனவறிக.

ஞா-வினா—இவ்விரண்டு வாழ்வு முயிர்களுக்கு நிலையாதற் கேதென்னை?

து-விடை—காமியம், நிட்காமிய மென்னுந் தவமுயற்சியின் வலிகட்காவா விவ்விருபலனு நிலைக்குமாதலி னென்க.

ஞா-வினா—இவ்விருபலனும் வேலைக்குக் கூலிபோலமையுமன் றோ, உயிர்களுக் கொழிவுதா னென்றோவெனின்?

து-விடை—அதையதை யனுபவிக்கு மவசரத்தி லப்போதப் போ தொழிவாக் காண்டலே யொழிவன்றி வேறொழி வின்றென வறிக.

ஞா-விஞ—இதனாற் பரத்திற்கு மவரவர்க்கேற்ற தவவுறுதிக் களவாப் பந்த பேதங்களேயு முத்திபேதங்களேயு மோயாது தரவே ண்டுமாதலி ஞெய்வின்றாக வமையுமேயெனின் ?

து-விடை—மெய்யே - ஆக்ஞா சக்கரத்துக் காஞகையன்றிச் சக்ரவர்த்தி யொழிவுக்கிடையூறின்ருதல் போலாமென்க.

ஞா-விஞ—மனதுக்கேனு மின்ருேவெனின் ?

து-விடை—காந்தசன்னிதியி லிரும்பு சேட்டிப்பதற்குச் செய் கையுஞ செய்விக்கையு மற்றுநின்றகாந்தம்போலு நிற்றலிற் சலன மின்றென வறிக.

ஞா-விஞ—பஞ்சகிருத்தியத்திற்கு மவனைக் கர்த்தா வென்பா னேன் ?

து-விடை—அவர்சன்னிதியி னடிப்பதைப்பற்றி யென்க.

ஞா-விஞ—சடரூபமாகிய அண்டநிரை பல்லாண்ட கோடிக ளும், பற்பல பதவி பேதங்களு மிவற்றிலடைந்து தத்தந் தவத்தள வுக்கேற்றவாறு சுகபோகங்களை நுகர்தற்கே யங்காந்துழலுஞ் சித் துரூபமாகிய பற்பலபேதமாயுள்ள எழுவகைத்தோற்ற வுயிர்களும், படைக்கப் பட்டனவன்ருே இவற்றையும் பரத்தோடொக்க அனுதி நித்திய மென்பானேன் ?

து-விடை—அதனுற்ருேடமென்னே.

ஞா-விஞ—அவர் சன்னிதியி லிவை நடிப்பதெனக் கூறுதொ ழியவேண்டுங்; கூறி லனுதி நித்திய மவற்றிற்கு வரக் குற்றமன்ருே வெனின் ?

து-விடை—அவரது படைப்பெனி னிவற்றிற்குத் தாரதம்மிய பேதமுந், தனுவாதிபோகசாதனபேதமும் அனுதியில் வருதற் கே தென்னேயென வரும் ; வருவதைப்பற்றி, யவர் சன்னிதி நடிப்பெ னிற்சுபாவமாக முடியு; முடியுமாயின் படைப்பாதியெனல் பயனின் ரும்; பயனின்ருயின் விதி நிஷேதம் வேண்டற்பாலதன்ரும், அன் ருயி னுயர்வுதாழ்வா யிம்மையி லெவ்வுயிரு மிருப்பானேன்; இருத் தலிற்படைப்பெனி லனுதியி லேனெனவரும்; அனுதியெனிற் சீவே ஸ்வரர்கட்குச் சமத்துவம் வரும், சுபாவமெனிற் செனனமரண சுகதுக்கங்கட்கு விமோசன மின்றெனவரும், இவை சீவர்கள் முய ற்சியாலெனி னிது எது முதற்கொண்டெனவரும், வருவதைப்பற்றி

மிருகங்களைப்போ லிருக்கின் அரசாக்கினையாற் றுன்ப நேரிடுவது இம்மையிற் சத்தியமாக்காண்டலின் மறுமையினும், அவ்வரசாக்கினையாற் றுன்பம் நேரிடுமாகலி னிப்பகுப்பெல்லாம் உன்றுதவர்க் கடிமை பூண்டு பயபத்தியிற் கட்டுணடொழுகுவதே நமக்குக் கடமையென வறிக.

ஞா-வி௫—இத்தாரதம்மியபேதமாயமைத்த லவர்க்கு முறையோ வெனின்?

து-விடை—அவரதிட்டமென்க.

ஞா-வி௫—இட்டமாயி னுயிர்களுந் தமதிட்டப்பிரகார நடக்க வேண்டுமே யெனவரும், வரின் விதி நிடேதக்கிரமங்கா யாதுக்கெனவரும், வருதலின் ஆண்டானடிமையெனக் கோடற்பாலதெங்ஙனமெனின்?

து-விடை—அவனிடுவதை யேற் றுண்பதைப்பற்றி யென்க.

ஞா-வி௫—சுகதுக்கந் தருவ தவரிட்டமாயின் விதிவிலக்கை யனுட்டித்தலா னமக்குப் பயனென்னை?

து-விடை—நமது வினைப்படி நடப்பிப்பது அவரிட்டமாகலின் விதிவிலக்கை யனுட்டிப்பதே நமக்குக் கடமையாமென்க.

ஞா-வி௫—அநுதியில் வினைவருவானேன்?

து-விடை—அங்ஙன முன்னி னுங்கெடுவதாதலி னாண்டானடிமைத்திறம் பூண்பதே நமது சுகப்பேறுக் குறுதியாமென்க.

ஞா-வி௫—அச்சுகப்பேருவதியாது?

து-விடை—யாதனு வடிவமாகிநின்று பரமானந்தமயமாதல்.

ஞா-வி௫—அந்நிலே யிந்நிலேக்க ணில்லாமையால் விடையான ந்தம்போல மாறுதென்றற் கென்னவுறுதியெனின்?

து-விடை—சுருதிப்பிரமாணமே யுறுதியாமென்க.

ஞா-வி௫—யுத்திக்குமாறுன சுருதியாகவேண்டுமே யெனின்?

து-விடை—பகவான் வாக்கியமன்றோ அங்ஙனங் கூறக்கூடாதென்க.

ஞா-வி௫—"ஊகமுளதேற் சிறுவருரையுங்கொள்க வொழிந்த தயனுரைத்திடினுந் திரணமொப்ப வேகவிடுவா" யெனச்சான்றோர் வசன மிருப்பானேன்?

கொள்ளக் கிடந்தமையி னிவர் பேத நிவிர்த்திக் கென்று மிடமின் றென வறிக.

ஞா-வினா—மெய்யே ; சர்வக்ஞாதி குணங்க ளென்றீரோ யவை களி னருத்தமென்ன ?

து-விடை—சர்வாத்மாக்களி னுள்ள மறிவது சர்வக்ஞத்துவ மும், சமஸ்தத்திற்கு முள்ளீடாயிருப்பது சர்வேந்திரியாமித்துவ மும், இனி மேலென்ப தொன்றுமின்றி நிற்றலெனக்கொள்வது சர் வேஸ்வரத்துவமும், எவற்றுள்ளுஞ் சமத்துவமாயிருப்பது சாவநிய ந்திரத்துவமும், சர்வாத்மாக்களாய்த் தான் விளங்குவது சர்வாத்மக த்துவமும், சமஸ்த வல்லபமுந் தன்னையன்றி நிற்பது சர்வசக்திய த்துவமும், எனக்கொள்க.

ஞா-வினா—இனிப் பாசமாவ தென்னை ?

து-விடை—பசுக்களைப் பந்தப்படுத்துவது பாசமென வறிக.

ஞா-வினா—அஃதியாது ?

து-விடை—சத்த பரிச ரூப ரச கந்த முதலியன.

ஞா-வினா—உயிர்களுக் க்வாவற்றவிடத் தவ்வுயிர்களைப் பந்தப் படுத்துமோ ?

து-விடை—பந்தப்படுத்த லதற் கியல்பே யென வறிக.

ஞா-வினா—அஃதெங்ஙனமெனின் ?

து-விடை—உயிர்களுக் குலகம் புலப்படாத சாக்ராவஸ்தை யும், அச்சாக்ராவஸ்தையில்லாத வுயிர்களுமில்லை,யுண்டேலருமை. அவர்களும் பகிர்முக திருஷ்டிக் கிடங்கொடாத காரணம் பந்தத்தை விளைவித் தழுத்துமென்றற்கன்றோ ? ஆதலின், உலகிற் கியல்பே யென வறிக.

ஞா-வினா—சத்தமுதலிய வைந்துவிடயமுஞ் சுகசாதனக் கரு வியன்றிச் சுகவடிவன்றே யுயிர்களைப் பந்தப்படுத்தற் கேதென்னை ?

து-விடை—உயிர்களிங்ஙனங் கருதவறியாததாற் சுகவடிவாத் தோற்றிப் பந்தப்படுத்து மென்க.

ஞா-வினா—இப்பாசங் கட்கு முடிவின்றோ ?

து-விடை—ஆதியுண்டாயி னந்தமுண்டாம் இல்லவே யில்லை யெனவறிக.

ஞா-வினு—இல்லையாயின் முத்தியடைந்தன ரென்பது வெறுஞ்சொல்லோ?

து-விடை—அடைதலும் விலகலு முயிர்களின் தர்மமேயல்லாமல் பந்தமுத்திக்கல்ல. ஆதலின் கால வரையறையின் றெனவறிக.

ஞா-வினு—ஆயின் அடைதலும் விடுதலுமாகிய இவவிரண்டு தர்மமு மொழிவுக் கிடமின்றென முன்னரோ சொன்னீர். அடைதற்கும் விடுதற்கும் காலவரையறை யின்றோ வெனின்?

து-விடை—உயிர்களுக் குண்டாகு மன்றே அவற்றிற்குண்டென்பம் இல்லவே இல்லையென்க.

ஞா-வினு—கால வரையறை யின்றியது பசுபாச மெனவே, யப்பசுக்களுக்கு வேண்டியவற்றை யவரவர் வினைக ளாவாகக்கொடுப்பித்துப் பொசிப்பித்துத் தொலைப்பிக்குங் காத்தாவுக்குங் கால வரையறை யின்றாயமையும். இதனாற் பதிபசுபாசங்கட்குச சமத்துவம் வருமே, வருவதாற் பதிபோல நீயானு மெனக் கொண்டதோ வெனின்?

து-விடை—சுபாவதத்துக்குச் சிரவணாதி முயற்சியேன், அங்ஙனமன்று; தற்போதங் கழன்ற விடத்தெனக் குறித்தற் கென்க.

ஞா-வினு—இங்கே தற்போதமாவதியாது?

து-விடை—தானலா தொன்றைத் தானெனக்கோடல்.

ஞா-வினு—இதுகழன்ற விடத்துத் தானெதுவாதலோ வெனின்?

து-விடை—பரத்தின தருள் வடிவாதலென வறிக

ஞா-வினு—ஆனும் பரத்தை யன்றி யருளில்லாமையாற் பரமே நீ நீயே பரமெனலாகாதோ?

து-விடை—அரசன தருள்பெற்றோ ரரசனைப்போலாவ ரன்றி யரசனாகார், அதுபோலப் பரமாகார் என வறிக.

ஞா-வினு—எதைத் தானலா வுடம்பென்றது?

து-விடை—தூலவுடலெனிற், றினப்பிரளயத்தேனுஞ், சலப்பிரளயத்தேனு மழியும். இதனால் முத்தி யடைந்தன ரெனப் பிரமாணம் யாதொன்றினு மில்லை. இருக்கின்றதெனிற் பொருளல்லவம்

றைப் பொருளெனக் கொள்ளு மனமாகிய சூட்சுமதேகம் இறக்க வில்லை, யிறக்காததனால் அது முத்தி யன்று. மனநாசமே முத்தி யாமெனின், சர்வ சங்கார காலத்தில் மனமாகிய எல்லாச் சூட்சும தேகங்களு நாசமாகும், அப்போதாவ தாத்மாக்கள் முத்தி யடைந் தனவொன்றற்கு யாதொரு பிரமாணமு மில்லை. இருக்கின்ற தெனிற் பொருளல்லவற்றைப் பொருளெனக் கொள்ளு மனதினது மூடத் தனமாகிய அஞ்ஞானத்துக் கழிவில்லாமையால் அதுமுத்தியன்று. ஆதலின், காரண தேகமாகிய வஞ்ஞானத்தையே யிங்கே யுடம் பென்ற தெனவறிக.

ஞா-வினா—சமஷ்டி தூல சூக்கும காரணவுட லீசனுக்கெனக் கொள்ளவேண்டிய தின்றோ?

து-விடை.—எதினாலே யங்ஙனங் கொள்வது.

ஞா-வினா—வியஷ்டி சரீரத்திரயஞ் சொன்னதினால் இங்ஙனங் கொள்ளற்பாலதன்றோ?

து-விடை—கொள்ளற்பாலதே; பத்தி நெறி வழிப்பூண்டொழு குவோர்க் கிவ்விசாரத்தாற் பயனின்றென வறிக.

ஞா-வினா—ஈசுவரநிலை யின்னதெனத் தெரியா தெங்ஙனந் தொழுவது? உபாதித்திரயத்தை யன்றி நம்மை நாங் காணோம், பர த்தையு மிவ்வாறுதானே கருதிப் பூசிக்க வேண்டிவரு மிது மூட த்தனமன்றோ?

து-விடை—அங்ஙனஞ்சொல்லிற் கெடுவை. பசிதாக மேலீட் டில் அன்னபான சோதனை செய்வ துண்டோ, காம மேலீட்டில் வர்ணாசிரமத்தடை கருதுவதுண்டோ, அதுபோல மறுமைக் கென் செய்வோ மென்னுந் திகி லுண்மையா யுதிக்கி லகம்பாவமனைத்து மீஸ்வரார்ப்பணம் பண்ணுவதை விட்டு ஆராய்ச்சியிற் காலங்கழி க்கவருமோ, விதிமார்க்கத்திலேனும் பத்திமார்க்கத்திலேனு மடிமை பூண்டொழுக னமது கடமை யெனவறிக.

ஞா-வினா—ஆனா லிம்மயக்க விமோசனகாலமின்றோ?

து-விடை—ஈஸ்வரார்ப்பண மேலீட்டிலென வறிக.

ஞா-வினா—ஈஸ்வரார்ப்பணஞ் செய்தல் யாது கருதியெனின்?

து-விடை—சுதந்தர வீனத்துக்கென்க.

ஞா-வினா—தவக்கருத்தன்றோ பின்னர் பலனு யமையுமெ னின்?

து-விடை—ஆமெனவறிக.

ஞா-வினா—இம் மயக்கம் தீரச்செய்த தவமன்றோ; எங்ஙனங் கெடுமெனின்?

து-விடை—அவ்வீஸ்வரார்ப்பணமே இம்மயக்க விமோசனத்தையுந் தருமெனவறிக

ஞா-வினா—ஆனால் ஞானகாண்ட மென வொன்று விதிப்பானேன்; சரியை கிரியை யோகஞான மெனக் கடையில் பூர்வபட்சத்துக் கிடமின்றெனக் குறிக்க ஞானத்தைக் கூறுவானேன்?

து-விடை—பதி-பசு-பாச வாராய்ச்சி செய்யு ஞானத்தினாலே தானே பதி பசு பாசமென்னுந் திரிபதார்த்தமும் அநாதி நித்திய மெனக்கொண்டாம். ஆதலின் ஞானமே முக்கிய மென்றதெமக்கு முடன்பாடெனவறிக.

ஞா-வினா—ஆஸ்திகர்த்தலைவரி லொருவர் "இன்றெனக் கருளி யிருள் கடிந் துள்ளத் தெழுகின்ற ஞாயிறே போன்று, நின்ற நின் றன்மை நினைவற நினைந்தே னீயலாம் பிறிது மற்றில்லேன், சென்று சென்றணுவாய்த் தேய்ந்து தேய்ந்தொன்றாந் திருப்பெருந்துறை யுறை சிவனே, ஒன்றுநீயல்லை யன்றியொன்றில்லை யாருன்னை யறி யகிற்பாரே" என்றருளிய விக்கவியில - தொண்ணூற்றாறு தத்துவங்களிலொன்றும் நீயல்லை யெனி னுன்னைத் தவிர அவைகள் வேறாக வேண்டுமே; யங்ஙனம் பார்க்கி லுன்னையன்றி யோரணுவு மில்லாததால் உன்னையன்றி யொன்று மில்லையெனப் பொருள் கோடலாயிற்று. இதனால் அல்லை இல்லை என்னுஞ் சொல்லை யுன்னு மிடத்துக் கட படங்கள் மண்ணாலல்ல. மண்ணைத் தவிரக் கடபடங்களில்லை என்ற வுதாரணத்தால் காரண காரியங் கடந்ததாகக் காணுகின்றதே துவிதஞ்சாதிப்பதற் கேதென்னை?

து-விடை—ஒருவனாலாகிய கட படங்க ளவனாகுமா அவனாகாது. ஆதலி னவனல்லன், அவனைத்தவிரக் கடபடங்களுண்டோ இல்லை யெனக் கொள்ளில காரணகாரியங் கடவாததால் துவித நாசத்துக் கிடமில்லை யென்க.

ஞா-வினா—தேகமுதலிய சமஸ்த பிரபஞ்சங்களுஞ் சிவச்செயலன்றெனவும், கடபடபணியாதிய சமஸ்தமும் ஈஸ்வரச் செயலன்றெனவுங் கூறியது முழுது ஞாயமாதலா லெமக்கு முடன்பாடே; ஆயின் ஈஸ்வரச் செயலில் ஒன்றாகிய தேகமென்னும் பொருள்

சுயம்போ-விகாரமோ-சுயம்பெனின், அஸ்தி மாமிசாதிகளை யன்றி யிங்ஙன மொருபொருளா யிருக்கவேண்டும்; இல்லாமையால் விகாரமெனின், ஒருவனாலன்றி யஸ்தி மாமிசாதிகள் தேகமாகத் தாமே விகாரமாகாமையால் கர்த்தாவேண்டும் எனப்பொருள்கோடலுமொன்று. இஃதன்றியு மின்னுமொன்று. அஃதாவது; இத்தேகமுண்மையாகத் தோற்றுவதும் இதனை யுண்மையென யாமறிவது மென்னை ?

து-விடை—தேகமென்பதின்றி நானெனற்கும் போக நுகர்தற்குங் கூடாமையின், இது ஒரு பொருளாதல்பற்றித் தோற்றுவதற்கும் யாமறிவதற்கு மிடமாகின்றதென வறிக.

ஞா-வினா—அவயவத்தை யன்றித் தேகமென்னுஞ் சத்தத்திற்குப் பொருள்தோற்றன் மாத்திரமன்றி வேறுண்டோ; வுண்டெனிற் சுட்டிக் காட்டுகவெனின் ?

து-விடை—கண்முன் இருப்பதைச் சுட்டிக்காட்டுவதெற்றிற் கென்க

ஞா-வினா—யாதானு மோர்பொருளை விவகரிக்கப் படுங்கால் உண்மையாயும், அதின் துபாதானகாரணத்தை யுன்னுங்கா லின்மையாயு மிருப்பதென்னை? யங்ஙனமாகா திதனைக் கூறுகெனின் ?

து-விடை—அங்ஙனமாவதாற் குற்றமென்னை, யிதனா னெனப்படாமலும், பலகிருத்தியமுஞ் செய்யத்தகாமலும், போமோ? இது கேள்வியன்றென வுணர்க.

ஞா-வினா—அஸ்தி மாமிசாதிகளையன்றித் தேக மொருபொருளல்லவே-பொருளாகப் பார்ப்பதினாலன்றோ மனிதர்-மிருகம்-பக்ஷி-நிலத்திலூர்வன-சலத்திலூர்வன-தாவரமெனவும், ஆண்பெண்ணலியெனவும், நானீ யவனவ ளதுவெனவும், பெண்டுபிள்ளை பண்டபதார்த்தமெனவும், சுற்றத்தார் - அயலார் - நேயர் - பகைஞர் - விருந்தினர் - இழிந்தோர் - உயர்ந்தோர் எனவும், பிராந்திபேதந் தோன்றலாயிற்று. இப்பிராந்தியாலன்றோ ராகத்துவேஷாதி தீயகுணங்களுக்கிடமாய் இதனாற் சுகதுக்கமும், செனனமரணப்ரவாகமும் ; நேரிடலாயிற்று. பொருளைப் பொருளாகப்பார்க்குந் திறமை யின்மையிற் பிரத்தியக்ஷ விவ்வுலகானுபவத்திற் காணாத நீர் அப்பிரத்தியக்ஷமாயுள்ள பரசிவர்கணிலே கணிப்பது பொருளாகுமா?

து-விடை—பாலைப் பாலென்றும், பசுவைப் பசுவென்றும், பொன்னைப் பொன்னென்றும், நூலை நூலென்றுமறியாமல் மண்ணை

நீரென்றும், காற்றை யக்கினியென்றும், வீட்டை வெளியென்றுமா அறிகின்றோம், அவ்வாறறிவினர்களாகிய எந்தமூடர்கள் வசனங் கற்றுக் கேட்கத் துணிந்தனை போது மடக்கு; பத்திபூண்டொழுகலின் கண்ணில்லெனக் க.

ஞா-வினு—எத்தேகமுந் தோலால் மூடப்பட்டதன்றோ தோல் மேனாட்டத்தில் விருப்புந், தோலுணாட்டத்தில் அருவருப்பான தும் கந்த அஸ்தி மாமிச மல மூத்திரயாதலின் வெறுப்புந் தருதற்பால தன்றோ, இவ்விருநாட்டமும் நமது முயற்சியாதலி னென்றிற்பழகி யொன்றிற் பழகாததென்னை ? ஒன்று பாசத்தழுத்துவதும், ஒன்று விடுவிப்பதுமாதலின், அந்தர்முக நாட்டம் பகிர்முக நாட்டமெனப் பெயர்பெற்றது. இதற்கு மேற்கோள் "அறிவிலாததற் பதந்தனை மைந்தனேயகமுகத் தவர்சேர்வர், வழிநடப்பவர் பராமுகமாயினும் மலர்ந்தகண் ணிருந்தாலுங், குழியில்வீழ்வர்கா ணிப்படிவெளிமுக மங் கொண்டுகாமிக ளானோர், பழிதருமபிற விக்கடல்மூழ்குவர் பர கதி யடையாரோ." இங்ஙனமிருக்கப்; பரத்தின்மேற் பழியேற்றி யிவ் விரு முயற்சியும் அவரதாகத் திரோபாவ மனுக்கிரகமெனப் பெயர் தந்து நொந்திரங்கித் துதிப்பானேன் ? அவர்மேற் பழியென்னை ?

து-விடை—"ஆக்குவாய்காப்பா யழிப்பாயருடருவாய், போக்குவாயென்னைப் புகுவிப்பாய்நின்றொழும்பி" லெனப் பரத்தின்மே லேற்றிக் கூறினருஞ் சான்றோரன்றோ ? அங்ஙனங் கூறுவதாற் குற்றமென்னை.

ஞா-வினு—"இந்தச்சீவனால் வருமறு பகையெலா மிவன்செய லல்லாமல், அந்தத்தேவனால் வருமென்ற மூடர்க ளதோகதி யடைவார்கள், இந்தச்சீவனால் வருமறு பகையெலா மிவன்செய லல்லாமல், அந்தத்தேவனா லன்றெனும் விவேகியே யமலவீடடைவாரோ" இதுவுஞ் சான்றோர் வசன மன்றோ இவ்விரண்டினுள் சிறந்தது யாதென்னின் ?

து-விடை—பத்திக்கு அதுசிறந்தது. ஞானத்துக் கிது சிறந்த தென வுணர்க.

ஞா-வினு—ஒருவன் துற்காரியங்களையே யிடைவிடாது செய்து யானென்செய்வன் அவன் செய்விக்கிறான் என்மேற் பழியில்லை யென்று மேலு மேலுந் துற்காரியங்களை யிடைவிடாது செய்தற் கிடந் தருமன்றோ வெனின் ?

து-விடை—பயபத்தி யில்லாதவிடத்தென்க.

ஞா-வி—வினைவழியே வந்தணைவ சிவனாயெனவும, தான முன் முன் செய்த வினை தாமே யனுபவிப்ப ொனவும், இன்னுஞ் சான்றோர் வசன மிருப்பதாற் றன்னைத்தா னுந்து கொள்ள வேண்டும். அங்ஙனஞ் செய்ய முயலில் தீவினை சிறிதுஞ் செய்யான்; ஆதலி னிதுவே யாவர்க்குஞ் சம்மதிவசன மன்றோ வெனின்?

து-விடை—சம்மதி வசனமாயினும் பத்திவிளைவுக் கேதென் னையெனின்.

ஞா-வி—ஒருவன் விதி மார்க்கத்தில் வழுவாது மனோவாக் குக்காயங்க ளொருங்குபட வொழுகுதல் பகவான் வியக்க வாயின் பலன்வேண்டியாகும். அப்பலன் பேரின்பஞ் சிற்றின்பங்களி லொ ன்றாக வேண்டும். இவ்விருபலனு மொன்றி லொன்றில்லாமையால் ஆத்மாக்களுக் கன்னியமாகும். அன்னியமாதலி னிவ்விருமையும் வேண்டாதார் அவருக்குப் பய பத்தி பூண்டொழுகுவதிற் பய னென்னை?

து-விடை—இவ்விருமையு மொன்றேனும் வேண்டாதா ரில் லையாதலின் விதியும் பத்தியு மறுக்கற் பாலதன்றென்க.

ஞா-வி—அதிவர்ணாசிரமிக்குப் பயபத்தி விதி நிடேத மெங் கே யெனின்?

து-விடை—யாவருந்தன்னை மறந்தவ ரன்றாதலி னிந்நான்கை யுங் களைதற்பாலதன்றென்க.

ஞா-வி—தானலாதொன்றைத் தானெனக்கருது மாவு மன் றோ; இந்நான்கும் வேண்டற்பாலது அப்பால் யாதுக்கு. இவை மு முதுஞ் சித்தாந்தமாமோ வெனின்?

து-விடை—மெய்யே - இந்நான்கு சாதனப்பேற்றா லன்றி நித் தியா நித்திய வஸ்த்து விவேக முதலிய நான்கும், இந்நான்காலன் றித் தன்னை விசாரிக்கும் விசாரமு, மிவ்விசாரத்தா லன்றி ஞானமு ம், இந்த ஞானத்தாலன்றி நிரதிசயானந்தமாகிய முத்தியுங் கிடைக் கும். ஆதலின், பிரதமை சித்தாந்தமாதலி னிந்நான்கும் விடற்பா லதன்றென்க.

ஞா-வி—கர்மம், பத்தி, ஞானமெனக் காண்ட மூன்றா வகுத் தது, அந்தந்தப் பக்குவிக்காதலி னதுதற் கததா சிறப்பா மெனக் கொள்ளாது துவிதத்தையே ஞானமெனக் கொள்ளலாமா வெனின்?

துவிடை—இந்தத் திரிபதார்த்தத்தையும் விசாரித்துத் தெளிந்த விடத்தில் மூன்றும் அநாதி நித்தியமெனவும், ஜீவேஸ்வரருக் கைக்கிய மின்றெனவுந் திடம்பெறச் செய்த தாதலின் ஞானமெனக் கோடற் கையமின்றென்க.

ஞா-வினா—இம்மூன்றும் பந்தநிலையினு முத்தி நிலையினு மறிவுக் கன்னியமன்றோ; இவற்றை விசாரித்துத் தெளிவதி லென்ன பயனெனின்?

து-விடை—பரத்தின தருள்பெற்றுச் சதா வொரு தன்மையதாக அப்பரத்தைப்போல் வாழ்வதென வறிக.

ஞா-வினா—பரத்தை யடையு முயிர்க்குப் பாச மியல்பாதலின் எங்ஙன மகலு மெனின்?

து-விடை—களிம்புபோ லியல்பாயினுஞ் செப்புக்கன்னுடிதுலக்கியக்கன் துலக்கமாறும் போலாமென்க.

ஞா-வினா—மீண்டுங் களிம்பு பற்று மாறுபோன்று பாசமீண்டும் பற்றுதோ?

து-விடை—பற்றாதெனவறிக.

ஞா-வினா—திடமெங்ஙனமெனின்?

து-விடை—சுருதிப்பிரமாணமே திடமென்க.

ஞா-வினா—பொருத்தமில்லாததைச் சொல்வதுஞ் சுருதிப்பிரமாணமோ?

து-விடை—ஈஸ்வரவாக்கியமாதலின் பிரமாணமா மென்க.

ஞா-வினா—செம்புக்குக் களிம்பு வாஸ்தவமாதலின் துலக்கினு மீண்டுமுண்டாம். இதனை யுதாரணமாகச் சொல்லுவானேன். இது முத்தியாகுமா?

து-விடை—ஆத்மாக்களுக்குப் பந்தம் வேறென்னின் சம்பந்தப் படுவானேன் எனவரும், சம்பந்தப்படுதலும் விலகலு மியற்கையாமெனின், சற்கருமாதிகளும் சிரவண மனன நிதித்தியாசனாதிகளும் யாதுக்கெனவரும், இவ்வழக்கெல்லா நமக்கேன் பத்திபூண்டொழுகுவதே முக்கியமாமென்க.

ஞா-வினா—எறும்பு - புழு - முதலிய அற்பசெந்தும் பயன்கருதா தசையாது, இங்ஙனமிருக்கச்; சிவபூசைமுதலிய புண்ணியகருமமும் பயன்கருதா தியற்றுவாரில்லை, அப்பயனோ நிலையற்றதாயின்

முயற்சியும் பயனற்றதன்றோ, நீரிதனைப் போதிப்பதி லுமக்கு மெமக்கும் யாதுபயனென்னின்?

து-விடை—பிரத்தியக்ஷமாக விவ்வுலகத்தில் தாரித்திரரையு மேலாயசம்பத்தோரையுங் காண்கின்றோ மல்லவா, இவ்வரித் தாரதம்மிய மாதற்குக் காரணம பூர்வகன்ம மாதலால் அது பற்றி யாம் போதிக்கின்றோ மெனவறிக.

ஞா-வினு—மெய்யே, நீர்கூறிய மோக்ஷ சாம்பிராச்சிய வாழ்வு உமது வுபகாரணத்தா லுமக்குந் தெரியாது. நிலையற்றதெனக் குறிப்பதைப்பற்றி வினவத் துணிந்தன மன்றி வேறின்று. ஆதலின் சங்கைக்குத்தக்க விடை தெரிவிக்கத் தகாத நீரா; நூலிதஞ் சாதிக்கப் போந்தீர் போதும், விபரீத மனைத்தும் வாய்மொழிததுமெனின்?

து-விடை—இன்ன சத்தத்திற்குத் தாதென்ன? இலக்கண மென்ன? சத்தபேத அருத்தமென்ன? அவ்வருத்தம் கருத்துப் பொருளோ, காட்சிப்பொருளோ, சித்துப்பொருளோ, சடப்பொருளோ, இயற்கைப்பொருளோ, செயற்கைபொருளோ, விகாரப்பொருளோ, நிர்விகாரப்பொருளோ, காரியப்பொருளோ, காரணப்பொருளோ, பேதகாரண காரியபபொருளோ, அபேதகாரண காரியப் பொருளோ, விபரீதப்பொருளோ, எதார்த்தப்பொருளோ, அனுமானப்பொருளோ, அருத்தாபத்திப் பொருளோ, வாச்சியார்த்தப் பொருளோ, லட்சியார்த்தப்பொருளோ, அசாஸ்திரப்பொருளோ, சாஸ்திரப்பொருளோ, இவற்று ளொன்று மறியாத நீயா, எம்மை மூடனெனச் சொல்லத்துணிந்தனே; யுன்வா யழுகக்கடவதெனச் சபித்துப் பின்னுங்கினனென்க.

ஞா-வினு—ஐயா! சரணஞ் சரணஞ் சிறியேன் செய்த பிழை பெரியோராவது பொறுப்பது கடனே யானுய்யும் வகை யெங்ஙனம், சுருதியுத்தியானுபவ மெங்ஙனம் வாய்க்கும். அதுபற்றிக் கேட்கப் புகுந்ததன்றி யுமதளவு காணவன்று; ஆதலினினி யொரு சந்தேகமுண்டு. அதுயாதெனின், என்னவஸ்து சீவனென்றும, ஈஸ்வரனென்றுஞ்சொல்லப்படுவது. உபாதிகுண மிருவர்க்கு மாதலாலும், அவை யவரல்லாத தாகையாலும் இவைகள் சமபந்தமின்றிச் சுயம்பாய்த் தெரிவிக்க வேண்டுமெனின்?

து-விடை—இங்குமங்கு மிச்சாஞானக் கிரியை நிகழ்தலின் அறிவன்றி யின்றென்க.

ஞா-வினா—இவ்விருவரு மறிவாயினை யக்கிரிபகற்றி யுன்மை யை யுணர்த்தத் தருவ தெவ்வறிவெனின்?

து-விடை—சீவவறிவுக்குப் பரவறிவென வுணர்க.

ஞா-வினா—பரவறிவுக் குணர்த்துவ தெவ்வறிவோவெனில்?

து-விடை—இங்ஙனஞ் சொல்லப் புகின் அளவு படாமையால் அனவஸ்தாதோஷமாம். இது குதர்க்கவாதிகளது சம்மதம் நீகேளா தொழிக வென்றுணர்க.

ஞா-வினா—மெய்யே; அறிவுக்குமே லறிவு நீர் சொல்லாதிருக் கில் யாமு மேல் கேளாதிருப்ப மெனின்?

து-விடை—குருவன்றி விளங்கவேண்டும். அங்ஙனமில்லாமை யால் எங்ஙனங் கூறுதொழிவ தென்க.

ஞா-வினா—அவ்வாறே முன்னும பின்னுங் குருசீட பரம்பரை யிருக்கவேண்டுமெனத் தானேயமைதலின் அறிவுக்கறிவுணர்த்து மெனின், அவ்வறிவுக் கெவ்வறிவோ என விடாது கேட்க வருமன் றோ இதனைக் குதர்க்கமென்ற தென்னையெனின்?

து-விடை—அனவஸ்தா தோடம் வருதலி னென்க.

ஞா-வினா—வராதிருக்கும் வகைக் கேதென்னை யெனின்?

து-விடை—நீகேளாதிருப்பதே யிதற்கேதுவாமென்க.

ஞா-வினா—நீர் தீர்ப்பு சொல்லா திருப்பதே யித்றகேதுவா மெனக் கொள்ளற்பாலதன்றோ?

து-விடை—நீ யினி யாதுங் கேளா தொழியின் யானுந் தீர்ப்பு செய்யா தொழிவனென்க.

ஞா-வினா—பிறரைதையந் தவிர்த்தற்கன்றோ குருபீடம் பூண் பது, அதுபற்றி யாங் கேட்கப் புகுந்தனமெனின்?

து-விடை—நீயெமது பரம்பரை மாணக்க னன்றாதலின் கேளா தொழிகவென்க.

ஞா-வினா—வினாவுக் குத்தரந்தோன்றுதவிடத் தெவருங் கூறு வ திங்ஙனமாதலா லுமது மொழியு மிதுபோலாமெனின்?

து-விடை—துவித சித்தாந்தத்தி லெனக்கு நிகரார கேட்கவே ண்டுவ திப்போது கேளென்க.

ஞா-வி௫—முன்னையது நிற்க; இப்போது கேட்கப் புகுவது மிகவுஞ்சிறியது. அதாவது; உலகமென்பதி லொருமெய் யிதுவெனக்காட்டுகவெனின்?

து-விடை—கா்ணப்படுவன வனைத்து மென்க

ஞா-வி௫—காரணகாரிய மென்னுந் தா்மமேற்பது கற்பிதப் பொருளாதலி னங்ஙனமேலாதது மெய்ப்பொரு ளன்றே, அதனைக் காட்டு கெனின்?

து-விடை—மணற்சோற்றிற் கல்லாயப் புகுந்தாற் போலு மாயிற்றே யிதுதானு சிறியகேள்வி யென்றது போது நிறுத்தென்க.

ஞா-வி௫—கற்பிதத்தை மெய்யென்று பிரத்தியட்சத்திற் கண்டீரா அப்பிரத்தியக்ஷமான சிவேஸ்வரா துண்மைநிலைகண்டு தெளிந்துபதேச குருவானீா். மோசமோசம், "தன்னறிவு சாட்சியல்லாற் சாயுச்சியப்பயனைச், சொன்ன பிழைகெட்டேன் றொலைப்பரோ" என்னுங் கவியி னா்த்தத்துக்குச் சாட்சி நீரன்றோ வெனின்?

து-விடை—உனக்குப்பக்குவமும் அனுபவமும் வந்தால்தான் தெரியு மில்லா விட்டால் தெரியாது விவா்த்த கேள்விகளை விட்டுப் போவென்க.

ஞா-வி௫—ஞாயத்துக்கு விரோதமானதாயின் விவா்த்த கேள்வியெனச் சொன்னதை யேற்போமெனின்?

து-விடை—உன்னை யொருபொருட்டா யினிப்பேசுவமோ நடவென்க.

ஞா-வி௫—இப்படியே யெம்மதத்தருஞ் சொல்லில் உண்மையென லெம்மத மாமெனில்?

து-விடை—அந்தந்த மதம் அவரவா்க் குண்மையாமென்க.

ஞா-வி௫—வழக்கிடற் கேதென்னை?

து-விடை—வஸ்து நிச்சயபேதத்தாலென வறிக.

ஞா-வி௫—பரவஸ்துண்டெனக் கோடலி லெவா்க்குஞ சம்மத வசனமாயிருக்க நிச்சயபேதம் வருதற் கேதென்னை?

து-விடை—இலட்சணபேதத்தாலென வறிக.

ஞா-வி௫—அதற்குரிய லட்சணமென்றோ வொவ்வொருவருஞ சொல்வதெனில்?

து-விடை—ஆம்.

ஞா-வினா—பேதம்வருவானேன்?

து-விடை—பிரத்தியட்சமில்லாததா லென்க.

ஞா-வினா—யானைகண்ட குருடர்போ லாமன்றோ அங்கிச்சய மெனின்?

து-விடை—கல்வி ஞானத்திலும், விசார ஞானத்திலுஞ் சிறந்தவரன்றோ; அந்தந்த மதஸ்தாபிதரும். இஙஙன மிருக்க; அவரைக் குருட ரென்னலாமா, இது மடமை யென்க.

ஞா-வினா—ஒவ்வொருவர் நீரப் பொவ்வொருவர்க் கொவ்வாத தென்னை?

து-விடை—அவரவ ரிஷ்டமென வறிக.

ஞா-வினா—அவரவ ரிஷ்டப்பிரகாரமோ நிற்பது வஸ்து நிலை யெனின்?

து-விடை—அவரவ ரிஷ்டப்படி யிலக்கணங் கொண்டு பாவித்து வந்திருப்பதா லந்தந்தக்கோலமாக அன்பருக் கெழுந்தருளிவந் தனுக்கிரகித்தாரென் றவரவர் வேத மிருத்தலின் அவரவ ரிஷ்ட விலக்கணமே வஸ்து நிலையாமென்க.

ஞா-வினா—ஒருவனை மாமன்-மச்சினன் - அண்ணன் - தம்பி-மகன்-தந்தை-பாட்டன்-பேரன் - உறவினன்-அன்னியன்-நண்பன்-பகைஞன்-விருந்தினன்-மூடன்-கல்விவான்-துஷ்டன்-யோக்கியன் - எனக் கோடற்கவன் பாத்திரனுயினு மித்தனை ரூபமல்ல னவனுக் கிவை யனைத்துங் கற்பிதமன்றோ, அதுபோல அவரவ ரிஷ்டவிலக்கண மனைத்தும் பரவஸ்துவுக்குக் கற்பிதமாமே யெனின்?

து-விடை—அவரவ ரிஷ்ட விலக்கண மவரவர்க்குப் பலன் தருதலா லெங்ஙனங் கற்பிதமாமென வறிக.

ஞா-வினா—இவனு மந்தந்தக் கொள்கைக்குத் தக்கவாறிருந்தவ ரவர்க் கனுபவந்தரினு மிவன் தன்னை மறந்தனனே, ஆதலி னிவை யவனுக்குக் கற்பித மென்றற்குத் தோடமென்னை யினுறும்போலப், பரவஸ்துவுக் கவ்விஷ்ட விலக்கண மனைத்துங் கற்பித மென்றாற் றோடமென்னை?

து-விடை—எங்ஙனஞ் சொல்லினும் விடேனென்றாய் தோட மின்றென வறிக.

ஞா-வி௵—மதத்தர் நிச்சயமனைத்தும் பரவஸ்துவி னுண்மை நிலையன்றாதலின் மூடமெனலாகாதோ வெனின் ?

து-விடை—மூடமென்னிற் பத்திக் கிடமின்றாம். தெளிவென னில், ஐயந் திரிபகற்றற் கிடமின்றாம், இங்ஙன மிருப்பதை நீயே யறிந்து

ஞா-வி௵—பரவஸ்து இல்லையென்று லன்றோ பத்திக்கிடமின் றாம். அங்ஙன மெமது கருத்தன்றே பரத்துக்கு மதத்தரிடுங் குறி கள் மூடமெனக் கூறினதே யன்றி வேறல்லவெனின் ?

து-விடை—தன்வயத்தனாதல்-தூயவுடம்பினனாதல்- இயற்கை யுணர்வினனாதல் - முற்றுமுணர்தல்-இயல்பாகவே பாசங்களி னீங் குதல்-பேரருளுடைமை - முடிவிலாற்றலுடைமை - வரம்பிலின்ப முடைமையென்னு மெண்குணங்களேனு மவருக்குப் பொருத்த மின்றே ; இது சைவாகமத் துணிபாதலின், மறுக்கற்பாலதன் றென்க

ஞா-வி௵—சீவர்களுக்குள்ள குணங்களுக்கு வெதிருத்தமாகச் சொல்லவந்த குணங்க ளன்றிச் சுயம்பாகுமா ?

து-விடை—சுயம்பென்றாற் றோடமென்னை.

ஞா-வி௵—சிருட்டிக்குமுன் னிக்குணங்கள் வருதற் கிட மின் றாதலின் கற்பித மாமே யெனின் ?

து-விடை—நித்தியம், பூரணம், ஏகம, பரமார்த்தம், பரப்பிர மம், நிதானம், சத்தியம், கேவலமுதலிய விதுபோன்ற குணங்க ளெல்லாணிறந்தனவே யிவையுங் கற்பிதமென்னையோ.

ஞா-வி௵—காரணக்குறியாதலின் சுயம்பெனலாமேவெனின்?

து-விடை—காரணக்குறி யல்லாத விடுகுறிப்பெய ரொன்று மில்லாமற் போகின்றதே யெங்ஙனந் துதிப்பது, இதுபற்றியாவது தள்ளற்பாலதன்றென்க.

ஞா-வி௵—இதற்குந் தக்கவிடை யறியீ ரிதுநிற்க. கற்பிதமாத லாற் குணங்களைத் தொடாது பரவஸ்துவைச் சொல்லெனின் ?

து-விடை—அட்டமூர்த்தமெனின், ஆராய்ச்சியி லல்ல அல்ல வெனப் போதலானும், அட்டமூர்த்த மீன்றெனி னுண்டெனற்குப் பொருளில்லாமற் போதலானு மெங்ஙனஞ் சொல்வதென வறிக.

ஞா-வி௮—இங்ஙனமாயி னுமக்கே வஸ்து நிச்சயஞ் சந்தேகமா யிருக்கப் பிறர் சந்தேகத்தை யெங்ஙன மகற்றக் குருவானீ ரெனின்?

து-விடை—இங்ஙனமாய நிலையெல்லா மாயா விகாரமாதலி னிதுபற்றிச் சான்றோரும் "மாயாவிகார மதுபானம் போன்றமயக், கோயாத துன்ற லொழியுமோ-நீயதுவாயப், போகாமலாடும் பவுரியவன் பொய்க்காட்சி, யாகாது போலே யறி." என்றார். நீ யருள்வடிவாதற் கேற்றதைச் செய்யென்க.

ஞா-வி௮—அட்டமூர்த்தமாயு மன்றாயுமிருப்பது மாயா விகாரமென்றீர். எதனை மாயை யென்றதோ வெனின்.?

து-விடை—பராசத்தியை யென வறிக.

ஞா-வி௮—பரத்தை விடா தபேதமா நிற்றலன்றோ, பராசத்தி யென்பது. நன்றே, பரத்தைச் சத்தியென்றுஞ் சத்தியைப்பரமென்றுங் கூறலாமா; கூறலாமெனின், சத்தன் சத்தியென்றறிவுண்டயோர் வசன மிராதிருக்கவேண்டும். இருத்தலி னொன்றெனப் படாது, இரண்டெனிற் சத்தனையன்றிச் சத்தி யிருக்கவேண்டும். இல்லை யெனில், ஒருவனது சக்தியை யவனென்னலாமா; கூடாதெனிற், சக்தி வேறன்றோ? இங்ஙன முடிதலின், மாயையென்பதின் எதார்த்தவடிவம் யாது?

து-விடை—சக்தி யெனறது வல்லபம், அந்த வல்லபஞ் சத்தனுக்குக் குணமாதலால் அதனை யென்னவென்று சொல்லுதும், ஓர் முதலன்றாதலின் தனக்கென வோர் வடிவமுண்டா, இல்லையென வறிக.

ஞா-வி௮—வடிவிலா மாயையா லென்றும்; இல்லை யெனு மாயையி லிட்டனை யென்றும்; மாயை யென்பது பொய்யெனிலென்றும்; சத்துக்கள் கூறியது மில்லாமைபற்றி யாதலி னதனை யுண்டெனக் கொள்வானேன்?

து-விடை—அண்டாண்ட பேதங்களுஞ், சராசர பேதங்களு மாயையினது காரியமன்றோ, இவைக ளிருப்பதா லிவற்றிற்குக் காரணமாகிய மாயையு மிருக்கவேண்டும். இல்லை யென்பது கூடாதென வறிக.

ஞா-வி௮—நீரே முன்னர் மாயை யில்லை யென்றும், பின்னருண்டென்றுஞ் சொன்னால் உண்டு இல்லை யென்னு மிவ்விரண்டி

ளையு மாயாகாரிய மனைத்து மேற்கவேண்டுமே, செகத்தும் மாயா காரிய மன்றோ, இதனிடத்திற் காட்டுகவெனின்?

து-விடை—சிருட்டிக்கு முன்னுஞ் சர்வசங்காரத்திற்குப் பின்னுமெங்கே, யிதனை யில்லையென்றும்; இப்போதிருத்தல்பற்றி யுண்டென்றும் பிரத்தியட்சமா யிருப்பதைக் காண்க.

ஞா-வி—செகத்தென்பது; காலம்-தேசம்-வஸ்து-எனத் திரி பதார்த்த மயமன்றோ; இம்மூன்றனு மொன்றேனுமாயையைக்கடந்ததன்று. உண்டில்லை யென்னுந் தர்மத்தை யிப்போதுமேற்றிருக்க வேண்டுமே யெனின்?

து-விடை—இப்போதெல்லாஞ் சத்தியமென வறிக.

ஞா-வி—இப்போதும் நூலையன்றிப் படமும்-மண்ணையன்றிக்கடமுமெங்கே; இதுபோலப் பூதமெனவும் பௌதிகமெனவு மிரண்டுண்டே யிவற்றுட் பூதத்தையன்றிப் பௌதிகமெங்கே காரணத்தை யுன்னுமிடத்தில்லை யெனவும், தமது பயனாகிய கர்த்தத்துவ போக்தத்துவ சாதனக் கருவியாய் நிற்றலை யுன்னுமிடத் துண்டெனவும் பொருள்படச் சொல்ல வறியாத வுனக்காசிரிய னெனப் பட்டந்தந்தவனார். உன்னிலும் விவேகியாயிருக்கவேண்டும். போது மிது நிற்க; சிற்றறிவு சீவனென்றும், பேரறிவு பரமென்றும், முன்னே சொல்லிவிட்டிருக்கின்றோம்.சிற்றுயிருடலளவோ வுணர்வளவோ?உடலளவெனின், அவஸ்தாத்துரியங்கண்டு மறைவதெங்கே. உணர்வளவெனினுடலளவு நானெனற்கேதென்னை. இந்தச்சிறிய சந்தேகத்தை யாவது நிவர்த்திக்க வேண்டுமே யெனின்?

து-விடை—ஒன்றாகதோன்றுதிருக்கச்செய்தனை சந்தேகந்தெளிந்துகொள்பவன்போற் காட்டிக்கொல்லவந்த எமனைய் இல்லாத கேள்வியெல்லாங் கேட்க வல்லவனையும் போது மினியாவதுபோ வெனக்கூற.

ஞா-வி—யான்கேட்பதெல்லாம் ஞாயவிரோதமல்லவே,உம்மைத்தகப்பன் போலுங் கருதிய பாத்தியத்தால் வெறுத்துக்கொண்டேனே யன்றி வேறல்ல; சரணஞ்சரணம்-என்று வணங்கி யிரந்து கேட்டனன். அதாவது; எவ்வுயிரு மெவ்வகைப் பிறப்புமல்லவே யாதென லட்சியம் வைக்க நமது விபரீத ஞானம்போமெனின்?

து-விடை—அறிவென லட்சியம் வைக்கப் போமெனவறிக.

ஞா-வினா—சின்னம் அவிச்சின்னத்தையன்றி லட்சியார்த்தம் வேறுகண்டிலனே யெனில்?

து-விடை—இரண்டினுந் தாக்கற்றுச் சும்மா விருவெனக்கூற.

ஞா-வினு—மூடமௌனமாகக் காணுகின்றதே யெனின் ?

து-விடை—அதையுங் கடந்து பாரென்ன.

ஞா-வினு—ஒன்றுந்தோன்ற வில்லை யெனின் ?

து-விடை—ஒருசோதி தோற்றும்பாரெனச் சொல்ல.

ஞா-வினு—அதுயாது எனக்கு ஒளிருகின்றது அதன் பெயரென்ன ?

து-விடை—அருளென்ருன்.

ஞா-வினு—அப்புறம் யாதெனக்கேட்க ?

து-விடை—பரைதெரிசனங் காணென்ன.

ஞா-வினு—அப்புறமொரு பெரியசுகந் தோற்றுதேயெனின் ?

து-விடை—அதுதான் பேரின்ப மென்றறிக.

ஞா-வினு—அப்பாலதுவு நழுவுகின்றதேயெனின் ?

து-விடை—அதுதா னனந்தா தீதமென்வறிக.

ஞா-வினு—இதெல்லா மென்னுலறிவதாயிருக்க நானென்பதெங்கேயெனின் ?

து-விடை—அதுதான் தற்போத விழுப்பெனவறிக.

ஞா-வினு—ஆனந்தா தீதமென் றங்ஙனமாயிருந்தறிந்தவ்னுநான்ருனே - தற்போத வொழிவு என்றது சொல்மாத்திரமாகக்காணுகின்றதே யெனின் ?

து-விடை—முத்தி முடிவிலும் நானெனலும் அதையுணர்த்தும் பரமும், நழுவிற்பந்தப்படுத்துமென்னும் பயமிருத்தலிற் பாசமும் மூன்றும் அனுதி யென்றதற்கு நின்றதெனவறிக.

து-விடை—நானெனற்குப் பொருள் அறிவென்றுகூறி முடிவிலும் வெறுஞ்சொல்லாக வழவழென்று விடுவதுதானே மேலான அனுபவமெனப்பெரியபெயரிட்டுப் பகட்டகின்றீர். பரவறிவையும்-சிவவறிவையு மளந்தனுபவிக்கத்தெரியீர்போதும். எதைப்பாசமென்பது - இதையாவது தெரிவிக்கவேண்டு மெனின் ?

து-விடை—முன்னே காரண காரிய சம்பந்த மருத சத்தமுதலிய ஐந்துவிடயமென்றனமே-யதுவேயெனவறிக.

ஞா-வினு—இவை பஞ்சபூதத்தையன்றி யில்லாமையால், பஞ்சபூதம் விடயமாகவேண்டுமே, பஞ்சபூதமும் அபஞ்சீகிருத பூதத்தை யன்றி யில்லை, யிப்படியே செல்லுமானல் பாசமென்பதற்குப்

பொருளில்லதெனக் கணிக்கப்படாமையா லதுவுந் தோற்றன்மாத் திரமாக முடியுமே யெனின்?

து - விடை—முடியினுங் கர்த்தத்துவ போக்தத்துவ சாதனக் கருவியா நிற்கு மனுபவத்துக்கு நாசமுண்டோ இலலை யெனவறிக.

ஞா-வினு—முதற்காரணமன்றி யோரணுவும் எங்குமில்லை. இங்ஙன மில்லாதன வனைத்துங்காரியப் பொருளன்றோ; இந்தக்காரிய வஸ்துக்கள் தத்தமக்குரிய குணங்களோபு முதற்காரணத்தையுங்கு றிக்கின் குணியென்பதற்கும்,காரியமென்பதற்கும்,பொருள் உபாதி வடிவாமுடியும். அவ்வுபாதி வடிவம் தனக்கெனச் சொரூபமொன்றி ன்றி முதற்காரண மயமா நின்று விவகார சாதனக்கருவியாய் மெய் போலத் தோற்றும். இத்தோற்றத்தையாமெய்யென்பது, கட படங் கள் மண்ணலைத்தவிர வுண்டா உபாதி பேதத்தால் வேறுபோலத் தோற்றலை மெய்யென்னலாமா?

து-விடை—அனுபவத்துக்கு மெய்யா நிற்றலின் எமக்கு இது வே போதுமெனவறிக.

ஞா-வினு—பாமராரிலுஞ் சிறந்தவர் பண்டித ரொன்பதற் கடை யாளமென்னை?

து-விடை—இல்லறந் துறவறங்கட்கு வழுவாமை யெனவறிக.

ஞா-வினு—இதெல்லா மொழுக்கத்திற் சேர்ந்தது. காமவெகு ளிக்கு மயக்கங் காரணமாதலின், மயக்கம் பொருளல்லவற்றைப் பொருளென வுணர்தல். இம்முயற்சியன்றோ; பந்தம். அதினதின் காரணங்களை யததி லொடுக்கிப்போய்க்காரணகாரிய மற்றநிலையைக் காண்டல் முத்தி. இஃதியற்றத் தெரியாதவர் சொல்லாலன்றித்தம் மை யொடுக்கிப் பாக்குஞ் சிந்தனைசிறிது மில்லாதவர். இவரையா பண்டிதரொன்ப தெனின்?

து-விடை—இம்முயற்சி மாறுதுடைமை சிறந்த ஞானியர்பா லன்றி யேனையோரிடத் திலலாதேனுஞ் சரியை கிரியை யோகங்களி லொன்றேனு முரிய ரன்றோ, இவரைப் பாமராருக் கொப்பென்ன லாமா, கூடாதென வறிக.

ஞா-வினு—பொரு ளல்லவற்றைப் பொருளென வறிதல் பற் றிச் சமத்துவங் கூறவந்ததே யன்றி வேறல்ல. இதுநிற்க; துவித ஞானியரையும் ஞானியரொன்னலாமா? என்னலாமெனின், சமஷ்டி வியஷ்டி காரணகாரிய வுபாதித்திரிய மனைத்தும் பாசமன்றோ இப்

பாசங்கள் உபாதான வுபாதேயத்தையும், விகார தர்ம்மத்தையு மே லாத தொன்றுண்டோ, உள்ளதாகக் காண்டல் நமது புத்தி விகற்ப மன்றி வேறில்லையே, பழுதையைப் பாம்பென்று மயங்கினதும், அல்லவென்று தெளிந்ததுந் தனையன்றி யில்லாமையால் ஆன்மாவு க்குப் பாசம் வேறென்றும், அது தொன்றுதொட்டு வருதலா லநாதி நித்திய மென்றுஞ் சொல்வது இது மூடமன்றோ இவரையும் ஞா னியரென்னலாமா?

து-விடை—அந்நிலையாவது நமதிடத்திற் சிறிது மில்லாமை யால் அவர் ஞானியரோ யெனவறிக.

ஞா-வின—நம்மிலுஞ் சிறந்ததுபற்றி யவரை ஞானிய ரெனி ன், அறிவுக் கன்னியத்தை யளந்தனரன்றி யறிவை யளந்தனரன்றா தலின் உணமை ஞானியரென்னலாமா?

து-விடை—எங்ஙனஞ் சொல்வதெனவறிக.

ஞா-வின—"மெய்ம்மையறி வல்லதயில் வேறறிவ தெல்லாந், தம்மையறியும்மறிவ தேயறிவுதானே." யெனவும்; "பெறுமவற் றுள் யாமறிவ தில்லையறிவறிந்த, மக்கட்பே றல்ல பிற" வெனவும், அனுபவவசன மிருப்பதாலதனையறிந்துஞ் சோதனைசெய்யும்வகை யற்றவராக வேண்டும். அல்லவெனி லுபாதி நாட்டத்தா லறிவுக்குப் பேதங்கற்பிக்க வந்ததே யன்றி யறிவு நாட்டத்தா லெங்ஙனம் பே தஞ் சாதிக்கப்படும். எங்ஙனமெனில், கரையென்னு முபாதியாலன் றிச் சிறிது பெரிதெனல் சலத்தா லன்றே. யறிவை யறிந்தவராயின் துவிதபேத மெங்ஙனஞ் சாதிப்பர். இவரை ஞானிய ரல்ல ரெனச் சொல்ல நடுங்குவ தென்னை?

து-விடை—சான்றோராதலி னெனவறிக.

ஞா-வின—"கல்லெல்லா மாணிக்கக் கல்லாமோ" அதுபோலப் போலி ஞானியரை யெதார்த்த ஞானிய ரென்னலாமோவெனின்?

து-விடை—அந்தப்பேத மெமக்குத் தெரியாதாயினும் அவர் நடக்கையாலும் பலகாலுஞ் சலனமின்றிச் செய்யு நிட்டையாலும் பேதங் கணிப்பதற் கிடமின்றெனவறிக.

ஞா-வின—யோகியரும் ஞானியர்போ லனுத்துவமும் பேதந் தட்டாம லிருப்பதனால் ஞானிய ரென்னலாமா?

து-விடை—கூடாதாயினும் எமக்கு முறையன்றெனவறிக.

ஞா-வினா—அதுநிற்க; உயர்திணையிலும் அஃறிணையிலு முடல்தோறு நானெனப்படு முயிரெல்லா மெப்பிறவியைச் சுதந்தரமாக வுடையதோவெனின்?

து-விடை—இல்லையில்லை யெனவறிக.

ஞா-வினா—எப்பிறவியுஞ் சுதந்தர மில்லா திருக்க அந்தந்தச் சென்மமாக வெண்ணி யுயிரைச் சராசரமெனவும், எழுவகைத்தோற்றத்து ளின்னதெனவும், ஆண் பெண் அலியென்பவற்று ளின்னதெனவும்,. சொல்லலாமா? கூடாதெனில், உயிரெல்லா மெப்போதும் நானெனற்குத் தேகம யாதெனின்?

து-விடை—அறிவன்றி யில்லை யெனவறிக.

ஞா-வினா—அறிவைப் படித்துக் கேட்டல் சிந்தித்தல் தெளிதலில்லாதாயின் ஞானதனுவாதற் கேதெங்ஙனமெனின்?

து-விடை—அவரருளாலெனவறிக.

ஞா-வினா—தன்னைத்தானெனப்பார்த்தல்; அன்னியராலாயின், இதுவு மன்னியராலாமென்பம். அங்ஙனமிலலையெனின், இந்தப்பிதற்ற லேனெனின்?

து-விடை—இந்த வழக்கெல்லா மெம்மால் முடியாது சரணஞ்சரணம் போவென் றிரந்துகேட்டனனென வறிக.

ஞா-வினா—இங்ஙனஞ் சொல்வதுதானோ துவித சாம்பிரதாய முறையெனின்?

து-விடை—துவிதவாத குருக்களுக்கெல்லாஞ் சிறந்தவ ரொருவரிருக்கிறா ரவரை யழைக்கிறேனென்று சொல்லி யுடனே வரவழைத்துக்கேட்கவேண்டியவற்றை யிவரைக்கேளென்று நீங்கினன். அப்பால் அந்தச்சிரேஷ்ட குரு வுனது சங்கை யாதெனக்கேட்க.

ஞா-வினா—ஐயா! சரணஞ்சரணம்-மூன்றவஸ்தையாகவும், அந்தந்த அவஸ்தாக்காட்சிகளாகவுந்தோன்றி மாறுவது யாதெனின்?

து-விடை—இவ்வாறானகேள்வியையுங் கேட்பவரையுங் கண்டிலன் இதென்ன கேள்வியென் றவமதித்தனன்.

ஞா-வினா—அவஸ்தாத்திரய வயப்படாத வுயிரில்லாதிருந்தால் யாங் கேட்கப்புகுவோமா, அங்ஙன மில்லாமையால் அதனை யுணராது அவமதிப்பானேன்?

து-விடை—உயிர்களுக்குச் சுபாவமாயிருத்தலை விசாரிப்பதா லென்ன பயனென வறிக.

ஞா-வினு—எந்தெந்தவுயி ரெந்தெந்ததேகமெடுத்ததோ அந்த ந்த பாவமாவானேன், அது நானெனத் திடங்கொண்டு கர்த்தத்துவ ங்கொள்வது சீவமுயற்சியன்றோ, சுபாவமென்னலாமா? மடமை. எ ங்ஙன மென்னில்; பிறவியாகவந்த தேகமும் அது வுதித்த இடமும் அவ்விடத்தைச் சார்ந்த மனிதர் முதலியனவும் சொப்பனத்தில் நா னெனவும், எனதெனவும், அன்னிய மெனவும், எவ்வுயிர்க்குந் தோ ற்றுவதுங் காண்பதுவு மன்றித் தான்போய்க் கண்ட இடமும் பொ ருள்களுங் காலமுந்தோற்றுகின்றனவே; சாக்கிரத்தில் அந்தந்த ஆ காரமாகாதவைகள் தோற்றுகின்றனவா, இல்லையே. உயிர்களந்தந்த வாகாரமாவது சுபாவமென்பீராகில் ஆகார பதார்த்தங்க ளிடைவி டாதுதோற்றிச் சுகதுக்கந்தந்து ஆகாரமாகாத பதார்த்தங்கள் தோற் றாமல் சுகதுக்கந் தாரா ததற் கேதென்னை ?

து-விடை—உயிர்களின் மடமை சுபாவமே யன்றி யீசனதுசே ட்டை யன்றென வுணர்க.

ஞா-வினு—மடமையென்பானேன் ?

து-விடை—ஈஸ்வர கற்பிதத்தை நானெனவும், எனதெனவும், அன்னியமெனவும், பார்ப்பதினு லென வறிக.

ஞா-வினு—இது எவர் குற்றம் ?

து-விடை—சீவரது குற்றமே யென வறிக.

ஞா-வினு—ஆனல், சாக்கிரத்தி லுயிர்க ளந்தந்த ஆகாரமாகா திருந்தால் அவஸ்தாத்திரியமும், அவ்வவற்றிற்குரிய காட்சிகளும், உண்டாமா, உயிர்கள்மூன்றிலு நின்று அறிவதா லுயிர்களின் தர்ம மன்று. அவ்வுயிருக்குத் தோற்றும் அவஸ்தாத்திரிய நிலை யெதன து தர்மமோ இப்போதாவது சொல்லெனின் ?

து-விடை—அந்தந்த அவஸ்தையின் தர்மமெனின்; மாறுவா னேன் எனவரும். வருதலி னிது தீராவழக்கா முடியுமென வறிக.

ஞா-வினு—ஆனற்றெளிவ தென்றோ ?

து-விடை—தெளிவதா லிதிலென்ன பயனெனவறிக.

ஞா-வினு—உயிரும், அவஸ்தைகளுங், காட்சிகளு, மொன்றோ, வேறோ என்னு மையந் தவிர்தற் கேதென்னை ?

து-விடை—இதனாலும் பயனென்னை யெனவறிக.

ஞா-வினா—பயனின்றே லவஸ்தாத்திரியச்சுழலில் துரும்புபோ லுயிர்க ளிடைவிடாது மொத்துண்ணுதற்கும், அதனால் வருந் துன்பத்திற்கும், விமோசன மின்றாய்முடியும். இதை யோசியாது பயனென்னையெனக்கூறலாமா? நீர்தானு துவிதாசியர்கட்கெல்லாந்தலைமை யென்றது. போது மிதுவுமக்குத்தெரியாது. இனியொன்று சிறிதாகக் கேட்குதும், அதையாவது சொல்வீரா வெனின்?

து-விடை—அதென்ன வெனக் கேட்க.

ஞா-வினா—பொற்பணி யென்பதிற் சத்தாவது; பொன்னோ, பணியோ? பணியெனிற் பொன்னையன்றி நான்குகாலத்திலு மிருக்கவேண்டும். இல்லாததாற் பொன்னெனிற், பிரிதிவின் விகாரமென்றிருக்கவேண்டும். பிரிதிவோ அணுக்குழூ சையோகமன்றியும், அவ்வணுவோ பரமாணுக்குழூ சையோக மன்றியும், அப்பரமாணுவோ அகம் புறத்தி லிரண்டாம் வஸ்துவாகிற வெளியன்றியும், அவ்வெளியோ சூனிய மன்றியும், சூனியமோ சங்கற்பமன்றியு மிருக்கவேண்டும். இல்லாததாலெங்ஙனஞ் செகத்துண்மை யென்றும், அநாதி நித்தியமென்றுஞ் சாதிக்கவல்லீர். பௌதிகம்; பூதத்தையன்றியில்லாததாற் பூதமைந்தி லொருபூதத்தையாவது காரணகாரியதர்மம் பெறுதிருக்கச் சொல்லவேண்டுமெனின்?

து - விடை—அங்ஙனங் கூறப்படாதாயினுஞ் செகத்தின்றேல், இல்லாமலா பசி தாகங் காமந் தணித்துக் கொள்ளுதற்கிடமாயிருக்கின்றதென வறிக.

ஞா-வினா—பகிர்முகதிருஷ்டியன்றி யந்தர்முக திருஷ்டிபடித்துமறியீர், கேட்டுமறியீர். இத்திறமுடைய சீரா-ஐயங்கிரிபகற்றிடக் குருவாதற் கிசைந்தீர். உமது நிச்சயமெல்லாம் யானைகண்ட குருடர் தீர்ப்பென்னலாகாதா எனின்?

து-விடை—குருபீடசிரோட்ட ரெல்லா மவ்வளவு மூடரா, இங்ஙனஞ்சொல்லாதொழிக வெனப் பயமுறுத்தினன்.

ஞா-வினா—"உபாதான நாட்ட மொருகணமு மில்லார், உபாதேய நாட்டத் துறுதி யொழியார்-அபாயமதைக், காட்டினுங் தூடிப்பர் கண்டீரிவர்குருவா, வாட்டமெங்ஙன் றீர்ப்பரிவர் வந்து" என்றதிக்கென்ன சமாதானஞ் சொல்வமெனின்?

து-விடை—ஆனால் நீரென்ன மதவாதியோ, சொன்னால் விடை தருவனெனக் கூற.

ஞா-வினா—எம்மதத்திற்கும் பொதுவாயிருக்கிற ஞாயவாத மதம், இதனைத் தடுப்பாருமுண்டோ?

து-விடை—அப்படி யென்றா லென்ன பொருள்.

ஞா-வினா—மூர்க்கம்-நம்பிக்கை-மூடம்-இவைபற்றிய மார்க்கங்களை யகற்றல்.

து-விடை—அம்மூன்றினுஞ் சார்ந்ததோ எமது மதம். அது நிற்க; நீ வழிபடுந் தெய்வத்தையாவது கூறென்றனன்.

ஞா - வினா—நான் குருவானா லல்லவோ போதிப்பன். முழுதும் ஞாய முன்னிட்டன்றி எம்மதத்தர் தீர்ப்பையு மேலாத தெதுவோ, அதுவே யெமது கருத்துக் கியைந்த தெய்வம். இதனா லுமக்கென்ன லாபம். வஸ்து சோதனையில் நீரொதில் வல்லீர், அதை யாவது தெரிவிக்க வேண்டுமெனின்?

து-விடை—வஸ்து சோதனைக்கும் பத்திக்குஞ் சம்பந்தமென்னவுண்டு, சோதனை வேண்டாமென வறிக.

ஞா-வினா—ஞாயமுஞ் சோதனையும் வேண்டாமென்னின், எம்மதத்தருக்கு மிது வுடன்பாடாம். யாவர் மதத்தை யானேற்றம்பாலதெனின்?

து-விடை—உன்னிட்டமென்றனன்.

ஞா-வினா—அதுபற்றித்தான் யான் சீடனாதற் கும்மிடத்தில் வினாவப் புகுந்தன னென்னில்?

து-விடை—யான் சொல்வதை நம்பென்றான்.

ஞா-வினா—எம்மதத்தரு மிவ்வாறே சொன்னால் எவர் சொல்லைக் கேட்பதெனின்?

து-விடை—சோதனைதான் யாதோவெனக்கேட்க.

ஞா-வினா—மூன்றவஸ்தையினு நானென்றிருப்பதெது, என்ன பொருள்? வட்டம்-இருகோணம்-முக்கோணம்-சதுரம்-நுண்மை-பருமன் - இவை முதலிய பலவகைப்பட்ட வடிவங்களில் எத்தகையது? வெண்மை-செம்மை - கருமை-பொன்மை-பசுமை - என்னு நிறங்களி லெந்நிறத்தது? வெம்மை-தண்மை-மென்மை - வன்மை-முதலியவற்றி லெத்தகையது? இதனையாவது விளங்கக் கூறுமெனின்?

து-விடை—சித்துப்பொருள் - அதிசூக்குமப்பொருள் - கருத்துப்பொருள் - அருவப்பொருள்-உண்மைப்பொருள் - மென்மைப்பொருள் என்னு நிலையதெனவறிக.

ஞா - வினா—இந்நிலையதென எங்ஙன முணர்ந்தீ ரதனைச்சொல்லுமெனின் ?

து-விடை—சுருதிப் பிரமாணத்தானும், அனுமானத்தானு முணர்ந்தன னென வறிக.

ஞா - வினா—உம்மைப்போல ஆஸ்திகத்திற் பற்பல சமயத்தரும் வெவ்வேறு நிலையினதாகக் கூறினரோ, இவற்று ளெவர்கொள்கை யேற்கப்பாலதெனின் ?

து-விடை—அவரவர்கொள்கையவரவாக்குச்சம்மதமெனவறிக.

ஞா-வினா—இது கேள்விக்குத் தக்க வுத்தரவன்று. இதுநிற்க; செகசீவ பரவஸ்து நிச்சயந் தெரியாது, தத்துவமசியென்னும் வாக்கியத்திற்குத் துவிதஞ்சாதிக்கப்பாஷியஞ்செய்தது என்ன அதிசயம், என்ன அதிசயம். இதனை வியக்க வல்லவர் நும்போன்றவரோ வேறலர். இரண்டுபட்ட வூரிற் குரங்குங் குடியிரா தென்னும் வசனமுங் கேட்டறியீரோ, சிற்றறிவு பேரறிவென்ற விரண்டுமொருங்குபடாத விடத்துயிர்களுக் கென்ன நிலையெனின் ?

து-விடை—அருளென வறிக.

ஞா-வினா—உயிர்களுக்கிப்போ தில்லாததாலும், அன்னியமாதலாலும், எங்ஙனம் நிலையாமெனின் ?

து-விடை—அதையன்றி வேறு தீர்ப்பில்லையென வறிக.

ஞா-வினா—விகாரமென வுன்னாது எப்பொருளையு முண்மையெனக் கோடலிற்சிறந்த நீர், எதார்த்தமெனக்கணித்த திரிபதார்த்தத்துள் பதியைச் சிலர் மண்ணெனவும், சிலர் நீரெனவும், சிலர் அக்கினியெனவும், சிலர் காற்றெனவும், சிலர் ஆகாயமெனவும், சிலர் சூரியனெனவும், சிலர் சந்திரனெனவும், சிலர் ஆத்மாவெனவுங்கொண்டு; பூமிதேவி-கங்காபவானி-அக்கினிதேவன் - வாய்வுபகவான்-ஆகாயவாணி - சூரியபகவான் - சந்திரபகவான்-ஆன்ம தேவதை யெனப் பெயர் தந்து ஆராதித்து வருகிறார்கள். இதன்றியும்; பிரிதிவு காஞ்சிபுரம், அப்பு திருவானைக்காவல், தேயு திருவண்ணாமலை, வாய்வு காளாஸ்திரி, ஆகாயம் சிதம்பரம், என்று யாவருங் காணப் பிரத்தியட்சமாகப் பூசித்துவருகிறார்கள். இது யாராலே யெனின்?

து-விடை—அங்ஙன மங்ஙனம் பரவஸ்து சகளீ கரித்தபடியி ஞலேபூசிக்கிறுர்கள். அதினுற்ருேடமென்னே; நல்லது, ஆன்மாவை யும் பூசிப்பவ ருண்டாவெனக் கேட்க.

ஞா-வின—ஆன்மதிருத்தியே தேவதாதிருத்தி யெனத் தெளி வுகொண்டு ஆன்மாவுக்குக் கணநேரமும் விரதம்-தவமிவற்ருற் பசி தாக காமத் தடைவராமல், அன்னபான போக நித்திரை செய்தும், வியாதிக்குத் தக்க அவுடதங் கொண்டும், நித்தியபூசைதனக்குத்தா னே செய்துவருங் கருத்தைக் காட்டாமற் பரவஸ்துவைப் பூசிக்கிற தாகக் காட்டி யபிநயித்துப் புகழ்பெறுபவரும், கண்டதே காட்சி கொண்டதே கோலமெனச் சுகித்துத் திரிபவரும், எனக் கொள்க. இதெல்லாம் வருதற்கேது வும்மாலன்ருே வெனின்?

து-விடை—வஸ்து நிச்சய மங்ஙன மன்றே பிழை யாமென வ றிக.

ஞா-வின—சரியை-கிரியை-யோக- ஞானமென்னு நான்கனுட் கடையினின்ற ஞானநிலையைச் சரியைகிரியையாகக்கொண்டு சாயு ச்சியஞ்சொல்லப் புகுந்தமையிற் பிழையுமதேயெனக் கூறலாகாதா வெனின்?

து-விடை—எங்ஙனமெனக் கேட்க.

ஞா-வின—ஆண்டானடிமை கோடற்குச் சரியை கிரியையும், மனமொருங்கு படற்கு யோகத்தையும், ஏகத்துவமாதற்கு ஞானத் தையுங் கூறினதன்ருேவெனின்?

து-விடை—மெய்யே; அதனுற் குற்றமென்னே யெனக் கேட்க.

ஞா-வின—சரியைகிரியைகளில் ஞானபாகந் தெரியாதுஞான த்தை யாளலாமா? ஆளவந்தது நீங்களானபடியால் உங்களாலேயே ஞான நிலேக்கும், ஆண்டா னடிமை நிலேக்குந் தோடமிசிரிம்பிக்க லாயிற்று. ஆண்டா னடிமையில் ஞானநிலே சொல்லலாமாவெனின்?

து-விடை—இது நான் நாளே யோசித்துச் சொல்லுகிறே னெ ன்று விடைபெற்றுப் போயினு னெனவறிக.

ஞா-வின—மூன்றுநாள் தரித்தும் அவரைக் காணும லவரிருக் குமிடந்தேடிப் போய்க்கண்டு ஐயா! சரணஞ்சரணம். அதற்கென்ன வுத்தரஞ் சொல்லுகிறீர் சொல்லுமையா வென்றுகேட்க?

து-விடை—நானே பிரமமெனத் திரிவானைப்பற்றிச் சொன்னதெனவறிக.

ஞா-வினு—இரண்டாமகாவாக்கிய மன்றோ; அதினர்த்தத்தைச்சொல்வதினுற் பிழையென்னை?

து-விடை—சத்தமும் சத்தார்த்தமும், வாச்சியமும் வாசசியார்த்தமும், லட்சியமும் லட்சியார்ததமும், அணுவேனுந தெரியாதவரா அநயனஞ் சொல்லி விதிநிடேதமுதலிய கட்டுக்கடங்காமல்மதுமாமிச சையோகத்துக்கே வேதாந்த பாட்டுகளைச் சொல்லித் திருத்தியடைந்து நானே பிரமமெனக் கூறத் தக்கவர் கூடாதென்க.

ஞா-வினு—பத்திகாண்டிகளை வேதாந்திகள் பழிப்பது யாதுக்காகத் தெரியுமாவெனின்?

து-விடை—தெரியவில்லையென்ன.

ஞா-வினுபி—றர் வியக்கவும், தேகபோகம் விர்த்தியாகவும், வந்திப்பதன்றி யீஸ்வரார்ப்பணமாக வல்ல, ஆதலின் குற்ற முண்டோ வெனின்?

து-விடை—இது சரியே; நீஞாயவாதி யென்பது தகும். பல்லாண்டு பல்லாண்டு வாழக்கடவை யென்று வாழ்த்தி யனுப்பினன்.

ரு-வது, துவிதவாதம

முற்றிற்று.

ஸ்ரீ

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

சுா - வ து,

# விசிட்டாத்துவிதம்.

## சாமானியசம்பாஷணை.

ஞா-வி—விசிட்டாத்துவித பதத்துக் கருத்தமென்னை?

வி-விடை—விசிட்டம் - கூடியிருக்கிற, துவிதம - எனப்படும்.

ஞா- வி—எந்த வேதவாக்கியங் காரணமாக விசிட்டாத்துவிதம், நிலைநிறுத்தப்பட்டது?

வி-விடை—தத்வமசி வாக்கியங் காரணமாக வெனவறிக.

ஞா.- வி—இவ்வாக்கியம் அவர்கள் கருத்துக்கிணங்க விடங்கொடுத்த தெங்ஙனமெனின்?

வி-விடை—தத்துவமென்பது; தஸ்யபாவா, தத்துவம்; எனப்பிரிக்கப்பட்டுத், தஸ்யா-பரத்தின்,"பாவா-தாம்மமாக, அசி - ஆனாய், எனப் பொருடரக்கிடந்தது. கருத்து; பரவஸ்துவின் தர்ம்மமாக-ஆனாய். உதாரணம் ப்ராமணதவம்-சூதரத்வம் - சன்யாசத்வம் என்பவற்றில்-த்வமென்பது, தர்மத்தை விளக்கி நின்றாற் போலும்.

ஞா-வி—இங்கே தர்மமென்றதியாதெனின்?

வி-விடை—அவரதெண்ணிறந்த கல்யாண குணங்களே.

ஞா-வி—கலயாணகுணங்களானாயென்பதி னர்த்தமென்ன?

வி-விடை—எத்தகைம் புரியினும் அப்பரவஸ்து வாகாய்; அப்பரவஸ்துவின் கல்யாணகுணங்களி லொன்றாவாய். என்பது தோன்றக் கூறின தெனவறிக.

ஞா-வி—எங்ஙனந் தெரிந்துகூற வந்ததெனின்?

வி-விடை—அவன் சமஷ்டி, இவன் வியஷ்டி, என்னு முபாதிபேதத்தினாலும்; அவன்-சாவக்ஞன், இவன் கிஞ்சிக்ஞன், என்னுங்குணபேதத்தினாலும்; அவன் சர்வகிருத்தியத்திற்குங் கர்த்தா, இவனகர்த்தா, என்னும் பிரபுத்வபேதத்தினாலும்; அவனீயோன், இவனிரப்போன் என்னுமாண்டானடிமைபேதத்தினாலும்; சீவனைப்பர

மெனவும், பரத்தைச் சிவனெனவும், வழங்காமையாகிய பெயர்பே தத்தினாலும்; அவனையன்றி யான்மாவும், அவனது உபாதித் திரிய த்தையன்றி யிவனது உபாதித்திரியமு மில்லாதவபேத காரணகா ரியபேதத்தினாலும்; அவனுக்கிடம் எங்கும, இவனுக்கிட மேகதேச ம், என்னுமிடபேதத்தினாலும், சிவேஸ்வரருக் கெங்ஙன மைக்கியம் வாய்க்கும் கூடாமையா லிந்நிலைமைகளைத்தெரிந்து கூறவந்ததென வுணர்க.

ஞா - வின—இஃதுன் சுயயுத்தியோ, மேற்கோளுளதோவெ னில் ?

வி-விடை—மேற்கோளு முண்டென வறிக.

ஞா-வின—அஃதியாது ?

வி-விடை—"விண்ணுருவ மீசனென்பார் வேற்றுருவஞ் சீவ னென்பார், கண்ணுமிரவியும்போற் காணென்பார் - திண்ணமதாய், அத்துவிதமாகாது" என்பதினானும்; "பேதமானதுவுங்கேளாய்பெ யரானு மிடங்களானும், ஒதருமுபாதியானு முடலானு முணர்வின னும்,பாதலம் விசும்புபோலப் பலதூர மகன்று நிற்பார், ஆதலாலி வர்க் கெந்நாளு மைக்கிய மென்பது கூடாதே" என்பதினானும், உ ணர்க.

ஞா-வின—இதேபிரகாரமாகச் சைவசித்தாந்திமுதலிய பேத வாதிகள் பிரதிவாதிகக; அதனைத் துவிதமெனவும், இதனைவிசிட்டா த் துவித மெனவும், கூறவந்த தெற்றுக்கெனின் ?

வி-விடை—அது செகசீவ பரமாகிய திரிபதார்த்தமுந் தனித் தனிவெவ்வே றெனவும், இது பரமாத்ம வியாபகத்தில் மற்றிரண் டும் வியாப்பியமாகக் கடலில் அலையாதிகள்போற் கூடியிருப்பதால் விசிட்டாத் துவிதமெனவுங், கூறவந்ததெனவறிக.

ஞா-வின—விசிட்டாத்துவிதத்திற்கிங்ஙன மேற்கோளுளதோ வெனின் ?

வி-விடை—உண்டு.

ஞா-வின—யாதெனின் ?

வி-விடை—"தன்னுளே திரைத்தெழுந் தரங்கவெண்டடங்கட ல், தன்னுளே திரைத்தெழுந் தடங்குகின்ற தன்மைபோல், நின்னு ளே பிறந்திறந்து நிற்பவுஞ் சரிப்பவும், நின்னுளே யடங்குகின்ற நீர் மைநின்கணின்றதே" என்பதினாலுணர்க.

ஞா-வி...கடல்நீரு மலையர்திகளு மபேதமாயிருக்க, இதனை த்திருட்டாந்தமாகக் கூறவந்தது சகசீவாகள் பரமாத்மாவுக் கபேத மாயிருப்பதுபற்றி யன்றோ வெனின்?

வி-விடை—ஆம்; உண்மையே, உபமான மெல்லா மேகதேச மே யன்றி வேறல்ல. வியாபக வியாப்பிய விலக்கணந் தோன்ற விங் கே யிவ்வுபமானங் கூறினதென்றறிக.

ஞா-வி—“மண்ணின்விகாரமனிதாதிதோற்றயன்றோ, மண் ணுருவாப் பாாக்க வலியில்லீர்-மண்ணுருவ, பாவமு மென்னென்ன பாவமாப்போகுமோ, ஆவதறியீர்க்கிதெனவாம்” எ-து. மனிதர்-மி ருகம் - பட்சி - நிலத்திலூர்வன - சலத்தி லூர்வன-தாவரம்-அண்டா ண்ட கோடிகளாகத்தோற்றப்பட்ட வடிவங்களனைத்தும், மண்ணின து விகாரரூபமன்றோ, இங்ஙனமிருக்க; இவையனைத்தையு மண்வடி வாய்ப் பார்க்கின், தினை-பாலிட சங்கற்ப விகற்பங்களும், யானென தென்னு மகம்பாவங்களும், பந்தஆனிவிர்த்திகளும், சுகதுக்கங்களு ம், எங்ஙனமுண்டாம். ஆதலின், மண்ணுருவாப் பார்க்கத்தக்க திட் க்ஞான வலியில்லாதவர்களோ! நீங்களா, பகவத் நிலையை யளக்கவல் லீர். போதும்-சமஸ்தநாமரூபங்களையு முன்னே மணணுருவாப் பா வியுங்கள்; முதிர்ச்சியில், அந்தமண்ணுருவ்பாவமும் அப்பாலுக்கப் பாலென்னென்ன பாவமா முடியுமோ, அங்ஙனமாவ தனுபவித்தறி யாத வுமக்கு-நீரிங்கே நாட்டப் புகுந்தவிசிட்டாத்துவித வாதமாகிய விதுஎன்ன பயனுளதாம். எ-று. எனவே; பரமாத்மசோதனையின்றி யமையாதென்பது பெற்றும் ஆதலின், வஸ்துசோதனை யின்றிச் சகசீவபரநிலையி னுண்மை யெங்ஙனம் விளங்கு மெனின்?

வி-விடை—சோதனையாதுக்கு; இருக்கிற சகத்தைக்கொண்டு கட்குப்புலப்படற் கெட்டற் கெளிதிலில்லாத பரம் பொருளைச்சிந்தி த்து வந்திப்பதற்கு யாது சந்தேக முளது. விபரீதமெல்லாம் பேசு கின்றீரென வறிக.

ஞா-வி—“அசத்தைச்சத்தென்பி ரசத்தென்பீர்சத்தை, அச த்தறியீர் சத்துக்கயலா-நிசத்தையெங்ஙன், மாறன்போற்காணவலீர் மாசற்றுன் நீர்வெமக்காம், ஏறுமோ நுஞ்சொலெமக்கு” எ-து. அ சத்தெனப்படுமவற்றை யெல்லாஞ் சத்தே யென்றும், சத்தென்பது யாதோ அதனை யசத்தே யென்றுங், கூச்சமின்றிக் கூறுவீர். அன் றியும்; சத்தென்பதற் கன்னியமாகவும், அசத்தோர் முதலாகவும்,

வேறு பிரித்தறிதற்கு வகையறியீர். எம்பெருமானாகிய சடகோபனை ப்போ னிசவடிவமாகிய சத்தை யெங்ஙனங் காணவல்லீர், அந்த மா சற்ற சடகோபரது தீர்ப்பே யெமக்குத்தீர்ப்பாகும். அந்நிலே யனு வுங் கேட்டறியாத வுமது தீர்ப்புமொழி யெமக்கெங்ஙனஞ் செவியி லேறப்பெறும்.எ-று. எனவே; சுருதியுத்தி யனுபவத்துக் கொவ்வா மொழியென்பதாயிற்று. இங்ஙனமிருக்க ; உமது வசனமேற்கப்பா லதோ வெனின் ?

வி-விடை—அனாதியாய்த் தொன்றுதொட்டு வந்த பாகவதாஎ் யாவரு மிங்ஙனம் விசாரித்ததன்றே, பரமவைகுந்தத்தில் நித்தியசூரி யானது இதென்ன புதுமை; சிலரோ யன்றிப் பலருமன்றே, இவ்விரு திறத்தரும் திருத்தொண்டு மேலீட்டாலும், பத்தி மேலீட்டாலும், ஈஸ்வரார்ப்பண மேலீட்டாலும், நம்பிக்கை மேலீட்டாலு, மேற்கதி யடைந்தனரென வேதாகம சீதைகளும், புராண இதிகாசங்களும், அறுபத்துநாலுகலைகளு முறையிடுவதினல் முக்கியமாய் வேண்டுவ தின்றென வறிக. பேசின் முடிவின்றி விரியும்.

ஞா-வினா—இதுநிற்க; முன்னர்பரமாத்மவியாபகத்திற், சிற்ச டபேதங்க ளனைத்துஞ் சேடமின்றி யடங்கி யபேதமாய்க் கூடிநிற்ப து விசிட்டாத்துவிதமென்றீர் ; இது வேதசம்மதமா, புருஷ சம்மத மா? வேதசம்மத மெனின், ஞாயமிருக்க வேண்டும். புருஷ சம்மத மெனின்,அநுபவமிருக்கவேண்டும் இதில்நின்கருத்துயாதெனின்?

வி-விடை—ஞாயங் காரணமாகவாதலின்வேதசம்மதமேயென் றனன்.

ஞா-வினா—எங்ஙனமெனின் ?

வி-விடை—பேதமெனிற் பரிபூரணதோடமும், அபேதமெனி ல் நிர்விகாரதோடமும், பேதாபேதமெனில் விவர்த்ததோடமும் வ ருமென்பீர் ; இங்ஙனமெல்லாம் பாராதுகேட்கில் சொல்லுவன். அ தாவது ; வேதம் ஈசுரவாக்கியமாதலி னவர் ஞாயமின்றிச் சொல்லு வாரா? யுத்தி யாதுக்குச், சுருதியே எமக்குப் போதுமானபிரமாண மென்றனன்.

ஞா-வினா—இப்படியே மற்றத்துவிதி - அத்துவிதிகளும் சொ ன்னல், மூவருக்கும் வாக்கியமொன்றல்லவோ, இவ்வொருவாக்கிய ம் இம்மூன்றவசரநிலே யுடைத்தெனக் கருதி யன்றோ மூன்று பாஷி யக்காரரும் மூன்றுவிதமாகப் பாஷியஞ்செய்தார்கள். வாக்கியயோச னையின்றிச் செய்வார்களா? செய்வார்களெனின், மூடராகவேண்டும்.

அவர்கள் கூறியபாஷியங்களை யேம்பவரும் மூடராகவேண்டும்; அங்ஙனங்கூறலாமா, கூடாதே யிதுபற்றி யாது கூறுதியெனின் ?

வி-விடை—இம்மூவரும் பண்டிதத்திறத்திலேற்றக்குறைவின ரன்றே; யிவர்கள்மேற் பழிகூறுவது கூடாது. அவர்களது யுத்தியும் ஞாயமு மெமக்குத் தோன்றவில்லை யென்றனன்.

ஞா-வினு—ஆராய்ந்து தெளிவதற்கு ஞான் போதிக்கப்புகுவா னேன் ?

வி-விடை—பகவத்தியானஞ் சிறிது மெண்ண மில்லாதார்க்கே யன்றி யேனையோர்க்கன்றென்றனன்.

ஞா-வினு—அவ ராரொளின் ?

வி-விடை—முற்றுந்தெளிந்த குருபீடத்தலைவனென்றனன்.

ஞா-வினு—அவனைக் காட்டவேண்டு மெனின் ?

வி-விடை—அங்ஙனங்காட்டிச் செய்தியெல்லாந் தெரிவித் துற வாக்கித் தனதிடத்திற்சென்றனன்.

ஞா-வினு—அப்பால் நடந்ததென்னை ?

வி-விடை—ஞாயவாதியானவர்; குருபீடத் தலைவனை நோக்கி, யையா ! மூன்றவஸ்தையினையும், மூன்றவஸ்தாக்காட்சிகளையும், மா றாநிலையதெனவும், அந்தந்தாவஸ்தாவளவு தோற்றத்ததெனவும், யா வரு மனுதினமுங் காணுந் திரிசியானுபவமாதலா லிவை யிரண்டுங் தாமல்ல, இவற்றைத் தம்மாலறியப்பட்டனவெனத்தள்ளி யிவற்றோ டு சலட்சணமாகவும, விலட்சணமாகவும், நின்றறியுந் தம்மைத்தனி யே ஐயந்திரிபறக் காட்டவல்லா ரன்றோ தலைவனையுங் காட்ட வல்ல ராவார்; இதனை மறந்து மதத்தர் நாட்டு நிலையுமொன்றுதானோ வும து நிலையுங் கூறுகவென்றனர் அதற்கு விசிட்டாத்துவிதியும் அல்ல வென்றனர்

ஞா - வினு—ஆனால், தலைவனையறிந்து பூசிப்பது அறிவாதலி னவ்வறிவே தானென்பதற்குப் பொருளோ, வேறோ, வெனின் ?

வி-விடை—அறிவே யென்றனன்.

ஞா-வினு—அவ்வறிவு வுருவமோ, அருவமோ, ரூபாரூபமோ? உருவமெனின், நனவில் சடமாகிய தூலவடிவம். அருவமெனின், கே வலத்திற் சடமாகிய சூனியவடிவம். ரூபாரூபமெனிற்கனவிற்சடமா கிய சாயாவடிவம். இம்மூவடிவமுந் தன்னாலறிதற்பாலவாதலின் தா னல்ல; ஆனால் தானவது தான் யாதோவெனின் ?

வி-விடை—அறிதம்பால தியாதோ வதுவென்றனன்.

ஞா-வினா—அது தர்மம்; அதி னெதார்த்த விலக்கணம் யாதெனின்?

வி-விடை—சத்துஞ் சித்து மென்றனன்.

ஞா-வினா—இதி னர்த்தமென்ன?

வி-விடை—திரிகாலத்துமுள்ளது சத்து-அறிவது சித்து என்றனன்.

ஞா-வினா—ஓர் முதலுக் கிலக்கணமாதலின், அந்தமுத லின்னதெனத் தெரிவிக்கவேண்டுமெனின்?

வி-விடை—உபாதித்திரியவாவினதெனின், அவை தன்னாலறியப்பட்டதாதலானும், அவைமாறியக்கண்ணும் தானிருந்தறிதலினானும், அவைதானல்லவென்பீர். சாத்துவித-ராசத - தாமதமெனின், அது தன்பால் வந்து அகலத்தக்க குணத்திரயமாதலின், அதுவுந்தானல்லவென்பீர். அபிமானத்திரியமெனின், தன்னாலபிமானிக்கத்தக்கதாதலி னதுவுந்தானல்லவென்பீர். சீவாத்மா-அந்தராத்மா-பரமாத்மா வென்பவற்றுள் சீவாத்மாவெனின், உபாதித்திரயந்தானல்லாவிடத்துத்தானாகுமா வென்பீர். அந்தராத்மா வெனின், உபாதித்திரயந் தானல்லவெனக்கண்டு கழன்ற வவசர நிலையாதலின், அதுவுந்தானல்லவென்பீர். பரமாத்மா வெனின், உபாதித்திரய முண்டானாலன்றோ, அவைதானல்ல அவற்றிற்கு விலட்சண சலட்சணமாயிருக்கு நிலைதானென்னலாம், அதுவுந் தன்னால் விளைந்த ஞானவத்தியாசமன்றோ; அதுவுந் தானல்லவென்பீர். இதற்கென்னசெய்வேனென்றனன்.

ஞா-வினா—ஆனால்; தானென்ப திருந்துதானே யித்தனை பகுப்புந் தெரிவிக்கின்ற துனக்கு எட்டாததினாற் சதசத்தென்னலாமா?

வி-விடை—கூடாது.

ஞா-வினா—ஆனால் யாதுதானோ?

வி-விடை—ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்து மவ்விலக்கணங்களைத் தன்னி லொத்துப்பார்க்கு மனுபவஞ் சற்றுமில்லை னெங்ஙனஞ்சொல்வேனென்றனன்.

ஞா-வினா—"தானல் லவற்றையெலாந் தானென் றறியவலீர், தானிருக்கு முண்மைநிலை தாமறியீர்-கோனிருக்கும், உண்மை நிலைகூறவலீர் ஓஓ மாச்சிறந்தீர், நுண்மையுணா வெங்கே நுவல்." எ-து.

தானல்லாத வுருவ மருவம் ரூபாரூபமாயுள்ள தத்துவங்களி லொவ் வொன்றையுந் தானென்றறியத்தக்க வலி மிக்கீர், ஆனால்தானென்று மொருபடித்தாயிருக்கு முண்மைநிலை யிஃதென்றறியீர், நீரா ; எவ் வெவற்றிற்குந் தலைமையா நின்றுள்ள பகவத்நிலையி னுண்மையைக் கூறவல்ல ரானீர். ஆச்சரியம் ஆச்சரியம். இவ்விலக்கணவழியில் மி கவுஞ் சிறப்புற்றீர், உமக்கு நுட்பவறி வெங்ஙனே காண்கிலம், உள தேற் சொல்லுதி யெனக்கேட்க ?

வி-விடை—எங்ஙனஞ் சொல்வ னென்றனன்.

ஞா-வினா—செகசீவ பரநிலை யின்னதெனக் கணிக்கறியாத நீர், எங்ஙனம் போதக குருவாகச் சம்மதித்தீர், இதுநிற்க; இன்னொன்று விசாரிக்கப் புகுதுமென வினவ ?

வி-விடை—அங்ஙன மாகுக வென்றனன்.

ஞா-வினா—"உலகெனி லொன்றைபதற் குள்ளபெயர் வேறெ ன், சொலற்கிலையேற் றேற்றமோ சொல்லோ-பலவுந்தான், இப்படி யே யாகுமெனி லென்னுகு நும்வாதம், உப்பில் கறிபோ லுவனர்." எ-து. உலகென்பது சொல்லோபொருளோ; பொருளெனில்,யாதென வரும்-இஃதென வொன்றைச் சுட்டில்-அதற்குரிய பெயர்வேறிருப் பானேன் வேறிருப்பதால் அப்பொருள் உலகெனப்படுமோ ? சொ ல்லப்படாதெனில் தோற்றன் மாத்திரப் பொருளோ, சொன்மாத்தி ரப்பொருளோ? எனெனில்; இப்படியே சகல பொருள்களுந் தத்த மக்குரிய சிறப்புப்பெயர்களை யேற்றிருக்கு மாயின், உலகெனற்குப் பொருளின்றி முடியும். முடியுமாயி னுமதுவாதம் யாதுக்கு? உப்பி ன்றிய கறிபோ லாமே யெனின் ?

வி-விடை—தோற்றன்மாத்திரமுஞ் சொன்மாத்திரமுமாயின், பசி - தாகம்-காமம் - தவிப்பு முதலிய வற்றை யுலகந் தணிக்குமா ; தணிப்பதால் மித்தை யென்னலாமா, கூடாதெனவறிக.

ஞா-வினா—"முதற்கருவி தள்ளிமுதலெது வென்றாயில், எது வுமலவென்றேயேகும்-எதன்முடிவும், எட்டீரடியெங்ங னெட்டுவீர் தன்னையன்றிக், கட்டமெனிலேன்வாதங்காண்." எ-து. முதற்கருவி யாகியமண்ணாலை யன்றிக் கடபடமோர் முதலாகுமா ; அதுபோல, எவ்வகைப்பட்ட பொருள்கட்கு முள்ள முதற்கருவியைத்தள்ளி மு தலெது முதலெதுவென்றாராயுமிடத்து எதுவுமுதலல்ல முதலல்ல வென்றேபோகும். இங்ஙனம்போவதால் எதன்முடிபு மெட்ட வகை

யறியீர். அவ்வவற்றிற் காதியையுந் தன்னையன்றி யெட்டவகை யெங்ஙனை மறிவீர், அவ்வவற்றின் முத்திக்கருவியைத்தள்ளி முதலைக்கண்டு பிடித்தலைகூடாது. அங்ஙனங்கூடாதமுதலுக்காதியு மந்தமுமங்கணிக்கப்புகுவது மிகவுங் கட்டமெனில, விசிட்டாத்துவிதத்தை ஸ்தாபிக்கப் புகுந்த வாதமுமக்கேன், அதனாலென்ன பயனுளதாமெனின்?

வி-விடை—பகவத் சன்னிதியில் நாங்கள் நித்திய சூரியாபோலிருப்பதாகப் பாவித்திருக்குந்திடமே பயனெனவறிக.

ஞா-வினா—அந்தந்த மதஸ்தரு மிவ்வாறே தத்த நூல்களிற் சொல்லியவாறு பாவிததிருப்பதே முத்திப்பயனாகவேண்டும், அங்ஙனங் கொள்ளினொருவர் பயனை யொருவ ரேலாத தற்கேதென்னை யெனின்?

வி-விடை—ஒருவர்நிச்சய மொருவாக்கேலாததுபறறி யென்க.

ஞா-வினா—யாதினாலெனில்?

வி-விடை—பரிட்சையில்லாததினா லென்க.

ஞா-வினா—அதுநிற்க; பதியைப பற்றிப் பேசுமிடத்திற் பேசுதும். இங்கே பதியைப் பாவிப்பதும் பற்றன்றோ வெனபதைப்பற்றி, "எப்பற்றுந் தங்கற் கிடந்தா னுளமன்றோ, எப்பற்று மல்லவே யெவ்வுளமும்-ஒப்பில், பரமுமயலதனாற் பற்றே சுயம்பு, தெரிய வுணையாதோ தெளிந்து" எ-து. முன்னர் புறப்பற்றா யுள்ளசகத்தடிப்பினுண்மை வடிவீதென விசாரித்துத் தெளிந்தாயில்லை, இப்போதகத்தடிப்பாகிய அகப்பற்றைப் பற்றிக் கொஞ்சம் விசாரிக்குதும். யாதெனில்; எந்தவிதப்பாசமா யுள்ள பற்றுக்களுந் தங்கற் கிட முள்ளமல்லவா? உளளமாயினு, மெந்தெந்தபற்று மந்தந்த வுள்ளத்தை விட்டு நீங்கலா லெந்தவுள்ளமு மெந்தபற்றுமல்லவே? விடயப்பற்று அன்னியமாதலினீங்கும்.. பரவஸ்துவைப்பற்றும் பற்றோ வெனில், அதுவு மன்னியமாதலால் விடயம் போலோர் பற்றாகும். ஒப்பற்றதேயெனின், பொன் விலங்கு போலாம். ஆதலின் சுயம்பான பற்று யாதோ விதனைத் தெளிந்து விளங்கச் சொல்லுதி. எ-று. எனவே; எவ்வுளத்திற்கும் விடயமும் பரமுமன்னிய மாதலால் சுயம் பல்லவென்ற வாறாயிற்று. இதற்குயாதுவிடை கூறுதி யெனின்?

வி-விடை—என்ன சொல்லினும் பரத்தையன்றிச் சுயம்பில்லை யெனவறிக

ஞா-வி௫—இப்போது நமது்ளா மமலலாம பரவடிவமாக வி ல்லேயே, யிதுவே யன்னியமா மென்பதற் குதாரணமா மெனின் ?

. வி-விடை—எந்தவகப் பற்றிற்கும் நித்தியத்துவமில்லாமையா லிதுபோல்வதன்றென வறிக.

ஞா-வி௫—நித்தியத்துவமாறு லிபபோதிருக்காதா வெனின் ?

வி-விடை—இருப்பது தெரிய வில்லே யெனவறிக.

ஞா-வி௫—யாதினுலெனின் ?

வி-விடை—அஞ்ஞானத்தினுலே.

ஞா-வி௫—அஞ்ஞானத்திலே பரமும, ஞானத்திலே விடய மும், தெரியா தன்னியோன்னியாபாவ மானதால் எப்பற்றுஞ் சுய மபல்லவே யெனின் ?

வி-விடை—ஞாயமே; யிதற்கென்செயவே னென்றுகூறிச், செ கத்துண்மை யல்லாதாயின்-சத்துபோற் ரேற்றுமா வென்றனன்.

ஞா-வி௫—மெய்யே, யுனது சிந்தை வேருயின் பொறிக ளிருந் தும் விடய மறியலாமே; சிந்தையொன்றுபட்டவிடத் தன்றே; அந்தந்த விடய மந்தந்த பொறிகட்கு விளங்கும். ஆதலின் ஆன்மா தன்சத்தைக் கொடுத்தவிடத் தன்றே அதுசத்தாக விளங்குவதும், அதனேச்சத்தாகக்காண்கின்றதும், வேறுண்டோ வெனின் ?

வி-விடை—மெய்யே, அனந்தவிதபேதமாயுள்ள யந்தரங்களுக் கசைவாகிய சத்தைக் கொடுத்தமாத்திரத்தில் ஒவ்வொன்றுந் தத் தமக்கியைந்த வண்ணம் புடை பெயர்ந் தனந்தவித பயனேத்தரும் இதில், யந்தரங்க ளில்லாவிடத் தெதற்குத் தன் சத்தைக் கொடுப்ப து. அதுபோல; முன்னமே பிரிதிவு முதலிய தத்துவஙக ளுண்டா யிருந்தால்தானே, யறிவு தன் சத்தைக்கொடுத்து அவற்றைச்சத்தா க்கி யவற்ருலாய பயனே யனுபவிக்கின்றது, என்னு மிடத்தில் சகத் தனுதி நித்தியமென்பதுதானே; விளங்குகின்றது. ஆதலால் மித்தை யெனல் கூடாதெனவறிக.

ஞா-வி௫—யாதேனும் விகார மென்னு திருக்கச் சுயமபொன் றுணர்த்தி லேற்குது மெனின் ?

வி-விடை—அங்ஙனம் பார்க்கி லெதுவு மில்லேயென்றனன்.

ஞா-வி௫—இதுகாறுந் திரிசிய முண்மையாகத் தோற்றலேப்ப ற்றிக்கூறினும். இனிக் காண்டலேப்பற்றிக்கூறுகின்ரும. அதாவது,

௰௪

கண்ணுக்குங் கருத்திற்கும் லட்சியார்த்தமாக வுலகினைச் சத்தியமெனக் கொள்ளலாமா வெனின்?

வி-விடை—தோற்றுவதனாற்கொள்ளவேண்டிற்றேயென்றனன்.

ஞா-வினா—தோற்ற முண்மையல்லவென் றிதுகாறுஞ்சொல்லினம். அதனை யிருந்தவண்ணங் காண்கின்றது மூடமன்றோவெனின்?

வி-விடை—சகமிருப்பதுபற்றியன்றோ, சகலவித்பேத வினைகளுமொவ்வொன்றிற் கனந்த சாஸ்திரங்களுண்டா யிருக்கின்றன. இங்ஙன மிருக்கச்; சகத்தை யிருந்த வண்ண மறிகின்றது மூடமன்றென வறிக.

ஞா-வினா—மூட மன்றெனிற் சகத்து விருப்பு வெறுப்பென்பதில் ஒன்றின்பாலதாகாது இரண்டின்பாலதாவானேன்?

வி-விடை—சுபாவமென்றனன்.

ஞா-வினா—தோன்றுமை யாலோ வெனின்?

வி-விடை—அல்லவென்றனன்.

ஞா-வினா—எங்ஙன மெனின்?

வி-விடை—சீதளம், உட்டணம், தண்ணீருக்கும் அக்கினிக்கும் சுபாவமெனின், எங்ஙனமெனக் கேட்கலாமா, சுபாவத்துக்கு விதியுண்டோ வென்றனன்.

ஞா-வினா—சகத்து விருப்புவடிவெனின், பின்னை வெறுப்பு வடிவாவானேன், வெறுப்புமயமாயது மீண்டும் விருப்பு மயமாவானேன், இது அதனது சுபாவமன்று; அறிவினது விகற்பசிந்தையேயன்றி வேறன்று. எங்ஙனமெனின், அறிவானது; ஒருபொருளின் முதற்கருவி யாகாரமாகாவிடத்துப் பிரியப்பொருளாயின் பிரியத்தையும், அப்பிரியப் பொருளாயின் அப்பிரியத்தையும், இவ்விரண்டுதன்மையுமல்லாத புன் முதலியனவாயின் பொதுமையினையும், தரும். முதற்கருவி யாகாரமான விடத்துப் பிரியம்-அப்பிரியமாயும், அப்பிரியம் அதுவு மின்மையாயும, பிரியாப்பிரியம்-உபயசூன்யமாயுமிருக்கும்; இதெல்லா மறிவின் விருத்தி பேதமேயென் றனுபவமனைவர்க்கு மிருத்தலாலும்; "தானுண்டாயிற் சகலமுமிருக்கு" மெனச்சான்றோர் வசனமிருத்தலாலும், இதற்குத்தரம் யாது கூறுதியெனின்?

வி-விடை—சொல்லற்கிடமின்றேனும், எல்லாமுண்டாயிருக்க வனுபவமிருத்தல் லெங்ஙனஞ் சமமதிப்பே னென்றனன்.

ஞா-வினா—"ஆய்தலுக்குமுன்பி னனைத்துமா யன்றாகிப், போய்வுறுவ தெத்தருமம் போவதெங்ஙன்-ஆய்தற், கியைந்தவறிவுலகே லேன்மாறவில்லை, மயக்கறுக்காய்க் கேனிந்த வாய்." எ-து. எல்லாமுண்டாயிருக்கு மனுபவ மெய்யாயின், ஒன்றுகேள், இச்சகம்-பேத மபேதமென்னு மிரண்டுவாதத்தானு மாராயப்புகுதற்குமுன்னர் சகல நாமரூப வடிவங்களாயும், பின்ன ரிவை யனைத்து மல்லாத தாயும், போவது அறிவினது தர்மமா, செகத்தினது தர்மமாவெனவரும்; இங்ஙன மாராய்தலினு லென்ன பயனென்னை யாயின், இங்ஙன முண்டாய வையமகலுமாறுதா னெங்ஙனே வெனவரும், ஆராய்தற் கியைந்த வறிவினது தர்ம மென்னையாயின், சகலகேவலமாய்நின்று அவற்றை யந்தந்த வவசரத்தில் அவற்றிற்குச் சாட்சியாய் நின்றுணர்வ திரண்டிடத்து மாதலா லிங்ஙனமாறுகை யறிவினதன்று. செகத்தினதென்னையாயின், முன்னும் பின்னு மிருந்த வண்ண மிருத்தலா லிங்ஙனமாறுகை சகத்தினது தர்மமன்று. யோசியா திவ்விரண்டினதென்னையாயின், ஏன் மாறவில்லை யென வரும். இதுதொலையா மயக்க வழக்கென்னையாயின், இவ்வாறுள்ள மயக்கமனைத்து மறுதுத்தெளியாத வுனக்கு விசிட்டாத்துவிதத்தை ஸ்தாபிக்கப்புகுந்த விந்த வாயே னிதனுல் பய னென்னை யெனின்?

வி-விடை-முன்னோர்கள் தெரியாமலா நிலைநிறுத்தினார்கள், இது மூடமன்றென வறிக.

ஞா-வினா—முன்னோர்கள் காரியகாரணமற்றது பரமாத்மாவென்பதற்கு நீ சம்மதியாத தென்னை?

வி-விடை—அதற்கருத்தம் வேறிருப்பதுபற்றி யென வறிக.

ஞா-வினா—அஃதியாதெனின்?

வி-விடை—அதி ரகசியமென வறிக.

ஞா-வினா—அறியத்தக்கார் யாரெனின்?

வி-விடை—அடிமை புகுந்தா ரென்றனன்.

ஞா-வினா—இப்படியே சகல மதஸ்தரும் தமக்குத்தோன்றுதவிடத்தே சொல்லுகின்றார்களே; அதிலே யிது சிறந்ததென்னை யெனின்?

வி-விடை—அதனாற் கதுசிறந்த தென்றனன்.

ஞா-வினு—சகசிருஷ்டியைய பற்றிப் பலசமயத்தரும் தத்தம க்குத் தோன்றியவா றொருவர்க் கொருவர் முரணுக வெழுதி வைப் பார்களா ; யாதுஞ் சிறந்ததன்றே யெனின் ?

வி-விடை—பயபத்திக் கிணங்கினூர்க்குச் சிறந்ததாகவும், இணங்காதார்க் கன்றாகவு, மிருப்பது மெய்யே யென்றனன்.

ஞா-வினு—பத்திமார்க்கத்துக் கியைந்தவாக்கு வஸ்துபரி சோதனையும், பாவா பாவாதீத மாதலும், முதலிய நிலையேற்ற பரிபாகங்கள்யாதுக்கு? இங்ஙனமிருக்க; யோக, ஞானங்களைப்பற்றி யுக்தி யனுபவமின்றித் தெளிந்த ஏட்டுஞான மென்னபயன் றருமென்றதை யெடுத்தாள்வதோ வெனின் ?

வி-விடை—கருடன் முதலிய பறவைகள் எவ்வளவுதூரத்துயர்ந்து பறக்கினு மமைதலுக் கிடந்தரையாதல்போல, யோகஞானங்களிற் சிறந்த ததாகார நிலைக்கு மெல்ல மெல்ல தத்துவங்களை யெல்லாந் தாண்டி யினிமேலென்ப தில்லாமற் பற்றிநிற்பினும், பிராரத்த முடிவில் ஞானதனுவைத் தருகவெனப் பகவத்யானஞ் செய்வதவசியமான வேண்டுகை யாதலால், முடிவிலும் ஆண்டா னடிமை விடம் பால தெங்கே யென்றனன்.

ஞா-வினு—இரண்டற்றது ஞான மாதலால், நீர் சொல்லியது ஞான நிலையன்று. அதுநிற்க ; சகநிலை யின்னதென விதுகாறுமை யந் திரிபறத் தெளிவிக்கத் திறமில்லீர் ; இனியாவது, சீவ நிலையைப்பற்றி விசாரிப்பமா வெனின் ?

வி-விடை—அங்ஙன மாகுக வென்றனன்.

ஞா - வினு—"நானென்ப தெத்திணைபா னண்ணுவதான் மாற லெவன், நானென்று வில்லையுயிர் நாடுங்கால் - நானென்னல், ஆமே லணுமகத்திங் கல்லவுபாதியதால், ஆமாறு தானென்னறை" எ-து. ஆன்மா வின்னதெனப் பின்னர் கணிக்குதும். நானென்பது திணை பாலிடத்தினுள்; எந்ததிணை பாலிடத்தது; அன்றெனின், திணைபாலிடமாகவிருக்குமா? இருப்பதால் எத்தகையது. அந்தந்தப்பிறவியியல்பினதெனின், எந்நாளுக்கெந்தபிறவிசுதந்திரம். சுதந்திரமாயின், மாறுமா? மாறுவதால்சுதந்தரமல்ல; சுதந்த்ரமல்லாததால் நானென்றுத வுயிர்களுண்டா? இல்லை. ஆனால் நானெனலைப்பற்றி யாராயுமிடத்து எவ்வளவு பிரமாண முடையது ; அணுமகத்தெனில், அது

உபாதியாதலால், நானென்பதுமல்ல, அதினளவுமல்ல, என்னுனிரு பிக்கலாகாதெனின், ஆகிறவிதந்தா னெப்படி சொல்லுதி யெனின்?

வி - விடை—இல்லாத கேள்வியெல்லாங் கேட்கின்றனே, நீ வா பாடி யென்றனன்.

ஞா-வினு—ஆனுலின்னென்று கேட்கின்றனன் அதுஞாயமோ, அல்லவோ வெனின்?

வி-விடை—யாதென்றனன்.

ஞா - வினு—"அல்லவெனு தோர்பொறியி னங்தரங்க மாமுடிவை, வல்லவர்களேற்க வகுத்துரைக்கில் - சொல்லவலாய், ஆன்மாவை லட்சணத்தோ டானபரிட்சையுடன், தான்குருவென்றெண்ணி லென்ன தான்." எ-து. ஞானேந்திரியமைந்தனுள், ஒன்றை யெடுத்துச் சோதிக்குமிடத்து, அல்ல அல்லவெனப் போகா தத னந்தரங்கமானமுடிவை யவ்வனுபூதியில் வல்லவர்களேற்க வகுத்துரைப்பையாயின், ஆன்மாவென்ப தின்னதென அதனை திலக்கணத்தோ டொத்த பரிட்சையினு லதனை விளங்கச்சொல்ல வல்லனுவை. இங்ஙனமாய திறமை தன்பா லில்லாவிடத்துத் தன்னைத்தான் குருவென்றெண்ணிக்கொள்வதாலாய பயன்யாது. இதற்கு யாது கூறுதி யெனின்?

வி-விடை—இதெல்லா மெமக்கு வேண்டுவ தின்று, ஆண்டானடிமைத்திறங்கூறப் போதக குருவானே மென்றனன்.

ஞா-வினு—இன்னொன்று சிறிய வினு கேட்குது மெனின்?

வி-விடை—யாதென்றனன்.

ஞா-வினு—திரிபுடி யென்பது யாது?

வி-விடை—ஞாதுரு-ஞானம்-ஞேயமென்றனன்.

ஞா-வினு—ஞேயமென்பதறிபடுபொருள்; அது உலகம. அது இன்ன நிலையதென்றும்; ஞானம்-அறிவது யாதோ அஃதின்ன நிலையதென்றும்; ஞாதுரு அறிவான், அவன் இன்ன நிலையினனென்றும்; கூறத்தெரியாது நின்றனே. இது நிற்க; திரிபுடித்தோற்றமு மறைவு மெங்கேயெனின்?

வி-விடை—பகவானிடத்தென்றனன்.

ஞா-வினு—எங்ஙனந்தெரியுமெனின்?

வி-விடை—சுருதி சம்மதமென்றனன்.

ஞா-வினா—என்ன ஞாயத்தாலெனின் ?

வி-விடை—ஈஸ்வரவாக்கியத்திற்கு ஞாயம் யாதுக்கென்றனன்.

ஞா-வினா—புலமைத்திற மிக்கார் வாக்கியமல்ல விதென்பதற் கடையாள மென்னேயெனின் ?

வி-விடை—நெறிபிறழார் வாக்கிய மிங்ஙன மிருக்கினும், அஃ தாகாதென்றனன்

ஞா-வினா—எங்ஙன மெனின் ?

வி-விடை—அது கேளாதே யென்றனன்.

ஞா-வினா—ஞாயமின்றோ வெனின் ?

வி-விடை—சபிப்பனென்றனன்.

ஞா-வினா—மூர்க்க ரன்றோ வெனின் ?

வி-விடை—சாபானுக்கிரகமுள்ள சான்றோரெல்லா மூர்க்கரோ வென்றனன்.

ஞா-வினா—தக்ககாரணங் கண்டா லன்றிச் சபியாரென வறிக. அதுநிற்க; அகம்புறத்திற் காணப் படுபவைக ளனைத்தும் திரிசியம ன்றோ, அவைகள் தத்தமக்குரிய காரணங்களி லொடுக்கிக்கொண்டு போகப் போக அந்தந்த வாகார மாகியும், நிலையாததால் மனதுக் கெந்த வாகாரஞ் சுதந்தரமோ கண்டுசொல்லுதி யெனின் ?

வி-விடை—ஆராய்தலில்லாததா லெதுவுஞ் சுதந்தர மல்லவெ ன்றனன்.

ஞா-வினா—ஆராய்ந்த விடத்தாவது சுதந்தர வாகாரம் யாதெ னின் ?

வி-விடை—பகவத்தாகாரமே வேறின் றென்றனன்.

ஞா-வினா—விடயம்போ லதுவு மன்னியமெனின் ?

வி-விடை—உயிர்க் குயிரான துணையாதலின் வேறன்றென வுணர்க.

ஞா-வினா—இப்போ தல்லாததால் அப்போ தெனின், அன்னி யோன்னியா பாவம்வரும். எப்போதுந் தன்னைவிட்டு நீங்காததால் வராதெனின், இப்போது வந்ததம் கேதென்னையெனவரும். இங்ங னமுடிவு பெருமையால் எதுவுமனதுக்குச் சுயாகாரமன்று. இதைக் கணிக்க வகையின்றிய நீரா ஆன்மநிலையைக்கணிக்கப்புகுந்தீர். போ துமடக்கும்; பரத்தி னிலையு மிவ்வாறுகாமற் கூறெனின் ?

வி - விடை—அகண்டபரிபூரண சச்சிதானந்த சுயம்பிரகாச சொரூபமெனின், தோடமென்னை யென்றனன்.

ஞா - வி௲—கண்டத்தைப்பற்றி யகண்டமெனவும், ஏகதே சத்தைப்பற்றிப் பரிபூரண மெனவும், அநிர்த சடதுக்கத்தைப்ப ற்றிச் சச்சிதானந்தமெனவும், கற்பிதத்தைப் பற்றிச் சுயம்பிரகாச மெனவுங், கூறவந்ததே யன்றி யிது பரவஸ்துவுக்குரிய எதார்த்த லட்சண மன்று. மற்றலட்சணங்களு மிதுபோல்வனவாம். யாதினு ந்தாக்கற்றதெனின், எல்லாமா யென்றுரைப்பானேன்? சிருட்டிக்கு முன்தன்னைத்தவிரத்திரணமுமில்லாததாலெனின், அல்லவுமா யெ ன்றுரைப்பானேன்? சமஸ்தமும் நசிக்கினுந் தானசியாததாலெனின், சமஸ்தமுந் தன்னைப்போ லநாதி நித்திய மென் றுரைப்பானேன்? சித்து சடமென்பவற்றுள்; சித்தாகிய சராசரங்களுடல்க ளெடுத்தெ டுத்துக் கணக்கின்றி யழியினும் தாமழியாததாலும், சடரூபமாகிய பிரிதிவாதிபூதபௌதிகங்கள் தத்தமக்குரிய மூலகாரணங்களி னின்று விகாரித்தழிந்து, மீண்டுமீண் டிங்ஙனங் கணக்கின்றி யிங்ஙிலையதா யினும் அவ்வவற்றிற்குரிய மூலாதாரமழியாத தாலும், அநாதிநித் திய மெனப்பட்ட தெனின், இவையெல்லாம் பரமாத்மா வியாபகத் தி லென்பானேன். அதையன்றி யாதாரமில்லையெனின், அதையன் றிச் சித்து சடபேதங்கள் வருவானேன். அதற்குச் சுபாவ மெனின், அதையன்றிச் சித்து சடபேதங்களுக்கு முதற்கருவி யில்லையே வே றென்பானேன். மீண்டும் முதற்கருவியாக வேணடுமே; யாகாததா லெனின், உபாதித்திரியமன்றே; சித்து-இதற்கு முதற்கருவி காணு துரைப்பானேன். அதுதோன்ற வில்லையெனின், வியாபகத்தி லென் பானேன். சுருதி சம்மதமெனின், யுத்திக்கு மாறுவானேன். சுருதி யீஸ்வரவாக்கியமன்றோ? யுத்தியாதுக்கெனின், இங்ஙனமே-துவிதி யும் - அத்துவிதியுங் கூறின், இம்மூவருக்கும் தத்வமசிவாக்கியமொ ன்று யிருக்கக் கட்சி மூன்றுவானேன். இதற்கு யாது கூறுதி யெ னின்?

வி-விடை—பசுவும் - பாசமும் பதிக்கு வேறெனின், பதியைப் பரிபூரணனென்னல் கூடாது. கூடுமெனின், துவிதமோடமும்; சி த்து சடமொன்றெனின், கண்-உலகமாகவும்-உலகங் கண்ணுகவு மா கவேண்டும், ஆகாததால் அத்துவித தோடமும் வருவதால், அவற் றை மறுத்து விசிட்டாத்துவிதத்தைத் தாபித்த தெனின்.

ஞா-வின—யாதுகாரணங்கொண் டெனவராமோ? வருமெனில், அது யுத்தியன்றோ, யுத்தியாதுக்கெனல் மடமையன்றோ? யுத்தி பூர்வமாக வன்றி யோர்வாக்கியத்திற்கு மூன்று கட்சி ஏற்படுமா? ஏற்பட்டதால், அவாந்தரவாதிகள் போலாகா திதற்கு விடையாது கூறுதி யெனின்?

வி-விடை—எது எப்படியோ அது அப்படியாகுகவென்றனன்.

ஞா-வின—மனம் துவித பாவங்கழன்று, ஏகபாவ மாதற்குத் தக்கநெறி விசிட்டாத்துவிதமென விளங்கற்குச் சுகதபேத மென்ற தறியாத தென்னை யெனக் கூறவுந் தெரியாதா; யாதுக்காகச் சீயா என்றபட்டம் பெற்றதோ வெனின்?

வி-விடை—தானே விளங்கச் சொல்வானே னென்றனன்.

ஞா-வின—உயிர் பர மெனு மிரண்டு, மறிவன்றி யில்லையென லே யேற்றும்போல விதனையுமேற்கவேண்டும். அதாவது; பூதவின்-ஞானவின்னென விரண்டு. சித்துசட தன்மையா லிரண்டாயினும் பொருளா லொன்றோ, பலவோ?

வி-விடை—ஒன்றெனி னெல்லையிலதாகவேணடும். இன்றெனின், விகற்பத்திற்கும் நிர்விகற்பத்திற்கு மிட மொன்றாக வேண்டும்; முரணுமெனின், இரண்டென்னல் வேண்டும்; இரண்டெனின், எல்லவனை யறுத்துக் காட்டவேண்டுமெனவரும். கூடாததாற் சிறிதாகக்கேளென்றனன்.

ஞா-வின—அங்ஙனமேகேட்குதும். உலகத்தைக்காண்பது கண்ணன்றோ, காணுதலாகிய புடைபெயர்ச்சிக்கு வினைமுதல் விஃதெனப் பணபும், தொழிலும், பயனு, மொழித்துச்சொல்லாலன்றி யதனது நிலையினை யனுபவத்துக்கியைய வுணர்த்தின், சகத்தினை நீயறிந்து, அதனாற் சீவான்மா, பரமான்மா, வுண்டெனக்கூறத்தகும். ஏற்கவுந் தகும். இன்றே லெவ்வாறு ஸ்வணவமத மெய்ம்மையென வேற்கப்படும்.

வி-விடை—குறியாலுணர்கவென்றனன்.

ஞா-வின—உபயவாதிகள் நிலை யினையதென விசாரித்துத் தெளியாவிடத் தெங்ஙனந் தீர்ப்பு கொடுக்கப்படும், கூடாததாற் குறியனைத்தும்; பொருளல்லது பொருளாகமுடியுமெனற் கையமென்னை?

வி-விடை—அஃதெங்ஙனமென்றனன்.

ஞா-வி௵—பொருளல்லது பொருளாகக்காண்டலாவது; உபாதேயம்-ஆரோபம் - விகாரம் - என்று மிவ்விலக்கண மய்மா நிற்றலே; உபாதானம்-அதிஷ்டானம்- நிர்விகாரமென்னு மிவ்விலக்கணமயமா நிற்றலெனக் காண்டல். இங்ஙன மாய்விபரீதத்தை யறியாது எங்ஙனஞ் சுயம்பெனக்கோடல். இஙஙனமாய மதிகொண் டுபதேசித்தல் பிறர் கெடற்கு நெறியன்றோ வெனின்?

வி-விடை—சகல மதத்தரு மிங்ஙன நின்றன்றோ போதிக்கின்றனர்; என்மேல் யாது பிழை யென்றனன்.

ஞா-வி௵—மந்தத்தைப்போல நீருங்குருடனொனற் கேலாததெ ன்னே?

வி-விடை—விஷ்ட்ணுவைப்போ லவர்கள் கூறுங் கடவுள் பரத்துவ மாகுமா, ஆகாததா லெங்ஙன மேற்கப் படுமென்க.

ஞா-வி௵—கடவுளுக் கவரவரிட்டபெயர்போல, நீங்களுமோர் பெயரிட்டீர்க ளிதனற் சிறப்பென்ன? சொல்வழக்கே யன்றி யர்த்தத்தில் வழக்கென்ன, உண்டேற் கூறுதி?

வி - விடை—கஜேந்திரயானை, யாதிமூலமே! யெனப்பொதுப் படக்கூப்பிட்டதற்கு வந்து காத்தவர் விஷ்ட்ணுவையன்றி வேறல்லராதலி, னிவரோ பரத்துவமானவ ரென்க.

ஞா-வி௵—எம்மதத்தருங் கூறுங்கடவுள பேதஞ் சகளமாகிய வேடத்தைப்போல்வது; நீர் சொல்வது மென்றால் தோடமென்னே?

வி-விடை—வேடமன்று வேடதாரியென்றனன்.

ஞா-வி௵—யாதிறைற்கோடலெனின்?

வி-விடை—சக்கரமுதலிய வாய்தங்களாலென்றனன்.

ஞா-வி௵—இவையும், இவற்றையேந்திய வவயவியும், உருவமாதலி னானும், அருவத்தை யன்றி யுருவமும் பிரதிபலித்தற்கிடமின்மையினானும், அருவமும் - அநிர்தசடதுக்கத்திற் கியைந்த தாதலானும், ரூபாரூபமு மிங்ஙனமாதற் குடன்படுதலானு மேற்கப் படாது. நின்கருத்திருந்த வாறென்னே யெனின்?

வி-விடை—எவரு மிங்ஙன மறுக்காததா லெங்ஙன நின்மொழி யேற்கப்படு மென்றனன்.

ஞா-வினா—ஞாயஞ்-சோதனை - பொருத்தங்கட்கு முரணென்னை, உண்டேற் றன்னுதும் இதற்கு யாது கூறுதி யெனின்?

வி-விடை—வாயாடி யென்றனன்.

ஞா-வினா—அர்த்தத்தற்கு நட்டமென்னை?

வி-விடை—தோன்றுமற் செய்தலே நட்டமென்றனன்.

ஞா-வினா—கல்விஞான மிதற்குடன்படுமா?

வி-விடை—உடன் பட்டாதேனு மெமக்குடன் பாடாகா தென்றனன்.

ஞா-வினா—இவ்வாறே யெந்தெந்த மதத்தரும் கூறிநடப்பராயின், மனங்கொண்டவாறு நடப்ப திதிலும்வேறே? இது சாமிக்கு வழிபாடெனவோர் பெயர் வைத்துக்கொண்டு தங்க ளிஷ்டப்படி நடத்துவதாகக்காணப்படுகின்றதே, யிதுதானு மனஞ்சென்ற நெறி நடவாம லிருப்பது; கூறுதி யெனின்?

வி-விடை—சற்கருமங் காரணமாக வாதலின் பழுதின்றே, இஃது துபோல்வதன்று.

ஞா-வினா—திருவிழா முதலியவை விநோதகாட்சிக்கும், ஏகாதசி முதலியவை நல்லுணவுக்கு மாதலி னிதுதானு பத்தி வளர்தற் கியைந்த மார்க்கம்?

வி-விடை—வேதசம்மத மாதலினிது முரணன்று.

ஞா-வினா—வேதமாதாவின் கருத் திதுவாயின், சகலமு மறப்பதே நன்றெனக் கூறுவ தென்னை?

வி-விடை—மெய்யே, யவரவர் பருவத்துக்கிசைந்தவாறு கூறியதா லிரண்டுஞ் சம்மத வசனமென்றனன்.

ஞா-வினா—இவ்விரண்டில் யாது பிறவி தவிர்த்தற்கியைந்ததோ வதனை யன்றோ செய்யவேண்டும்?

வி-விடை—அனைத்து மொருங்கு மறப்பதேபிறவி தவிர்த்தற் பாலதாயினும், அப்பருவம் வருகாறு மிதனைச் செய்தனன்றன்றே வென்றனன்.

ஞா-வினா—நன்றே; துக்க நிவிர்த்தியுந், தடையற்றவின்பமும், விழையாவுயி ரெங்கணுமில்லை. இதுதாற்பாலதோ?

வி-விடை—அன்று; இதுகாரணமாகத்தானே யம்முயற்சியுஞ் சிறிது சிறிது பயிலவரும், பயிலாவிடி லெங்ஙனம் வரும்.

ஞா-வி௲—பயிலுதற்கேற்ற முயற்சி கல்லாக்கால் வாராதாதலி னதனைச்செய்க?

வி-விடை—யாதென்றனன்.

ஞா-வி௲—பேத மபேதமெனக் கூறும் வாதமிரண்டினுள் அ பேதவாதமன்றோ, அதனை விசாரித்துத் தெளிதி. இன்றேல் யாது வாசித்து மென்னை?

வி-விடை—இவை புலப்படுமாறு; ஓர்பொருளில் தெரிவியின் றே லறிய தெங்ஙன மென்றனன்.

ஞா-வி௲—ஒருவன் தன்றந்தைக்குக் குமாரனும், தன்மகனு க்குத் தந்தையாயு மிருக்குமாறுபோன்று, காரணகாரியத்தைத் தன் பா லேலாத பொருளிடங் காலங்க ளொன்றுளதோ?

வி-விடை—ஒன்றுமின்றென்றனன்.

ஞா-வி௲—ஒன்றுஞ் சுயம்பன்றோ யிருக்கக், காட்சிப்பொருள் கருத்துப்பொருளே நீ கோடற் கேதென்னை?

வி-விடை—இதுகாறும் விவாத்தயாயினன். ஆண்டவனே! இம்மொழி புகன்றவுட னென்மனதினது பலசென்ம வெப்பமனைத் தும் தண்ணெனக் குளிர்ந்ததே, யிதற்குக் கைம்மாறு யாதொன்று மறிகிலனென ஆனந்தக்கண்ணீர்பெருகிப் புலம்பிக் களிப்பால் விய ந்திதுகாறு மில்லாதது - இம்மொழியால் விளைந்ததன்றோ, இஃதெ ன்னபுதுமை. இதினாலன்றோ "சான்றோரினத்திரு" வென்றனர் சத் துக்கள். இதறியாது யான் தடுத்ததனைத்தும் பொறுத்தியென்று பல காற் புகன்று வணங்கினன். அதற்காசான், நானென லெங்ஙனமோ வதனை நன்குற விளக்கி நின தனுபவத்தைச் சொல்லென, ஒன்றுமெ வழுவா துரைத்துத் ததாகாரமாயினனென்க

## ௬-வது, விசிட்டாத்துவிதம்

## முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

எ - வது

# போலிவேதாந்திவாதம்.

ஞா-வினா—வேதாந்த மென்ப தியாது?

போ-விடை—வேதத்தி னந்தமென

ஞா-வினா—வேதமென்னலாகாதா?

போ-விடை—தொடர்மொழி யோர்மொழியாமா- ஆமெனின், சந்திவரப்பெறுமா-வருதலின், அதுவழு.

ஞா-வினா—இவ்விருபதமும் பிரதிவாதிப்ப திரண்டாகவேண்டும். இரண்டெனின், அவை யாவை?

போ-விடை—அறிவறியாமையெனவும், சகசீவபரமெனவுமிரண்டாம். இவற்றுள்; அறிவறியாமையன்றிச் சகசீவபரமின்மையின், அறிவறியாமையை யுணர்த்துவது அந்தமெனவும்; அவற்றி னுபாதேயமாகிய சகசீவபரங்களை யுணர்த்துவது வேதமெனவுங்கொள்க.

ஞா - வினா—நிலைமொழி வருமொழிக்கு முரணாகக் கூறுவது முறையோ?

போ - விடை—அத்தியாரோபம், முரன். அபவாதம், முறையெனப் பொருள்படக்கூறினே ஒக்கும்; அத்தியாரோபந் தெரியாமலபவாதமெய்யனமுணர்த்தப்படும். ஆதலின், முன்ன ரதிஷ்டானத்தையும் - பின்னராரோபத்தையு முணர்த்திற்று. ஆயினும்; யாமனே வரு மதேர்முகத்தராய் மாறிச் சனனமரணச்சுழலிலகப்பட்டுத்தேகமே யான்மா, போகமே முத்தியென்று நெறி தெரியாது விபரீதத்தைச் சத்தியமென்ற பிராந்தியை முன்னரகற்றுவான்வேண்டி; யாம் பேத புத்தியாற் சத்தியமெனக் கொண்ட சகசீவபரத்தை விளக்கிப் பின்ன ரதிஷ்டானத்தை விளக்க முன்னர் வேதத்தையும், பின்னரந்தத்தையுங் கூறவந்த தாதலின் முறையே யென்க.

ஞா-வினா—மூடத்தால் யாஞ் சத்தென்ற திரிபதார்த்தங்களைச் சத்தென வேதமுஞ் சம்மதித்துக் கன்மம் பத்தி கூறுவ தென்னை - இன்னும் யாங்கெடுவான் வேண்டியன்றோ?

போ - விடை—நோய்கொண்ட பிள்ளைக்கு மருந்தை மறைத் தினிய பண்டங்காட்டி யழைத்தல்போலும்.

ஞா-வி௵—இதுநிற்க; நீர் வேதாந்தி யாதலின், வேதாந்தமாவ தென்னை?

போ-விடை—ஞானமே சத்தியமெனவும்; ஏனையவை மித்தை யெனவும் பிரிதிவாதிப்ப தென்க.

ஞா-வி௵—திரியதார்த்தத்துள்; செகமித்தை யாமா றெங்ஙன முணர்த்தவேண்டுமெனின்?

போ-விடை—கானல் நீர் முதலியவைபோலு மென்க.

ஞா-வி௵—தாஷ்டாந்த மெங்ஙன மியையு மெனின்?

போ-விடை—சுழுத்தியி லெங்கே யென்றனன்.

ஞா-வி௵—சத்தாவத்தைகளி லஃதொன்று. ஏனைய்வத்தைக ளிற் சாக்ராவத்தைதோறு மென்றுஞ் சத்தாகக் காண்ப தென்னை யோ? அவ்வவத்தையி லன்றோ ப்ரவிர்த்தியாற் பந்தமும், நிவிர்த்தி யால் முத்தியு மெய்தக்கிடப்பது. இங்ஙனமிருக்க; இங்கே சுழுத்தி யவத்தை யெடுத்தாள்வது தோன்றாமையாலோ? குருபரம்பரை யின் மூடத்தாலோ? சொல்லத்தெரியாமையாலோ வெனின்?

போ-விடை—இங்ஙனமெல்லாம் வினுவ லெமது மரபுளடுப்ப தன்று - சொல்வதைக்கேட்பது யோக்கியதை யென்றனன்.

ஞா-வி௵—ஐயமறுத் துய்வ தெங்ஙனமோவெனின்?

போ-விடை—படித்துக்கொண்டே வர நீங்குமென்றனன்.

ஞா - வி௵—இஙஙனம் படித்துணர்ந்த நீர் தெளிந்த தென்னை. சொல்லுமெனின்?

போ-விடை—எமது மொழியை மறுப்பையாயின், வெளியில் தள்ளுதும். மரியாதையில்லாமல் பேசலாமாவென் றூரத்திப் பேசிக் கோபித்தனன்.

ஞா-வி௵—ஐயந் திரிபகற்றுவார் நின்போல்பவ ரன்றி, ஏனைய ரொன் சிறந்தும் யாதுபயன். மறுத்துக்கேட்பதடாது. ஆயினும்; பிர பலசுருதியில் வல்லார் பெரும்பாலு மெங்கணுமுளர். அவர்க ளனை வரும் நின்போலவே கூறுநிற்பர். நனவிற் சுழுத்தியென்றோ சரிய நிலை யுண்மைபற்றி; ஞாயஞ் சோதனை பொருத்தமென்னு முகத்தா

லதனையறிந் தடைதிபெறற்குச் சத்துக்கள் நிருபித்தனர். இங்ஙனமி ருக்க; வறிதிலெல்லாவற்றையும் புறக்கணிக்கில் யாதுய்வ தெங்ஙனமெனின்?

போ-விடை—சகலாவத்தைதோறு முண்மையாயும், கேவலாவத்தைதோறு மின்மையாயு மிருப்பதா லெங்ஙன முலகைச் சத்தென்றேனும், அசத்தென்றேனுங் கூறற்குறுதி. இன்றாதலின், ஒருவாறு கூறினுமென்க.

ஞா-வி—உலகை மித்தையெனலுஞ், சத்தெனலு மவத்தை காரணமாகவாயினும்; பந்தமுறலும், அதனால் மிக்க வல்லலுற்றெய்த்தலும், விருப்பிலால் விருப்புறுதலும், ஆவியாற் சோகமுறுதலு மாயாவதே. இவ்வாறான இவற்றிற் கிடமாவனவே; வேதம், மித்தையெனக்கூறவந்தது, இதனையறியாது வேறு கூறுவதென்னை?

போ-விடை—பந்தமுதலியவற்றையும், அவற்றாலெய்தாநின்ற கழுத்தியவல்லல்களையும், யாருப்பிராப்தியினையு மகற்றுவான் வந்ததுவெய்யோ; சகலாவத்தைதோறு மசமான தன்மையென்றும, கேவலந்தோறு மித்தையென்று மிப்பக வழங்கி வருதலா லெங்ஙன மறுப்பதென்றறிக.

ஞா-வி—போர்வை மறைப்பு மியல்பேனும், அது தோற்றும்போது நாம் பந்தயெயதாவா றெங்ஙனமென்றதற்கு விடை கண்டிலம். கூறுவதையே கூறலால் யாது பயன்?

போ-விடை—சகசமாயிருப்பதை யெங்ஙன மித்தையாக்குவதென்றனன்.

ஞா-வி—வேதமுஞ், சான்றோரும் மித்தையென்றது குற்றமோ; குற்றமெனின், அதுதோற்றுவதறகும், நமக்கது காரணமாகப்பாசம் பெருகற்குங் காலவரையறை யின்றே; நா மல்லலற்றிருப்பதற்கு நெறியாதோ; இன்றெனின், வருணாசிரமத்தையும், விதிவிலக்கையுந் தழுவி நடப்பதில் யாதுபயன்?

போ-விடை—மேலாய பயன்றருமெனலை நம்பியென்க.

ஞா-வி—ஞானகாண்டங் கூறுவது நம்பிக்கை யன்றே; நம்பிக்கை யெனின், ஏனையகாண்டங்களுக் கிஃதென் சிறப்பு. நீயும், உனதாசிரிய மரபும் நலங்குவிசாரித்துத் தெளியாத குறையை வேதத்தின் மேலேற்றுகிறீர்கோ; வேதாந்திக ளென்றும், யாம் சங்கராசாரிய பீடமென்றும், ஐயங்கிரிபகன்றோ மென்றும் பிரளி செய்வதற்

கியைய வயிநயித்திருப்பது. நன்கு நன்கு. இதிலும் நாவிதன் தொழில்செய்வது நன்றன்றோ. இனியாவது மது விசாரணைக்குறைவை நினைத்துத் தககோர்பாற்சென்றடிமைபூண்டு தெளிதல்செய்யாதிழிபு. இழிபெனின், கும்பிடுக்குவீங்கிய கள்ளகுருக்களாகும். பிறவிக்குப் பயந்தவர்களாயினிது செய்வீர்களா?

போ-விடை—எமதிடத்த தச்சமின்றிக் கண்டபடி வைதப்போ, நீயிங்கு வந்தது நடவென்றனன்.

ஞா-வினா—சரணஞ் சரணம். எனது கருத்தறியாது கோபித்தல் சான்றோர்க்காகாதே; நீயெந்தசெனனத்தானுமல்லையே; இந்தச் செனனத்தைநானென்றும், நாமுபார்ந்தபொருளொன்றும், நாஞ்சாமி யென்று முன்னைத்தானை கொள்ளலாமா; கொள்ளவில்லை யெனில், நன்கு கூறியதற்கிவ்வளவு கோபம் வரலாமா; மூட பரம்பரையில் வந்த பிரோன்மணிக்குருவாகிய உனக்கிவ்வளவு கோபந் தோன்றிற்று. இனியாவதுலகை மித்தையெனற்கு யாதுகூறுதி யெனின்?

போ-விடை—அழிந்துபோவதால் மித்தை யென்றனன்.

ஞா-வினா—பின்னர் மித்தையாகும்போதாகட்டும்; இப்போது நமக்குச் சந்துருவாநின்று காம வெகுளி மயக்கங்களைத் தருகின்றதே, இந்தப்போராட்டத்திற்கு யாது கூறுதி யெனின்?

போ-விடை—அதனைப் பாராதிருப்பதே தந்திரங்களி லெல்லா மேலாய தந்திர மென்றனன்.

ஞா-வினா—உனதுடல் தோன்றும்போ துலகந் தோன்றுகிறுக் குமா? உடலுக்கு முலகத்துக்கு முள்ள சம்பந்தம், உபாதான வுபாதேயமன்றோ; இதனையாவது விசாரித்துத் தேராததென்னே; உனது சாம்பிரதாய மூடவிளக்க போதகமோ தக்க விடைகண்டு கூறுதி யெனின்?

போ-விடை—எங்ஙனமித்தையாக்கினு முறையன்றென்றனே. விழியாதிருப்பதே தக்கவுபாய மென்றனன்.

ஞா-வினா—விழியா திருக்கினும் உலக மிருக்கின்ற தென்னும் நினைவுதானில்லாமற் போகுமோ. போகுமெனின், யோகாப்பியாசத்தி லொன்றெனப் படுமன்றோ; அன்றெனின், மூடசூழ்த்தியாலன்றோ; அன்றெனின், மூர்ச்சை மரணங்களி லொன்றாலன்றோ; இது தக்க வுபாயமாமா வெனின்?

போ-விடை—யாதுகூறினுந் தடுப்பதால் மிக்ககோபம் விளைவிக்கின்றனை. மிகப்பேசக் கற்றுக் கொண்டனை. அனுபவிகளே; இங்ஙனங் கேட்டல் அடாதென்றனன்.

ஞா-வின-சுருதிகாரணமாகவேனும், யுத்தி காரணமாகவேனும், ஞாயஞ சோதனை பொருத்த மென்னு மிம்மூன்று முகத்தாற் றக்க சமாதானங்கூறத் தெரியாதநீயா அநுபவத்துக் கிசையக் கூறப்புகுவை. அநுபவ முகத்தாலேனும் உலகை மித்தையாக்குக வெனின்?

போ-விடை—மனமிறந்த விடத தெங்ஙனங் கூறுவது; நீயநுபவியா யினிங்ஙனங்கேட்பையா; மனமிறவாத வநுபூதியு முளதோ; இன்றெனின், அநுபூதி கூறெனக்கேட்டன்முறையோ; இவை யெல்லா மூடவசன மென்றனன்.

ஞா-வின—அநுபூதி நிலைகளனைத்தையு மெடுத்து விளக்கிய சான்றோரனைவரு மூடராகவேண்டும். என்ன வினாவில் மூடனெனக்கூறக் கற்றனை. "தானறியுந் தத்துவங்க ளெல்லாந் தனக்கனிய" மென்னுங் கவியும், "எல்லாரு நாஞ விருந்துழைப்பாராகி" லென்னுங்கவியும், "எங்கேநான் போற்றுவது மென்னையே" யென்னுங் கவியும், "என்னையேயல்லாமல் யான்பெற்ற தேதுமிலே" யென்னுங் கவியும்" இன்னு மிவைபோன்ற எண்ணிறந்த கவிகளும், வாக்கியங்களும், வசனங்களும், இருப்பனவன்றோ, இவையெல்லாம், அநுபூதி மேலீட்டிற் சுரந்தன வன்றோ? இங்ஙன மிருக்க; அநுபூதி நிலைகளை யெடுத்துச்சொல்லுதலெங்ஙனமென்னலாமா; யாதுகூறுதியெனின்?

போ-விடை—அவ்வநுபூதி நிலைகளையே யெடுத்து வழங்குதலெமது மரபன்றி வேறல்ல; அவ்வநுபூதி நிலைகளிருக்க யாம்நூதனமாகக்கூறுவ தெற்றிற்குப் பயன்படாவாதலின் யாங் கூறற்பாற்றன்றென்றனன்.

ஞா-வின—முன்னுள்ள சான்றோர்களும் நும்போலிராது யாது பயன்பற்றிக்கூறியதோ? தமது பண்டிதத் திறமை காட்டற்கன்றே. நீங்க ளிங்ஙனங்கூறுவது; அநுபூதி நிலையல்லாததை அநுபூதிநிலை யெனக் கூறுவதாகக் காட்டுகின்றதே யாது கூறுதியெனின்?

போ-விடை—இந்நளமாக வெல்லா மெமது மரபினுள் கேட்கற்பாற்றன்று, நீ யெவற்றினும் பேச்சு கற்றவனு யிருக்கின்றனை; போதும்விட வென்றனன்.

ஞா-வஞ—ஐயா! எவ்விதத்திலுந் திறமையற்ற மூடசாம்பிர தாயத்தைப் பற்றிக் கேட்டும் படித்து மிருக்கின்றனன். அதற்குப் பிரத்தியட்சமாக வும்மைக்கண்டன னென்று யானினைக்கவா நீரிங் ஙனமெல்லாம் பேசுவது? இனியிங்ஙன மாகாமல் விடை தரலாகா தாவெனின்?

போ-விடை—ஒருவரிடத்துஞ் சொல்லாதிருக்கின் யான் தெரி விக்கின்றே னென்றனன்.

ஞா-விஞ—அடியற்ற பனைபோல் விழுந்து அஞ்சலி குஞ்சிய ஞய் பயபத்தியோடு நடுங்கிக்கேட்க, உனதகத்தில் விடா தொளிரு ஞ்சோதியே நமதுவடிவாமென்றுபதேசிக்க; அதைக்கேட்டு, இந்த வொளிக்குலக மயலா, தானு? அயலெனின், அவ்வொளியினெல்லை யாது; இன்றெனின், அயலெனல் ஓர்முதலெனற்கும் இடமினைய தெனற்கும் யாது முரணு மெய்தாது நிற்கக் கூறுதியெனின்?

போ-விடை—இஙஙன மெல்லாம் வினவாது நீயே காணென் றனன்.

ஞா-விஞ—ஒளியிற சகமும், சகத்தி லொளியும் காணுதெதென் கொண்டோ; இவ்வையந் தவிர்க்கக் கூறுகவெனின்?

போ-விடை—அங்ஙனமாத லியல்பா யிருகக, நீ சத்தாகவே இருந்திடுக வென்றனன்

ஞா-விஞ—பகலு மிரவும் போலும, நன்கு தீஙகுபோலும, முரணுகத் துவிதமாகின்றதே, இந்தத் துவிதம் போக்கற்கு வலியி ன்றிய நீர்; "ஒன்றே யொழிய விரண்டாவதில்லை" யென்னுஞ் சா ன்றோர் வாக்கியத்திற்கு, என்னவனுபவங் கூறநின்றீர். இவற்றை யெல்லாம் விசாரித்துத் தெளிந்த தில்லை யானல், எங்ஙனந் துக்கா பாவ முதலிய நான்குமேலாய வநுபவம் வாய்க்கும், இதனை நன்கு ணர்ந்து கூறுதியெனின்?

போ-விடை—அந்நிலையில் விடாதிருகக இவையெல்லாந் தா னே வாய்க்கு மென்றனன்.

ஞா-விஞ—இவையெலலாம் வாய்க்காத நீரா; குருத்துவத்துக் கிடமானீர். உமதநுபூதி நிலைத்திறமை தெரிந்தனன். சகமாதிய திரி பதார்த்தங்களையு மித்தையாக்குந் திறமை யெங்ஙனம் வரும். சுவா நுபூதி முதலே கோணலாயிருக்கச் சுருதியுத்திமுழுதுங் கோணலா

தலைக் கேட்பானேன், இந்தத்திறமைக்குத்தானு சுவாநுபவம் வர வேண்டுமென்றீர். இதுவேதாந்த மல்லவே யாதுகூறுதியெனின்?

போ-விடை—நீயென்னை மூடனாக்கற்கோ இங்கேவந்தனை. எவரும் என்னை மதிக்காத விதஞ்செய்தனையே, இனியாவது விடை பெற்றுக் கொள்ளென்றனன்.

ஞா-வினு—மெய்யாகத் துக்காபாவம் வேண்டி வேதாந்தம் விசாரிக்க வில்லை, விசாரித்தால் துவிதநாச மின்மையைத் தெரிவித்தும், விசனமுற்றுவிளையாததென்னை; உம்மைப்போலக் குருத்வம் வேண்டின னல்லன். தெளிவுறுதலே யெனக்குத்திருத்தியாதலால், இதுகாறும் உன்பால் வருந்தி வினவுகின்றனன்; நின்கருத் திருந்த வாறென்னை கொலோ கூறுதியெனின்?

போ-விடை—நீருண்மையுள்ளவராகக் காணப்படுகின்றது. நமஸ்காரம் நமஸ்காரம், ஏகமாக்குநெறியாதோ வதனைந் திருவுளம்பற்றவேண்டு மென்றிரந்தனன்.

ஞா-வினு—பிரக்ஞைதயயன்றி யாதுமில்லை யாதலின், அதினுண்மை நிலையை விளக்கி யிப்போது யாது கூறுகின்றனை யென வினவ?

போ-விடை—விளங்கிய வக்கணத்தில் தானே பரவசனாய்நின்று, அடியற்றபனைபோல் பலகால் திருவடிக்கண் விழுந்து விழுந்து, இருவிழியிலு மானந்தபாஷ்பம் பெருக, அழுது வலம்புரி இடம்புரியாக வந்து சந்நிதிக்க ணஞ்சலிகுஞசியதா நின்று, ஒன்றே; யனேகத்தெனலும், அன்றெனலும், அதுவெனலும், இதுவெனலும், நீயெனலும், நானெனலும், சடமெனலும், சித்தெனலும், ஆரோபமெனலும், அதிஷ்டானமெனலும், விகாரமெனலும், நிருவிகார மெனலும், உபாதானமெனலும், சமஷ்டி வியஷ்டி வுபாதிகுணங் தொழிலெனலுஞ், சராசரமெனலும், ஆண்பெண் ணெனலும், சத்துருமித்துரு வெனலும், காலதேச வஸ்துக்களி லொவ்வொன்றும் பலபேதமாகக் காண்ட லெனலும், கண்டேன் கண்டேனென்று, பலகால் வியந்து கூறி யானந்த நிர்த்தனஞ் செய்து, முடிவில் நிர்விகற்பசமாதி யெய்தித் தானேதானாய மோனநிலை பெற்றன னென்க.

## எ - வது, போலிவேதாந்திவாதம்

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

அ - வது,

# காலவாதிமதம்.

ஞா-வினா—காலவாதியைநோக்கித் தீர்ந்த வுமதுசித்தாந்தவா
தம் பரதோ வதனை யான் பெற்றுய்யுமாறு அடியேனுக் கநுக்கிரகி
க்கவேண்டு மென் றிரந்து வினவ?

கா-விடை—அங்ஙன மாகுகவென் றியைந்தனன்.

ஞா-வினா—யாமுய்தற்கு யாதுநிலை கூறுதியென?

கா-விடை—காலமேபரமெனத் துணிந்தனன் நீயுமதனைக்கொ
ள்ளுதியெனக் கூற.

ஞா-வினா—பரமாயின் சச்சிதானந்த விலக்கண மில்லாத தென்
னை? இருக்கின்றதெனின், சத்தினையதெனக் காட்டுகவென?

கா-விடை—என்றுமிருத்தலால் காலத்தைச் சத்தெனற்குத் த
டையென்னை.

ஞா-வினா—ஆயின் சித்திலக்கணம் யாதோவென?

கா-விடை—சத்தெனற்கு இயைந்து நிற்றலே சித்திலக்கண
மென்க?

ஞா-வினா—ஆனந்த விலக்கணம் யாதோ வென?

கா-விடை—எவ்வுயிர்க்குந்தக்க சுகம் தந்துநிற்றலே யானந்தமா
குமெனக்கூற.

ஞா-வினா—அறிதல் தர்மங் காலத்துக்குச் சற்று மின்மையின்,
சச்சிதானந்த விலக்கணம் எங்ஙனமேற்கும்?

கா-விடை—நன்றே; காலமெனல்; என்றுமுண்டோ, இன்றோ?
உண்டெனின், ஏற்றுக் கோடற்குத் தடையென்னை.

ஞா-வினா—தான்சத்தென வுணர்தல் தன்பாலில்லாமையின்
சித்து வேறாகலாமா, வேறாயின் சத்துஞ் சித்து மொவ்வாததால்;
இஃதெங்ஙன மானந்தமாம், யுத்திக்கு மாறாதற்கு யாதுகூறுதியெ
னவினவ?

கா-விடை—இங்ஙனங் கேட்டா ரொருவருங்கண்டிலமே, இஃ தென்ன வினவென்றனன்.

ஞா-வினா—யுத்திக்கு மாறென்று தெரியாது கூறிக் குருத்தனஞ்செய்யும் நின்போலிகட் குணர்வுறுத்தும் வினவாதலின் யாதுகூறுதியென?

கா-விடை—இங்ஙனம் பொருந்தக் கூறக் கற்றிலம். கல்லாததால், காலமில்லாமற் போயிற்றே; என்றுமிருப்பதால், சத்தெனற்கு, ஐயமென்ன வென்றனன்.

ஞா-வினா—காலஞ்சத்தும், அறிவுசித்தும், ஆதற் கியைதலின், இரண்டு பதார்த்தமாகின்றதே, காலத்தைச்சச்சிதானந்தமென்னலாமா, எனவினவ?

கா-விடை—இதற்கு விடைகூற வறிகிலனே எங்கு கற்றனே, ஐயவாதிகள தத்தங்கொள்கைக்கியைந்த பரத்தைச் சச்சிதானந்தமென்றாற்போல யானுங் கூறப்புகுந்தன னன்றி வேறல்லன். எங்கேனு மிங்ஙனங் கூறக்கேட்டிருப்பேனாயின், காலத்தைப் பரமெனப் பிரதிவாதிப்ப னல்லன். ஆயினும், பிரமாமுதலிய மும்மூர்த்திகளுங் குணப்பிரிதிபல்ல ரன்றே; பிரிதிபலித்த விறந்தகால மன்றே; அந்த விறந்தகாலங் காலத்துக்கப்பாற்பட்டதெனப் படுமோ; ஏனைய வுயிரும், அண்டாண்ட நிரைகோடிகளுங் காலத்திற் கட்டுப்பட்டன வெனக் கூறவேண்டுமோ, இதுபற்றிச் சத்தெனப்படு மென்றனன்.

ஞா-வினா—காலத்தைச் சச்சிதானந்தமென் றொருமை படக் கூறுதியாயின், யான் தடுப்பேனல்லன், எங்கெங்கே ஸ்மரணையுண்டோ அங்கங்கே காலமுதலியவைகளுண்டாயும், இன்றே லின்றாயும், எவ்வெவர்பாலு மனுபவ மிருத்தலின், சத்தெனற்கு மெங்ஙனமியையுமெனின்?

கா-விடை—ஸ்மரணை யுள்ளபோது மில்லாதபோதுங் காலமொருதன்மைத்தா யிருத்தலின், சத்தெனற் கையமென்னே.

ஞா-வினா—உனது ஸ்மரணையைத் தள்ளி; இப்போதேனுங்காலத்தைக்காட்டில், சத்தென் றேற்பதற் கிடையூறின்று, நின்கருத்து யாது கூறுதியென?

கா-விடை—விடைகூறற் கிடமின்றிக்கற்றனே, இதுநிற்க; ஸ்மரணை கொண்டு, எனது கொள்கைதவிர்த்தனே, நன்றே. நினதுகொ

ள்கையாகிய ஸ்மரணையெனலும்; சச்சிதானந்த மாகவேண்டுமே, இதனை யாமேற்குமாறு சம்மதிவசனங் கூறவேண்டு மென்றனன்.

ஞா-வி௵—ஸ்மரணையல்லாத சராசர வுயிர்களுந் திரிமூர்த்திகளும், உளவேல்; ஸ்மரணை சச்சிதானந்தமென்னப்படாது; சமஸ்தமும் ஸ்மரணையன்றி இல்லாமையால் சச்சிதானந்தமென்னப்படும். இதற்குத் தடையுளதேல் கூறுகவெனின்?

கா-விடை—ஐயா! தனித்தனி சொல்லி, ஏகமாகும் விதத்தைத் தெரிவிக்கவேண்டு மென்றனன்.

ஞா-வி௵—சமஸ்தத்துக்கு மேல்கீழொப்பின்றி யுபாதானமாநிற்றலின் சத்தெனவும்; அங்ஙனஞ் சத்தாநின்றதானே யுணருந்தன்மைய தாதலின் சித்தெனவும்; தானே பிரியவடிவாதலின் ஆனந்தமெனவுங் கோடற் கிடையூறென்னை?

கா-விடை—எவ்வுயிர்களும், ஸ்மரணையென்றும், அந்த ஸ்மரணையே சத்தென்றுங் கூறின், எவ்வுயிர்களும் பிறந்திறக்க லாமா; பிறந்திறத்தலின், யாவர்தான் சத்தென்றேற்பர்.

ஞா-வி௵—அவஸ்தைகள் மாறினும், ஸ்மரணை இருந்தவண்ண மிருக்குமாறுபோன்று, பிறவிகள் மாறினும், ஸ்மரண மாறுதலால் சத்தெனற் கையமென்னை?

கா-விடை—காலமென லறிபடுபொருளன்றோ; காலத்துக்கறிவு முதற்கருவியன்றோ? அறிதற்கருவியாதலால் துணைக்கருவி யெனப்படும். இங்ஙனமிருக்க; காலத்துக்கறிவை முதற்கருவியாக்கல் வழு.

ஞா-வி௵—ஆயின், காலத்துக்கு முதற்கருவியாதோ?

கா - விடை—முற்று முணரக்கூடாமையேனும், காரிய வகையால் ஷெக்கன் - மினிட்-மணி-நாள் -வாரம்-மாதம்-வருஷம் - யுகம்-சதுர்யுகம் - மகாயுகம்-முதலியவாக மேல்மேலாகச்செல்பவையும்; காரணவகையால் யுகம்-மகாயுகம் - சதுர்யுகம்-இங்ஙனமாகப் பரமாணுவுக்குக் கீழ்கீழாகச் செல்பவையும் விகாரமன்றோ; இங்ஙனமாய விகாரத்தையன்றிக் காலமென லின்றாமையின், அறிவு முதற்கருவி யெனல் கூடாதென்க.

ஞா-வி௵—விகாரரூபமாயகாலத்தைச் சுயம்பெனக்கொண்டு; "வைகலும்வைகல் வரக்கண்டு மஃதுணரார்" என்னுங் கவிப்படிப் பராக்கி லின்புறுவதுபோற் கெடுவது முறையோ?

கா-விடை—சுயம்புதேடு நாட்டத்துறின் விவகரிக்கக்கூடாமையால், அது பொருந்தாதென்க.

ஞா-வினு—ஆயின், விவகாரசத்தெனப்படுமேயன்றி எதார்த்த சத்தெனப்படாதே, சத்து பேதந்தெரியாது கூறுவது முறையோவென?

கா-விடை—சத்து பேதமாவ தியாதென்றனன்.

ஞா-வினு—பிராதிபாலிகசத்து-விவகாரிகசத்து-பாரமார்த்திக சத்து-எனச் சத்து மூன்றும். பிராதிபாலிகமாவது, பிரிதிபலிக்குந் தன்மை. விவகாரிகமாவது, விவகரிக்குந்தன்மை. பாரமார்த்திகமாவது, எதார்த்தத்தின்தன்மை; இவற்றையறிந்து கூறுதியென?

கா-விடை—இங்ஙனநோக்கில் யாதும்? எதார்த்தசத்தாகாதே, இது தக்க வினுவன்றெனக்கூறினன்.

ஞா-வினு—ஆயின், விகாரத்தைச்சுயம்பெனக்கூறுவதாவினு? ஒன்றன்கூட்டம், பலவினீட்டம், திரிபினுக்க மென்பவற்றை விகாரமெனக் கேட்டறியாய் போலும். இவற்றுள்; காலமென லொன்றன்றோ, இதனை யுணர்ந்து காலத்தை எதார்த்த சத்தாக்கத் தக்க நெறியாதெனின்?

கா-விடை—எவ்விதத்து மெதார்த்தமெனக்கொள்ளாதுமுரணுகத் தக்க நெறி கண்டு கூறினே. காலமெனல்; இவ்விலககணத்தாலில்லாமற் போயிற்றே, இஃதேற்றற்பால தன்றென்க.

ஞா-வினு—விசாரியாமுன்னர் காலமுளதாயும், பின்னரிலதாயும் நின்ற தியாது? காலமெனின், இன்மையா நின்றவிடத்தெங்கே, எத்திசையாக வேகியது, அதனைக்கண்டு சொல்லுதியென?

கா-விடை—இருக்கின்ற தெனின், காரண காரிய மற்றதாக இருக்கவேண்டுமென்பை. இன்றெனின், எங்கே யேகியதென்பை. இந்த வொழியா வழக்கிற்கு யாது கூறுவனென்றனன்.

ஞா-வினு—மித்தையெனற் குடன்பாடாயின், ஞாபககூறுக. இன்றேல், ஒத்துக்கொள்ளுக வெனின்?

கா-விடை—எமதுகொள்கையைப் பூர்வபட்சப்படுத்தக் கூறிய துன்மை நிலையே, ஏனையவற்றையு மிங்ஙனமாக்கத்தகும். யானுலக சிந்தனையின்றி நிற்றற்கும்; நிற்கினுந் தடையின்றித் தோற்றுதற்கும் இயைந்த நெறியாதென்றனன்.

ஞா - வினு—இந்தப் பிறவிநீயன்றுதலாலும், உனது சம்மதி இன்றிப் பிராரத்துவ முடிவில் பலவத்காரமாக நீங்கலாலும், மற்ற தற்கு யாது தடையென வினவ?

கா-விடை—பிரத்தியட்சமா யிருப்பதை யெங்ஙன மறப்பது. மறப்பினுந் தோற்றுவ தெங்ஙனந் தடைபடும். தடை படாததால் யானிற்குமாறுதா னெங்ஙனமென்றனன்.

ஞா-வினு—விசார முகத்தா லின்மையாக முடித்ததை நீமறக்கின் தோற்றும். இதனைக்கண்டு கூறுதியென?

கா - விடை—மறவாதிருக்கினுந் தோற்றுகின்றதே என்செய் வேனென்றனன்.

ஞா - வினு—நீ மறவாதிருந்தா லுலக முனக்குக் காணப்படுவ தற்கு நெறி யெங்கனு மில்லையே, நீ பிறழ்ந்து கூறுகின்றுயென வினவ?

கா - விடை—ஐயா! உற்றுக்காண்புழி சமஸ்தமும் நினைவா யிருக்கின்றதே - இதென்ன வாச்சரியமென்று பணிந்துநின்று, இந் நிலையைத் தெரியக்கூறவேண்டு மென்றனன்.

ஞா-வினு—யாவும் நினைவெனக்கண்டனை. மெய்யே; எதை நினைவென்றனை கண்டு கூறுதியென வினவ?

கா-விடை—அவன் நெடுநேரஞ்சலியாது நின்று, கண்டுகண்டு, பரமாணுவினும் மிக நுட்பமாய தெரிவெனத் தெளிந்து பணிந்து கூறினன்.

ஞா-வினு—அன்னபிரமாணமாக நின்றுணர்வ தெவ்வண்ணத் தகுதா கண்டு கூறுதியென?

கா-விடை—அதனைச் சோதிக்க நெடுநேர நிற்புழி, என்றுங் கண்டறியா வற்புதநிலைகாணப் பேரின்பமீக்கூற்றுத் துக்கநிவிர்த்தி புடையவனுய்ப் பலவாறுகத் துதித்து வணங்கிச் சொரூபமௌனி பாயினனென்க.

அ - வது, காலவாதிமதம்

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

கூ - வது,

இனி

# சூனியவாதிமதம்.

ஞா-வினா—சூனியவாதியை நோக்கிப் பிறப்பதும்-இறப்பதும் இப்பிறப்பில்;ஏற்றுக் கொள்வதற்குத் தடையாதுளது, யாவருஞ் சாட்சி யாதலால், இஙஙனம் வருவானேன்?

சூ-விடை—பிறந்ததேது-இறந்ததேது-பிறந்ததுபோலும் இறந்ததுபோலுந் தோற்றன் மாத்திரமன்றி வேறில்லை. எங்ஙனமெனின்; பஞ்சபூதாமசசையோகத்தையன்றித் தேகமெனலைக் காட்டிலேற்பம். இன்மையால், இம்மொழியை ஏற்பதெஙஙன மென்றனன்.

ஞா-வினா—ஆயின்; உன் தாய்தந்தைக்கு இந்நிலையதான ஞானம் பிறந்திருக்குமாயின், நீபுத்திரனாகப் பிறத்தற்கு வழியேது? பிறந்தபின் தேகத்தை நானெனலும், அதனைப்பாதுகாத்தலும், அதற்குப் போகந் தேடலும், பசிகாம நோய்கட்கும், வறுமை சிறுமை கட்கும், துன்புறலும், செல்வம் வாய்த்தற்கு இன்புறலும், இறப்பிற்கு நடுக்குறலுமாகிய இவ்வனர்த்தங்கள் உன்னை விடாதிருக்க நீயிஙஙனம் வாய்மொழியாற் பேசுவது நன்றாயிருக்கின்றது. இங்ஙனமாய புடைபெயர்ச்சிக ளனைத்தும், நீயாகிற வறிவுக்கு வந்திருக்கப் பிறப்பிறப்பு இல்லையென்பானேன்?

சூ-விடை—எனக்கவ் வநுபூதி வாய்க்காத தடையொன்றேயன்றிச் சமஸ்தமும் என்றுஞ் சூனியமெனற்கு ஞாயஞ்சோதனைபொருத்த முகத்தால் யாது முரண். இன்றாதலால், சூனியமே பிரமமென்றனன்.

ஞா-வினா—பஞ்சபூதத்தையன்றிப் பௌதிகஞ் சூனியமெனல் மெய்யே; பௌவுதிகஞ் சூனியமோ? அன்றே, இதற்கு யாதுகூறுதியென்னின்?

சூ-விடை—நீயேலாதேனுஞ் சகலபண்டிதரும் முடிவிற் சூனியமென்றேற்றற் கியைந்த ஆகாய மானது, ஏனையநான்கு பூதங்கட்

குஞ். சலட்சண விலட்சணமாய், இவையைப் பெறுவானேன் பெறு வதால் சமஸ்தமுஞ் சூனியமே யென்றனன்.

ஞா-வி:—இவ்வேதுக்களாற் பிரமமெனம்கு வடிவஞ் சூனிய மென்றனே, இந்தச் சூனியந் தனக்குத் தானோ மற்றொன்றிற்கோகா ணப் படுவது ?

சூ-விடை—தனக்குத் தானெனின், சடமெனவை. அன்னியத் துக்கெனின், யாதுக்கென்னை. அறிவுக்கெனின், அதுயாது பொரு ளென்னை. இனையதெனின், குணங்குறியென்னை. அவற்றிற்குமுத லெனின், என்ன நிலையினதெனவை. அவாச்சியப் பொருளெனின், யாதருத்த மென்னை. சூனியமெனின, அதனைத் தடுப்பையோ. கூ டாததால், சூனியமே பிரமமென்றனன்.

ஞா-வி:—அறிபடு பொருளேயும்-அறிவையுஞ் சூனியமாகங்கி யது, யாது. வேறு பொருளின்றெனின், ஆராய்ச்சி செய்து தீர்ப் புதந்தது யாது, இருப்பதாகக் காண்கின்றது. அஃதெட்டவில்லை யெனின், அங்ஙனங் கூறுவது நீயோ வேறோ ? நானெனின், உன் னை நீயில்லை யென்னலாமா. கூடாதெனின், நானெனல் சூனியமா குமா? ஆகாதெனின், நானெனலே பிரமமென்றுற் றேட மென்னே?

சூ-விடை—நானே பிரமமெனக்கூறிக் கெட்டனனெனக் கூறு மூலகவாக்கியத்திற்குப் பிரத்தியட்சமாக வுன்னைக் கண்டனன். நன் றுநன்று. இதனை யுலகத்தார் கேட்கில், கொன்றெறிவர், பேசாமற் போமென்றனன்.

ஞா-வி:—நீரும் விசாரணை இல்லாமல், தலைவெட்டுபவர்போ லும் நானென்னு மவசர பேதங்கள் எத்தனையுள, அவற்றைவிசா ரித்துத் தெளிந்தீரா ? தெளியாமற போவென்னலாமா ?

சூ-விடை—நானெனம்கு அவசரநிலைக ளனந்த முண்டென்றீ ரே, அவற்றிற்சிலவற்றை-எடுத்துக்கூறுகவென்றனன்.

ஞா-வி:—"புத்தோக முத்தோகம் பூரண னந்தோகரு, சத் தோகஞ் சித்தோகஞ் சாந்தோகஞ்-சுத்தோகம், ஆரணங்கடேடரிய வற்புதோ கஞ்சகல, காரணமாஞ் சைதன்யோகம்" என்பதனுனும்; தேகோகமுதல் சிவோக மீறுக் கிடந்தவைகளுள், அனந்த அக பேதங்களிருப்பதனுனும் ; யாதுகண்டிகழ்கின்றனே, கூறுதியென ?

சூ-விடை—சூனிய மெனலைத் தோன்றா திருக்குமாறு மறக்க வைத்தனையே, உனதுவல்லபமே வல்லபம். எந்தநான்-இவ்வவசர நிலைகளா யனந்தநானாக நின்றதோ, அஃதினையதெனக் கூறவேண் டுமென்றனன்.

ஞா-வினு—எந்த வவசரநிலை நானெனல்லாம, நானெனன்பதல்ல. நானென்ப தன்றியு மில்லை. இவ்வநுபவம்-நானென்னுதாரார். நான் மாத்திரமல்லவே, இங்ஙனமிருக்க; ஓவ்வொருவரும் - சிந்தித்துண ராமல், என்னைக் கேட்பது சொல்கற்றற்கோ ?

சூ-விடை—இங்ஙன மெல்லாம் - அகமென்னும் பேதங்களைத் தெரிவித்தாற்போல இதனையுந் தெரிவிக்கில், அதனை யுணர்ந்தாற் போல இதனையு முணர்ந்து கொள்ளுதும், ஆதலிற் றெரிவிக்கவே ண்டுமென்றனன்.

ஞா-வினு—நானெனலை யன்றி உலகம் யாதுக்குத் தோற்றும், ஓன்றுக்கு மன்றாதலால், உலகத்தை யறியுமுன்னைப் பிறழாதுற்று ணர்ந்து சொல்லுதி யென ?

சூ-விடை—யாதொன்றுந் தோன்றவில்லை யென்றனன்.

ஞா-வினு—அங்ஙனந் தோன்றாமை யாதுக்கெனவினவ ?

சூ-விடை—இருந்தா லன்றோ காணப்படும், இல்லையாதலால் யாதுக்கென்பன், இங்ஙன மெல்லா முற்றுநின்று வுமதுவசனப்படி பார்க்கு மிடத்தில் எல்லாஞ்சூனியமா முடிதலின், எனது கட்சிக்கு மாறாய தொன்றுங் கண்டிலனே அகம்பிரமமென்பதி லென்சிறப்பு, விவர்த்தம் விவர்த்தமென்றிகழ்ந்தனன்.

ஞா-வினு—விவர்த்தமெனப் பூர்வபட்சப் படுத்தியது ஒன்றி ருந்து தானே ; இன்றேல் பூர்வபட்சம் சித்தாந்த மென்பதியாது இன்றாய் முடியுமாதலா, லுற்றுநின்று யோசியாத குற்ற முன்னிட த்தில் வைத்துக்கொண்டு சூனியத்தை நாட்டலாமா ? சூனியந் தன் னையேனு மன்னியத்தையேனு மறிதற் பாலதா? இதையெல்லாம் யோசியாது கூறுவது நியாயமா கண்டு கூறுதியெனின் ?

சூ-விடை—ஒன்றிருந் துணர்வது ஞாயமே; எனக்குக்காணு தென்னை யென்றனன்.

ஞா-வினு—உனக்குக் காணுதது இல்லையென்னலாமா? விவே கிகள் கூறும் வசனமா? தெரியாததுற்றுந் தன்பாலிருக்கக் கண்டு விசன முறாததென்னை ?

சூ-விடை—விசனமுறி னிழிவுக் கிடமன்றோ; இதனைக் குறிப் பாற்றெரிந்து கொள்ளாத தென்னையென்றனன்.

ஞா-வி௵—நீ விசனமுறுதற் கடையாள மொன்றுங் கண்டில னோ; சொல்லா லளக்கவல்லையோ என வினவ?

சூ-விடை—இதனை எங்ஙனமேனும் விளக்கிவிப்ப துன்கடமை யெனச்சொல்லி வணங்கினன்.

ஞா-வி௵—யாதோர் நினைவுமற்றுச் சும்மாவிருக்குதி. இருக்கு ங்கால் யாதுகாணப் படுகின்றதோ வதனைத் தெரிவி யெனவினவ?

சூ-விடை—முன்னர் பாழ் காணப்பட்டுச் சிறிதுசிறிதாவகன்று மின்மினிபோற் காணப்படு கின்றதென்றனன்.

ஞா-வி௵—அதை விடாது பற்றிநிற்கில் யாதாகின்றதோ வத னைக்கண்டு தெரிவியென வினவ?

சூ-விடை—அங்ஙன நிற்கநிற்கக் கடல்கவிழ்ந்தாற்போலப் பே ரின்பம்பொங்கிப் பரவசநாட்டனாய் வணங்கி நிருவிகற்ப சமாதியெ ய்தினனென்க.

௯-வது, சூனியவாதிமதம்

முற்றிற்று.

---

உ

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

௰ - வது,

# மூடவாதிமதம்.

ஞா-வினு—ஞாயவாதி மூடவாதியைநோக்கி விதிநிடேதத்தின் நெறிநில்லாது கண்டபடி சஞ்சரிப்ப தென்கண்டோ வென வினவ?

மூ-விடை—விதி நிடேதந் தழுவி நடப்பதால் யாது பயனென்றனன்.

ஞா - வினு—நின்போலும் விவேகிகள் பயனில்லாமை பற்றியா தழுவிநடந்தனர். இதுபற்றி விசாரியாததென்னை? தழுவி நடப்பதா லிதனினு மிக்க சம்பத்தடையலா மெனவும், வழுவிநடப்பதாற் சிறுமையனுபவிக்கலாமெனவும், எல்லாமதத்தர் வேதங்களும் முறையிடுவதை யறிந்திலையோவென வினவ?

மூ-விடை—அப்பய னனைத்தையு மனுபவிப்ப தெப்பொழுதோ; இப்பொழுதெனின், மிக்கசம்பத்தினர் தாங்க ளஞ்சாதுசெய்யுந் தீவினைக ளனந்தமுள. அவற்றின்பயனை யிப்போ தனுபவிக்கக் கண்டிலமே; மிக்கவறுமையுளோர் தாங்கள் பயபத்தியோடு கடவுளுக்குத் தொண்டுபுரிந்து செய்யுஞ் சற்கிருத்தியங்க ளனந்தமுள. அவற்றின்பலனை யிப்போ தனுபவிக்கக்கண்டிலமே, தழுவிநடப்பதால் யாது பயனென்றனன்.

ஞா-வினு—வறியனிடத்துஞ், செல்வ மிக்கோனிடத்தும் ஏககாலத்திலுதித்த சிசுக்களுக்கு இடம்பொருளேவலின்மையும், உண்மையும் வருதற்கேதென்னை கொலோ? படைப்பெனின், பக்ஷபாதத்திற் கிடமன்றோ? இயற்கையெனின், ஒருபடித்தாக வாய்க்காததற் கேதென்னையோ; வினையெனின், எப்போதியற்றியதோ, முன்னெனின், பின்னெனவரற் கியையாதோ; இங்ஙனமிருக்க. முன்பின் செனனமில்லையென லெங்ஙனமேற்கப் படுமெனின்?

மூ.விடை—அப்பிரத்தியக்ஷ மாதலா லேற்கப் படாதென்றனன்.

ஞா-வினா—ஒவ்வொருவரும் இம்மையில்தானே தினந்தோறும் கேவலத்தில் யாமிப்போ தின்னபிறப்பின ரெனத்தெரியவருளரோ, அங்ஙனந் தெரிந்து கொள்ளாததா லிப்பிறவியில்லாமற் போயிற்றே; அதுபோல இப்பிறவியில் முன்பின்செனனங் காணப் படாததா லில்லை யெனப்படுமோ; இவையனைத்தும் விவர்த்த கேள்வியே யன்றி ஞாயத்துக் கியையுமா விதனை நன்குணராத தென்னை?

மூ-விடை—சாக்கிராவஸ்தையைச் சுழுத்தி யவஸ்தைக் குவமையிட்டது யாதுபற்றியோ, அதனை விளங்கக் கூறவேண்டு மென்றனன்.

ஞா-வினா—செனனாகாரம் நசித்தலொன்று. ஒடுங்கலொன்று. நசித்தல், மரணம். ஒடுங்கல், சுழுத்தி. முன்னர் நசித்த தேகாகாரமெங்ஙனங் காணப்படும். காணப்படுதற் கேதின்மையி னிங்ஙனமாக வினாதலையொழிக. இன்றேல் குதர்க்க மெனப் படாதாவெனின்?

மூ-விடை—ஆகாரத்தையன்றித் தேகநானென்னலின்றேல், முடிவுதானென்றே; இன்றெனின், விஸ்ராந்தி தானென்றே; இன்றெனின், விதிநிடேத மேற்பதால் யாது பயனென்றனன்.

ஞா-வினா—விதிநிடேதம் விடுவதால், யாது பயனெனக்கருதி மிருகங்களைப்போல உண்டல், உறங்கல், புணர்தல், செய்து, காமக்குரோதாதிகள் வயப்பட்டு, அல்லல் மிக்குற் றலைவானேன்?

மூ-விடை—விதி தழுவி நடப்பதால் சுவர்க்காதி போகமும், தழுவாது நடப்பதால் ரவுரவாதி நரகமும் மறுமையி லெய்து மென்றனை; இவ்விருவகைப்பயனையும், தநுவெடுத் தனுபவிக்க வேண்டுமென்றால் எல்லையின்றி இவ்விருவினையும் மாறி மாறிச் செய்யவேண்டிவரும். வரின், ஓய்வுக் கிடமில்லாமற் போகும். இங்ஙனம் வராமைக் கேதுகூறுக வென்றனன்.

ஞா-வினா—என்று மோய்வுக் கிடமவாவில், இருவினைக்குட்படா திருக்கவேண்டும். உடன்படா திருத்தற் கியைந்த புடைபெயர்ச்சி இனையதெனத் தெரியவேண்டும். தெரிந்தவிடத்து அவ்வாறு கட்டுண்டு நிற்கவேண்டும். இவ்வாறு வழுவின்றிப் பலகாலும் நிற்கில், இருவினையொப்பும் மலபரிபாகமுந் தானேவந்தமையும். இவ்வாறமைதற் கியைந்த நெறியாதென விசாரிக்கத் தேடுதி யெனவினவ?

மூ-விடை—எங்ஙனஞ் செய்யின் இருவினை யொப்பு வருமென்றனன்.

ஞா-வி—தான்யாரென விசாரிக்கும் விசாரணையாகிய கேட்டல்-சிந்தித்தல் - தெளிதலில் வருமாதலால், அந்நெறிகண்டு நிற்றியெனக்கூற?

மூ-விடை—தானென்பதை விசாரிப்பானேன் உடலையன்றிவேறுளதோ வென்றனன்.

ஞா-வி—உடலையன்றி வேறின்றெனின், உடல்படுக்கையிலிருக்கப், பலவிடத்திற்சென்று, பலவிவகாரஞ்செய்து, இன்பதுன்பங்களி லொன்றை யனுபவித்ததாகச் சொர்ப்பன மெய்தியதியாது? அதனைக்கண்டு கூறுதியென?

மூ-விடை—அங்ஙனங் கூறியபோதே? நெடுநேரம்யோசித் துனது வசனப்படி உடலையன்றி வேறுபுருஷனுளனாகச் சத்தியமாகக்காணப்படுகின்றனன். அவன் யாவனென உன்னுமிடத்துச் சேய்மையனாகவும், உன்னாதவிடத் தணிமையனாகவும், காணப்படுகின்றனனே இதற்குயாதுசெய்வ னென்றனன்.

ஞா-வி—அவன் உன்னையன்றி வேறுபுருஷனோ; அலனெனில், உன்னை நீ விசாரித்துக் காண்டற்குத் தடையாது?

மூ-விடை—எனக்கு நானன்னியனாகில் விசாரணை வேண்டும். அன்னியனல்ல னாதலின் விசாரணை யாதுக்கென்றனன்

ஞா-வி— விசாரணை பண்ணாது நீயார் கண்டு சொல்லுதியென?

மூ-விடை—காணப்புகின் பாழாகவும், புகாதவிடத்து நாமரூபமாகவும், காணப்படுகின்றனனே; உன்னுமிடத் திவை வேடமல்லாது அவனாகா. இவ்விருமையன்றி எங்ஙனந் தேடிப்பார்க்கினும் அவனைக் கண்டிலனென்றனன்.

ஞா-வி—"அறியாப்பொருள் காரணமாயை குறித்தறியும் பொருள் காரியமாமுலகிந், நெறியாற்றிகழ்நான்மறை யந்தமெலாநீயன்றென வோதுநிரந்தரமே." என்னுங்கவியி னனுபவமுனக்குவாய்க்கக்கண்டேன். இவ்வாறினி மேன்மேற் செல்லுவையாயின், உன்னை நீ காண்டற் கையமில்லை. இதற்குயாது கூறுதியெனவினவ?

மூ-விடை—இதற்குமேற் செல்லுமாறறிந்திலன். இனிநீயே தஞ்சமன்றி வேறறிகிலனென்று அவனடியில் வீழ்ந்தனனென்க.

ஞா-வினா—இயமமுதலிய நெறித்தாகச் செலுத்திச், சமாதி பெறவைத் தவனை விளக்கி, நினதநுபவம் யாது கூறுதி யென வினவ ?

மூ-விடை—அவனைப்பலகால் வணங்கி, உனதநுக்கிரகத்தால் என்னையான் கண்டனன். கண்டதால் யான்பெற்றபயன் யாதெனின்; யானாகிய வறிவையன்றி அயலாக வொன்றிருக்கக் கண்டிலன். செக மென்பதில்லாமற் போயிற்றே; உண்டெனின், தற்பிரத்தியட்சத்தி லெங்கே; இல்லையெனின், தானாகக்காணாதலால் அன்னியமன்று. உன் னியமெனின், அவைதானாகா. எனவே; தன்னையன்றி யாதுமின்றெ னவும், அவை தானன்றெனவுங் கண்டேனென்று தனதநுபூதிநிலை யனைத்தையுந் தான் கண்டவாறு சொல்லித் திருவடியில் வீழ்ந்தன னென்க.

ஞா-வினா—பந்தத்தில் உலகெனவும், விடுதியிற் பரமெனவுங் கோடற்கியைந்த தொன்றே; பலவோ; இதனைக்கண்டு கூறுதியென?

மூ-விடை—யானே; மருளாயவழி யுலகாகவும், தெருளாய வழி சிவமாகவும் நின்றதன்றி வேறுகண்டிலனென்றனன்.

ஞா-வினா—ஆன்மா ஒன்றெனவும், பலவெனவுங் கோடற்கியை ந்தநெறி யாதோவெனவினவ ?

மூ-விடை—உபாதிசகித நாட்டத்தாற் பலவெனவும், உபாதிர கித நாட்டத்தால் ஒன்றெனவுங் கோடற்கியைந்ததன்றி; ஆன்மா ஒன்றுமல்ல பலவுமல்ல வென்றனன்.

ஞா-வினா—ஒன்றேயனைத்தாயின், சீவன்-கூடஸ்தன்-ஈசன்-பி ரமம்-எனப்பாகுபாடு வருவானேன் ?

மூ-விடை—சைதன்னியம் ஒன்றே; வியஷ்டியுடலைத் தானெ னலால் சீவனெனவும், சமஷ்டியுடலைத் தானெனலால் ஈசனென வும், வியஷ்டியளவாக அறிவைத் தானெனக் காண்டலாற் கூடஸ்த னெனவும், சமஷ்டியளவாக அறிவைத் தானெனக்காண்டலாற் பிர மமெனவும் வந்த பாகுபாடேயன்றி மற்றவற்றால் வந்த தன்றெ ன்றனன்.

ஞா-வினா—அறிவுநாட்டத்தில் உபாதியளவு பாகுபாடு வருவா னேன் ?

மூ-விடை—வாசனையா லென்றனன்.

ஞா-வினா—இப்பேதமு மெதுகாறு முண்டோவெனவினவ?

மூ-விடை—அறிவேதானாக வாகுமளவுமென்றனன்.

ஞா-வினா—திருக்குதிரிசியபேதம் எதுகாறுமிருக்குமோ?

மூ-விடை—அறிவறியாமைபேத முள்ளளவுமென்றனன்.

ஞா-வினா—யானெனதென்னு மகம்பாவமெதுகாறுமோ?

மூ-விடை—பிராதிபாஸிகசத்து வுள்ளளவுமென்றனன்.

ஞா-வினா—பிறப்பிறப்பென்னும் பேதமையெதுகாறு மிருக்குமோ எனவினவ?

மூ-விடை—தானேதானாகுமளவு மென்றனன்.

ஞா-வினா—செகத்தாகார மாகாததற்கு யாதுபாயமெனவினவ?

மூ-விடை—தற்பிரகாச வடிவமாகப் பழகுவதே யுபாயமென்றனன்.

ஞா-வினா—திரிபுடி நாசத்துக்கு நெறியாதெனவின்வ?

மூ-விடை—நடுநின்ற ஞானத்தை விளக்கிக்கொண்டு விடாதெங்கும் காண்பதே திரிபுடி நாசமென்றனன்.

ஞா-வினா—செகங்காணப் படாமைக்கு நெறியாதோ வெனவினவ?

மூ-விடை—தனதறியாமையை யறிவாகவிளக்கிக் காணில் அகணமே இன்றாய் முடியுமென்க.

ஞா-வினா—உலகவாசனை சாஸ்திர வாசனைகட்கறுதி யென்றோவெனின்?

மூ-விடை—தனக் கயலின்றெனக் காணுமளவு மென்றனன்.

ஞா-வினா—விடயமாவ தென்னை?

மூ-விடை—அநிர்த சடதுக்கமயமென்றனன்.

ஞா-வினா—விடயமெனல் தனக்கெனச் சொரூப மொன்றின்றித் தோற்றன்மாத்திரமுஞ் சொன்மாத்திரமு மாயிருக்க; அநிர்தசடதுக்க விலக்கணத்தை யேற்றற் கியைந்த பொருளாகுமா?

மூ-விடை—அறியாமையையன்றி விடயமின்றாதலின், பொருளாகாதென்க.

ஞா-வினா—மண்முதலியவைகட்கு அறியாமை யெங்ஙன் முதற்கருவி யாகும், ஏற்குமாறு கூறுதியென?

மூ-விடை—சோதனையில்; பூர்வபட்ச மாதற் கியைந்த வடிவு நிறம பல்வகையாயும், ஐவண்ணமாயும், முடிதலாலறியாமையே வடிவமென்றனன்.

ஞா-வினா—பரமாவ தென்னை;

மூ-விடை—சச்சிதானந்தமய மெனறனன்.

ஞா-வினா—பரமெனல் தனக்கெனச் சொரூப மொன்றின்றித் தோற்றன் மாத்திரமாயும், சொன்மாத்திரமாயு மிருக்கச்; சச்சிதானந்த விலக்கணத்தை யேற்றற் கியைந்த பொருளாகுமா?

மூ-விடை-அறிவையன்றிப்பரமின்றாதலின்பொருளாகாதென்க

ஞா-வினா—அறிவே பரமென லெங்ஙனமா மெனின்?

மூ-விடை—திணைபா லிடமாயும், அன்றாயு மெவ்வுயிரு மிருத்தலினானும்; எவற்றையு முணர்தற்பாலவாதலானும்; பிரவிர்த்தி நிவிர்த்திக் கியைந்த வினை முதலாயும், சகல கற்பனைகளாயும், அன்றாயு மிருக்கற் பாலதாதலானும் அறிவே பரமெனப் படும்.

ஞா-வினா—நானீமுதலியவை கற்பனை யெனக் கூறுவ தென் கருதியோ, அதனை விளங்கக் கூறுதி யென?

மூ-விடை—அல்லவற்றை நானீயவ னவளெனவும், அண்ணன் தம்பி-தாய் தந்தை-மாமன்-மருகனெனவும், சாத்தன்-கொற்றன்-தேவன்-பூதனெனவும், சத்துருமித்துருவெனவும், இன்னு மிவைபோன்ற வண்ணப் பெயர்தந்தின்னொனின்றொளெனவுங் கூறுவதாமென்க.

ஞா-வினா—நடுநிலையாவ தென்னை?

மூ-விடை—ஞானஞ்ஞான நிலைகண் டிடை நிற்றல்.

ஞா-வினா—ஞானஞ் சிறந்த தன்றோ?

மூ-விடை—சிறப்புற்றதேனுந் நானெனலையன்றி இவ்விருமையு மின்மையின், சிறப்பெனச் சாய்தல் கூடாதென்க.

ஞா-வினா—வஸ்துவை யுளதெனவும், இலதெனவும், அன்றெனவும், ஆமெனவுங் கூறற் கிடந்தருவ தெங்ஙனம்?

மூ-விடை—அந்தர்முக நாட்டத்தால் வஸ்துளதெனவும்; ஆமெனவும்; பகிர்முகநாட்டத்தா லிலதெனவும்; அன்றெனவு மியையப்பெறுமென்க.

ஞா-வினா—அஞ்ஞானமுதலிய ஞான்றுமகன்றனையெனத் திருவடி தீட்சை தந்தாசீர்வதிக்கத்; திருவடியில்வணங்கி நிர்விகற்பசமாதியெய்தினனென்க

௰-வது, மூடவாதிமதம்
முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

௰௧ - வது,

இ ளி

# சாத்தேயமதம்.

ஞா-வினா—ஞாயவாதி சாத்தேயனை நோக்கி, ஐயா! சாத்தேயமாவது யாது?

சா-விடை—சத்தியைப் பூசிப்பது.

ஞா-வினா—சத்தியாவது யாது?

சா-விடை—பரத்தினதுவல்லபம்.

ஞா-வினா—அஃதினைய தெனத் தெரிவிக்க வேண்டு மென்றனன்?

சா-விடை—பரத்தின தனந்தகோடி சத்திகளே யென்க.

ஞா-வினா—அந்தச் சத்தி யொன்றோ, பலவோ?

சா-விடை—ஒன்றேபலவாக நிற்பதென வறிக.

ஞா-வினா—ஒன்றென்பதும், பலவென்பதும் யாது பெயருடையது?

சா-விடை—ஒன்றென்பது, சிற்சத்தியெனவும்; பலவென்பது, மாயாசத்தியெனவும் பெயர் பெறும்.

ஞா-வினா—பரத்தினதுவல்லப மென்புழித்; தற்கிழமையாது, பிறிதின் கிழமை யாது?

சா-விடை—தற்கிழமை, சிற்சத்தி. பிறிதின்கிழமை, மாயாசத்தியென வுணர்க.

ஞா-வினா—இவ்விரண்டிற்கு முதாரணம யாதோ?

சா-விடை—கொற்றனது-கை-நிறம்-வேலை-இவைதற்கிழமை. ஆஸ்தி-வீடு-ஆயுள்-இவை-பிறிதின் கிழமையெனக் காண்க.

ஞா-வி௵—என்னையானறிவேனெனல், சிற்சத்தி; அறியேனென்னல், மாயாசத்தி யெனக்கோடல் போலுமோ வெனின்?

சா-விடை—ஆமென்றனன்.

ஞா-வி௵—எதனைச்சத்தியெனல்?

சா-விடை—புடைபெயர்தலே.

ஞா-வி௵—இது யாதுபோலு மெனின்?

சா-விடை—பெயருங் எழூவாயும் போலு மென்க.

ஞா-வி௵—அஃதெங்ஙனமெனின்?

சா-விடை—புடைபெயர்த லேலாமை-பெயரெனவும், ஏற்றல்-எழுவாயென்வுங் கொளளுமாறு போன்று, வஸ்து சலனமின்றி நிற்கின்-பிரமமெனவும்; சலன முறின் சிற்சத்தி யெனவும்; அந்தச் சலனம் செகசீவபரமாகப் பரிணமிக்கின் மாயையெனவும் பெயர் பெறும். தன்னிலைக்கன் தானிலையுறுவதும், சலனமுறுவதுமேயன்றி வேறிடமின்மையின் "தன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை, நிலைகலக்கிக் கீழிடுவானு - நிலையினு, மேன்மேலுயர்த்தி நிறுப்பானுந் தன்னைத், தலையாகச் செய்வானுந் தான்." என்றாரறிஞர்.

ஞா-வி௵—இது-யாதுபோல்வது, உபமானபூர்வமாக வெளிப்படுத்த வேண்டுமெனின்?

சா-விடை—ஆகாயமும்-வாய்வும்போலு மெனவறிக.

ஞா-வி௵—அஃதெங்ஙன மெனவினவ?

சா-விடை—ஆகாயமானது - தன்னிடத்தில் தானே - சலிப்பதால் வாய்வெனவும், இவ்விரண்டின் ஸ்புரிப்பே அக்கினியெனவும், இம்மூன்றின் சையோக ஸ்புரிப்பே நீறெனவும், இந்நான்கின் சையோக ஸ்புரிப்பே பிரிதிவெனவும், இவ்வைந்தின் சையோக ஸ்புரிப்பே யண்ட பிண்டங்களெனவும் பெயராய்த் தன்னிடத்திற்றானே விகாரமுற் றமைதிபெறும். பெறினும், தனது பூரணத்துக்கு நட்டமுறாது நிற்பதுபோலு மெனவறிக.

ஞா-வி௵—அங்ஙனமாயின், பரிபூரண மான பரமென்னுஞ் சத்தனைவிட்டுச் சத்தியை யேற்றல்; அஃதோர் பொருளன்றே, யிதற்கு யாது கூறுதியெனின்?

சா-விடை—பரமென்பதுஞ் சத்தியா லியங்கப் படுவதன்றித் தானே யியங்கா தெனச் "சிவமெனும் பொருளுமாதி சத்தியொடு சேரினெத் தொழிலும் வல்லவாம், இவள்பிரிந்திடி லியங்குதற்கரி தரிதெனுமறை யினைக்குமால்.,, இங்ஙனஞ் சான்றோர் வசன மிருப்பானே னிதனை யோராததென்னை யென்றனன்.

ஞா-வி—யாதோ வொன்று; அனைத்து முண்டாகுக வென ச்சங்கற்பிக்க; அங்ஙனமே யனைத்து முண்டாயினவென் றருமறைகளுங் கூறுவதால், என்னகருதி ஆணெனவும், பெண்ணெனவுங் கூறவந்தது. இவற்றுளொன்றாயின், ஆணல்லன் பெண்ணல்ல னல்லாவலியு மல்லனெனச் சான்றோர் கூறுவதென்சருதியோ?

சா-விடை—ஆண்பெண்ணென விரண்டுண்டா யிருப்பதென்னை; ஆணனைத்தும் பெண்வயப்பட்டுப் பிரியமோதப் பிரமோதமும் றகறற்கிடமின்றிச் சலனமும் றதில்தானே சுழன்றுசுழன் றலைவானேன்? இதுபற்றிப் பரத்தை யாணெனவும், வல்லபத்தைப் பெண்ணெனவுங் கூறியதென்க.

ஞா-வி—கற்பனையாதலி னிவற்றிற் காண்பெண்ணலிமுதலிய வெண்ணிறந்த பேதங்கள் வரலாம். முடிவிடத்து வருதற்கிடம் பெறாதே; சொல்வார்க்கின்றேனுங் கேட்பார்க்குமதி யின்றோ?

சா-விடை—எண்ணிறந்தபேதங்கள் கற்பனைகட்கு வரலாமென்றீர். கற்பனைகளொன்ற தெவ்வாறென விளக்கவேண்டு மென்றனன்.

ஞா-வி—பஞ்சபூதங்களையன்றி யுடல்களும், உடல்களையன்றி யாண்பெண் ணலிகளு மெங்கே; இன்றுதலாற் கற்பனை யென்றும். இதில் யாதுவழு?

சா-விடை—காமம் - தவித்தல் - ஊடல்-கூடல் - கருக்கோடல்-பிரசவித்தல்-வளர்த்தல்-காத்தல்முதலிய விவகாரமெற்றிற்கு, உண்டாயிருப்பதாற் கற்பனையென் றெங்ஙனமேற்கப்படும்.

ஞா-வி—எனதுவாதம், பாரமார்த்திகசத்து. உனதுவாதம், விவகாரிகசத்து. என்று லெங்ஙனமொருங்குறும், உறாததால் வாதிப்பதி லென்பயன்?

சா-விடை—இருவகைசத்தி னர்த்தமென்னை? தெரியாவிடத்துப் பயனின்றெனல் மெய்யே; அவற்றைக் கூறுகவென்றனன்.

ஞா-வி௫—மல்லுநூலும், பாரமார்த்திகம். கட்டும்படமும், விவகாரிகம். இங்ஙனமாய வுண்மையர்த்தந் தெரியாது; சத்தன்-சத்தியென் றிரண்டாக்கின், வஸ்து விரண்டாம். இரண்டாயின், ஐயந்திரிபுக் கிடமாய் மனமொருங்குறாது. சத்தனையன்றிச் சத்தியில்லையெனின், வஸ்து வொன்றாம். ஒன்றாயின், செகமும் பரமெனக் கோடல் வேண்டும். கொள்ளுது மெனின், வஸ்துவுக்குச் சுத்தம்-நிர்விகாரம் பூரணமெனற் கிடமின்றாம். இதற்கு யாதுகூறுதியெனின்?

சா-விடை—ஒன்றெனினும், பலவெனினும்விடாவழக்கா நிற்றலினிது நீங்குமா றெங்ஙனமென்றனன்.

ஞா-வி௫—வழக்கிடுவோனை ஐயந்திரிபறக் கண்டவிடத் தக்கணமே நீங்கும். இன்றேல் நீங்காது. ஒருதலைத் தீர்ப்பா முடியும். முடிவதால், அல்லலும் பிறவியு மறுவாம். இதற்கு யாதுகூறுதியெனின்?

சா-விடை—வழக்கிடுவோன் தன்னை யுடலெனக் காண்பதிலுமையந்திரிபகறல் யாதுக்கென்றனன்.

ஞா-வி௫—உடலென லன்னமயகோசம். இதுவே தானுயின் ஏனையகோச நான்கெற்றிற்கு?

சா-விடை—இவ்வைந்துகோசமு நானல்லனாயின், நானெனல் யாதோ, அஃதெத்தகையது, எவ்விடத்தது, எக்காலத்தது. இதனை நன்குணர்த்த வேண்டும். இன்றேல், முன்போல் நிலைமாறுவனென்றனன்.

ஞா-வி௫—சத்தியென்றனை; நினக்குக் காணப்படு நிலையைக் கூறுதியெனின்?

சா-விடை—பெண்வடிவாகக் காணப்படுகின்ற தென்றனன்.

ஞா-வி௫—அகத்திலோ, புறத்திலோ?

சா-விடை—ஈரிடத்துமென்றனன்.

ஞா-வி௫—புறத்திற்காணப்படுவது; மண்முதலியவற்றா லாயது. அகத்திற்காணப்படுவது யாதாலாயதோ; அதனைக்கண்டு கூறுதியென?

சா-விடை—முத்தற்கருவியினைய தென்றறிந்திலன். எனது கல்விஞான முற்று மொருங்குபடுத்தியுணரினு மிருப்பதாகத் தோற்று

கின்றது, இனையதென்றறிந்திலன். இனி நீயே யுணர்த்தவேண்டு மென்றனன்.

ஞா-வினு—அவ்வடிவுக்கு, எட்டப்புறத்து நிற்பது யாது, அதனைக்கண் டிதனை யாதெனத் தெளிதியெனவினவ?

சா-விடை—அதனையுற்றுக்கண் டிதனைக்காண, இன்னதிசை யென்றில்லாமற்போய், ஏகவியாபகமாய், சாட்சாத்காரமாய், ஆனந்தப்பிரவாகமாநின்றதென் றதிசயித்து, அஞ்சலியோடு கீழ்ப்பணிந்து, ஐயனே! எல்லாவழக்கு மொருங்குதொலைய வுண்மையை விளக்குவித்தனையென்று பலகால் வழுத்திக் கேட்கவேண்டு மனைத்துங் கேட்டு நிர்விகற்ப சமாதியிலிருந்தனன்.

## ௰க - வது, சாத்தேயமதம்

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

௰உ - வது,

இனி

# பிரபலசுருதியற்பசுருதிவிஷயம்.

ஞா-வி—மிகக்கற்றுணர்ந்தவந்தணனைநோக்கி வேதமானது பிரபலசுருதியெனவு மற்பசுருதியெனவுங் கூறுவதென்னை?

அ-விடை—இலக்கிய மிங்ஙனமிருத்தலி னென்க.

ஞா-வி—அஃதெங்ஙனமென வினவ?

அ-விடை—அறிவுமயமொன்று; அறியாமை மயமொன்றென நிற்றலினென்க.

ஞா-வி—இவ்விரண்டையு மிலக்கியமாக்கற்கே தென்னை?

அ-விடை—சத்து-சித்து-ஆனந்தம்-முதலிய விலக்கணங்கட் கமைந்து நிற்றலின் அறிவை இலக்கியமெனவும்; அநித்த சட துக்க முதலிய விலக்கணங்கட் கமைந்துநிற்றலின் அறியாமையை இலக்கியமெனவுங் கூறற் கியைந்ததென்க.

ஞா-வி—இவ்விருசுருதியு முடையோரார்?

அ-விடை—ஞானியுங் கன்மியுமென வறிக.

ஞா-வி—யானேற்றற்கியையத் தனித்தனி யினையரெனக் கூறவேண்டுமென?

அ-விடை—ஞானி; பரஞானியெனவும், அபரஞானியெனவும், கன்மி; பக்திகாண்டியெனவும், போககாண்டியெனவு மிருகூறதா நிற்பர். இவற்றை வேதவிரியு ளாங்காங்கு காணலாமென்றனன்.

ஞா-வி—இவற்றைச் சற்றுவகுத்துக் கூறவேண்டு மென வினவ?

அ-விடை—அறிவேவடிவாய் விளங்கினோர் பரஞானிய ரென வும், அன்றாய்த் தெளிந்தோர் அபரஞானியரெனவுஞ், சமஸ்தத் தையு மீஸ்வரார்ப்பணஞ்செய்வோர் பக்திகாண்டியரெனவுந், தம்மய னுக்காகச் செய்வோர் போககாண்டியரெனவும் பெயர்பெறும்.

ஞா-வினா—இஙஃக யிலக்கியமென்றது யாது?

அ-விடை—லட்சியார்த்தத்தை.

ஞா-வினா—இலக்கியார்த்தத்தில் ஞானமஞ்ஞானமெனக்காண் படுதெங்ஙன மெனின்?

அ-விடை—அவ்வவற்றி னிலக்கணத்தாலென்க.

ஞா-வினா—அஃதெங்ஙனமெனின்?

அ-விடை—சமஸ்தமுஞ் சின்மாத்திரமாகக் கரைதற் கியையி னதனை ஞானவிலக்கியமெனவும், உபாதானவுபாதேயமினையவென வுன்னவொட்டாது சத்தியம்போலச் சமஸ்தமுங் காணப்படுதற் கி யைவ தஞ்ஞான விலக்கியமெனவும் அறிஞர்கூறுப. பரஞானிக்கே யிவ்விருவகை இலக்கியமு மிலக்கணமு மன்றி ஏனையோர்க்குத் த த்த மிலக்கியமு மிலக்கணமு முணரப்படாவென்க.

ஞா-வினா—இங்ஙனமிருக்கத்;தத்தம்பாடை யல்லாத வாத்ம விலக்கிய மினையதெனக்கல்லார் அதற்கியைபக்கண் டிலக்கணம் படி த்தலெங்ஙனம் வாய்க்கும்?

அ-விடை—ஒருபோதும் வாய்க்காதென்க.

ஞா-வினா—இவ்வுலகில் யாவர்பெரும்பாலரெனவினவ?

அ-விடை—போலிஞானியரும், அடாஞானியருமென்க.

ஞா-வினா—இவ்விருதிறத்தினர் நிலைமையாது?

அ-விடை—ஏட்டுஞானியர், புகழுக்கும், குரு பீடத்துகரும், அவாவயின்போலிஞானியரெனவுங்; தம்போதை காணாது கஞ்சாவ பினிமுதலிய போதைக்குங், தன்னைத்தான்சுகிக்கவறியாது கைம்பெ ண்முதலியவைகளையணைந்துசுகிக்கும்போகத்துக்கும், மிகக்கற்றோ ர், அடாஞானிய ரெனவுங் கூறுப.

ஞா-வினா—பெரும்பாலு மித்தகையினராயின் தத்துவ ஞானி இனையரெனக்காண்ட லெங்ஙனமெனின்?

அ - விடை—யுத்திக்கு முரணாது சுருதியநுபவங் கூறுவ ரெனவறிக.

ஞா-வினா—இதனால் பரமஞானிய ரரியரெனக் கண்டாம். இத் தகையினராகிய விருதிறத்தரு மிருத்தலின், வேதமாதா; பிரபல சுருதியெனவும், அற்பசுருதி யெனவுங் கூறிற்று, இஃதேற்றாற்றால தே,பாஷையிருத்தல்பற்றி, இலக்கியவிலக்கணம்விதிததாற்போல,

இங்ஙனமாய ஞானஞ்ஞான வநுபூதியிருத்தலின் இவற்றிற் கியைய விலக்கிய விலக்கணம் விதித்ததாகுமெனத் தோன்றுகின்றது. இஃ தேற்றற்பாற்றோ வன்றோ?

அ-விடை—ஐயமின்றி யேற்கப்படும். நீர் சுவாநுபூதியின ரல்லரோல் வேதமாதாவின் உண்மை யெடுத்துரைமீர் நன்று நன்று. நின்போலும் உலகெங்கணுந்தேடி யொருவரையுங் கண்டிலன். சரணஞ்சரணமென்றஞ்சலிசெய்து, இங்ஙனமாயமுடிபு சங்கராசாரியரது பீடத்தினர்க்கன்றி யேனையோர்க் கறிவரிதென்றனன்.

ஞா-வி—அநுபூதிமுன்னரோ, வேதமுன்னரோ? வேதமெனின், எதையுணர்த்த வேதம் வந்ததோ; அநுபூதியை. அன்றெனில், விடயம்-சம்பந்தம்-பயன்-அதிகாரியென்னு நான்கையும், அநுபந்த சதுட்டயமென நூன்முகத்துக் கூறுவதென்னை? கூறுவதால் அநுபூதியே முன்னயதெனக்கோடற்கு யாதொன்றானுமுரணில்லை. இதற்கு யாது கூறுதியெனின்?

அ-விடை—இங்ஙனமிருக்கச்; சுருதியுத்தியனுபவமென மாறி வழங்குவதென்கொண்டோ? இதுவுஞ்சான்றோர் வழக்கென்றனன்.

ஞா-வி—ஈஸ்வரவாக்கியம் வேதமாகியாதலால், அநுபூதியை யுத்திக்கு முரணின்றி விளக்கல் சத்தத்தாலேனும்; அஃதரூபமாதலின், அன்னியருக்கும், பின்வருபவர்க்குங் கூடாமையின் வரிவடிவாக்கியதாம். இங்ஙனமிருக்கச்; சுருதியுத்தியனுபவமென மாறிக்கூறுவதென்னை?

அ-விடை—அநுபவமுன்னையதேனும், அது; பலவாகச் சிதைந்து நிற்றலைக்காட்ட-யுத்தியும், அந்தயுத்தி; தர்க்கம்-குதர்க்கமெனத் தெரியாது நிற்றலைக்காட்ட வரிவடிவாகிய சுருதியும் வந்தமுறை நீர் கூறியதேயொக்கும். "பழையனகழிதலும் புதியனபுகுதலு"மென்ற விதியால்; பின்னுள்ள நமக்குச் சுருதியன்றி யுத்தியும் யுத்தியன்றி யனுபூதியுஞ் சான்றோரனுபவித்த வண்ணம் யாமு நிலைப்பான் வேண்டிச் சுருதியுத்தி யனுபவமென்றது வழுவன்றென வுணர்க.

ஞா-வி—சுருதியையேனும் யுத்திக்கொத்துக்கூறத்தெரியாவிடத்து வேதாந்த சாம்பிரதாயத்தாரொன்பதில் யாதுபயன்?

அ-விடை—அவர்கள் கூறினும் யாமேற்றற்கு யாதுடன்பாடுளது. இன்றாதலால், அவர்களைப் பாமரரினுங் கீழா யவரெனப்புறங் கணித்தல் பிறர்மயங்காமைக்கேதென்க.

ஞா - வினா—இங்ஙனஞ்செய்வதற்கும்; அவர்கள் நாணமுறாத தென்னை?

அ-விடை—அவர்போல்வார் புகழ்வதாலென்க.

ஞா-வினா—இவர்கட்குச் சுகந்தான் யாதோவெனின்?

அ-விடை—இம்மையிற் பாமரராற் புகழும், விடய நுகர்தலில் தளர்வுறாமையுமே யென்க.

ஞா-வினா—இவ்வாறாய இழிவை யவர்கள் உணர்வுறாததற் கே தென்னை?

அ-விடை—அவர்கள் பரம்பரையாயுள்ள மூடசாம்பிரதாயத்தா லென்க.

ஞா-வினா—இவர்களுக்கிருப்பிட மெங்ஙனே?

அ-விடை—எங்கணுமென்றனன்.

## ௰௧ - வது,

## பிரபலசுருதியற்பசுருதியினிலைமை

முற்றிற்று.

---

உ

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

இனி

# அத்துவிதம்

ஞா-வினா—அத்துவிதமாவதென்னை?

அ-விடை—இரண்டறநிற்றல்.

ஞா-வினா—இரண்டற நிற்றலென்பதென்னை?

அ-விடை—தன்னையன்றிக் காரணகாரிய மில்லாமை

ஞா-வினா—அங்ஙனமு முளதோவெனில்?

அ-விடை—கடபடமென்ற விடத்து மண்ணையன்றிக் கடமும், நூலையன்றிப்படமு மில்லையெனக் குறியாநிற்கும். நிற்கவே, கடபடத்தைப் பற்றி மண்ணும் நூலும் காரணமெனவும், இவைகாரணமாதல்பற்றிக் கடபடங் காரியமெனவும், வழங்குமன்றே. இங்ஙனம் வழங்குவதைக் காணுமிடத்து மண்ணுநூலுமே காரணமாகவுங்காரியமாகவு மன்றி வேறில்லையென்பது விளக்கநின்றதுபோல, ஞானமுந் தன்னையன்றித் திரிசியம் வேறில்லையென்பதனால் ஞானமே காரண காரிய மென்பதாயிற்றென வறிக.

ஞா-வினா—இங்ஙனங் கூறுவது சுருதிசம்மதமோ வெனின்?

அ-விடை—தத்துவமசியென்னும் வேதமுடிவாயுள்ள மகாவாக்கியங்காரணமாகவென்றனன.

ஞா-வினா—எங்ஙனமெனின்?

அ-விடை—தத்-துவம்-அசி-யெனப்பிரித்து-தத்-அது, துவம்-நீ, அசி-ஆனாய் எனப் பொருள்கொண்டு, அதுவே-நீ. நீயே - அது. 'எனத்தொக்கு நின்ற ஏகாரத்தை விரித்துத் தேற்றப்பொருளாக்கற்கிடமானதாலென்க்காட்ட-அசி-ஆனாய்-என நின்றதெனவறிக.

ஞா-வினா—துவிதம்-விசிட்டாத்துவிதமென்னு மிரண்டுவிதக் கட்சியாக்கியதற்கு மாறாகத்தானே தத்வமசிவாக்கியத்தை யிவ்வாறு பிரித் திங்ஙனம் பொருள் கொண்டதெனின்?

அ-விடை—அல்ல; இங்ஙனம் பொருள்கோடற்குத்தியனுடவம் பூரணமாயிருத்தலினென்க.

ஞா-வி.—யுத்தி; ஆன்மாக்கள தேக போக கன்ம அபிமானத்தாற் பற்பல கோடிபேதமாயிருக்க, ஏகமெனச்சாதித்தல் கூடாதே, யெங்ஙனஞ் சீவேஸ்வராளுக் கேகத்துவஞ் சாதிக்கக் கூடுமெனின்?

அ-விடை—உபாதித்திரிய மான்மாவல்லவே, யுபாதித் திரியமாகக் கருதி லக்குவைக்கில், ஆன்மா பலவாகவும்; அங்ஙனங் கருதாது ஆன்மலக்குவைக்கில் ஏகமாகவும் விளங்குமன்றே? இதறியாரொத்தனை சாதித்தாலும் யாதுபயனுளதாம். அதுபோல, ஆன்மாவும் ஞானமே. பரமும் ஞானமே. அன்றேல், சமஷ்டி வியஷ்டிகாரணகாரிய வுபாதித்திரியமாகவேண்டும். ஆகுமெனின், என்னுடல்-என்மனம்-என்னறியாமை யென்றுதிருக்கவேண்டும். இல்லையெனில், ஆன்மா இவையல்ல வாகவேண்டும். இவையல்லவாகவே ஆன்மாவும் பரமும் ஞானமாகவேண்டும். தம்மை யுணர்தற் பாலதன்றேயெனின், அஞ்ஞானமாகவேண்டும். ஞானத்துக்கு வேறெனின், அறிவையன்றி யறியாமைக்குச் சொரூபம் வேறிருக்க வேண்டும். இருக்கின்றதென்பமேயெனின், திரிகாலஞானமும்-கல்விஞானமும் தன்னையறிய முயலாது அன்னியத்தை யறிய முயலில் அஞ்ஞானமெனவும்; தன்னை யறிய முயலில் ஞானமெனவும் பெயர் பெறும். ஆதலின் ஞானமொன்றே யஞ்ஞானமெனப் படுமன்றி வேறாகாது. சிற்றறிவும் பேரறிவு மெனப்படுவது சமஷ்டி வியஷ்டி யுபாதித் திரியத்தாலன்றி வேறெனற்கு யாதொரு காரணமேயில்லை. இதனால்பரசீவருக் கைக்கியஞ் சாதிக்கக்கூடுமென வறிக.

ஞா-வி.—பரசீவ ரேகமானாற் சீவர்கள் பிறப்புப் பிணி மூப்புச் சாக்காடா யிருப்பானேன்?

அ-விடை—விசாரியாவிடத்தெனவறிக.

ஞா-வி.—விசாரியாவிடத்துள்ள விப்பேதங்கள், விசாரித்த விடத் தெவ்வா றெங்ஙன மகன்றனவோ வெனின்?

அ-விடை—பழுதையினிடத்துப்பாம்புங்கட்டையிற்கள்ளனும் விசாரித்தவிடத் தெங்கே. இதனைச்சொல்லில் அதனைச் சொல்லுவனென்றனன்.

ஞா-வி.—ஆனாலிருப்பதுதான்..யாதோவெனின்?

அ-விடை—பிரமமாத்திரமென்றனன்.

ஞா-வி.—எதனைப் பிரமமென்றதெனின்?

அ-விடை—சுத்த சைதன்யத்தை யென்றனன்

ஞா-வினு—எதனைச் சைதன்யமென்பதெனின்?

அ-விடை—அறிவை யென்றனன்.

ஞா-வினு—எழுவகைத்தோற்றவுயிரு முணர்வன்றோ கிஞ்சிஞ்ஞமாதலின் பரவஸ்து வாகுமாவெனின்?

அ-விடை—உபாதித்திரியத்தைத்தள்ளியுணர்வைமாத்திரமெடுத்துத் தனியே சிந்திக்கிற் றிரிபுடியின்றித் தான்மாத்திரம் விளங்கும். இங்ஙனஞ் சிந்திப்பாரில்லாததால் வேறெனப்பட்டது. வேறெனினுஞ் சோதனை முடிவில் ஞானமாகவே முடியும். இதுபற்றி யன்றோ, சான்றோர் பலரும் சரியை-கிரியை-யோகமெனக் கூறி யந்தத்தில் ஞானமெனமுடித்தார். இதனால் ஞானத்தை யன்றிப் பரமெனவில்லையென்பதற் குதாரணம். வாசிட்டம். "தீவினை யெலாமகற்றி மங்கலமெலாமுதவுந் தேவபூசை" என்பதனானும்; "தேகமுதற்சிறியனவா" மென்பதினானும்; இக்கருத்து ஞாயத்துக் கனுவேனு மாறுயதன்றென்னும் யுத்தியானும்; இந்த யுத்தி, சைதன்ய விலக்கணவிலக்கிய பரிட்சைக் கியைந்ததென்னு மனுபவத்தானும்; உயிர் பரமாகுமென வுணர்க.

ஞா-வினு—யுத்தியாவதியாதெனின்?

அ-விடை—அத்தியாரோபமெனவும், அபவாதமெனவும் கூறப்படுவனவாகிய இவ்விரண்டுமே யுத்தியெனப்படும்.

ஞா-வினு—இவ்விரண்டிற்கு மருத்தமென்னை?

அ-விடை—பந்தமெனவும்-வீடெனவுமாம்.

ஞா-வினு—அப்படியென்றால் கருத்தென்னை?

அ-விடை—பொருளல்லாததைப் பொருளெனவும், பொருளைப் பொருளெனவுங் கோடலென வறிக.

ஞா-வினு—இவ்விரண்டுகொள்கையில் வேதாந்திக்கும், ஏனைய மதத்தருக்கும் யாது சம்மதமெனின்?

அ-விடை—"திரிபைச்சுயம்பென்னுஞ் சிந்தைதிடத்தை, யொருவுதல் வேதாந்தத் துண்மை-யொருவாமை, யேனைமதத்துண்மையெதுகடியுமுக்குற்றம், சோனைபோற் பேசினுமென் சொல்." எ-து. கல்நீது-கஃறீது-முள்நீது-முஃடீது என்றாற்போலத் திரியாத திரிபதார்த்தங்க ளில்லை. இல்லாதனவாயிருக்க இவற்றைத் திரியென்றனுவேனுமுணராமல் சுயம்பெனக்கொண்ட சிந்தனையின்றிடத்தை

யையந்திரிபற வகற்றல் வேதாந்தத்தி னுண்மை நிலையாம். அதனை யிறையளவு மகற்றுமை மற்றமதங்களி னுண்மை நிலையாம். இங்ஙனமிருக்க; முக்குற்றங்களையுமாற்றத்தகுவ திவ்விரண்டில் யாது இதனை யறியாது சோனமாரிபோல் பயனின் மொழிகளை விடாது பேசினும் யாதுபயன் நீயே சொல்லுதி. எனவே, வேதாந்தம்போ லுண்மைநிலை யெம்மதத்து மில்லையெனக்குறிப்பித்ததென வறிக.

ஞா - வி—ஏனையமதத்தர் மெய்போற் காட்டும் பிரளியைத் தெரிந்தவளவு சொல்லவேண்டுமெனில்?

அ-விடை—"சுயம்புலகாமென்பர் சுயம்பிதெனக்காட்டார், சுயம்புபரமென்பதெவன் சொல்லே - யியம்பறியார், வேதாந்தம்போலெதையும் மேலாங்குருவென்பர், நாதாந்தஙகண்டவர்போனன்கு" எ-து. பெரும்பாலு மெங்கணும் பெரும்பிரளிசெய்யு மேனையமதங்களி னிலையை விரித்துச்சொல்லுதும். அதாவது; உலகமனாதி நித்தியமாதலிற் சுயம்பென்பர். சுயம்பெனவிஃதெனச்சுட்டிக்காட்டவறியார். இவர்கள் பரவஸ்து சுயம்பு பதார்த்தமெனக் கூறுவ தென்ன மடமை. இங்ஙனங்கூறுவது வெறுஞ்சொல்லே, வேதாந்தம்போல் எப்பொருளினையும் ஐயந்திரிபற விளக்கத்தெரியார் - இவரோ தம்மைத்தாமே மேலானகுருபீடமென நன்குமதித்தகங்கரிப்பர். ஆரைப்போலெனின், பிரிதிவு தத்துவமுதல் நாததத்துவ மீறாகச் சொல்லப்பட்ட தொண்ணூற்றாறு தத்துவங்களில் முடிபாயுள்ள நாதாந்தங்கண்டுள்ள மகான்களைப்போல. இதனால் யாதுபயனுமில்லையென வறிக.

ஞா-வி—"திரிவிதவுலகத் தரிதொருஞானி" யென வருமையிற் கூறுவானேன் யாதுபற்றி யெனின்?

அ-விடை—அறிவென்றும், அறிபடுபொருளென்றும் இரண்டாம். இவற்றுள்; ஞானேந்திரிய மைந்து - கர்மேந்திரிய மைந்து-கரணநான்கு-சீவன்-ஈஸ்வரன்-சாட்சி ஆகிய இவையனைத்திற்குமறிவென்றும்; பூதாதி பௌதிகங்களும் - பற்பல அண்டாண்டகோடிகளுமாகிய இவை யனைத்திற்கும் அறிபடு பொருளென்றும் அறிஞர் கூறுவர். சகசீவபரங்க ளொவ்வொன்று மளவில்லை. அவற்றையெல்லாஞ்சுருக்கிச்சகசீவபர மூன்றெனவும், அம்மூன்றையுஞ் சுருக்கி யறிவு அறிபடுபொருளெனவிரண்டெனவும், அறிபடுபொருளறியாமையன்றி யின்மையாதலின், அறிவு அறியாமையெனவுமாக்கி-அறிவன்றி யறியாமைக்கு வேறுபொருளின்மையின் அறிவொன்

றேயெனவும், அவ்வறிவுந்தன்னையன்றி யின்மையின்தானே தானெனவும், சுருதிகுருசுவானுபவத்தாலேயந்திரிபறத்தெளிதல் அருமையாதலிற் றிரிவிதவுலகத்தரிதொருஞானியெனவும், பொருளமையப் பெற்றும். ஞானமும் அஞ்ஞானமுந் தன்னையன்றி யில்லையென்பது கருத்தெனவறிக.

ஞா-வினு—அறியாமையே யண்டாண்ட பிண்டங்களொன்றதெங்ஙன மேற்கப்படுமெனின்?

அ-விடை—அண்டாண்ட பிண்டங்க ளனைத்தும், அணுக்குழூசையோகவிகாரமெனத்தெளியாதுசுயம்பெனக்கோடல் அறியாமையன்றோ; அன்றெனின், எவ்வளவு நுட்பமும் எவ்வளவு மகத்தும் ஆராய்ச்சியில் தனக்கெனச்சொருபமின்றிப் போவானேன். போதலா லவ்வவ் விகாரப்பொருள் சுயம்புபோற் றோற்றினுந் தோற்றமென வறியாது மெய்ப்பொருளெனக் கருதி நானீ யவனவ ளதுவென்றும், தந்தை-தாய்-மகன்-மகள்-அண்ணன்-தம்பி-மாமன்-மச்சான்-பேரன்-பாட்டன் - உறவு-அயலான் - இன்னவருணத்தான் - இன்ன ஆசிரமத்தான் - சத்துரு - மித்துருவென்றும், மயங்குவது பிராந்தியன்றோ; இந்தப்பிராந்தியறிவின் விகற்பமாதலா லறியாமையே திரிசியமெனப் பட்டதென வறிக.

ஞா-வினு—அறிவே யறியாமையென்றதெங்ஙனமாமெனின்?

அ-விடை—அறிவானது அகம்புறத்தி னின்று தானே சின்னமாகவு மவிச்சின்னமாகவும்பரிணமித்தவற்றை யன்னியமாகக்கருதி யிச்சாஞானக்கிரியை புரிந் தவலமுறுவ தாதலா லந்த வவசரத்திற் றனக் கறியாமையெனவும்; இவையெல்லாந் தன்னைத் தவிர வில்லையென் றையந் திரிபறத் தெளிந்த வவசரத்தில் தனக்கறி வெனவும், அனுபவம் வரலால் அறிவே யறியாமை யென்றதற் கையமில்லையென வறிக.

ஞா-வினு—தானெதுவாக விளங்குவது முடிபோவெனில்?

அ-விடை—தானறிவாக விளங்குவதே தீர்ந்தநிலையென்றனன்.

ஞா-வினு—தானென்பது யாதோவெனில்?

அ-விடை—தானென்ப தறிவறியாமையாகவும், அல்லாததாகவும் விளங்கித் தான்மாத்திரமாயிருப்பது.

ஞா-வினு—தானே தானாக வென்னாது அறிவாக விளங்குவது முடிபென்பானேன்?

அ-விடை—தானறிவாகவிளங்காவிடின் தானேதானுதல் கூடா தென வறிக.

ஞா-வி௫—தானறிவாக விளங்க முயலுவானேன்?

அ - விடை—அறியாமையாக விளங்கி நின்றதைப்பற்றி யென வறிக.

ஞா-வி௫—அறிவறியாமைக்குப் பேதமென்னே?.

அ-விடை—அறிவாவது தன்னையன்றிக் காரணகாரியமின்றாக வும், தானன்றாகவும் விளஙகுவதென வறிக.

ஞா-வி௫—அறியாமை யென்பதோ வெனில்?

அ - விடை—அளவிறந்த சீவபேதங்களாகவும், அளவிறந்த அண்டாண்டகோடி பேதங்களாகவும், அனேகேஸ்வரபேதஙகளாக வும், தூல-சூக்கும - காரண-மகாகாரணபேதங்களாகவும், எடுக்குந் துறையும் முடிக்குந்துறையும் ஒன்றுபடற் கிடமின்றாகவும், அனர்த் தத்திற்கும் மோகாதிவிளைவுக்கும் வித்தாகவும் நிற்பதெனவறிக.

ஞா-வி௫—அறிவாகவும் அறியாமையாகவும் நிற்கு மவசரத்தி லொன்றி லொன்றில்லாமையாகிய அன்னியோன்னியா பாவத்தை யேலாதது யாதோவெனில்?

அ-விடை—இவ்விரண்டிற்கும் விலட்சண சலட்சணமாயிருப் பதுதானென வறிக.

ஞா-வி௫—தானேதானுகைிற்கு முடிவான வனுபவநிலை யின்ன தென விளங்கற் குபமானம் யாதோவெனில்?

அ-விடை—களங்கமற்ற கண்ணுடிக்குமுன் களங்கமற்றகண்ணு டி காட்டினுற்போலுமெனவறிக.

ஞா-வி௫—இங்ஙனநிற்ச; என்று மிருந்தபடியிருப்பதியல்பே யென ஞானநூல்கள் கூறுவானேன்?

அ-விடை—விகற்பித்ததுபோலவும், நிர்விகற்பமானது போல வுந் தோற்றுவதே யன்றி எதார்த்தமா யின்றெனவறிக.

ஞா-வி௫—கானல்நீரும் பழுதைபாம்பும் உண்டானதுமில்லை யழிந்தது மில்லை யென்னுந் திருட்டாந்தம் வஸ்துவினிருப்பைக் கா ட்டுதற்கென்பது மெய்யே; யிங்ஙனமாய பிராந்தி வருதற்கே தென் னேயோ வெனின்?

அ-விடை—காணுமறதியினாலெனவறிக.

ஞா-வினா—மறதிவருவானேன்?

அ - விடை—பிரவிர்த்தி நிவிர்த்தியென்னு மிரண்டு சத்திகள் பிரமத்திற் கியல்பாதலின் வந்ததெனவுணர்க.

ஞா-வினா—இயல்பாயினீங்குமாறுதானெங்ஙனேயெனின்?

அ-விடை—"வாயுஸ்தம்பனஞ் சலஸ்தம்பன மணிமந்திரமருந்தாலே, தேயுஸ்தம்பனஞ் செய்திடலதிலதிற் சிறந்த சத்திகளெங்கே, நீயச்சச்சிதானந்தமாய் வேறொன்று நினைந்திடா திருப்பாயேல், மாயைச் சத்திபோ மீதன்றி மந்திரமறைகளிற காணேமே" என்றவா றிருக்கிற் பிரவிர்த்திக் கிடமின்றெனவறிக.

ஞா-வினா—மாயையென்பது தோற்றம் மாத்திரமோ எதார்த்தமோ?

அ-விடை—தோற்றன் மாத்திரமெனவறிக

ஞா-வினா—யாதுபோலெனின்?

அ-விடை—பளிங்குக் கண்ணாடியிற் றோற்றும் பலவித நிறம்போலுமெனவறிக.

ஞா-வினா—இவ்வுபமானங் கூறவந்தது பிரமத்தில் யாது குறிபற்றியெனின்?

அ - விடை—பிரமம், சச்சிதானந்த மாகையால் அச் சச்சிதானந்தமே யனிர்த சட துக்கமாகத் தோற்றுகின்றது. இத்தோற்றம் யாதெனில், சகசீவ பரமெனவறிக.

ஞா-வினா—இந்தச் சகசீவபரம்-உண்மையா யநாதிநித்தியமாயிருக்க, அனிர்த சட துக்க மென்னலாமா வெனின்?

அ - விடை—பதார்த்த சோதனையில் அல்லவல்லவெனப்போயிம்மூன்று மறிவாய் முடிதலால் சொல்லலாமெனவறிக.

ஞா-வினா—எங்ஙனமெனின்?

அ - விடை—பிரிதிவாதி தத்துவங்களி லொரு மண்ணை விசாரிக்குமிடத்துக், காரியங்களையெல்லாந் தத்தமக்குரிய காரணங்களிலொடுக்கிக்கொண்டுபோக முடிவி லறிவாய் முடிதலில் சத்தேயசத்தெனப் படுமெனவறிக.

ஞா-வினா—காரண காரிய வாதமுதலிய அபேதவாதமைந்தானும் வருந்திப் பொருள் கொண்டு அத்துவிதஞ் சாதிப்பானேன்? அதது இருந்தபடி யிருக்கத் துவிதஞ் சாதிக்கலாகாதா?

அ-விடை—சுயம்பானால் சாதிக்கலாம்.

ஞா-வினா—அதைக்குறித்து நமக்கென்ன?

அ-விடை—விசாரமற்ற பாமரநிலையே சிறப்புற் றிருக்கவேண்டும். அங்ஙன மில்லையே யிதென்ன மதி யென்றனன்.

ஞா-வினா—திரிபதார்த்தவிசாரத்திலோ கல்விவிசாரத்திலோ? திரிபதார்த்த விசாரத்தி லெனின், சற்குருவாகிய எதார்த்த ஞானி சன்னிதானத்தில்விசாரித்துத்தெளியவேண்டும். தெளியினும், அவனது பூரண கிருபை யின்றேல் ஞானோதயமின்றாம். பூரணகிருபை யுண்டாயினும் கதகர்ம புண்ணிய பரிபாக மின்றேல் அக்கினியில் வாழைக்கட்டைபோல்ஞானோதய மின்றாம். காடாக்கினியில்வாழை முதலிய அபக்குவ விருட்சங்களும், பெருமபாறைமுதலிய மகாபர்வதங்களும், வெந்து நீறாயுருகியோடும்; அதுபோல ஞானசான்பால் ஞானக்கினி மேலிட்ட விடத்தில் அந்தச் சன்னிதியி லெதிரிட்ட அபக்குவவுயிருக்கும்ஞானோதயமாம். கல்விவிசாரத்திலோ பாஷை யையந்திரிபற விளங்கும். திரிகால ஞானத்திலோ காணாத திசிரியங்களெல்லாம் விளங்கும். இங்ஙனமிருக்க, நீர் விசாரமென்றது எதனையோ வெனின்?

அ-விடை—ஆத்ம ஞான விசாரமென்றனன்.

ஞா-வினா—ஆத்மஞானவிசாரம் யாதோவெனின்?

அ-விடை—நானார், என்போன்ற வுயிர்களார், எனக்கு வெதிருத்தமாயுள்ள சடபேதம் யாது, என விசாரிப்பதென வறிக.

ஞா-வினா—இதனால் யாது பயனெனின்?

அ-விடை—எங்குந் தானே தானாக இருத்தலென்றனன்.

ஞா-வினா—இதனினும் வேறுபயனின்றோவெனின்?

அ-விடை—உண்டாயிற் சொல்லுகவென்றனன்.

ஞா-வினா—மற்ற விசிட்டாத்துவிதிக்கும், துவிதிக்கு, மித்தகையபேறு இல்லாததற் கேதென்னை யெனின்?

அ-விடை—மூன்றிலக்கணவாக்கிய வனுசந்தான மில்லாததென்க.

ஞா-வினா—"எல்லாமா யல்லவுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்துகாட்டி" யெனக் கூறுவானேன்?

அ-விடை—அவர்களனாயி னிற்காததாலென்க.

ஞா-வி௲—அவர்க ளிணையாவ தென்ன?

அ-விடை—திரிபதார்த்தமு மென்றுமனுநித்தியமெனக்கோ

ஞா - வி௲—சமுத்திரத்தை யெங்குஞ் சலமய மென்றாற்போ சமஸ்தத்தையு மெங்குஞ் சிவமயமென்ற தென்னை யெனின் ?

அ-விடை—சிவத்தின் வியாபகத்திலன்றிச் சமஸ்தமு முற்பத் ஸ்திதி, லய, மாதற்கு வேறிடமின்மையின் அங்ஙனங்கூறப்பட்ட ;ன்க.

ஞா-வி௲—சிவமாகுமா ?

அ-விடை—சிவத்தின் சங்கற்பத்தாலாய தாதலின், சிவமேயெ க்கொள்க.

ஞா-வி௲—சேணியனாலாய வஸ்திரங்களைச் சேணிய னென்ன யா ?

அ-விடை—அங்ஙனமன்றே ; சிவத்தை யன்றிப் படைப்புக்கு மூன் துணைக்காரணமு முதற்காரணமு மின்றாதலால் சிவமே மூன் காரணமா மென்பது பெற்றாம். பெறவே சிவத்தையன்றி யொன் றுமில்லையென்பதாயிற்று.

ஞா-வி௲—இது அத்துவித மன்றோ, திரிபதார்த்த மெங்கே யெனின்?

அ-விடை—இல்லையெனவறிக.

ஞா-வி௲—முன்ன ருண்டாயிருந்த திரிபதாரத்தமு மிப்போ தெங்கேயெனின் ?

அ - விடை—முன்னருண்டாயிருந்தா லன்றோ, பின்னரில்லா ருக்கலாம். பழுதையிற்பாம்புபோலும், கானலினீர்போலு, நான் காலத்திலு மில்லையென வறிக.

ஞா-வி௲—நான்குகாலத்திலு மில்லாதிருந்தால் அத்தியாரோப பவாதம் யாதுக்காகவெனின் ?

அ-விடை—உள்ளதுபோற் றோற்றலினா லென்க.

ஞா-வி௲—உள்ளதன்றாயின் கர்ம்மமும்-பத்தியுமெனக்காண்ட ரண்டாக்குவானேன் ?

அ-விடை—பொருளல்லவற்றைப் பொருளென் றுணர்பவர்க் கென்க.

ஞா-வி௵—ஆயின் பொருளாவ தியாதெனின் ?

அ-விடை—தானே சகல காரண காரியங்களா நின்று மல்லா திருப்பதென் வுணர்க.

ஞா-வி௵—தனக்குக்காரணமொன்று மின்றாய்த் தான் காரியப் படாதிருப்பதொன்றுமின்றே, யிங்ஙனம்பார்க்கின் அனுவத்தாதோ டமாமுடியுமே, யிதற்கு யாது கூறுதி யெனின் ?

அ-விடை—சொல்லடுக்காலோ, வஸ்துசோதனேயாலோ? சொல்லடுக்காலெனின், பயனின்றி முடியும். சோதனேயாலெனின், ஐயந் திரிபின்றி முடியும். எங்ஙன மெனின், (சொல்லடுக்காவது;) அண்ட பிண்டங்கள்; சுயம்போ-விகாரமோ? சுயம்பெனின், அணுக்குழு சை யோகமின்றி யிருக்கவேண்டும். விகாரமெனின், படைப்பென்று இ ருக்கவேண்டும். விகாரமெனக் கொள்வதே துணிபெனின், காரண காரியமேற்க வமையும். காரணமோ, ஐம் பூதமென வரும். வரின், அண்டபிண்டங்கள் காரியமெனச்சொல்லாதமையும் பூதமிருவகை ப்படும். அது ; ஸ்தூலம்-சூக்குமம் என்பன. சூக்குமத்தை யன்றித் தூலபூதமிருக்கவேண்டும். இல்லாமையால், தூலபூதம் காரியமென வும், சூக்கும பூதம் காரண மெனவுமாம். சூக்கும பூதத்திற்குக் கார ணம் அவித்தை. அவித்தைக்குக் காரணம்-மாயை. மாயைக்குக் கார ணம் அறியாமை, அறியாமைக்குக்காரணம் அறிவு. அறிவுக்குக்கார ணம்-பேரறிவு. பேரறிவுக்குக்காரணம் இல்லையெனின், நமக்குத்தோ ன்றுமையா லில்லையென்னலாமா? இருக்கின்றதெனின், இப்படியே போகில் எல்லையின்றிக் குறிபாவங்களுக்கிடமின்றி விவர்த்தமா முடி யும். ( வஸ்து சோதனேயாவது ; ) பிண்டமாவது, தேகமென்பது யாது ? யானெனப்படுவதெனின், என்று லறியப்படாதிருக்கவேண் டும். இதையன்றி யானெனற்குப்பொருளாயுள்ள கர்த்தத்துவ மெவ் வுயிர்க்கு மில்லையே யெனின், மலவுடலாதலால் மலம் நானெனப் படுமா; படாதெனின், அதற்குப்பாத்திரமாயுள்ள வுடலும் நானென் னக்கூடுமா ; கூடாதெனின், தேகவளவு நானென்னும் பாவம் வர வேண்டுவதின்றே; வந்திருக்கின்றதேயெனின், அதுதேகத்தின்தர்ம மா; தேகம்பாவிக்காது செடமெனின், அறிவினதாகவேண்டும். அறி வு மூன்றவத்தையினும் விஸ்வன்-தைசதன்-பிராக்ஞன்-என்னும் அ பிமானிநாமத்தையேற்று அந்தந்த அவஸ்தைக்குத்தக்கவாறிருந்து விவகரிக்கும். இங்ஙனமிருக்கினும், அறிவின்ஸ்புரிப்பாகிய ஸ்மரணே யுண்டாயி னதனது பரிணமப்பினவசரகிலேயே தூல-சூக்கும - கார

ணவடிவாகத்தோற்றலேயன்றி வேறின்றெனத்தெளிதல். இவ்விரண்டில், பிரதிசயானந்தத்தைத்தரத்தக்கது வஸ்துசோதனையெனவறிக.

ஞா-வி௵—காரணகாரியமாயும், அல்லாததாயு மிருப்பதெதுவோ, அதுவெனக் கூறில் குருடர் குறியொக்கும். இதுவெனக் கூறில் வஸ்துவி னிலக்கணங்களை யொத்துப் பார்க்க வினையில் இதுதான் பரவஸ்து வெனப்படுவதென்றும், இலக்கணங்கட்கு முரணில் அல்லவெனப்படுவதென்றும, கொள்ளவுந் தள்ளவுங்கூடும். ஆதலினிதுவெனக் கூறவேண்டுமெனின் ?

அ-விடை—மெய்ஞ்ஞானமென்றனன்.

ஞா-வி௵—பொய்யுணர் வுண்டோ வெனின் ?

அ-விடை—உண்டு.

ஞா-வி௵—அஃதியாது ?

அ-விடை—விகாரத்தைச் சுயம்பென வுணர்தல்.

ஞா-வி௵—இவ்விருவகை யுணர்வையும் விளங்கச்சொல்லவேண்டு மெனின் ?

அ - விடை—தன்னைத்தானறிவது மெய்யுணர்வென்றும், தன்னில் வேறாயறிவது பொய்யுணர்வென்றுஞ் சொல்வதெனவறிக.

ஞா-வி௵—உணர்வு இரண்டெனப்படுமே யெனின் ?

அ-விடை—சூரியனொன்றே, சலத்திற் பிரதிபலித்திரண்டாகக் காண்டலே யன்றி வேறின்றாதல்போல மெய்யுணர்வே, புத்தி விகற்பத்தா லயலுணர்வாகக் காண்டலே யன்றி வேறின்றென வுணர்க.

ஞா-வி௵—இங்ஙனமெல்லாங்கூறவேண்டியதியாதுக்கெனின்?

அ - விடை—ஐயந்திரிபின்றி யேக சைதன்யமாக விளங்கற்கு என்க.

ஞா-வி௵—எழுவகைத்தோற்றமாயுள்ள சித்து பேதங்களைத்துஞ் சைதன்யப்பிரதிபலனமென்பதுத்திக்குமுரணாது நிற்றலின், ஏகசைதன்யமாவிளங்குமென்பதைக் கிஞ்சித்துந் தடுப்போமல்லம். பூதபௌதிகங்களும்-அண்டாண்ட பிண்டங்களும்-சடமன்றோ, சித்துக்குவிசாதிகமன்றோ? இவைகளெங்ஙன மேகசைதன்யமாகவிளங்கும். இவ்வையந் தவிர்க்க வேண்டு மெனின் ?

அ-விடை—அரசன் கொலுமண்டபத்துச் சென்றானென்புழி, யாண்டியாபரண் விருதுகளோ டெனச் சொல்லவேண்டுமோ; அது

போலச் சகல கற்பனைகளின் வயத்ததாகாது தன்வயத்ததாகித்தனித்ததெனச் சொல்லவேண்டுமோ வேண்டுவ தின்றென வறிக.

ஞா-வினா—அகம்புறத்திற்றோற்றுகின்ற தேகாதி சடபேதங்களை யெங்ஙனஞ்சின்மாத்திரமாக்குவதோ வெனின் ?

அ-விடை—சைதன்யத்தையன்றி யொன்று மில்லையெனக் கற்றுக் கேட்டவாறு சாட்சாத்காரமாக்கியக்கன் னங்காட்டத்தினின்று கணமு மகலாது நின்று எதிர்த்த விடயங்களனைத்தையு மதுவாகத் தரிசிக்கிலக்கணமேபிறிதாகாது சின்மாத்திரமாக அப்பிலுப்புபோற்கரைந் திரண்டுபடாது விளங்குமெனவறிக.

ஞா - வினா—சைதன்யம் விகாரிப்பதுந் தவிர்வது மதற் கியல்போவெனின் ?

அ - விடை—வேறிட மில்லாமையா லிவ்விரண்டு மத்தியாசமென வறிக.

ஞா-வினா—எங்ஙனந் தானறிந்து நிற்பதோ வெனின் ?

அ-விடை—அதுவாகி லதுவே சொல்லுமென வறிக.

## ௰௨-வது,

# அ த் து வி த ம்

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

௰௩-வது,

இம்மூன்றின்

# அவசர நிலை.

ஞா-வினா—மூன்றாவதுயாது?

அ-விடை—துவிதம்-விசிட்டாத்துவிதம்-அத்துவிதமென்பன.

ஞா-வினா—இம்மூன்றுமவசரநிலையெனலெங்ஙனமாமெனில்?

அ-விடை—தேகபோகத்தில் யாதோ ரேதுவாலன்றி யுண்மையாகவே சலிப்பு நேரிட்டவிடத்துப் பகவத்தியான முண்டாய்ச் சரியை கிரியை செய்வானொருவன் பதிபசுபாசமுண்டெனவும், அவை மூன்றெனவும்,வெவ்வேறிடத்தவெனவும் பெயர் உபாதி உடல் உணர்வு என்பவற்றால் மேல் கீழெனவுங் கொண்டு ஆண்டானடிமைத் திறம் பூண்டொழுகல் துவிதமாதலா லிந்தவவசர நிலையைத் துவிதமென்பர். மற்றோரன்பன் பதியைப்பரமாத்மாவெனக்கொண்டு அந்தப் பரமாத்ம வியாபகத்திற் பசுவும் பாசமும் வியாப்பியமெனவுந் தனித்தனி யிலக்கண மூன்றிற்கும் வெவ்வேறெனவும் பின்னபின்னமெனவும், இங்ஙனநிற்ற லனாதியெனவும், எங்கேபூசிக்கினு மன்னோனுக்கே யெனவும் திடமுற் றாண்டா னடிமை பூண்டொழுகு மவசரத்தை விசிட்டாத்துவிதமென்பர். இவ்விரண்டவசர நிலையுங் கடந்த நிட்காமியொருவன் தன்மை முன்னிலை படர்க்கையெனல்; மூன்றோ வொன்றோ? மூன்றெனில் உபாதிகுணந்தொழில் முதலன்றாமையாலும்; முதலாயின் பூர்வபட்சப்படாதிருக்க வேண்டு மாதலானும்; மூன்றன்று. ஒன்றெனில் மூன்றெனக் கொள்ளு மயக்கம் வராதிருக்கவேண்டும். வருவதால் ஒன்றன்று. எனச்சுருதி யுத்தி யனுபவத்துக்கொத்து விசாரித்துத் தெளிதலென்னு மவசரத்தை யத்துவிதமென்பர். இம்மூன் றவசரநிலையு மொன்றி லொன்று மிசிரிம்பிக்கிற் பயன்படாதெனவறிக.

ஞா-வினா—விடயப் பிரியமோதப் பிரமோதனுக்கு மேலாயதைப்போதிக்கினும் தன்னடையேமேற்கோடல் போன்று இம்மூன்றவசர நிலையினரு நிற்பரோ? நிற்பரெனின், சிலர் மேலானதாயின் சிரவணமனனாதிகள் செய்தும் பயன்பட்டிலர். சிலர் தத்த நிலைக்கு

மேலான தெனக் கண்டு கேட்டல் சிந்தித்தல் தெளிதலால் அஞ்ஞானஞ் சந்தேகம் விபரீதங்களைக் களைந்து துக்க நிவிர்த்தி தடையற்ற வானந்தமுற்றனர். இங்ஙனமிருக்க; நிசிரிம்பிக்கிற் பயன்படாதென் பதென்னை?

அ - விடை—உத்தமருக்கே யன்றி யேனையோருக் கன்றென வுணர்க.

ஞா-வினா—இம்மூன்றவசரநிலையினுள் யாது சிறந்ததெனின்?

அ-விடை—அத்துவிதமே சிறந்ததென்க.

ஞா-வினா—எங்ஙனமெனில்?

அ-விடை—உபக்கிரம வுபசங்காரத்தினாலென்க.

ஞா-வினா—கடபடாதிக ளுற்பத்திக்குமுன் மண்ணூலாதிகளா நின்றவாறு போன்று, சகசீவபரமக ளுற்பத்திக்கு முன் சத்தாமாத்திரமா நின்ற தென்பதையும், அங்ஙன நின்ற சத்து சுசாதிக விசாதிக சுகதபேத மற்ற தென்பதையு முணர்த்துவது உபக்கிரம மெனவும்; இச்சத்தே கூடஸ்த பிரம மன்றி யுபயமின்றெனக் களங்கேகமாக விளங்குதலே யுபசங்காரமெனவு முன்னமே யுணர்த்தினீர் இதனால் யாமுணரற்பாலதியாதெனின்?

அ-விடை—சத்தா சாமானியமான ஞானத்தையன்றி அன்னியமில்லை யென்பதும், அன்னிய முண்டாகத் தோற்றின் சோதனையிற் சின்மாத்திர மாகாதிருக்கவேண்டும். சின்மாத்திரமாதலின், இந்தச் சத்தைப்போல வேறின்றென்பதும் யாமுணரக்கிடந்த தென வறிக.

ஞா-வினா—இதனை யாதினாலறியலாமெனின்?

அ - விடை—எங்கெங்கே ஸ்மரணை யுண்டோ அங்கங்கே சகமுளதாயும், எங்கெங்கே ஸ்மரணை யில்லையோ அங்கங்கே யிலதாயுமிருப்பதியாவர்க்கு மனுபவமன்றோ? இதுவே தக்க பிரமாணமென வறிக.

ஞா-வினா—ஆயின் ஸ்மரணை ரூபமோ செகத்தெனின்?

அ-விடை—ஆம்.

ஞா-வினா—எங்ஙனமெனின்?

அ - விடை—சோதனையி லனைத்தும் ஸ்மரணையாக முடிதலினென்க.

ஞா-வினா—இங்ஙன முணர்தலினாய பயனெமக்கியாதெனின்?

அ - விடை—கிருதகிர்த்தியம் துக்காபாவம் சர்வகாமாப்திகம் பிராப்தி பிராப்பிய முறுவதே பயனென வுணர்க.

ஞா-வி஦ை—இப்பயன் ஏனையதுவிதம் விசிட்டாத்துவிதம் உறுததம்கேதென்னை ?

அ-விடை—உபாதிரகிதக் கருத்தும் அஃதுறுதற் கியைந்த சாதனமு மில்லாமையா லென்க.

ஞா-வி஦ை—ஆனல் சகசிவபரமாகத்தோற்றுவதிருந்தல்லவோ வெனின் ?

அ-விடை—இருந்ததாயினாராய்ச்சியிற் சிற்பிரகாசமாக முடியுமா? முடிதலிற் சிற்பிரகாசமே யிங்ஙனமாகத்தோற்றுதலென வறிக.

ஞா-வி஦ை—இதற்குச் சுருதிப் பிரமாணமுண்டோ வெனின்?

அ-விடை—வாசிட்டத்தில் "தானுகுமிகநொய்தாமாகாயத்திற் சகத்திரளாஞ் சித்திரத்தைத் தானே கோட்டும், ஆனதவுலகமெல்லாந் தனதுசோதியாதலினும் மனக்குவே றயலொன்றில்லை." யென்பதினாலறிக

ஞா - வி஦ை—இங்ஙனமாகத்தீர்ந்த நிலை யினையும் அவசர நிலையென்பதென்னை ?

அ-விடை—நிர்க்குணத்துக்கு இது சகுணமாதலினென்க.

ஞா-வி஦ை—சகுணம் - நிர்க்குணம் - இனையவெவைக் கொஞ்சந் தெரிவிக்கவேண்டுமெனின் ?

அ-விடை—நித்தியம்-பூரணம-ஏகம்-பரமார்த்தம்-பரப்பிரமம்-நிதானம்-சாந்தம்-சத்தியம்-கேவலம்-துரியம்-சமம்-திருக்கு-கூடஸ்தன்-சாட்சி-போதம் முதலிய எண்ணிறந்ததைச் சகுணமெனவும் ; அசலம்-நிரஞ்சனம்-அமிர்தம்-அப்பிரமேயம்-விமலம் - வசனதீதம்-அசடம்-அனுமயம்-அசங்கம்-அதுலம்-நிரந்தரம்-அகனு - நிரூபம்-அகணடம்-முதலிய எண்ணிறந்ததை நிர்க்குணமெனவும் ; கூறுப.

ஞா-வி஦ை—நிர்க்குணவஸ்துவைச்சகுணமாகக்கூறுவதென்னை?

அ-விடை—வஸ்துநிலை யினையதென விளக்கிவிப்பதற்கென்க.

ஞா - வி஦ை—இங்ஙன மிருக்கத் துவிதமும் விசிட்டாத்துவிதமும் அத்துவிதமும் திரநிலையென அந்தந்தக் கொள்கையர் பிரதிவாதிப்பதென்னை ?

அ-விடை—அப்பானுக்கும் வகை வேண்டாமையா லென்க.

ஞா-வி஦ை—இம்மூன்றிலுஞ் சிறந்தது யாதெனில் ?

அ-விடை—சகலத்தையு ஞானாகாரமாகக்காணக்கும் அத்துவித மே சிறந்ததென்க.

ஞா-வினு—எங்ஙனமெனின்?

அ-விடை—சகசீவபரமாகிய அனைத்தும் அறிவின் ஸ்புரிப்பா தலானும், அவ்வறிவாகவே மீண்டுமாதலானும் ஞானமே சிறந்த தென்க.

ஞா-வினு—பரத்தினுஞ் சிறந்ததோ ஞானமெனின்?

அ-விடை—பரமும் அறிபடுபொருளாதலின் ஞானமேசிறந்த தென்க.

ஞா-வினு—அறிவுக்கும் அறிபடுபொருளுக்கும்பேதமென்னை?

அ-விடை—அறிவு; சத்துசித்தானந்தத்தையும்; அறிபடு பொருள்; அநிர்தசடதுக்கத்தையு மேற்றம்பாலவென முன்னமே யுணர்த்தியதால் அதுவே பேதமென வுணர்க.

ஞா-வினு—பரமும் அறிபடு பொருளாமென்ற தெங்ஙன மேற்றபாலதெனின்?

அ-விடை—இது பரமென வெட்டி யறியப் புகும் அறிவினுக் கெல்லையும், தன்மை நிலை யினைய தெனக்காணும் திறமுந் தக்கோர் பாலுணரற்பாலதின்மையினும்; முன்னிலை நிலையதெனத் தன் மைநிலைத்துறை யனைத்தையுங் கருதிச்சேறலினும்; ஒன்றையொ ன்று யனுபவித்தலினும் அறிபடுபொருளே யெனவறிக.

ஞா-வினு—ஆயின் அறிபடுபொருளின்றோ வெனின்?

அ-விடை—சூரியப்பிரகாசமே கானல்சலமாகத்தோற்றுமாறு போன்று, ஞானப்பிரகாசமே சகசீவபரமாகத்தோற்றுதலன்றி வேறின்றுதலின் அன்னியமில்லை யென்றறிக.

ஞா-வினு—இருப்பதை யில்லையென்னலாமா?

அ-விடை—இருந்தாற் சோதனையி லில்லாமற் போவானேன். போதலால் இல்லையெனவறிக.

ஞா-வினு—இல்லையெனில் விவகரித்திடலு மில்லாமற் போக வேண்டும். போகவில்லையே யெங்ஙனம் அசத்தெனப்படுமெனின்?

அ-விடை—கடபடமென்னுமிடத்து இவ்விரண்டுமுண்மையெனல் பற்றி யிவற்றிற் குபாதானகாரணமு முண்மை யெனப்படும். மண்ணுநூலுமன்றிக் கடபட முண்மையாகுமா? ஆகுமெனின், மண்

நூல் என்னு மிவற்றின் விகாரமாகவன்றி யிருக்கவேண்டும். இல்லையெனின், விவகரிக்கு நிமித்தந் தோற்றன் மாத்திரமா யுள்ள கடபடத்தை யுண்டெனக் கொள்வதன்றி யெதார்த்த வகையா லெங்ஙனமுண்டெனக் கொள்ளப்படும். காரியமித்தையாயின், காரணமு மித்தையாகாதோ வெனின், காரணமன்றிக் காரியமில்லை யாதலாலும், காரியமாக விகாரித்துக்காண்பது காரணமாதலாலும், மண்ணுநூலுமன்றிக் காரியமுண்டானும் மண்ணுநூலு மன்றிக் காரணமுண்டாகலாம். இல்லையெனின், இவ்விரண்டுமாக விளங்குவதும் அன்றாகவிளங்குவதும் மண்ணுநூலுமாதலால் ஒன்றேயெனவிளக்கப், "படமுநூலும்போற்செய்த பணியும்பொன்னும்போற்பார்க்கிற், கடமுமண்ணும்போலொன்றாங் காரியகாரணங்களெனவும்; எல்லையில்திசைகள்காலம் புறம்பெனு மிவற்றிற்கேற்பப், பல்லுருவாயெங்கெவ்வாறெழுந்ததப்படியங்காகும், செல்லுமிந்நெறியாலிந்தச்செகமெனுமபிரமகற்பம்,புல்லுகாரணமிலாத பொருளெனப்புந்திசெய்க"வெனவும் சான்றோர் வசனமிருப்பதைக்காண்க

ஞா-வினா—இம்மூன்றவசரநிலையு முக்கியமாக வேண்டும்பாலதெனவும், இம்முறை யியற்றிற் சேறற்பாலன துக்காபாவம் கிருதகிர்த்தியம் சர்வகாமாப்திகம ப்ராப்திப்ராப்யமெனவும் ஐயந்திரிபின்றியுணர்ந்தேன். இனி யான் கேட்கவேண்டியதொன்றுண்டு. அஃது யாதெனின்; அறிவு அறிபடு பொருளென்னு மிரண்டி லடங்காதனவோ ரணுவேனுங்கண்டிலன் நீர் கூறுமொழிகளிலொன்றினுமையமில்லை. இது அவரவர் கொள்கையன்றோ? இதில் எது உமது பட்சமெனின்?

அ-விடை—ஞாயத்துக்குஞ் சோதனைக்கும் வழுவின்றிய தென்றனன்.

௩-வது

அவசரநிலை

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

௰௩ - வது

# ஞாயவாதியபிப்பிராயவிளக்கம்.

## அவஸ்தாத்திரியநிலை.

வெண்பா.

எந்நிலையுங் கண்டுணர்ந்தீ ரேதோ வுமதுநிலை
அந்நிலையைச் சற்றிங் கறையுமெனின் - இன்னதெனை
ஞாயவா தப்புலவ ஞட்டப் புகுந்தனன்காண்
ஞாயமய மேமயமா நன்கு.

ஞா-வி௵—அஃதியாதெனின் ?

அ-விடை—அவஸ்தைகள்பல-அவற்றைச் சுருக்கிச் சத்தாவத்தை யெனவும், அவற்றைச் சுருக்கிப் பஞ்சாவத்தையெனவும், அவற்றைச் சுருக்கியவத்தாத்திரியமெனவும், அவற்றைச் சுருக்கிச் சகல கேவலமெனவும், சத்துக்கள் விதியாநின்றனர். இங்ஙனமிருக்க; எனதபிப்பிராயம் விளக்க அவத்தாத்திரிய நிலை காரணமாகக் கூறுகின்றனன்.

ஞா-வி௵—அவ்வபிப்பிராயம் யாதெனின்?

அ - விடை—பிரமா விஷ்ட்ணு முதலிய பஞ்சமூர்த்திகளும், தேவர் முதலிய சராசரமாவுள்ள எழுவகைத்தோற்றவுயிர்களும் யாதுக்காக வியங்குதலும், அவத்தாத்திரிய மெய்துதலும், சுகமடைதற்பொருட்டன்றோ ? அங்ஙனஞ் சுகம் நுகர்தற்பாலது பஞ்சகோசமன்றே. பஞ்சகோசமெனின், தன்னைத்தா னுணர்தற்கு மியையுடையதாக வேண்டும். ஆகுமெனின், தூலதேகமும், பிராணாதி தசவாய்வும், ஆனந்தமயமும், தம்மையுந், தமக்கயலையுஞ் சற்று முணர்தற்பாலதன்று. மனோமயமும், விஞ்ஞானமயமும், தம்மை யுணர்தற்பாலதன்று. ஆதலின், மெய்யுணர்வதாகவேண்டும். பொய்யுணர்வுண்டோவெனின்,மனோமயமும்,விஞ்ஞானமயமு மாதலி னுண்டு. உண்டாயினும்; மெய்யுணாவின் பிரதிபலனமே யன்றி வேறன்றாதலின், சுகத்தை யவாவத்தக்கது அறிவாயிற்று. ஆகவே யெவ்வுயிரும் அறிவென்றகையமில்லை. இல்லையென்றதிடத்தால் அறிவு ஆனந்தம் என்ற விரண்டுமே பூர்வபட்சப்படுத்தற்கிடமின்றி நிலை நிறுத்

தற்கிடமாயிற்று. இவ்வறிவானந்த மில்லாத அவஸ்தைக ளில்லை. அவஸ்தாத்திரியம் அறிவு அந்தந்த அவஸ்தாகோலமா நின்று சுகத்தை யனுபவித்தற் கிடமாதலின், அறிவும் ஆனந்தமுமே சேடித்து நின்றதெனவறிக.

ஞா-வி.—சீவன் ஈஸ்வரன் செகத்து என்னுந் திரிபதார்த்தங் கட்குங் கதியென்னை?

அ-விடை—அறிவன்றி யில்லையெனவறிக.

ஞா-வி.—அறிவன்றிச் சிவேச ரில்லையென்பது ; இவ்விரண்டுஞ் சித்தினது பிரதிபலன மாதலால் ஏற்றனம். தேசாதிப் பிரபஞ்ச சமூதலிய சகல அண்ட பேதங்களும் சடமாயிருக்க;எங்ஙனமறிவன்றி யில்லையெனப்படு மெனின் ?

அ-விடை—விசாரிக்குமிடத்துப் பாரமார்த்திக சத்தாகிய ஞெப்தி மாத்திரமா முடியாதிருக்கவேண்டும். முடிதலின், ஞெப்தியினது பிரதிபலன மென வறிக.

ஞா-வி.—எதனை ஞெப்தி யென்றதெனின் ?

அ-விடை—அகண்டபரிபூரணமா விளங்குஞ் சைதன்னியத்தின் ஸ்புரிப்பை யென வறிக.

ஞா-வி.—இதனை யுபமானத்தால் விளக்கவேண்டு மெனின்?

அ-விடை—சமுத்திரத்தின் திவலைபோலுமென வறிக.

ஞா-வி.—பிரமமென்றது சைதன்னிய மென்ற தென்னையெனின் ?

அ-விடை—ஞானத்தை யன்றிப் பிரமமெனற்குப் பொருள் வேறின் றாதலி னென்க.

ஞா-வி.—சமஸ்தமும் பிரமத்தின் ஸ்புரிப்பாயின் அந்த ஸ்புரிப்பு பிரமத்தின் விகாரமன்றோ? இங்ஙனமிருகக; நிர்விகாரப்பிரமமென்பானேன் ?

அ-விடை—திரிகாலத்தும் விகாரமுண்டானாலன்றோ நிர்விகாரமேற்கப்படும். இவ்விரண்டும் அவசரநிலையாலன்றி யதற் குண்மையா யின்றெனவறிக.

ஞா-வி.—அஃது எங்ஙனந் தெரிந்துகொள்ளப்படுமெனின்?

அ-விடை—கடபடமென்பவற்றுள் ; கடமென்பது காரியமாதலின், அதனை நோக்குமிடத்து அதுவேவிளங்கும். விளங்கினும்,மண்

ணாகிய வுபாதானத்தையன்றிக் கடமாகிய வுபாதேயமோர் முதலாக விருக்கவேண்டும். இல்லாமையால் மண்ணினது விகாரரூபமாகவே ண்டும். அவ்விகாரம் மண்ணை யன்றி யில்லாமையால் அப்போது மண் விகாரதர்மத்தை யேற்கும். இந்தக்கடவிகாரம் மண்ணினிடத் துண்டா வென்று அம்மண்ணை யுற்று நோக்கு மிடத்து அந்த மண் ணே விளங்குமன்றிக்கடமில்லாமையால் அப்போது மண் நிர்விகார தர்மத்தை யேற்கும். இவ்விருநோக்காலன்றி மண் இவ்விரு தர்மத் தையு மேற்குமா? ஏலாதே, ஏற்பதாகக் காண்டல் நமது நோக்கின் பிறழ்வேயன்றி மண்ணின் பிறழ்வலலவே யல்ல. அது எக்காலத்து மிருந்தபடி யிருக்கின்றது. இதுபோலப் பிரமத்திற்கும் இவ்விரு தர்மமும் வந்ததென வறிக. இதற்குதாரணம், "கடநோக்கில்மண் டிரிபாக் காணுமே மண்ணை, விடாநோக்கி லெங்கே விகாரம்-உடை யதுபோம், காணு மிருவகையுங் கற்பனையே நாட்டபிழை, கோண னிமிர்வெங்கே கொளல்." என்பதினாற் காண்க.

ஞா-வினா—இந்த நாட்டபேதமும் யாதின் விகற்பமெனின்?

அ-விடை—புத்தி விகற்பமென வறிக.

ஞா-வினா—புத்தியாவ தியாதெனின்?

அ-விடை—சைதன்னியத்தின் ஸ்புரிப்பென வறிக.

ஞா-வினா—அந்தப் புத்திக்கு நாட்டபேதம் வருவானேன்?

அ-விடை—விஸ்மரணை தஸ்மரணையாலென வறிக.

ஞா-வினா—விஸ்மரணையென்பதை யாதினா லறியலாம்?

அ-விடை—அசுத்த அவஸ்தாத்திரயத்தா லறியலாம்.

ஞா-வினா—தஸ்மரணையை யாதினாலறியலாம்?

அ-விடை—சுத்தா அவஸ்தாத்திரயத்தா லறியலாம். ஆனால், அசுத்த மென்பது விடய மயமெனவும், சுத்த மென்பது ஞானமய மெனவுமாம்.

ஞா-வினா—புத்தியென்பது ஏகமாவ தென்றோ?

அ-விடை—இங்ஙனம் விசாரித்துத்தெளிந்தவளவி லென்க.

ஞா - வினா—அவஸ்தைகளினிலே யுணர்ந்தேன்-எல்லா அவஸ் தைகளு மிருக்கச் சாக்ராஅவஸ்தை சிறந்ததென்பானேன்?

அ-விடை—பந்தமுத்திக் கேதுவாதலி னென்க

ஞா-வினா—எங்ஙன மெனின்?

அ-விடை—செகசீவபர முண்மையெனக் கோடலும், கொண டவா றவை யுண்மையாகத் தோற்றலும், ஆகிய விவ் வேதுக்களாற்

கற்பிதத்தை யானெனதெனக் கோடற்கும், மோகித் தவ்வாறு பிறந் திறத்தற்கு மியைந்த நிலையாதலா லிதனைப்பந்தமெனவும்,இவ்வாறு நின்று பல்லூழிகால மனுபவிக்கினும், நித்தியதிருத்தி கணமுமில் லாமையால் இவற்றி லெய்ப்புவரும். வரவே யிந்த நித்தியதிருத்தி யைத்தரம்பால தியாதெனவரும். வரவே சிரவணாதிகள் செய்யவரு ம். வரவே பொய்மெய் சோதனை வரும். வரவே யெது தானெனத் தெளிவுறுகின்றதோ அதுவே மெய்யெனவும், அல்லவை பொய்யெ னவும், தேறும். இங்ஙனந் தேறுவதே முத்தி யெனவும் கோடற்கி யைந்தது பற்றி யென்க.

ஞா-வினு—மற்ற அவத்தைகளி லறிவின்றோ வெனின்?

அ - விடை.—இல்லையெனின், சாக்ராவத்தாக்காட்சிகள் தனது சுயப்பிரதிபலனும், சொப்பனுவவத்தாக் காட்சிகள் தனது கற்பிதப் பிரதிபலனும், சுழுத்தி யவத்தாக்காட்சிகள் தனது கற்பனுவசத்தியிற் றோற்றும் பிரதிபலனுமாதலின், இவை யறிவையன்றி நிகழா? நிகழு மாயின், அங்கங்கே யிருந்தறிவது தன்னை யன்றி யிருக்கவேண்டும். இருக்குமெனின், சாக்கிரத்திலுஞ் சொப்பனத்திலும் போனேன் வந்தேன்-சுகித்தேன் - துக்கித்தேன் - என்றும், சுழுத்தியில் பாழா னேன் - தோற்றமற்றேன்-சும்மாவிருந்தேன்-நன்றாயுறங்கி யாறுத லானேன் என்றுங் கொள்ளாதிருக்க வேண்டும். கொள்ளுத லனுபவ மாதலி னெங்கணு மறிவன்றி யில்லையென வறிக. இதற்குகாரணம், "அறிவன்றி யெப்பொருளு மாஙகாங்குளதேல், அறிவன்றிப் போவ தெவணுயில் - அறிவொன்றே, யுண்மையெனக் கொண்டா முடன்ப டாாi வேறெதுவோ, துண்மையறி வெங்கே நமக்கு."

ஞா-வினு—மற்ற வவத்தைகளில் தான் விகாரித்துநிற்கச் சாக் ராவத்தையில் மாத்திரம் பந்தமுத்தி விளைதற் கேதென்னை?

அ-விடை—சுயப்பிரதிபலனமாதல் பற்றி யென்க.

ஞா-வினு—அதனிற்பந்த முறுவானேன்?

அ-விடை—உண்மையெனக் கருதியதா லென்க.

ஞா-வினு—விடுதியென லேன்வரு மெனின்?

அ-விடை—அந்தத்தில் பயனின்மை யுண்மையாகத் தோற்று வதைப்பற்றி யென்க.

ஞா-வினு—இதுநிற்க ; பந்த முறுவதும், விடுதி பெறுவதுஞ் சகசமாகக் காணுகின்றதேயன்றி முடிவின்றோ? முடிவுண்டெனின்,

காலவரையறையில்லாமற்போகவேண்டும். போயிற்றெனின்; முத்தி பெற்றாரொன்னும் வசனமில்லாமற் போகவேண்டும். போகவில்லையே, பந்தத்துக்குமுன் காலமிருக்கவேண்டும். இல்லையெனின், முத்திக்குப்பின் காலமில்லாமற் போயிற்றோ? இல்லையே; பந்தத்துக்கு ஆதி யில்லை யென்பது கூடாது. கூடாது பற்றி முத்திக்கு முடிவுண்டென்பது கூடாது. பந்தமுத்திக்கு முன்னுமபின்னுங் காலமிருப்பதால் இவ்விரண்டிற்கும் வரையறையில்லையென அருத்தாபத்தியாற் காண்கின்றதே யெங்ஙனம விஸ்ராந்தி யடைந்திருப்பதெனின்?

அ-விடை—இங்ஙன முன்னுவதெல்லா மறிவினது விலாசுத்திலாதலின் அறிவுநாட்ட மகலாதிருப்பதே விஸ்ராந்திநிலையெனவறிக.

ஞா-வி—அப்போது பந்தமுத்தி யென்பதின்றோவெனின் ?

அ-விடை—யாவுஞ் சின்மாத்திரமா விளங்கலின் அவ்விகற்பமின்றென வறிக.

ஞா-வி—பிரமாணமுண்டோ வெனின் ?

அ-விடை—"இந்தநிச்சயமுத்தருளனுபவமிருப்பதெப்படியென்றாற், சிந்தையற்றபூ மண்டலவிராசனுஞ் சிசுவும்போற் சுகமாவர், பந்தமுத்திகள் மறந்துபோ முன்டென்று பலர்சொலி னங்கயாவர், அந்தரத்தையுன் டெழுந்ததோர் கொதுகெனு மவர்களை நகைபாரோ." எனவும், "என்னையேயல்லாமல் யான்பெற்றதேதுமிலை, என்னைநான் பெற்றிருந்த தெப்போதும்-என்னையன்றிப், பந்தமுத்தியில்லையால் பார்க்கிலிவை யாராயுஞ், சிந்தனையு மில்லாத தே." எனவுங் காண்க.

# ௬௩-வது.

## ஞாயவாதியபிப்பிராயவிளக்கம்

### முற்றிற்று.

---

உ

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

ஸ்ரீ-வது தனது

# சுவானுபூதிவிநோதவிளக்கம்.

## நான்மணிமாலை.

### வெண்பா.

வெளிநாட்டத் தெங்கே விபரீதம் போல
ஒளிநாட்டத் தெங்கே யுலகம் - ஒளித்ததெனில்
ஆதார நாட்டத் தவலமாய போவதெவன்
ஆதேய மெல்லா மகன்று. (க)

### கட்டளைக்கலித்துறை.

அகன்றன வாகி லகலாது காணபதென் னக்கணத்தில்
அகன்றவ னிற்றலு மில்லாமை யாலன் றகன்றதெஃ
தகன்றது நம்மய லல்ல வுலக மஃதெங்ஙனம்
அகன்ற மயலன்றி யெங்கே யுலகுண் டாயுமினோ. (உ)

### விருத்தம்.

ஆய்ந்திடி னுலக மணுக்குழு வாக வஃதொரு முதலெனக் கொளலென்
ஆய்ந்திடா முனரோ லாய்ந்திடி லெங்கே யவ்விரு தாமமு மெதன்பால
தோய்ந்திடல்கடமேல்தோற்றமதாகுஞ்சுயம்பெனின் மண்ணன்றி யெங்கே
ஓய்ந்தது வாதம் நம்மயலன்றி யுலகுள தெனலெவ னிலையே. (ங)

### அகவல்.

இலையுல கென்னி லிருப்ப தறிவே
பலகலை சம்மதம் பார்த்து மறியார்
எவரெவர் நாட்ட மெவ்வண மவ்வணம்
அவரவர்க் கிலகு மதுவது வாகத்
தெரிவெனல் பொய்யோ தேர்ந்த வறிஞா
மூரணிதி லென்கொலோ முழுது முணர்ந்தும்
ஏலா திருத்த லெவரு மறிகிலம்
மாலா யுழல மகிழ்ந்தனர் பலரும்
சமய நிச்சயந் தலைகா லொருங்கெங்
கமையக் கண்டன ராரு மிலையே

பலபல வாகப் படித்தீர்
கலக மிலாநிலை கண்டவெம் நிலையே. (௪)

வெண்பா.

நிலையெது வென்னி னிறைந்த வறிவே
இலையொன்றும் வேறா யிருந்தும் - இலையென்னும்
பட்டமே கோடலெவன் பார்த்துணர்ந்திங் காயுங்கால்
விட்டி தனைக் கொண்மின் விரைந்து. (௫)

கட்டளைக்கலித்துறை.

விரைந்துடல்வீழ்முன் விசாரந்தலைக்கொளல் வேண்டுமென்றே
நிரந்தரங்கொள்ளி லறிவொன்றுமேமிஞ்சி நிற்குமெனல்
தெரிந்ததுவாக விளங்கத்தெரிந்தனந் தேசிகனுல்
மருந்தொன்றிலைமயல் மாற்றவிதுவே மருந்துய்ம்மினே. (௬)

விருத்தம்.

உய்வதற்கனேக வுறுதிகளிருந்து முளதுலகென்பதை யகற்றா [தொன்றே
பொய்யைப்பொய்யென்றும் மெய்யைமெய்யென்றும் புகலும்வேதாந்தம
மெய்யெதுவென்னி லறிவெனவொன்றே வேறெலாமன்றெனும் வேதம்
ஐயமொன்றுளதே லாய்ந்திடவம்மி னகற்றுதுமன்னதிக் கணமே. (௭)

அகவல்.

இக்கண மக்கண மிலையறி வன்றி
எக்கண மேனு மிலாதெவ னென்றிலொவ
றந்தந் தவசரத தறிவென லின்மேல்
எந்தெந்த வாறங் கிலகு மதுவது
அறிவினைத் தள்ளி யணுவினைத் தெரிக்கில்
பிறிதே கால பேத மனைத்தும்
காட்ட வகையிலீர் கற்றுமென் னனைத்தும்
நாட்டச் சமைய் நன்குணர்ந் தீரோ
பேதமை பேதமை பெரிதும்
ஈதறிந் துய்ம்மி னிரும்புல வோரே. (௮)

வெண்பா.

புலமையாம் வேண்டிடுதல் போதமே தானாய்
இலகிடுதற் கன்றி யிலையாம் - அலவென்னிச்
தானலதைத் தானெனற்காஞ் சற்றுந் துயரகலா
மானிடவொன் றெங்கே வகை. (௯)

கட்டளைக்கலித்துறை.

வகையறிந் தென்பய னேட்டாலறிவின் மலமறுமோ
சுகமேயறிவிங் கறிவேசுகமெனல் சொல்லலாவாம்
இகமுத்திரமென லெங்கேயறுநிலைப் பின்மையொடு
புகவிருண்ஞானத் தினகரன்றோன்றிடும் போய்விடுமே. (ம)

விருத்தம்.

போய்விடுமெனலும் வந்ததிங்கெனலும் புகல்மொழிமாத்திர மன்றி
யாய்ந்திடில் மயலோர் முதலலாமையிறு லன்னதுவேறெறு ரறிஞர்
ஓய்ந்திடக்கனவு விழித்திடிலெங்கே யுலகுயிர்பரமெனு மூன்றுந்
தோய்ந்தசின்மயத்தி லிஃதெனக்காணுத் துணிபிணைச்சொலவறிந் திலனே()

அகவல்.

அறிநதில னவையு மனுபவத் தென்றால்
அறிந்திலா முனமு மறிவன்றி யில்லை
யென்ன வேண்டுமோ வெதன்பிழை யென்னில்
உன்னிடாக் குற்றமே யுறுதிவே றின்றிப்
பகுதி விகுதி பார்க்கி லிரண்டாம்
பகுதி மறதி பகருடல் விகுதி
இங்ஙன மாத லிலகு மறிவே
எங்ஙன மென்னி லிவ்விரண் டாக
அன்னிய முளதே லவையிலா தெவன்கொல்
அன்னியோன் னியத்தி லறிவன்றி யஃதோ
எந்த வகையினு மில்லை
இந்த நிலையை யெடுத்திடும் பகுப்பே. (கஉ)

வெண்பா.

பகுதி மறதியென்ல் பாங்கா விளக்கில்
விகுதி யுடலென்னல் வேண்டா - சகத்துடன்காண்
என்னில் விகார மெவையுமஃ தின்றென்னில்
அன்னதே யாதியென லாம். (கங)

கட்டளைக்கலித்துறை.

ஆமென் றலவென் றறிவ தறிவன்றி யாதியுண்டோ
ஆமென் றலவென்று தன்னைக் கணிக்கவு மாகுமன்றோ
ஆமென்ற தேதிங் கலவென்ற தேதிவ் வறிவையன்றி
ஆமென்ற தேயல வாக முடிதலி லையுமினே. (கச)

விருத்தம்.

மின்னெனக்காணு முடலினையெவரு மெய்யெனக்கண்டு நானென்பார்
அன்னியமன்றே லெனதெனப்படுமோ வழியுமோவனர்த்தம தாமோ
இன்னதென்றுறக்கத் திலாவகையாமோ வெவர்மரணந்தனை யகன்றார்
உன்னிடிற்பிறப்பு மிறப்புமேதுணர்வுக் குடற்கெனலூகம தாமே. (௧௫)

அகவல்.

ஊக மிருந்து முணர்ந்திடா தென்னோ
தேக மிதுவெனத் தேகி யிதுவென
மானிட ராகியு மயக்கெங் ககன்றார்
ஈன மிருக மிவரொனற் கிடரொன்
தன்னை யுணர்ந்தோர் தாமே மானிடர்
அன்னிய மெல்லா மறிவுரு வாக
என்ன தனுபவ மிதுவே
என்னவென் றுரைப்பே னிதின்மகி மையையே. (௧௬)

வெண்பா.

மகிமை யுருவத்தில மாற்றி மினுக்கி
அகமகிழ்ந் திந்நா ளழிந்தேன் - சுகநிலையைக்
கண்டேன் குருவருளாம் காணே னயலொன்றும்
அண்டா துறைமனமு மாங்கு. (௧௭)

கட்டளைக்கலித்துறை.

ஆங்கேயறிவொன்று மிஞ்சிவிளங்கலென் னாச்சரியம்
ஈங்கேவிகார வடிவேமயமா யிருப்பதென்னோ
ஓங்கியதானெங் ஙனமங்ஙனமென வோதினன்காண்
பாங்கறிந்தேன்மரு ளேன்வெருவேனினிப் பார்த்துய்ம்மினே.

விருத்தம்.

பார்வைதனக்குல கன்றியெவர்க்கும் பகருமிலக்குளதோ
தீர்விதுவென்னி லிலாவகையென்னோ திரியுமுறக்கமதில்
பார்வையதின்றெனி லங்குளகாட்சி பகல்போற் றெரிவானேன்
ஓர்தலிறந்தீ ருணர்வேமயமென லுன்னுமினுத்தமரே. (௧௯)

அகவல்.

உத்தம மத்திம மொழிந்த தமம்
உத்தமர்க் குலக முணர்வா விளங்கும்
மத்திமர்க் கையம யமா முலகம
சத்தெனக் காணுந் தகைய ததமாக்

இப்படி காணி லெதுவோ வுலகம்
அப்படி யப்படி யாகு மென்னில்
எங்ஙன மிலக்கி லிருப்ப தென்னில்
அங்ஙன மங்ஙன மாகியு மாகா
திருப்ப தியல்பே யெமதுரு
இருப்ப தப்படி யெமது முடிவே. (உ௰)

வெண்பா.

முடிவென்னில் வாதமோ மோனமோ சிந்தை
முடிவோ மறையோ முதலோ - தடையின்றிக்
கூறுக வென்னிற் குணங்குறிக ளொன்றுணர்க
ஈறுமுத லில்லாத தில். (உக)

விருத்தம்.

எண்ணமொன்றின்றி யுடலநாளுக விருக்குதலோவய லாக
உண்ணினைந்தயர்ந்து தீர்வகையின்றி யுயர்பரமகற்றுமென் றெனலோ
தண்ணருள்சுரக்கில்முயற்சியென்செய்யுந்தடையிலையென்றகங்கொளலோ
எண்ணிடுமுத்தி யெவையுநாளுக விலகுதலென்னுமா மறையே. (உஉ)

கட்டளைக்கலித்துறை.

இல்லையுண்டென்பதென் ஞேயமாயதை யின்னதெனச்
சொல்லவுமெண்ணவு மின்மையிலின்றெனச் சொல்வதுகாண்
இல்லையென்றோர்தலு மின்றேவுளதென் றிசைக்குமறை
எல்லையிலிவ்வழக் கெங்கேயறிஞருக் கெண்ணுமினே. (உ௩)

அகவல்.

மறையென லிந்து மறையே மறையாம்
பிறமயக் ககற்றுப் பிரோத மறையே
பகுதி விகுதி பகுப்பையொன் றாக்கும்
தகுதி யிலாமையில் தவிர்ந்தன மவற்றை
இந்து மறையிலு மிலாதென் னொருமை
இந்த பேத மிசைத்தகம் றுதற்கே
பருவத் தளவாப் பகர்ந்தழைத் துப்போய்
இருமைய தொருமைய தாக்கித் தனிக்கச்
செயுமிதின் மகிமை செப்ப
வியையா தெவர்க்கு மிதுதிண் ணமதே. (உ௪)

வெண்பா.

திண்ண மிதனைத் தெரிக்கா விடிற்குரவன்
சண்முகி யாதிகுறி தானுகும் - உண்மையதேல்

தேக வளவினதோ தேவநிலை யென்னமதி
ஊகத்துக் கொன்றா துறில். (உரு)

கட்டளைக்கலித்துறை.

உறுதியொன்றில்லை யுணர்வினைத்தள்ளி லொருபொழுதும்
மறதியொன்றேயனர்த் தத்துக்கிடமெனல் வாய்மையன்றோ
இறுதிமட்டாய்ந்திடி லெல்லாமறதி யெனக்குறிக்கும்
அறுதற்கிடமிலை ஞானமல்லாதிதை யாயுமினே. (உசா)

விருத்தம்.

ஆயுமவர்க்கே யலதிதுகாணு தனந்தவர்க்கெனினும்
மீயுயர்சடகோபப்பெரு மாடன் விமலமொழித்திறமீ
தோயுனர்யாரோவிருத்திக ளவரோ யுயர்பூதமடைவார்கள்
நீயுநானெனலுமுபாதிகள் மட்டே நீக்கில்சிதம்பரமே. (உஎ)

அகவல்.

சிதம்பரத் தலமோ சிதம்பரக் குறியாம்
சிதம்பர மென்னல் திரியாச் சுயம்பு
மற்றவை யெல்லா மாறா தொன்றிலை
இற்றதென் றுணரா விரும்பொரு ளதுவே
மேல்கீ ழொப்பிவை மேவிடா ததனால்
சால்புடைத் தாகத் தய்வகா விடமிலை
கற்பித மின்றிய காட்சி
அற்புத மிதுபோ லதிசய மிலையே. (உஅ)

வெண்பா.

இலையெனலை யேலா திருப்பதா வொன்றும்
மலைவின்றி யாருணர்த்த வல்லார் - இலையோ
குருவெனற்குப் பஞ்சமிலை கூறற் கறியார்
பெருவஞ்ச கங்கரந்த பேர். (உகூ)

கட்டளைக்கலித்துறை.

பேராயிரங்கற்றுப் பேசியுமெட்டார் பிணக்கறுக்கார்
நேரோயிருக்கு முலகையென்றாலிவர் நின்றெவர்க்குந்
தீராவழுக்கைத் தொலைத்துப்பரத்தைத் தெரிசிப்பரோ
தேராவிவரை விடுத்துக்குருபரன் தேடுமினே. (௩0)

விருத்தம்.

தேடிடுந்தன்னைத் தவிர்ந்தயல்பரமாத் தேடிடிற்றேற்றமற் புதங்கள்
காடிடிற்றனது சுத்தகற்பிதமே நன்றாமுன்னசுத்தகற் பிதங்கள்

கூடுமேற்றனது மயல்புறம்பென்னக் கூடுமேயவைதெளி வயலாக்
கூடிடாதெனிற்று ஞானத்தேடிக் குறைவறவிருப்பர்ஞா னியரோ. (௯௧)

அகவல்.

ஞான மௌனலை நாடிடுங் காலை
தானே காரணந் தானே காரிய
மாகுத லெதுவோ வதுவே ஞானம்
ஏக மேவாத் துவித மென்பம்
ஞான மலதஞ் ஞான முளதேல்
ஈன மேக மேவாத் துவிதம்
என்ன வருமே யினியொன்று சொல்லுதும்
அன்னதுன் டிலையென் றறைதரு தகைமை
யேலா தொருபொரு ளின்னதென் றிசைக்கின்
தோலாது நும்மொழி சொல்வா தத்தால்
யாது பயனோ விலையே
ஓதி யுணர்மி னுண்மை நிலையே. (௯௨)

வெண்பா.

உண்மை யலவே யுயர்ஞானம் போல்பவைகள்
உண்மையென் றேனையவை யுற்றாலும் - கண்புதைந்த
மாந்த ருவப்பர் மதியா ருயர்ஞானி
சாந்தனையுங் கண்டிடினுந் தான். (௯௩)

கட்டளைக்கலித்துறை.

தானெனலில்லாத் தினையிலையுண்டேல் சதுமறைகள்
தானென்பதேமுக் கியமென்னுமோவிதைச் சற்றுமுன்னீர்
தானெனல்மூவிட மைம்பாலிருதிணைச் சார்ந்துமல
தானெனல்கண்டவ ரன்றோ வெவற்றினுஞ் சத்தியரோ. (௯௪)

விருத்தம்.

சத்தியமென்பர் சகபரமுயினைத் தன்சுயவடிவினைக் காணார்
மெத்தவாசித்து மென்பயன்செருக்கே மேவிடற்கிடமலா துண்டோ
எத்தனைபிறப்பி லிஃதொருபிறப்பா மிதனைநானென்னுமவ் வளவும்
முத்தியேயில்லை யுளதெனின்மயக்க முடிந்ததன்றெண்பர்ஞா னிகளே (௯௫)

அகவல்.

ஞானமு திக்கி னசிக்கு மயக்கம்
ஏனைய வற்று லெங்ஙன மசையும
மயக்க மென்னல் மதிமயக் கேனைய
மயக்க மன்று மதிமயக் காவ்து

ஒன்றையொன் றாக வுன்னி லதுவே
ஒன்றுவொன் றாக வுறுமே யெதிரில்
இன்னதென் றைய மிகந்து
தன்னுரு கண்டு தான்விளங் குவமோ. (௯௬)

வெண்பா.

விளக்க மிரண்டாம் விடயமொடு ஞானம்
துளக்கறுத்தல் மெய்ஞ்ஞானச் சோதி - அளக்கலிலா
மெய்ப்பரம நீதே மிகப்படித்தும் வேறென்பர்
பொய்ச்சகத்தை மெய்யென்பர் போய். (௯௭)

கட்டளைக்கலித்துறை.

போய்நெடுந் தூரமும் பாழன்றிக் காணார் புவியனைத்துஞ்
சேய்மனையாதிய சுற்றமுமெய்யெனச் சிந்தைசெய்து
ஓய்விலதாகச் சுகதுக்கமெய்தி யுழலுவதென்
போய்நற்குருபரன் றாள்பற்றிவாழுமின் போதகரே. (௯௮)

விருத்தம்.

போதகரென்பீர் போதமீதென்னப் புகலவுங்கேட்டுநீ ரறியீர்
யாதுமெவ்வனுவி னிதமுதித்தொடுங்கும் யானெனல்யாதுயிர் பலவும்
ஓதிநன்குணரி லறிவலாதின்றென் றுணர்த்துவதன்றியென் னுணர்த்தும்
நீதிசோதனையால் தீர்விதுவாகு நிலையெனச்சொல்வர்ஞா னிகளே. (௯௯)

அகவல்.

ஞானமே சரியை ஞானமே கிரியை
ஞானமே யோகம் ஞானமே ஞானம்
வேறெனின் ஞாயம் வேறெனற் கென்னை
வேறுவே றாதலின் வேறெனப் படுமெனின்
அறிவினைத் தள்ளி யவைநான் கெங்கே
அறிவவை யாயி னயலாத் தோற்றலென்
கான னீர்போற் காணுமென் றுணர்த்தும்
ஈனமில் சுருதி யிருப்ப தறியீர்
எடுக்குந் துறையி லிணக்கங் காட்டி
முடித்தொன் றாக்கின் முடிவிதென் றனர்காண்
அதாஅன்று—ஒன்றெனப் படுதலு மன்றெனப் படுதலும்
நன்றெனத் தீதென நாட்டப் படுதலும்
இன்ன தென்று மீதல தென்றும்
பனனப் படுதலும் பன்னப் படாதலும்

உண்டென்றிலையென் றுணர்த்தப்படுதலும்
பண்டையதென்றும் பழையதன்றென்றும்
இன்னவாறெல்லா மிசைக்கப்படுதலும்
அன்னியமுன்னிய மாக்கப்படுதலும்
ஏற்றற்குரிய திரும்பொருளொன்றுண்
டேற்றமிலாதார்க் குரியதன்று
தக்கசிரவணந் தக்கமனனம்
மிக்கவிடத்தே மிகுமேதெளிவு
இதுமிகத்தனிக்க வியையுமக்கணம்
இதுவதுவென்னு விரும்பொருடோன்றும்
இம்முறையல்லார்க் கிலகாதிலகா
தம்மவம்ம வதிசயமிதுபோல்
இல்லையில்லை யிதனையுணர்ந்தார்
நல்லரோயல்லார் நல்லர்போற்காண்டர்
ஆரவர்நலமெனி லறிந்தவளவு
நேர்ச்சொல்லுதுஞ் சிறந்தசங்கரா
சாரியரவர்தன் சரண்மடைந்தோர்
ஓரியல்பாக வொளிர்சடகோபர்
அன்னவர்தம்மடி யகலாவடியவர்
முன்னுமையவள்பால் முகந்தருந்தியசம்
மந்தரொடுநால்வர் மலரடியகலார்
இந்தபரம்பரைக் குரியர்கல்லால்
நிறற்கட்டெளிந்தார் நினைவுசின்மாத்திர
நிறலையகலா நிமலதேசிகர்
முதலியோர்பதத்தை முடிமிசைதரித்து
மதமெலாமுறிய மாற்றியமுனிவர்
சரணேயெமது தலைக்குப்
பெருமுடிவேறே பெறுமுடியிலையே. (௪0)

௫௫-வது, தனது

சுவானுபூதி விநோதவிளக்கம்

முற்றிற்று.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ஙரு | உரு | கிந்தித்தல் | சிந்தித்தல் |
| ஙசா | கஎ | வென்றன்ன | வென்றனன் |
| சக | உங | சிவேஸ்தார் | சிவேஸ்வரர் |
| சச | ஙச | பாவமாமிற்று | பாவமாயிற்று |
| சசா | உச | பேசுவதரர் | பேசுவதார் |
| சஅ | கங | ன்மரணே | ஸ்மரணே |
| ,, | உஎ | சாறற | சாற்ற |
| ருஉ | ஙங | ளந்தா | ணந்தர் |
| ருசா | உ | விளேவுங் | விளேவும் |
| எச | ககூ | பூகிக்க | பூசிக்க |
| கூசா | கங | விஞபி-றர் | விஞ-பிறர் |
| ககச | ச | அர்த்தத்தற்கு | அர்த்தத்திற்கு |
| ககரு | கரு | விவாத்த | விவர்த்த |
| கஉ0 | அ | விடத | விடத் |
| கஉரு | கஎ | ஸ்மணே | ஸ்மரணே |
| கசங | க | சுருயி | சுருதியி |
| கசச | க0 | கூறுப | கூறுவ |
| ,, | ஙக | தேமறற்ாலதே | தேற்றப்பாலதே |

பிழைதிருத்தம் முற்றிற்று.